# நமது அரசியல் அமைப்பு




ஏ. என். சிவராமன்

# நமது அரசியல் அமைப்பு

(சுதந்திர இந்தியக் குடியரசின் அரசியல்
அமைப்பு பற்றிய விளக்கம்)

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

ஏ. என். சிவராமன்
ஆசிரியர் 'தினமணி'

*

'குருவருள்'—சென்னை—17

பதிப்புரிமை ஆசிரியருடையது] விலை ரூ. 1-4-0

# காணிக்கை

சென்ற மூன்று ஆண்டுகளுக்கிடையே நான் மேற்கொண்ட எந்த வேலையையும் விட இந்தப் புத்தகத்தை எழுதும் காரியம் எனக்குச் சிறிது அதிக சிரமத்தைக் கொடுத்தது. ஆயினும் இந்தக் காரியத்தைச் செய்யும்போது இருந்தது போன்ற மகிழ்ச்சி எனக்கு வேறெந்த வேலையிலும் இருந்ததில்லை. இப்புத்தகத்திலுள்ள பல அத்தியாயங்கள் தினமணிப் பத்திரிகையில் கட்டுரைகளாக வந்த காலத்தில் வாசகர்கள் எனக்கு அளித்த ஆசியும் ஊக்கமுமே இந்த வேலையில் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு முக்கிய காரணம். ஆகையால் அவர்களுக்கு இந்தப் புத்தகத்தைப் பணிவுடனும் நன்றியுடனும் காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

ஆசிரியன்

இந்தியன் எக்ஸ்பிரஸ் அச்சகம், சென்னை—2.

# முன்னுரை

'சுதந்திர இந்திய அரசியல் அமைப்பு' என்ற பெயருடன் இந்நூலை வெளியிடலாமென்று எண்ணியிருந்தேன். "ஆனால் சுதந்திரம் தான் வந்து இரண்டு வருஷமாகிவிட்டதே. ஏற்கனவே இருப்பதும் சுதந்திர அரசியலமைப்புதானே" என்று ஒரு நண்பர் எழுதியிருந்தார். அவர் கூறியதில் உண்மை இருக்கக் கண்டேன். ஆகையால் 'இந்திய மக்களாகிய நாம் அரசியல் நிர்ணயசபை மூலம் நமக்கு நாமே அளித்துக்கொள்ளும் அரசியலமைப்பு' என்று சட்டத்தின் முன்னுரையில் உள்ள வாசகத்துக்குப் பொருத்தமாக, நம் அரசியல் அமைப்பு என்று பெயர் வைத்திருக்கிறேன்.

## இந் நூலின் நோக்கம்

அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள ஷரத்துக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை மட்டுமல்லாமல், எதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று காரணம் கூறுவதும் என் நோக்கம். அவ்வாறு காரணம் கூறும்போது, அபிப்பிராயம் கூறுவதுபோல தோன்றினலும், இவ்வரசியலமைப்பிலுள்ள உயர்வையோ குறையையோ எடுத்துக் கூறுவது இந்நூலின் முக்கிய நோக்கமல்ல. அரசியலமைப்பைப் புரிந்து கொள்வதற்கு உதவுவதுதான் இந்நூலின் நோக்கம்.

## நூலின் கட்டுக்கோப்பு

அரசியலமைப்புச் சட்டத்தை அதிலுள்ள ஷரத்துக்களின் வரிசைப்படி படித்துக்கொண்டுபோனல், அமைப்பின் தன்மையும் சொரூபமும் புரிவது மிகவும் கஷ்டம். ஒவ்வொரு அம்சத்தைப்பற்றி எல்லாத் தகவல்களையும் ஒரே இடத்தில் திரட்டிப் பார்த்தால்தான், கருத்தைப் புரிந்துகொள்வது சுலப

மாகும் என்று நான் நினைத்தேன். ஆகையால் ஷரத்துக்களின் வரிசையை மறந்து, என் மனதிலேயே சில கேள்விகள் போட்டுக்கொண்டு, பிறரையும் கேள்விகள் போடச்சொல்லி, அவற்றுக்குப் பதில் சொல்லும் முறையில் இதை எழுதினேன். உதாரணமாக, இந்நூலின் இரண்டாவது அத்தியாயத்தை எடுத்துக்கொண்டால், அரசியலமைப்பு சட்டத்தின் 1, 2, 3, 238, 239, 240, 242, 243, 370, 371 ஆகிய ஷரத்துக்களின் கருத்தும், சட்டத்தின் முதலாவது தப்ஸிலும் அந்த அத்தியாயத்தில் தரப்பட்டிருக்கின்றன. 13-வது அத்தியாயத்தை எடுத்துக்கொண்டால், 53 முதல் 66-வது வரையுள்ள ஷரத்துக்களின் கருத்தும், அப்பால் 78, 156, 157, 167, 366, 380-வது ஷரத்துக்களின் கருத்தும் அந்த அத்தியாயத்தில் இருக்கின்றன.

இவ்வாறு செய்ததால், சிற்சில ஷரத்துக்களின் கருத்துக்கள் இரண்டு அல்லது மூன்று இடங்களில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட போதிலும், சில ஷரத்துக்களைத் தனித் தனியாகச் சொல்லாமல் விடமுடிந்தது. உதாரணமாக, சட்டத்தில் 'யூனியன்' என்ற பகுதியில் சட்ட மன்றம் பற்றிக் கூறிய சுமார் 20 ஷரத்துக்களின் வாசகம், அப்படியே கருத்து மாறுதலின்றி 'ராஜ்யங்கள்' என்ற பகுதியில் இருக்கின்றன. ஆகையால் ஏதேனும் ஒரு பகுதியிலுள்ளதைமட்டும் கூறிவிட்டு, 'மற்றொரு பகுதிக்கும் இதுவே பொருந்தும்' என்று சொல்வது சாத்தியமாயிற்று.

சட்டத்தை விளக்குவதோடு மட்டுமல்லாமல் பொதுப்படையாக அரசியலமைப்புபற்றிய தத்துவங்களையும் பிறநாட்டு உதாரணங்களுடன் விளக்க முயன்றிருக்கிறேன்.

அச்தியாயங்கள் 9, 10 11 12 14 ஆகிய ஐந்தும். 15-வது அந்தியாயத்தின் மூகல் பகுதியும் சட்ட ஷரத்துக்களைப்பற்றியல்லாமல், அரசியலமைப்புக்கு அடிப்படையான தத்துவங்களை விளக்குபவை. இவற்றைப் புரிந்துகொண்டால்தான்

சட்டத்தின் கருத்தைப் புரிந்துகொள்ள முடியும். ஆதலின் இந்த அத்தியாயங்களை ஊன்றிப் படிப்பது பயன் தரும்.

ஒரு நூற்றாண்டு, இரண்டு நூற்றாண்டு வெற்றிகரமாக அமலிலிருந்துள்ள பிற நாட்டு அரசியல் அமைப்புகளின் அனுபவத்தை இவ்வரசியலமைப்பில் நாம் பயன்படுத்தி யிருப்பதால், பல அம்சங்களை அந்தப் பழைய அரசியலமைப்புக் களுடன் ஆங்காங்கு ஒப்பிட்டு எழுதியிருக்கிறேன்.

நோக்கங்கள், ஜீவாதார உரிமைகள் முதலியனபற்றிச் சட்டத்திலுள்ள அத்தியாயங்கள் மிகவும் முக்கியமானவை. ஆகையால் அவற்றிலுள்ள ஷரத்துக்களின் சாராம்சத்தைத் தனியாக அனுபந்தத்தில் தந்திருக்கிறேன்.

சட்டத்தின் அத்தியாயங்களும், ஷரத்துக்களும் என்ன வரிசையில் அமைந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, அந்த ஷரத்துக்களின் கருத்து இந்நூலில் எந்தப் பக்கத்தில் இருக்கின்றது என்பதை அட்டவணையில் தந்திருக்கிறேன்.

ஒவ்வொரு இனத்திலும் உள்ள தகவல்கள் ஆங்காங்கு ஒன்று திரட்டப்பட்டு ஒவ்வொரு அத்தியாயமும் பல பல 'சிறு தலைப்புகளில்' பிரித்துத் தரப்பட்டிருக்கின்றன. அந்தச் 'சிறு தலைப்புகளை' பொருளடக்கத்தில் தொகுத்துத் தந்திருக் கிறேன். பொருளடக்கம் இந்நூலுக்குச் 'சாராம்சக் குறிப்பு' போல அமையும். ஆகையால் 'கருத்து அகராதியாக' மற்றொரு அட்டவணை தரப்படவில்லை.

## சொற்கள்

'வழக்குகளில் அப்பீல் செய்வது' என்பதுபோன்ற சில இடங்களில் ஆங்கிலச் சொற்களை உபயோகித்திருக் கிறேன். அவற்றுக்குத் தமிழ் வார்த்தை தேடிப்போடும் முயற்சியில் பொருள் விளங்காது போய்விடுமென்று அஞ்சியே, அவ்விடங்களில் அவ்வாறு பிற மொழிச் சொற்களை உபயோ

இத்திருக்கிறேன். 'தர்ஸில்' என்ற சொல்லை 'ஜாபிதா' (ஷெட்யூல்) என்ற கருத்தில் உபயோகித்திருக்கிறேன்.

சில சொற்களை வெறும் அலங்காரச் சொற்களாக அல்லாமல், சட்ட சம்பிர்தாயமான பொருள் கொண்டு உபயோகித்திருப்பதால் அவற்றை ' ' என்ற அடையாளங்களில் அடைத்திருக்கிறேன். உதாரணம்: மந்திரி 'யோசனை' கூறுவார் என்று சொல்லும்போது யோசனை என்ற சொல் குறிப்பிட்ட அரசியல் கருத்துடன் செயல்படுகிறது.

## சொன்னதும் சொல்லாததும்

அரசியலமைப்புச் சட்டத்தில் 395 ஷரத்துகள் இருக்கின்றன. சாதாரணமாகப் பேசும்போது இயற்கையான ஊகத்துக்கு வரும் பல விஷயங்களைச் சட்டத்தில் தனித்தனியாகச் சொல்லவேண்டியிருப்பதுதான் ஷரத்துக்களின் தொகை பெருகியதற்குக் காரணம். உதாரணமாக, சட்டசபைக்கு ஒரு சபாநாயகர், அக்கிராசனர் இருப்பார் என்பதும், தொடர்ச்சியாகப்பல மாதங்கள் கூட்டத்துக்கே வராதிருக்கும் அங்கத்தினரின் ஸ்தானம் காலியானதாகத் தீர்மானிக்க சபைக்கு உரிமையுண்டு என்பதும் அநேகமாக எல்லோருக்கும் தெரிந்ததுதான். சட்டசபை அங்கத்தினர் ஏதேனும் உத்தியோகத்திற்குப் போய்விட்டால், சட்ட சபையில் ஸ்தானம காலியாகும் என்பதும் சாதாரணமாக எல்லோரும் ஊகிக்கக்கூடியதுதான். இதுபோன்ற விஷயங்களைத் தவிர. அரசியலமைப்பைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய விஷயங்கள் விட்டுப்போகவில்லை யென்றே எண்ணுகிறேன்.

## என் அபிப்பிராயம்

அரசியலமைப்பின் தன்மை பற்றி ஒன்றுமட்டும் இங்கு சொல்ல விரும்புகிறேன். எந்த நாட்டிலுமே அதன் அரசியலமைப்பு தயாரிக்கப்பட்ட காலத்தில் அதில் பலர் குறை

கண்டதுண்டு. ஆயினும் நாளடைவில் அரசியலமைப்பினிடம் விசுவாசமாக நடந்துகொண்டதன் மூலம் முன்னேற்றம் ஏற்பட்டு அரசியலமைப்பினிடம் விசுவாசமாக நடப்பதே தேச பக்தியின் முக்கியமான அடையாளம் என்ற உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கடவுள் மனிதனுக்கு அளித்த அவயவ அமைப்புக்கள் பற்றிக்கூட நமக்குச் சில சமயங்களில் அதிருப்தி ஏற்படுவதுண்டு. உதாரணமாக, பறவைகளைப் போல பறப்பதற்குள்ள அவயவங்களை கடவுள் மனிதனுக்கு அளிக்கவில்லை; ஆனால் கடவுள் கொடுத்த புத்தி யெனும் பெரிய சாதனத்தைப் பயன்படுத்தி விமானங்களை அமைத்துக்கொண்டு பறந்து விடுகிறோம். அதுபோலவே அரசியலமைப்பில் குறைகள் இருப்பது போல நமக்குத் தோன்றினாலும், அதை ஏற்றுக்கொண்டு, தேச பக்தியுடனும், நேர்மையுடனும் நம் பொது வாழ்வை நடத்தினால் இந்த அரசியலமைப்பு நம் முன்னேற்றத்துக்குச் சிறந்த சாதனமாக இருக்கும் என்பதே என் அபிப்பிராயம். அனுபவத்தில் ஏதேனும் பெரிய குறைகள் தென்படும்போது அவற்றை மாற்றிக் கொள்வதற்கும் அந்தச் சட்டத்திலேயே வசதிகள் ஏற்படுத்தியிருப்பதால் இந்த அமைப்பு நமது பூர்ணமான விசுவாசத்துக்கு உரித்தாகிறது.

## நன்றி

இப்புத்தகத்தைத் தயாரித்து வெளியிடுவதற்கு எனக்கு உதவி செய்தவர்கள் பலர். இந்தப் புத்தகத்தைத் தயாரிப்பதில் நான் ஈடுபட்ட காலத்தில் என்னுடைய அன்றாட வேலைகள் பலவற்றைத் தாமே செய்துகொண்டு அதே சமயத்தில், இந்த வேலையிலும் எனக்கு உதவி செய்த "தினமணி" துணை ஆசிரியர் ஸ்ரீ ஏ. ஜி வெங்கடாச்சாரியாருக்கும், உதவி ஆசிரியர்களுக்கும் நான் கடமைப்பட்டவன். நான் எழுதியதைப் பல தடவை படித்துச் சரிபார்த்து, திருத்துவதற்கு யோசனை கூறி உதவி செய்ததோடு, கட்டுரைகளைப் புத்தகமாகத் தொகுப்பதற்கு மிகவும் உதவி

புரிந்தவர் 'குமரி மலர்' ஸ்ரீ கோபாலன். அவரது உதவி யில்லாமல் இந்தப் புத்தகம் வெளிவந்திருக்க முடியாது,

"தினமணி"
சென்னை, 30-12-49. | ஏ. என். சிவராமன்.

குறிப்பு:—இப் புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் 9 சமஸ்தானங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றுள் 'விந்தியப் பிரதேசம்' என்ற சமஸ்தானம் 1950ம் வருஷம் ஜனவரி மாதம் 1ம் தேதியிலிருந்து இந்திய சர்க்காரின் நேர்முகமான ஆட்சியில் சீப் கமிஷனர் மாகாணமாகிறது.

இப் புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தில், யூனியனின் நேர்முக நிர்வாகத்திலுள்ள சீப் கமிஷனர் மாகாண ஜாபிதாவில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 'கூச் பிஹார்' 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ந் தேதியிலிருந்து மேற்கு வங்காள மாகாணத்துடன் ஐக்கியமாகிவிடுகிறது.

# பொருளடக்கம்


**1. ஜனநாயகக் குடியாட்சி முறையின் அடிப்படைக் கொள்கைகள் 1—7**

*முன்னுரை—1; நாட்டின் அஸ்திவாரச் சட்டம்—2; எல்லோரும் இந்நாட்டு மன்னர்—3; சர்வஜன வோட்டுரிமை—3; சர்க்காரின் அதிகாரத்துக்கு எல்லையுண்டு—3; ஜீவாதார உரிமைகள்—4; நோக்கங்கள்—4; சமஷ்டி முறை-யூனியன்—5; அதிகாரப் பங்கீடு—5, பார்லிமென்டரி பொறுப்பாட்சி—6.*

[இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள ஷரத்துக்கள்: 6, 13, 19, 36-51, 54, 74, 124, 153, 155, 163, 164, 246, 326, 394 ]

**2. இந்திய யூனியனும் அதன் பகுதிகளும் 8—17**

*மாகாண சமஸ்தான இணைப்பு—8; மறைந்து போன முடியரசுகள்—10; ராஜப் பிரமுகர்கள்—10; இந்திய யூனியன் நிலப்பரப்பு—10; ஏ பகுதி ராஜ்யங்கள்—12; பி பகுதி ராஜ்யங்கள்—12, ஸி பகுதி ராஜ்யங்கள்—13, புதிய பிரதேசமும் சேரலாம்—13; ராஜ்யங்களின் எல்லையை மாற்றலாம்—13; புதிய மாகாணங்கள் ஏற்படுத்தும் முறை—14; ஏ. பி. வகுப்புக்கு வித்தியாசமில்லை—15; ஸி. வகுப்பு ராஜ்யங்களின் நிர்வாகம்—15; காஷ்மீர் பற்றி தாற்காலிக விதி விலக்கு—13; சில சமஸ்தானங்கள் மீது கண்காணிப்பு—16.*

[ஷரத்துக்கள்: 1, 2, 3, 238—240, 242, 243, 370, 371 ]

3. அதிகாரத்தின் உறைவிடங்கள் 18—24

(1) சட்டசபைகள் — மாகாண சட்டசபைகள்—18; இந்திய யூனியன் சட்டசபைகள்—19; (2) யூனியன் நிர்வாகம—ஜனாதிபதி—20 இந்திய யூனியன் மந்திரிசபை—20. (3) மாகாண நிர்வாகம்—கவர்னர்கள்—21. மாகாண மந்திரிசபைகள்—21 (4) சமஷ்டியில் அதிகாரப் பங்கீடு—இந்திய யூனியன் பொறுப்புக்கள்—23. மாகாண பொறுப்புக்கள்—23; பொதுவான பொறுப்புக்கள்—23; இந்திய யூனியன் சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் தொடர்பு—24.

[ஷரத்துக்கள்: 54, 74, 75, 79, 162, 168, 257 ]

4. 1935-ம் வருஷத்துச் சட்டமும் புதிய அரசியலும் 25—34

1935-ம் வருஷத்துச் சட்டம்—26. மாகாணங்களில்—26; அகில இந்திய சமஷ்டியின் அமைப்பு—26; சமஷ்டி சட்டசபையும் மந்திரி சபையும்—27; கவர்னர்-ஜெனரலின் தனித் தர்பார்—27; 1935-ம் சட்டத்திலுள்ள அடிப்படை ஊழல்கள்—28; அந்தச் சமஷ்டி ஏற்படவில்லை—29; இதன் பயனாக ஏற்படவிருந்த நிலைமை—30; காந்திஜியால் ஏற்பட்ட மாறுதல்—30; யுத்தம் வந்த போது—31; சிறிது நிலம் பலி—31; 1947 ஆகஸ்டில் ஏற்பட்ட மாறுதல்—32; புதிய அரசியல் அமைப்பு ஏன்—33.

5. சட்டசபைகளின் அமைப்பு: கீழ் சபைகள் 35—45

பொதுஜனத் தொடர்பின் முக்கியமான கருவிகள் —35; நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கும் சட்டசபைகள்—36; மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கும் சபை—36; சில மாகாணங்களில் இரண்டு சபைகள்—37; மாகாண கீழ் சபைகள்; வோட்டர் தொகையும் அங்கத்தினர் தொகையும் அதிகரிக்கும்—37; தனித் தொகுதி கிடையாது—39; ஹரிஜனங்களுக்காக ஒரு சலுகை—39; ஆங்கிலோ—இந்தியருக்கு ஒரு விசேஷ ஏற்பாடு—41, அபேட்சகர் யோக்யதாம்சம்—41, யூனியன் முழுவதிலும் மாகாண அங்கத்தினர் தொகை—41; கீழ் சபைகளின் முக்கியத்துவம்—42, இந்திய யூனியன் கீழ் சபை—42;

[ஷரத்துக்கள்: 80, 81, 84, 168, 170, 332—334.]

6. சட்டசபைகளின் அமைப்பு;
மேல் சபைகள் 46—56

நிதானித்துப் பரிசீலனை செய்யும் சபைகள்—47; மாகாண மேல் சபைகள்—47; வோட்டர்கள்—48; பேரறிஞர் நியமனம்—49; பதவிக் காலம்—50; அபேட்சகர் யோக்யதாம்சம்—50 மேல் சபை அமைப்பு முறையின் சாராம்சம்—51; மேல் சபையை அமைக்கவும் ரத்து செய்யவும் சட்டத்தில் வசதி—51, அதற்கான நடைமுறை—51 யூனியன் மேல் சபை—53; அங்கத்தினர் தொகை—53; மாகாணக் கீழ் சபைகளே வோட்டுத் தொகுதிகள்—53; நியமன ஸ்தானங்கள்—55.

[ஷரத்துக்கள்: 80, 83, 84, 171—173]

7. மாகாண மேல் சபை கீழ் சபை உறவு 57—61

பிரேரணைகளில் மூன்று விதம்—57, பட்ஜெட் பிரேரணை—58; பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்—58; சாதாரண மசோதாக்கள்—59, முதல் கட்டம்

—60; இரண்டாவது கட்டம்—60; மூன்றாவது கட்டம்-60.

[ஷரத்துக்கள்: 193—199, 203]

8. யூனியன் மேல் சபை கீழ் சபை உறவு 62—68

பட்ஜெட் பிரேரணை—62; பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்—63; இதர மசோதாக்கள்—63; கலப்புக் கூட்டம்—64; கலப்புக் கூட்டத்தின் நோக்கம்—65; யூனியன் மேல் சபையில் முக்கியத்துவம்—67; 1935-ம் வருஷச் சட்டத்தில்—67.

[ஷரத்துக்கள்: 107—109, 113, 203]

9. மேல் சபையின் அவசியம் 69—76

தொடர்ச்சி விடாத சட்டசபை—70; கட்சி அரசியலில் சர்வகட்சி மனப்பான்மை—70; யூனியன் சர்க்காரில் சிறிது மாகாண உணர்ச்சி—71; வேகத்தைக் குறைப்பது; முட்டுக் கட்டையல்ல—72; வாஷிங்டன் கூறிய ஓர் உதாரணம்—73; பிறநாடுகளில் உள்ள மேல் சபைகள்: பிரிட்டன்—74; அமெரிக்கா—75; ஆஸ்திரேலியா—75; கானடா—76.

10. மந்திரி சபை அமைப்பு முறை 77—92

அமைச்சு—(நிர்வாகம்)—79; அமைச்சின் அவசியம்—80; நிர்வாகத் தலைமை—80; பார்லிமென்டரி முறையின் பொது அம்சங்கள்—84; வேறு சட்டங்களால் அமைப்பு உருவாகிறது—86; பிரதமர் பதவியின் ஆரம்பம்—88; கூட்டுப் பொறுப்பு—88; பிரெஞ்சுச் சட்டம்—89; நமது முறை: சட்டத்தில் சொல்லியுள்ளது—91; சட்டத்தில் சொல்லாதது—91.

[ஷரத்துக்கள்: 75, 83]

11. மந்திரி சபையும் சட்டசபையும்: கட்சிக் கட்டுப்பாடு — 93—97

சட்டசபைமீது மந்திரி சபைக்கு ஆதிக்கம்—94; ஆதிக்கக் கட்சியும் எதிர் கட்சியும்—95; திட்டத்துடன் தேர்தல் போட்டி—96; பொறுப்புள்ளதான எதிர்க்கட்சி தேவை—97.

12. மந்திரி சபை மாறுதல்—பிறநாட்டுச் சம்பிரதாயங்கள் — 98—105

பிரிட்டிஷ் சம்பிரதாயங்கள்-98; கீழ் சபையைக் கலைக்கும்படி யோசனை—100. சில விசேஷ நிலைமைகள்—102; பிரிட்டனைப் பிரான்ஸுடன் ஒப்பிட்டால்—103; இந்தியாவுக்கு ஏற்றது எது—104; ஜனநாயகத்தின் தர்மகர்த்தா—105.

13. குடியரசுச் செங்கோலின் உறைவிடம் — 106—111

(1) ஜனாதிபதி—107; ஜனாதிபதி தேர்தல் முறை—107; அபேட்சகர் யோக்யதாம்சம்—108; ஜனாதிபதியை நீக்க விசேஷ நடைமுறை—108; (2) உதவி ஜனாதிபதி—109; (3) கவர்னர்கள்—110; (4) ராஜப் பிரமுகர்கள்—111.

[ஷரத்துக்கள்: 53-58, 61, 64—66, 78, 156, 157, 167, 366, 360.]

14. ராஜாங்கத்தலைவரின் அந்தஸ்தும் அதிகாரமும் — 112—118

சட்டமும் கருத்தும்—112: அரசியலில் மூன்று அம்சங்கள்—113: ராஜாங்கத் தலைவரின் அவசியம்—114: ராஜாங்க அதிகாரம்—114: ஜனாதிபதி வெறும் பொம்மையல்ல—116: ஜனாதிபதியும் மந்திரி சபையும்—117; நிர்வாகத் தலைவர்;

படைகளின் தலைமை அதிகாரி—118; கவர்னர்கள் ராஜப் பிரமுகர்கள்—118.
[ஷரத்துக்கள்: 248—250, 254, 257, 261.]

15. சுதந்திர ராஜ்யங்களின் யூனியன் சமஷ்டி அமைப்பு 119—133

சுதந்திரமும் ஐக்கியமும்—119 யூனிட்டரியல்ல; சமஷ்டி—120; அதிகாரப் பங்கீட்டின் நோக்கம்—121; மூன்று ஜாபிதாக்கள்—122; முரண் படாதிருக்க—123; இரண்டு பாதுகாப்புக்கள்—124; ராஜ்யங்கள் சட்டமியற்றி நிர்வகிக்கும் விஷய ஜாபிதா—127; பொது விஷய ஜாபிதா —131.

16. யூனியன் நிர்வாக விஷயங்களும் வரி வினியோகமும் 134—147

அமெரிக்க உதாரணம்—135; யூனியன் ஜாபிதாவின் சாராம்சம்—136; வரி வருமான வசதிகள் —137; வரி வினியோகம்—138; சில பொது விதிகள்—139; நிதிக் கமிஷன்—139; யூனியன் சர்க்கார் சட்டமியற்றி நிர்வகிக்கும் விஷய ஜாபிதா—140.
[ஷரத்துக்கள்: 268—270, 275, 278, 280, 282, 285, 286.]

17. சட்டம் இயற்றும் நடைமுறைகள் 148—158

யூனியன் மசோதாவுக்கு ஜனாதிபதியின் அங்கீகாரம்—148; சாதாரண மசோதாக்களில்—149; மாகாணங்களில் கவர்னர் அங்கீகாரம்—149; பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்—151; வரவு செலவு பட்ஜெட்டும் சட்டசபையும்—152; வோட்டு தேவையில்லாத செலவுகள்—153; சட்டசபை கூட்டங்களைப்பற்றிய சில சொற்கள்

—153; சபை கலைக்கப்படுவதன் விளைவுகள்—155; ஜனாதிபதி சட்டங்கள்—156; கவர்னர்களின் சட்டங்கள்—158.

ஷரத்துக்கள்: 111—114, 123, 200—204, 207, 213.]

18. சட்டத்தின் ஆட்சியைக் காக்கும் நீதி மன்றங்கள் 159—164

சட்டமும் அரசியலமைப்பும்—160; யூனியன் நீதிமன்றம்—160. சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரம்—161; கோர்ட்டின் அமைப்பு—161; ஜீவாதார உரிமை வழக்குகளுக்கு விசேஷ வசதி—163; ஸிவில், கிரிமினல் அபபீல்கள்—163; ஹைகோர்ட்டுகள்—164.

[ஷரக்துக்கள்: 124, 132 -134, 139, 214, 216, 217.]

19. நெருக்கடிப் பிரகடனங்கள் 165—170

(1) நெருக்கடிப் பிரகடனம்—165; (2) மாகாணம்பற்றிய நெருக்கடி—167; (3) நிதி சம்பந்தமான நெருக்கடி—169; கவனிக்க வேண்டிய விஷயங்கள்—170.

[ஷரத்துக்கள்: 352—360.]

20. கதம்பம் 171—184

சில வகுப்பினருக்குச் சலுகைகள்—171; மலை ஜாதியாரின் பிரதேசங்கள்—173; உத்தியோக நியமனக் கமிஷன்—173; ஒற்றைமாற்று வோட்டு முறை—174; தேர்தல் கமிஷன்—177; மொழிப் பிரச்னை—178. இந்திய ராஜ்யங்களிடை வரியில்லா வர்த்தகம்—178; விற்பனை வரிபற்றி தாற்காலிக விதிவிலக்கு—179; இந்தியாவின் பிரஜை எனும் உரிமை-179; அரசியல் பதவிகளின் பட்டங்கள்—180; தனி ஸ்தானம்

பத்து வருஷத்துக்கே—182; ராஜ்யங்கள் உறவு—182, ராஜாங்கத் தலைவர்களின் கவுர வத்துக்குப் பாதுகாப்பு—182; தாற்காலிக, இடைக்கால ஏற்பாடுகள்—183; சட்டத்தின் பெயரும் தொடக்கமும்—184;

[ஷரத்துக்கள் : 5—11, 59, 65, 75, 97, 125, 148, 158, 164, 186, 221, 262, 263, 286, 301—307, 309, 311, 312, 315, 325, 326, 330—335, 338, 6-வது ஷெட்யூலில், 340, 343—351, 361, 362, 365, 370, 380, 385.]

21. அரசியலமைப்பைத் திருத்த நடைமுறை 185—187

மாகாணங்களின் சம்மதம் தேவை—184;

[ஷரத்து : 368.]

பிரதிக்கினை —188

[ஷரத்துக்கள் : 75, 99, 124, 148, 168, 188, 219.]

அனுபந்தம் i—xvi

1. யூனியன் நிலப்பரப்பும் ராஜ்யங்களின் எல்லைகளும் ii

[ஷரத்துக்கள் : 1—4.]

2. பிரஜைகள் ii—vi

[ஷரத்துக்கள் : 5—9, 11.]

3. ஜீவாதார உரிமைகள் vi—vii

[ஷரத்துக்கள் : 12—35.]

4. ராஜாங்க நிர்வாகம் பற்றிய பொது லட்சியங்கள் vii—xi

[ஷரத்துக்கள் : 36—51.]

5. பொது மொழி xi—xvi

[ஷரத்துக்கள் : 343—351.]

முதலாவது அத்தியாயம்

# ஜனநாயக குடியாட்சி முறையின் அடிப்படைக் கொள்கைகள்

"இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை சுதந்திர ராஜாங்க அந்தஸ்துடன் கூடின ஜனநாயகக் குடியாட்சியாக அமைத்து, அதன் எல்லாப் பிரஜைகளுக்கும்,

"சமூகப் பொருளாதார அரசியல் நீதியும்,

"சிந்தனை, சொல், நம்பிக்கை, மதம்," வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும்,

"அந்தஸ்து, வாய்ப்பு ஆகியவற்றில் சமத்துவமும் கிட்டும்படிச் செய்து,

"எல்லோரிடையிலும் சகோதரத்துவத்தை வளர்த்து, தனி மனித கவுரவம், தேசத்தின் ஐக்கியம் இரண்டையும் உறுதிப்படுத்துவதென்று மனப்பூர்வமாக சங்கல்பம் செய்துகொண்டு,

"நமது அரசியல் நிர்ணய சபை மூலம் 1949-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ந் தேதியன்று ஒரு அரசியலமைப்பை இயற்றி, சட்டமாக்கி, அங்கீகரித்து, நமக்கு நாமே அளித்துக் கொள்கிறோம்........."

என்ற முன்னுரையுடன் தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்புத் திட்டம் அரசியல் நிர்ணய சபைத் தலைவரின் கையெழுத்துமூலம் ஊர்ஜிதம் செய்யப்பெற்று விட்டது. புது அரசியல் அமுலுக்கு வரும் தேதி 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந் தேதி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அன்றோ, அதற்கு முந்தின காலோ, ஜனாதிபதி தேர்

தெடுக்கப்பட்டு, "கவர்னர்-ஜெனரல்" என்ற பெயர் எடுபட்டுப் போகும். நமது புதிய ஆட்சியில் பிரிட்டிஷ் முடியாட்சியின் சின்னங்கள் எவையும் இரா.

புதிய அரசியலில் சொல்லப்பட்டபடி மாகாண சமஸ்தான சட்டசபைகளுக்குப் புதுத் தேர்தல் நடப்பதற்கு வாக்காளர் ஜாபிதா தயாரிப்பது, வோட்டுத் தொகுதிகள் நிர்ணயிப்பது ஆகிய வேலைகள் முடிவடைய இன்னும் பல மாதங்கள் ஆகலாம். இடைக்காலத்தில் இப்போதுள்ள சட்டசபைகளே இருந்து வரலாம். மற்றெல்லா விஷயங்களிலும், அதாவது (1) மக்கள் உரிமைகள், (2) சட்டசபைகளின் உரிமைகள், (3) மாகாண சர்க்கார்கள், இந்திய யூனியன் சர்க்கார் ஆகியவற்றின் உரிமைகள், பொறுப்புக்கள் முதலிய யாவற்றிலும் இனிப் புது அரசியல் சட்டப்படித்தான் அமல் நடக்கும்.

புதிய அரசியலில் ஏற்படப்போகும் ஆட்சியானது, ஜனநாயக ஆட்சி. அதாவது ஜனங்கள் தாமாகச் சில பிரதிநிதிகளைப் பொறுக்கி, சில ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டு, தாம் நிறுவிய ஆட்சிக்குக் கட்டுப்பட்டுத் தம்மைத் தாமே ஆண்டு கொள்கிறார்கள். நேர்முகமாக அல்லாமல் பிரதிநிதிகள் மூலம் ஆண்டுகொள்கிறார்கள். ஆகையால் இதைப் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி என்பார்கள்.

இதற்காக அமைக்கப்படும் சர்க்காரில் என்னென்ன ஸ்தாபனங்கள் இருக்கவேண்டும், அந்த ஸ்தாபனங்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன, நிர்வாகிகள் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள், அந்த ஸ்தாபனங்கள் என்ன முறையில் காரியம் செய்யவேண்டும், நிர்வாகிகள் என்ன முறையில் காரியம் செய்ய வேண்டும், என்பனவற்றை விவரித்துக் கூறுவதே அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள ஷரத்துக்களின் நோக்கம்.

## நாட்டின் அஸ்திவாரச் சட்டம்

எந்தச் சட்டம் இயற்றினாலும், என்ன உத்தரவு போட்டாலும் அந்தச் சட்டங்கள், உத்தரவுகள் எதுவும் அரசியல்

அமைப்புச் சட்டத்திலுள்ள கட்டளைகளுக்கு முரண்பட்டால் அந்தச் சட்டங்களும் உத்தரவுகளும் செல்லுபடியாக மாட்டா.

**ஆகவே அரசியலமைப்புச் சட்டம் தான் சட்டங்களுக்கெல்லாம் தாய்ச்சட்டம்.**

## எல்லோரும் இந்நாட்டு மன்னர்

இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அமைக்கப்படுவது 'முடியரசு' அல்ல; எதேச்சாதிகார ஆட்சியுமல்ல; ஒரு மதத்தின் பேரால் ஏற்படுத்தும் ஆட்சியுமல்ல; ஏதேனும் ஒரு 'வர்க்கம்' அல்லது 'வகுப்பின்' ஏகபோக ஆட்சியுமல்ல.

நாம் இந்நாட்டில் ஏற்படுத்துவது **ஜனநாயகக் குடியாட்சி.**

எல்லா அதிகாரங்களும் மக்களிடமிருந்தே பிறக்கின்றன என்பதுதான் ஜனநாயகக் குடியாட்சிக்கும் முடியாட்சிக்குமுள்ள வித்தியாசம். மக்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பதன் பொருள் இதுதான். இந்த மக்கள் தேர்தலில் வோட்டுப் போடுவதன் மூலம் தமது அரசுரிமையைச் செலுத்துகிறார்கள்.

## சர்வஜன வோட்டுரிமை

21 வயது வந்த ஆண் பெண் ஆகிய இரு பாலருக்கும் புது அரசியலில் வோட்டுரிமை உண்டு. இவர்கள் தமது வோட்டுரிமை மூலம், பலவிதமான ஸ்தாபனங்களும் அதிகாரிகளும் கொண்ட ஒரு மாளிகையை, தமது உரிமையைப் பாதுகாக்கும் கோட்டையாகவும், தமது முற்போக்கை உருவாக்கும் கருவியாகவும் படைக்கிறார்கள்.

## சர்க்காரின் அதிகாரத்துக்கு எல்லையுண்டு

தம்மிடமுள்ள ஆட்சியுரிமையைத் தமது வோட்டின் மூலம் மக்கள் சில ஸ்தாபனங்களிடம் விட்டுவிட்ட போதிலும்,

அவர்கள் ஏற்படுத்தும் சர்க்கார்களும், சட்ட சபைகளும் என்ன வேண்டுமானாலும் செய்துவிட முடியாது.

உதாரணமாக, மத சுதந்திரத்தையோ, பேச்சு சுதந்திரத்தையோ, சங்கம் சேரும் சுதந்திரத்தையோ, சொத்துரிமையையோ பற்றிய விஷயங்களில் சர்க்காரும், சட்ட சபைகளும் செய்யக்கூடிய காரியத்துக்கு நிபந்தனைகள் உண்டு.

## ஜீவாதார உரிமைகள்*

சர்க்கார் என்ன சட்டம் இயற்றினாலும், மக்களின் சில உரிமைகளில் சர்க்கார் தலையிடக் கூடாது. அந்த உரிமைகள் முக்கியமான பிரஜா உரிமைகளாக மதிக்கப்படுகின்றன. இந்த உரிமைகளைச் சர்க்கார் பறிக்கக் கூடாது. அவற்றைக் காப்பாற்றிக் கொடுப்பது சர்க்காரின் கடமை.

## நோக்கங்கள்**

ஜீவாதார உரிமைகளுக்கு மட்டும் பாதுகாப்பு வைத்துக் கொண்டு மற்ற உரிமைகளை மக்கள் சர்க்காரிடம் ஒப்படைக்கிறார்கள். இவ்வாறு தனி மனிதர், தம் உரிமையைப் பொதுவில் வைத்து, ஒரு சர்க்காரைச் சிருஷ்டிப்பது எதற்காக? சர்க்காரின் லட்சியமென்ன? இவை பற்றியும் அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லியிருக்கிறது.

மக்களிடையே பசி, நோய், அறியாமை இவற்றைப் போக்கடித்து, வாழ்க்கை நிலையை உயர்த்துவது சர்க்காரின் கடமை. தாழ்ந்த நிலையிலுள்ள வகுப்பினரின் முற்போக்கு, உழைப்பாளிகளின் வாழ்க்கை வசதிகள், விவசாய

---

* முழு விவரங்களுக்கு அனுபந்தம் 4, 5, 6, 7-ம் பக்கங்களைப் பார்க்க.

** முழு விவரங்களுக்கு அனுபந்தம் 7, 8, 9, 10-ம் பக்கங்களைப் பார்க்க.

முன்னேற்றம், ஸ்தல ஸ்தாபன வளர்ச்சி, உலக சமாதானம் முதலியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு இந்தியக் குடியரசு வேலை செய்யவேண்டும். இந் நோக்கங்கள் பற்றிய ஒரு கைகாட்டி, அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிறது.

## சமஷ்டி முறை: 'யூனியன்'

நமது அரசியலமைப்பில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் இருக்கிறது. இந்தியாவில் ஒவ்வொருவரும் ஒரே சமயத்தில் இரண்டு சர்க்கார்களின் சேவையைப் பெறுவார்கள். ஒன்று இந்திய யூனியன் சர்க்கார்; மற்றொன்று, ஆங்காங்குள்ள மாகாண சர்க்கார்கள். இரண்டு சர்க்கார்களும் மக்களுக்குச் சேவைசெய்து மக்களைக் காப்பாற்ற வேண்டும். இரண்டு சர்க்கார்களும் சட்டம் இயற்றலாம், இரண்டு சர்க்கார்களும் வரி போடலாம்.

இரண்டு சர்க்கார்களும் மக்களிடமிருந்து நேர்முகமாகவே அதிகாரத்தைப் பெறுகின்றன. அதாவது இந்திய சர்க்காருக்குள்ள அதிகாரம் மாகாண சர்க்கார் மூலம் கிடைத்ததல்ல; மாகாண சர்க்காருக்குள்ள அதிகாரம் இந்திய சர்க்கார் மூலம் வந்ததல்ல.

இரண்டுக்கும் பரஸ்பரம் தொடர்பு உண்டு என்றாலும், இரண்டு சர்க்கார்களும் நேரில் மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பெறுபவை. ஆகையால் உள்நாட்டில் இவையிரண்டும் கிட்டத்தட்ட ஒரேவிதமான அந்தஸ்துள்ளவை. இப்படிப்பட்ட ஒரு அமைப்புக்குச் சமஷ்டி (Federation-பெடரேஷன்) என்று பெயர். பெடரேஷன் என்ற சொல்லுக்குத்தான் அரசியல் சட்டத்தில் யூனியன் (Union) என்ற சொல் உபயோகிக்கப் படுகிறது. நமது அகில இந்திய சர்க்காரைக் குறிப்பதற்கு யூனியன் சர்க்கார் என்ற சொல்லை உபயோகிக்கலாம்.

## அதிகாரப் பங்கீடு

மக்கள் தம்மைத் தாமே ஆண்டு கொள்வதற்கான ராஜாங்க அதிகாரங்களில், ஒரு பகுதி இந்திய (யூனியன்)

சர்க்காரிடம் இருக்கும். ஒரு பகுதி மாகாண சர்க்காரிடம் இருக்கும். ஒரு பகுதி இரண்டு சர்க்கார்களிடமும் இருக்கும்.

மாகாணப்பிரதிநிதிகளைக் கொண்டுதான் இந்திய யூனியன் சட்ட சபையும் அமைக்கப்படுகிறது. ஆகையால் இந்திய யூனியன் சர்க்காரும், மாகாண மக்களின் சிருஷ்டியே. மாகாண சர்க்கார்தான் நமது சர்க்கார் என்றும்; யூனியன் சர்க்கார் வெளி சர்க்கார் என்றும் மதிக்க எவ்வித நியாயமும் கிடையாது. மாகாண சர்க்காரும் யூனியன் சர்க்காரும் இடது கண்ணும் வலது கண்ணும் போல மதிக்கப்பட வேண்டும்.

## பார்லிமெண்டரி பொறுப்பாட்சி

மேலே கூறிய அடிப்படையுடனும் அமைப்புடனும்தான் இந்நாட்டில் அரசாட்சி நடைபெறும். இதன் நிர்வாக அமைப்பு பார்லிமென்டரி பொறுப்பாட்சியாக இருக்கும்.

அதாவது மக்களின் பிரதிநிதிகளால் அமையப்பெறும் மாகாண சட்டசபை, யூனியன் சட்டமன்றம் ஆகியவற்றின் அங்கத்தினர்கள், இந்திய யூனியனின் ஜனாதிபதியைத் தெரிந்தெடுப்பார்கள். அவர் யூனியன் சர்க்காரின் தலைவர் மட்டுமல்ல; ஐக்கிய இந்திய ராஜாங்கத் தலைவர். அவர் கவர்னர்களை நியமிப்பார். கவர்னர் நியமனம் உள்பட எல்லாக் காரியங்களிலும் யூனியன் மந்திரிகளின் தீர்ப்புப்படியே ஜனாதிபதி காரியம் செய்யவேண்டும். கவர்னர்கள், சாதாரணமாக எல்லா விஷயங்களிலும் மந்திரிகளின் தீர்ப்புப்படி நடப்பவராகவும், சில நெருக்கடிகளில் ஜனாதிபதியின் கருத்தைக் கவனித்து நடக்க வேண்டியவராகவும் இருப்பர். இந்த மந்திரிகளோ, சட்டசபைக்குப் பொறுப்புள்ளவர்கள். அதாவது, சட்டசபையின் ஆதரவுடன்தான் மந்திரிகள் பதவி வகிக்க முடியும். ஆகையால் அதிகாரம் முழுவதற்கும் ஆரம்பமும் இறுதி முடிவும் சட்ட சபையிடமே இருக்கும். சட்டசபையோ மக்களின் சிருஷ்டி.

சட்டசபை நினைத்தால், நிர்வாக மந்திரிகளை நீக்கமுடியும் என்ற இந்த முறையைப் பார்லிமென்டரி பொறுப்பாட்சி முறை என்பார்கள்.

மேலேயுள்ளதுதான், புதிய அரசியலமைப்பின் முக்கியமான தன்மைகள். அவற்றைச் சுருக்கமாகக் கூறுமிடத்து:

(1) சர்வஜன வோட்டுரிமை (2) ஜீவாதார உரிமைகள் (3) முன்னேற்ற நோக்கம் (4) ஜனநாயக பார்லிமென்டரி பொறுப்பாட்சிமுறையுடன் கூடின சமஷ்டி—அமைப்பு ஆகிய நான்கும் புதிய அரசியலின் முக்கியமான கொள்கைகள்.

இந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான அடிப்படைகள்:

(1) சட்டசபைகள் (2) சட்டசபைக்குப் பொறுப்பான மந்திரி சபைகள் (3) மாகாண சர்க்கார்களுக்கும், அகில இந்திய சர்க்காருக்குமிடையே 'அதிகாரப் பங்கீடு' (4) ராஜாங்கத் தலைமை (5) அதிகார ஸ்தாபனங்கள் தம் தம் எல்லையை மீறுமல் காரியம் செய்கின்றனவா என்பதுபற்றி நியாயத் தீர்ப்புக் கூறுவதற்கான சுதந்திர நீதிமன்றங்கள்,

மேலேயுள்ள கொள்கைகளும் ஏற்பாடுகளும் அமைப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை இனிவரும் அத்தியாயங்களில் சிறிது சிறிதாக விவரிப்போம்.

இரண்டாவது அத்தியாயம்

# இந்திய யூனியனும் அதன் பகுதிகளும்

பிரிட்டிஷ் ஆட்சி இங்கிருந்தபோது, இந்தியா 'ஒரே இந்தியாவாக' இருக்கவில்லை. (1) பிரிட்டிஷ் இந்தியா (2) இந்திய — இந்தியா (சுதேச சமஸ்தானங்கள்) என்ற இரண்டு பகுதிகளாகவே இந்தியா மதிக்கப்பட்டு வந்தது.

*1947*-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறினராயினும், இந்தியா இரண்டாகவே தானிருந்தது. (1) ஜனநாயக இந்தியா (மாஜி-பிரிட்டிஷ் இந்தியா), (2) யதேச்சாதிகார மன்னர்களின் இந்தியா (சுதேச சமஸ்தானங்கள்.) என்பன அவ்விரண்டும்.

இப்போது இந்த வேற்றுமை ஒழிந்து, இந்தியா முழுவதும் ஒரே ஜனநாயக இந்தியாவாக மாறிவிட்டது. நிஜாமின் படைகள் சரணாகதிக்குப் பிறகு இதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாது போய்விட்டது.

ஆயினும், இந்த மாறுதல் ஸர்தார் பட்டேல் தலைமையிலுள்ள சமஸ்தான இலாகாவுக்கும், ஐநூற்றுச் சில்லரை தனித்தனி சமஸ்தானாதிபதிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் உருவாயிற்றேயன்றி அரசியல் அமைப்பால் ஏற்பட்டதல்ல.

## மாகாண சமஸ்தான இணைப்பு

புதிய அரசியலமைப்பில் இந்திய யூனியன் சர்க்கார் இயற்றும் சட்டங்கள், மாகாணங்கள் விஷயத்தில் எவ்வளவு தூரம் செல்லுபடியாகுமோ அதே அளவுக்கு சமஸ்தானங்கள்

விஷயத்திலும் செல்லுபடியாகும். அதுமட்டுமல்ல, மாகாணங்களில் இருப்பதுபோன்று சமஸ்தானங்களிலும் பூரண ஜனநாயகமே இருக்கும். மாகாணங்களின் அந்தஸ்து சமஸ்தானங்களின் அந்தஸ்தைவிட உயர்ந்ததல்ல. சமஸ்தானங்களின் அந்தஸ்து மாகாணங்களின் அந்தஸ்தைவிடக் குறைந்ததுமல்ல. இரண்டும் மாறுபட்டதுமல்ல.

'மாகாணங்கள்' என்றும் 'சமஸ்தானங்கள்' என்றும் வெவ்வேருக கருதப்பட்ட பிரதேசங்களைப் புதிய அரசியலின் 'ராஜ்யங்கள்' என்ற ஒரே சொல்லின் கீழ் கொண்டு வருவது சாத்தியமாய் விட்டது.

இந்திய யூனியன் பிரதேசம் என்ற ஜாபிதாவில், மாஜி-பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களை 'ஏ-வகுப்பு' ராஜ்யங்கள் என்றும், ராஜ பிரமுகர்களுடன் இருந்து வரும் சமஸ்தானங்களை 'பி-வகுப்பு' ராஜ்யங்கள் என்றும் சட்டத்தில் தனித்தனியாகப் பிரஸ்தாபித்தபோதிலும், அவற்றின் நிர்வாகத்தில் வித்தியாசம் கிடையாது. அரசியலமைப்புச் சட்டத்தில் 'ஏ-வகுப்பு' ராஜ்யங்கள் பற்றி 86 ஷரத்துக்கள் (35 பக்கங்கள்) உள்ளன. ஆனல் 'பி-வகுப்பு' ராஜ்யங்கள் பற்றி ஒரே ஒரு ஷரத்துதான். அது 3 பக்கங்களில் முடிகிறது.

கவர்னர் என்ற சொல்லுக்குப் பதிலாக ராஜப் பிரமுகர் என்ற சொல்லைப் புகுத்திக்கொண்டு, அதற்குத் தக்கபடி 15 ஷரத்துக்களை மாற்றவேண்டும் என்பதுதான் சமஸ்தானங்களைப பற்றித் தனியாக அரசியல் சட்டத்திலுள்ள ஒரே ஷரத்து.

சமஸ்தானங்களுக்கும், மாகாணங்களுக்குமுள்ள வேற்றுமை எடுபட்டுப்போய் இரண்டும் 'ராஜ்யங்கள்' (ஸ்டேட்ஸ்) ஆகிவிட்டன.

சுமார் 550 சமஸ்தானங்கள் இருந்த இத்தேசத்தில் இப்போது 9 சமஸ்தானங்கள்தான் இருக்கின்றன.

## மறைந்துபோன முடியரசுகள்

பல சமஸ்தானங்கள் (புதுக்கோட்டை, சாந்தூர், பங்கனபள்ளிபோன்ற சுமார் 220 சமஸ்தானங்கள்) ஆங்காங்கு மாகாணங்களுடன் சேர்க்கப்பட்டுவிட்டன. இன்னும் பல சிறு சமஸ்தானங்கள் ஆங்காங்கு ஒன்று சேர்க்கப்பட்டு, ராஜாவே இல்லாமல், இந்திய சர்க்காரின் நேர்பார்வையிலுள்ள சில்லரை மாகாணங்களாக ஆக்கப்பட்டுவிட்டன. போபால்போன்ற சில சமஸ்தானங்கள், பழைய உருவத்திலேயே இந்திய சர்க்காரின் நேர் மேற்பார்வையில் வந்துவிட்டன. இவை டில்லி, அஜ்மீர், குடகு முதலிய பிரதேசங்களைப் போல இந்திய சர்க்காரின் சீப் கமிஷனர்கள்மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

சுமார் 300 சமஸ்தானங்கள் ஒன்ருெடொன்று சேர்க்கப்பட்டு, 'கொச்சி-திருவாங்கூர் ஐக்கியம்' போல 6 புது ராஜ்யங்களாக ஒன்றுபடுத்தப்பட்டன. 3 சமஸ்தானங்கள் மட்டுமே (காஷ்மீர், ஹைதராபாத், மைசூர்) பழைய எல்லையுடன் இருக்கின்றன.

## ராஜப்பிரமுகர்கள்

இவ்வாருக, இப்போது இந்தியாவின் எல்லைக்குள் சமஸ்தானம் என்ற அறிகுறியுடன், அதாவது பரம்பரை ராஜாக்களின் தலைமையில் இருப்பவை 9 தான்.

இந்த 9 ராஜ்யங்களிலும், கவர்னர்களுக்குப் பதிலாக 'ராஜப் பிரமுகர்கள்' இருக்கிருர்கள் என்பது ஒன்றுதான், இவற்றுக்கும் மாகாணங்களுக்கும் உள்ள வித்தியாசம்.

## இந்திய யூனியனின் நிலப்பரப்பு *

இந்திய யூனியனின் நிலப் பரப்பு எது என்பது புதிய அரசியல் திட்டத்தின் அனுபந்தத்தில் தரப்படுகிறது. அந்த அனுபந்தத்தில் மாகாணங்கள், சமஸ்தானங்கள்,

---

* சட்டத்தில் இதுபற்றிய ஷரத்துக்களின் கருத்தை அனுபந்தம் 2-ம் பக்கத்தில் காண்க.

இந்திய சர்க்காரின் நேர்முக ஆட்சியிலுள்ள சீப் கமிஷனர் மாகாணங்கள், ஆகிய யாவும் (ஸ்டேட்ஸ்) 'ராஜ்யங்கள்' என்றே அழைக்கப்படுகின்றன.

ஆனால் மாகாணங்கள் 'ஏ—பகுதி' என்ற தலைப்பிலும், சமஸ்தானங்கள் 'பி—பகுதி' என்ற தலைப்பிலும், சீப் கமிஷனர் மாகாணங்கள் 'ஸி—பகுதி' என்ற தலைப்பிலும் தரப்படுகின்றன.




படத்தில் ஏ, பி, ஸி-பிரதேசங்கள் மறு பக்கத்திலுள்ள பெயர்களை யனுசரித்து குறிப்பிடப்பட்டுள்ளன.

என்ற பிலாஸ்பூர் பிரதேசம், மிகச் சிறியதானபடியால் இந்தப் படத்தில் குறிக்க முடியவில்லை. அது கிழக்குப் பஞ்சாப் மலைச் சாரலில் இருக்கிறது. இதன் ஜனத்தொகை சுமார் ஒரு லட்சம்தான்.

### ஏ-பகுதியிலுள்ள ராஜ்யங்கள் (மாகாணங்கள்)

(1) அஸ்ஸாம்
(2) வங்காளம் (மேற்கு வங்காளம்)
(3) பிஹார்
(4) பம்பாய்
(5) மத்யப் பிரதேசம் (மத்திய மாகாணம்)
(6) மதராஸ் (சென்னை)
(7) ஒரிஸ்ஸா
(8) பஞ்சாப் (கிழக்குப் பஞ்சாப்)
(9) ஐக்கிய மாகாணம்

### பி-பகுதியிலுள்ள ராஜ்யங்கள் (சமஸ்தானங்கள்)

(1) ஹைதராபாத்
(2) ஜம்மு—காஷ்மீர்
(3) மத்ய பாரத்
(4) மைசூர்
(5) பாட்டியாலாவும் கிழக்குப் பஞ்சாப் ஐக்கியமும்
(6) ராஜஸ்தான்
(7) சௌராஷ்டிரம்
(8) திருவிதாங்கூர்—கொச்சி ஐக்கியம்
(9) விந்தியப் பிரதேசம்

## சி-பகுதியிலுள்ள ராஜ்யங்கள் (இந்திய யூனியன் நிர்வாகம்)

(1) அஜ்மீர் (அஜ்மீர்-மெர்வாரா)
(2) போபால்
(3) பிலாஸ்பூர்
(4) கூச்—பிஹார்
(5) கூர்க் (குடகு)
(6) டில்லி
(7) ஹிமாசலப் பிரதேசம்
(8) கட்ச்
(9) மணிப்பூர்
(10) திரிபுரா

இந்தியாவின் எல்லையைக் கூறும் இந்த அட்டவணையில் டி-பகுதி என்ற பிரிவில் அந்தமான், நிக்கோபார் தீவுகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலே கூறியுள்ள ராஜ்யங்கள் அத்தனையும் சேர்ந்ததுதான் இந்திய யூனியன்.

## புதிய பிரதேசமும் சேரலாம்

இனிமேல் ஏதேனும் ஒரு பிரதேசம், (தற்காலம் இந்திய எல்லைக்கு வெளியே இருக்கும் பிரதேசம்) இந்தியாவுடன் சேர்ந்தால், அதையும் இந்தியாவின் நிலப்பரப்பாக மதிப்பதற்குச் சட்டத்தில் ஒரு வாசகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரெஞ்சு, போர்த்துகீசிய ஆதிக்கத்திலுள்ள புதுச்சேரி, காரைக்கால், கோவா போன்ற இடங்களை உத்தேசித்து இந்த வாசகம் சேர்க்கப்பட்டிருப்பதாக நினைக்கிறோம்.

## ராஜ்யங்களின் எல்லையை மாற்றலாம்

(1) மேலே குறிப்பிட்ட ராஜ்யங்களில் சிலவற்றை ஒன்றாக்கவோ,

(2) ஒரு ராஜ்யத்திலுள்ள பிரதேசத்தின் ஒரு பகுதியைப் பிரித்து ஒரு புது ராஜ்யமாக அமைக்கவோ,

(3) ஒரு ராஜ்யத்திலுள்ள ஒரு பகுதியை மற்றொன்றுடன் சேர்த்து, ஒன்றின் எல்லையைக் கூட்டி, மற்றொன்றைக் குறைக்கவோ,

(4) எல்லைகளை மாற்றி யமைக்கவோ,

(5) பெயரை மாற்றவோ,

(6) விஸ்தீர்ணத்தை அதிகப்படுத்தவோ-குறைக்கவோ, அகில இந்திய சட்டசபை சட்டமியற்றலாம் என்றும் ஒரு ஷரத்து சட்டத்தில் இருக்கிறது.

ஆந்திர மாகாணம் போல மொழிவாரி மாகாணங்கள் ஏற்படுத்துவதற்கு ஒரு வழிமுறை வகுப்பதே இந்த ஷரத்தின் நோக்கம்.

## புதிய மாகாணங்கள் ஏற்படுத்தும் முறை

புதிய அரசியல் திட்டம் அமலுக்கு வரும் தேதியாகிய 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந்தேதிக்குள் ஆந்திர மாகாணம் ஏற்படுவதானால், இப்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் 290-வது ஷரத்துப்படி கவர்னர்-ஜெனரலே செய்துவிடலாம். ஜனவரி மாதம் 26-ந் தேதிவரை ஆந்திர மாகாணம் ஏற்படவில்லையானால், பிறகு இந்தியப் பார்லிமென்டில் சட்டம் இயற்றித்தான் புதிய மாகாணம் ஏற்படமுடியும்.

அவ்வாறு சட்டம் இயற்றவேண்டுமானால், மசோதா பார்லிமென்டில் சமர்ப்பிக்கப்படும் முன்னரே, ஜனாதிபதியின் அனுமதியைப் பெறவேண்டும். அதுமட்டுமல்ல; மசோதாவிலுள்ள விஷயங்கள் பற்றி, சம்பந்தப்பட்ட மாகாணத்தின் சட்ட சபையின் கருத்தை ஜனாதிபதி நிச்சயமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். மாகாண எல்லைகளை மாற்றியமைக்கும் மசோதாவுக்கு இப்படியொரு விசேஷ நிபந்தனை புது அரசியல் சட்டத்தில் இருக்கிறது.

**ஏ, பி-வகுப்பு ராஜ்யங்கள்**

ஏ-வகுப்பு, பி-வகுப்பு ஆகிய இரண்டையும் பற்றிய மட்டில் குறிப்பிடத் தக்க வித்தியாசம் எதுவுமில்லை.

**ஸி-வகுப்பு ராஜ்யங்கள்**

இந்த ஜாபிதாவிலுள்ள சிலப் பிரதேசங்களில், உதாரணமாக டில்லி, அஜ்மீர் ஆகியவற்றில், சட்டசபைகள் எதுவும் இப்போது இல்லை. அங்கு சட்டசபைகள் ஏற்படுத்துவது, அவற்றின் பிரதிநிதிகள் தொகை, தேர்தல் அல்லது நியமன முறை முதலியவற்றை நிர்ணயித்துச் சட்டம் இயற்றுவது, ஆகியவற்றுக்குப் பார்லிமென்டுக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது.

வேறு ஏற்பாடு செய்யப்படாத வரையில், இந்தப் பிரதேசங்கள் இந்திய யூனியன் சர்க்காரின் மேற்பார்வையிலும் ஆதிக்கத்திலுமே இருக்கும். இந்த அதிகாரத்தை ஒரு சீப் கமிஷனர் மூலம் நிறைவேற்றலாம்.

அல்லது அந்தந்தப் பிரதேசத்தின் (ராஜ்யத்தின்) பக்கத்திலுள்ள ஏ அல்லது பி-வகுப்பு ராஜ்யத்தின் மூலம் நிர்வகிக்கலாம். அவ்வாறு செய்வதானால் சம்பந்தப்பட்ட ஏ, பி ராஜ்ய சர்க்கார்களின் கருத்தையும், புதிய நிர்வாகத்துக்கு உட்படுத்தப்படும் மக்களின் கருத்தையும் பொருத்தமான முறையில் ஜனாதிபதி தெரிந்துகொள்ளவேண்டும்.

குடகு (கூர்க்) சம்பந்தப்பட்ட மட்டில், சட்டம் மாற்றப்படாத வரையில் அங்குள்ள சட்டசபையின் அமைப்பு இப்போதிருக்கிறபடியே நீடிக்கும்.

டி-வகுப்பு பிரதேசமாகக் குறிப்பிடப்பட்டுள்ள, அந்தமான் தீவு, அல்லது பிரதேச ஜாபிதாக்களில் சொல்லப்படாத இதர இடங்கள் விஷயத்தில் ஜனாதிபதி தமக்கு உசிதமாகத் தோன்றும் முறையில், ஒரு சீப் கமிஷனர் அல்லது வேறு அதிகாரிமூலம் நிர்வாகத்துக்கு ஏற்பாடு செய்யலாம்.

சட்டத்தில் ஜனாதிபதியிடமே இந்த அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும், ஜனாதிபதி என்பது காரியாம்சத்தில் இந்திய யூனியன் மந்திரிசபை யென்றே பொருள்படும்.

## காஷ்மீர் பற்றி தாற்காலிக விதிவிலக்கு

பி - வகுப்பு ராஜ்யங்களின் அமைப்பு, அந்தஸ்து, உரிமை இவை, ஏ - வகுப்பு ராஜ்யங்களைப் போன்றதே என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். ஆனால் காஷ்மீர் விஷயமாக மட்டுமே தாற்காலிகமாகச் சில விதிவிலக்குகள் உண்டு.

அந்த விதிவிலக்கு என்ன என்பதை 'தாற்காலிக ஏற்பாடுகள்' என்ற தலைப்பில் அரசியலமைப்புச் சட்டத்தின் 370-வது ஷரத்தில் சொல்லியிருக்கிறது.

அந்த சமஸ்தானம் இந்தியாவில் சேருவதாக முன்வந்து எழுதிக்கொடுத்துள்ள 'பிரவேச உடன்படிக்கையில்' (பிரவேசப் பத்திரத்தில்) இன்னின்ன விஷயங்கள் பற்றி அந்த சமஸ்தானத்தைக் கட்டுப்படுத்துவதாக இந்திய சர்க்கார் சட்டமியற்றலாம் என்று சொல்லியிருக்கிறது. இவ்வாறு 'விட்டுக்கொடுத்த' விஷயங்கள் பற்றி மட்டுமே இந்திய சர்க்கார் அந்த சமஸ்தானத்தைக் கட்டுப்படுத்துவதாகச் சட்டம் இயற்றலாம்.

காஷ்மீர் சம்பந்தமாகப் புதிதாக ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி இந்திய பார்லிமென்ட் சட்டம் இயற்ற வேண்டுமானால், ஜனாதிபதியின் அனுமதிவேண்டும். சமஸ்தான சர்க்காரைக் கலந்துகொண்டு, சமஸ்தான சர்க்காரின் சம்மதத்தைப் பெற்றபின்தான், ஜனாதிபதி தம் அனுமதியைத் தருவார்.

## சில சமஸ்தானங்கள்மீது கண்காணிப்பு

மற்றுமுள்ள பி—வகுப்பு சமஸ்தானங்கள் மாகாணங்களைப் போலவே பாவிக்கப்படுமென்றாலும், 10 வருஷ காலம்

வரையில் சமஸ்தானங்களின்மீது இந்திய சர்க்காருக்குக் கண்காணிப்பு உரிமை இருக்கும். சில சமஸ்தானங்களில் இது வரையில் பொறுப்பாட்சி யனுபவம் இல்லாததாலும், ஹைதராபாத் போன்ற சில சமஸ்தானங்களில் சரித்திர சம்பந்தமான காரணங்களால் சில பிரசினைகள் இருந்துவருவதாலும், இம்மாதிரி முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

சமஸ்தானங்கள் தாமாக நிர்வகித்துக்கொள்ளலாம் என்று ஒப்படைக்கப்பட்டுள்ள விஷயங்களில் கூட, சமஸ்தான நிர்வாகம்பற்றி இந்திய ஜனாதிபதி (அதாவது இந்திய சர்க்காரின் மந்திரிசபை) பொதுவான மேற்பார்வையும், ஆதிக்கமும் வைத்துக்கொண்டு, குறிப்பிட்ட விஷயங்களில் தாக்கீது அனுப்ப உரிமையுண்டு. இந்தத் தாற்காலிக ஏற்பாடு 10 வருஷம் வரை இருக்கும். 10 வருஷம் என்று இருப்பதைக் குறைக்கவோ, கூட்டவோ பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. சில சமஸ்தானங்கள் விஷயத்தில் இம்மாதிரிக் கண்காணிப்பு அவசியமில்லை என்று உத்தரவு போடவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

மூன்றுவது அத்தியாயம்

# அதிகாரத்தின் உறைவிடங்கள்

(1) சர்வஜன வோட்டுரிமை (2) ஜீவாதார உரிமைகள் (3) முன்னேற்ற நோக்கம் (4) ஜனநாயக 'பார்லிமென்டரி பொறுப்பாட்சி' முறையுடன் கூடின 'சமஷ்டி யமைப்பு' ஆகிய நான்கையும் முக்கிய கொள்கைகளாகக் கொண்டு,

(1) சட்டசபைகள் (2) சட்டசபைக்குப் பொறுப்பான மந்திரி சபைகள் (3) மாகாண சர்க்கார்களுக்கும் இந்திய யூனியன் சர்க்காருக்கு மிடையே 'அதிகாரப் பங்கீடு' (4) ராஜாங்கத் தலைமை (5) சுதந்திர நீதிமன்றங்கள் ஆகிய ஸ்தாபனங்கள், ஸ்தாபன ஏற்பாடுகள் மூலம் ஜன நாயகக் குடியரசு நடைபெறும் என்று முதல் அத்தியாயத் தில் கூறினோம்.

இந்த ஸ்தாபன ஏற்பாடுகள் பற்றிய சில பொதுப் படையான விவரங்களை இனி ஆராய்வோம்.

## 1. சட்டசபைகள்

**மாகாண சட்டசபைகள்**

மாகாணம் (சமஸ்தானம்) தோறும் மக்கள் தம் வோட்டு களால் மாகாணத்தின் முக்கியமான சட்டசபையைத் தேர்ந் தெடுப்பார்கள். 21 வயதுக்கு மேற்பட்ட எல்லோரும் தேர்த லில் வோட்டுச் செய்யலாம். 21 வயதுக்கு மேற்பட்ட எல்லோ ருக்கும் வோட்டுரிமை உண்டு என்ற கருத்தையே, "சர்வஜன வோட்டுரிமை" என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம்.

சில மாகாணங்களிலும், சமஸ்தானங்களிலும் மேல் சபை அல்லது கவுன்ஸில் என்று கூறும் மற்றொரு சட்டசபை இருக்கும். இதன் அங்கத்தினர்களில் பெரும்பாலோர் ஸ்தல

ஸ்தாபன அங்கத்தினர்களாலும், உயர்தரப் படிப்புள்ளவர்களாலும், கீழ் சபை அங்கத்தினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மாகாணங்களில் சர்வஜன வோட்டு மூலம் தேர்ந்தெடுத்த சட்ட சபைக்கு ஆங்கிலத்தில் (Legislative Assembly) 'லெஜிஸ்லேட்டிவ் அஸெம்பிளி' என்று பெயர். இதைப் பத்திரிகைகளில் கீழ் சபை என்று குறிப்பிடுவது வழக்கம். ஆனால் அதிகாரத்தையும், அங்கத்தினர் தொகையையும் கவனிக்குமிடத்து இதைக்கீழ் சபை என்று சொல்வதைவிட 'பெரிய சட்டசபை' என்று சொல்வதே பொருந்தும். மற்றொரு சபைக்குப் பத்திரிகைகளில் மேல் சபை என்ற சொல்லை உபயோகித்து வருகிறோம். ஆங்கிலத்தில் இதை 'லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் (Legislative Council) என்று சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை மேல் சபை என்று சொல்வதைவிட 'சிறிய சபை' என்றோ, பரிசீலனைச் சபை என்றோ சொல்வது பொருந்தும்.

இரண்டையும் சேர்த்துக் குறிப்பிடும் போது ஆங்கிலத்தில் (Legislature) 'லெஜிஸ்லேச்சர்' என்கிறார்கள். தமிழில் மாகாண சட்டமன்றம் என்று சொல்லலாம்.

சட்டசபைகளின் அமைப்பு அதிகாரம் முதலியன பின்னர் விவரிக்கப்பெறும்.

## இந்திய யூனியன் சட்டசபைகள்

சர்வஜன வோட்டின் மூலம் ஒரு இந்திய யூனியன் சட்டசபையும் தேர்ந்தெடுக்கப்படும். எல்லா மாகாணங்களிலுமுள்ள வோட்டர்களே நேரில் இந்த இந்திய யூனியன் சடடசபையைச் சிருஷ்டிக்கிறார்கள்.

இந்திய யூனியன் சட்ட மன்றத்திலும் ஒரு மேல் சபை இருக்கும். இது பெரும்பாலும் மாகாண சட்டசபை மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படுவது.

இந்திய சட்ட மன்றத்தின் மேல் சபைக்கு ராஜ்யங்களின் சபை (Council of States) 'கவுன்ஸில் ஆப் ஸ்டேட்ஸ்' என்று பெயர். சட்ட மன்றத்தின் மற்றொரு சபைக்கு, அதாவது சர்வஜன வோட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் சபைக்கு மக்களின் சபை (House of the People) 'ஹாவுஸ் ஆப் தி பீப்பில்' என்று பெயர். இதனை ஜனசபை என்றும் சொல்லலாம். இரண்டுக்கும் சேர்ந்து பொதுவான பெயர் சட்ட மன்றம் (Parliament) 'பார்லிமெண்ட்.'

## 2. யூனியன் நிர்வாகம்

### ஜனாதிபதி

இந்திய பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், மாகாணங்களின் கீழ் சபை அங்கத்தினர்களும் சேர்ந்து இந்தியாவின் ஜனாதிபதி என்று ஒருவரைத் தெரிந்தெடுப்பார்கள். ஆங்கிலத்தில் இவருக்குப் பிரஸிடெண்ட் (President) என்று பெயர். இந்திய மொழியில் ராஷ்டிரபதி என்று சொல்லலாம்.

இந்த ஜனாதிபதிதான் இந்திய ராஜாங்கத்தின் தலைவர். இவரை மன்னர் என்று மதிக்கலாம். ஆனால் இவர் ஜனநாயக மன்னர். ஆகையால் இவர் தமது மந்திரி சபையின் ஆலோசனைப்படிதான் தமது அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும். சர்க்காரின் காரியங்கள் யாவும் ஜனாதிபதியின் பேரால் தான் நடைபெறும் என்று சட்டம் கூறும். ஆனால், ஜனாதிபதியின் பேரால் நடக்கும் சர்க்காரின் நிர்வாகக் கொள்கைகளை உருவாக்குதற்கு ஒரு மந்திரி சபை இருக்கும்.

### இந்திய யூனியன் மந்திரி சபை

பார்லிமெண்டிலுள்ள 'மக்கள் சபையின் பெரும்பான்மையோரது ஆதரவைப் பெறக்கூடிய ஒரு பிரதம மந்திரியும் அவர் தெரிந்தெடுக்கும் இதர மந்திரிகளும் கொண்டதாக இந்திய யூனியன் மந்திரி சபை அமைக்கப்படும்.

சட்டசபையின் ஆதரவுடன்தான் மந்திரி சபை பதவியில் இருக்க முடியும். ஆகையால் ஜனாதிபதியினிடம் இருப்பதாகச் சொல்லும் அதிகாரம் உண்மையில் மந்திரிகளின் அதிகாரமே. மந்திரிகளின் அதிகாரம் என்று சொல்லப்படுவது இறுதியில் சட்டசபையின் அதிகாரமே. அதனால்தான் சட்ட சபையே ராஜாங்க ஸ்தாபனங்களின் அஸ்திவாரம் என்கிறோம்.

## 3. மாகாண நிர்வாகம்

### கவர்னர்கள்

யூனியன் சர்க்காரின் ராஜாங்கத் தலைவராக ஜனாதிபதி இருப்பதுபோலவே, மாகாணங்களில் ராஜாங்கத் தலைவராக ஒருவர் நியமிக்கப்படுவார். இவரது பதவிக்குக் கவர்னர் என்று பெயர். இவரை ஜனாதிபதியே நியமிப்பார். காரியம் சதத்தில் இந்திய யூனியன் மந்திரிசபையே நியமிக்கும் என்று சொல்லலாம். கவர்னர்தான் மாகாண ராஜாங்கத்தின் தலைவர். இவர் தமது மந்திரி சபையின் யோசனைப்படியே நடக்கவேண்டியவராகவும், சில சந்தர்ப்பங்களில் மட்டும் ஜனாதிபதிக்குப் பொறுப்புச் சொல்லக்கூடியவராகவும் இருப்பார் என்பதை ஏற்கனவே கூறியுள்ளோம்.

### மாகாண மந்திரிசபைகள்

இந்திய யூனியன் மந்திரிசபை இருப்பதுபோலவே, மாகாணங்களிலும் கீழ் சபையின் மெஜாரிட்டிக்குப் பொறுப்புள்ளதான மந்திரி சபை இருக்கும். மந்திரி சபையின் பொறுப்பு பற்றி பல சம்பிரதாயங்கள் உண்டு. அவற்றைப் பின்னர் சில அத்தியாயங்களில் விவரிப்போம்.

## 4. சமஷ்டியில் அதிகாரப் பங்கீடு

மக்கள் தம்மைத் தாமே ஆண்டு கொள்வதற்கான ராஜாங்க அதிகாரங்களில் ஒரு பகுதி இந்திய யூனியன் சர்க்காரிடம் இருக்கும்; ஒரு பகுதி மாகாண சர்க்காரிடம் இருக்கும்


இந்திய குடியரசு அமைப்பின்
சிறப்பான அஸ்திவாரம்
மக்களின் நலனுக்காக
மக்கள் ஸ்தாபனங்களின் மூலம்
உருவாக்கிய மக்களின் ஆட்சி
எல்லா சட்ட சபையினரும் சேர்ந்து பொறுக்கிய ஜனாதிபதி
சுதந்திரமான நீதி மன்றம்
சட்ட சபைக்கு உட்பட்ட நிர்வாகம்
இந்தியா-மாகாண அதிகாரப் பங்கீடு
பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளுக்கு பாதுகாப்பு
மக்களின் வோட்டு மூலம் சட்ட சபைகள்

ஒரு பகுதி இரண்டு சர்க்கார்களிடமும் பொதுவாக இருக்கும் என்று முன்னர் கூறினோம். இப்படி அதிகாரத்தைப் பங்கிடுவது சமஷ்டி முறையின் ஒரு முக்கியமான அம்சம்.

இவ்வாறு அதிகாரத்தைப் பங்கிடுவதில் எந்த வகையான அதிகாரம் எந்தச் சர்க்காரிடம் இருக்கும் என்று பார்ப்போம்:

## இந்திய யூனியன் பொறுப்புக்கள்

தேசப் பாதுகாப்பு, தேச முழுதுக்கும் பயன்படக்கூடிய போக்குவரத்து வசதிகள், வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு உறவு, செலாவணி முதலியன பற்றிய முக்கிய பொறுப்பும் அதிகாரமும் இந்திய யூனியன் சர்க்காரிடம் ஒப்படைக்கப் படுகின்றன.

## மாகாண பொறுப்புக்கள்

சுகாதாரம், கல்வி, விவசாயம், குற்றத்தடுப்பு ஆகியவை போன்று மக்களின் அன்றாட வாழ்க்கையில் நேர்முகமான தொடர்புள்ள விஷயங்கள் பற்றிய முக்கியப் பொறுப்பும் அதிகாரமும் மாகாண சர்க்கார்களிடம் விடப்படும்.

## பொதுவான பொறுப்புக்கள்

கொலை, களவு, மோசடி, அடிதடிக் கலகம் முதலியவற்றைத் தடுப்பதும், தண்டிப்பதும் மாகாணங்களின் பொறுப்பே யாயினும், இது பற்றிய சட்டங்கள் எல்லா மாகாணங்களிலும் ஒரேமாதிரி இருப்பதுதான் நல்லது. அது போலவே திருமணம் செய்துகொள்வது, சொத்தின் வாரிசு பாத்தியம் முதலியவற்றில் ஆங்காங்கு பழக்க வழக்கங்கள் வெவ்வேருக இருப்பினும், மாகாணங்களில் எல்லாம் இவை பற்றிய ஒழுங்குமுறைச் சட்டம் ஒரேவிதமாய் இருப்பது அவசியம். ஏனென்ருல் ஒரு மாகாணத்தில் ஏற்படுத்தும் ஒழுங்குமுறைச் சட்டங்கள் பயன்படாதபடி முறியடிப்பதற்குச் சிலர் அவ்வித ஒழுங்குமுறைச் சட்டங்கள் அமலில்

இராத வேறு மாகாணங்களில் போய், தமது மாகாணச் சட்டத்துக்கு விரோதமான காரியத்தைச் செய்ய முடியும். ஆகையால் இதிலும் மாகாணத்துக்கு மாகாணம் முரணில்லாமல் செய்வது அவசியம். இம்மாதிரியான சில நோக்கங்களுடன் கிரிமினல் குற்றச் சட்டங்கள், ஸிவல் சட்டங்கள், கோர்ட்டு நடைமுறைகள், தொழிற் சங்கச் சட்டங்கள், சிற்சில சுகாதாரச் சட்டங்கள், சில வர்த்தகச் சட்டங்கள் முதலியவற்றில் அதிகாரம் யூனியன் சர்க்கார், மாகாண சர்க்கார் இரண்டிடமும் ஒப்படைக்கப்படுகிறது.

இந்திய யூனியன் பொறுப்பில் ஒத்துழைப்பது மாகாணங்களின் பொறுப்பு. மாகாணங்களுக்கு உதவி செய்து மாகாணங்களிடையே பரஸ்பரம் ஏற்படக்கூடிய முரண்பாடுகளைத் தவிர்ப்பது யூனியன் சர்க்கார் கடமையாகும். இதுவே அதிகாரப் பிரிவினையின் தன்மை.

## இந்திய யூனியன் சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் தொடர்பு

சில விஷயங்களில் மாகாண சர்க்கார்கள்தாம் சட்டமியற்றலாம்; நிர்வாகம் செலுத்தலாம். சில விஷயங்களில் இந்திய யூனியன் சர்க்கார்தான் சட்டமியற்றலாம். சாதாரணமாக, மாகாண சர்க்காரின் காரியம், யூனியன் சர்க்காரின் காரியத்துக்கு முரண்படாது என்றே எதிர்பார்க்கலாம். ஆயினும் சட்டங்களை அமல் நடத்துவதில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அம்மாதிரி முரண்பாடு ஏற்பட்டால், அந்த முரண்பாடுகளைச் சமாளிப்பதற்காக இந்திய யூனியன் சர்க்காருக்குச் சில அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்திய யூனியன் சர்க்காரில் எல்லா மாகாணத்தினருக்கும் பிரதிநிதித்துவமும் உரிமையும் இருப்பதால் காரியாம்சத்தில் யூனியன் சர்க்காரின் அதிகாரம் என்பதும் மக்களின் அதிகாரமே.*

---

* முதல் மூன்று அத்தியாயங்களில் கூறியுள்ளதை, இனிவரும் அத்தியாயங்களிலுள்ள விரிவான விளக்கங்களுக்கு முன்னுரையாகவே மதிக்கவேண்டும்.

நான்காவது அத்தியாயம்

# 1935-ம் வருஷத்துச் சட்டமும் புதிய அரசியலும்

அரசியல் நுணுக்கங்களைக் கவனிக்குமுன்னர், புதிய அரசியலின் சரித்திர வரலாறு என்ன என்பதைக் கவனித்துக் கொள்வது அவசியம். சரித்திர திருஷ்டியுடன் கவனித்தால் தான் ஒரு அரசியலமைப்பைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். ஆகையால் 1947-ம் வருஷத்துக்கு முன் இருந்த அரசியலுக்கும், 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதிக்குப் பின்னர் இப்போது இருந்து வரும் அரசியலுக்கும் உள்ள வித்தியாசத்தைப பற்றி இந்த அத்தியாயத்தில் சிறிது கூறுவோம்.

அரசியல் சட்டம் ஒன்று புதிதாக இயற்றாமலே, இந்த இரண்டு வருஷமாக இந்நாட்டின் அரசியலானது ஜனநாயக சுதந்திர அரசியலாக நடந்திருக்கிறது. இது எவ்வாறு என்பதையும் புதிய அரசியலமைப்பு எதற்காக என்பதையும் விளக்குவது அவசியம்.

பழைய இந்தியாவில் மாகாண அரசியல், சமஸ்தான அரசியல், அகில இந்திய அரசியல் ஆகிய மூன்றும் பிரிட்டனின் ஆதிக்கக் கருவிகளாக இருந்தன. ஜனநாயகத்தின் சில வெளிப் பூச்சுகள் இருந்தனவாயினும், ஜனநாயகத்தின் அடிப்படையான 'சுதந்திரம்' என்ற அம்சம் பழைய இந்திய அரசியல் சட்டத்தில் (1935-ம் வருஷத்துச் சட்டத்தில்) இல்லை.

ஆயினும், 1947ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15ந்தேதியன்று நாம் சுதந்திரமடைந்த பிறகு 1935-ம் வருஷத்துச் சட்டத்தில் சில பகுதிகளை எடுத்தெறிந்துவிட்டு, அதையே சுதந்திரக் கவசமாக அணிந்துகொள்ள முடிந்தது.

1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்துக்கு முன்னர் இருந்த 1935-ம் வருஷத்துச் சட்டம், ஒரு சிறைசாலைக்குச் சமமானது. 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் தேதிக்குப் பின் நாம் கையாண்ட திருத்தச் சட்டம் பழைய சிறையின் வெளிப் பூட்டை உடைத்து மாளிகையாக மாற்றப்பட்ட கட்டிடம். புதிய அரசியலமைப்புச் சட்டம் நமது சுதந்திரத்தின் கோட்டையும் அரண்மனையும் ஆகும்.

## 1935-ம் வருஷத்துச் சட்டம்

1935-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் பார்லிமென்ட் இயற்றிய இந்திய அரசியல் சட்டத்தில் (1) நிபந்தனையுடன் கூடிய மாகாண சுயாட்சி (2) இரட்டையாட்சி உள்ள ஒரு அரை குறையான சமஷ்டி (3) பிரிட்டனுக்குச் சாதகமான பாது காப்புக்கள் ஆகிய மூன்று அம்சங்கள் இருந்தன. அவற்றுள் சமஷ்டி என்ற 2-வது அம்சம் அமலுக்கு வரவேயில்லை. ஆயினும் சட்டம் முழுவதன் சாராம்சத்தையும் இங்கு தருகிறோம்.

**மாகாணங்களில்:**

(1) மாகாண சட்டசபைகள்.

(2) மாகாண சட்டசபைக்குப் பொறுப்பான மந்திரிகள்,

(3) மாகாண விஷயங்கள், அகில இந்திய விஷயங்கள், பொது விஷயங்கள் என்ற அதிகாரப் பங்கீடு.

(4) மந்திரிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டுவிட்டு அதைப் பூர்ணமாக நிராகரிக்க கவர்னருக்கு அதிகாரம்.

(5) மந்திரிகளைக் கலந்து கொள்ளாமல் கவர்னர் தாமாகவே சில காரியங்கள் செய்ய அதிகாரம்.

**அகில இந்திய சமஷ்டியின் அமைப்பு**

(1) மொத்த சமஸ்தானங்களுள், ஜனத்தொகையாலும் நிலப்பரப்பாலும் பாதிக்குச் சமமான சமஸ்தானங்களாவது

சமஷ்டியில் சேர இணங்கினால்தான் அகில இந்திய சமஷ்டி ஏற்படும் என்பது பழைய சட்டத்திலுள்ள ஏற்பாடு.

(2) அப்போதும் எந்த சமஸ்தானம் சேர முன்வருகிறதோ அதுமட்டும்தான் சமஷ்டியில் இருக்கும்.

(3) சமஷ்டியில் ஒரு சமஸ்தானம் சேர்ந்த பிறகும், அது 'விட்டுக்கொடுக்கும்' சில குறிப்பிட்ட விஷயங்களைத் தவிர மற்ற எதிலும் சமஷ்டி சர்க்கார் சட்டம் இயற்ற முடியாது.

**சமஷ்டி சட்டசபையும் மந்திரி சபையும்**

(1) சமஷ்டியில் இரண்டு சபைகள் கொண்ட சட்ட மன்றம் இருக்கும்.

(2) சட்டசபைக்குப் பொறுப்புள்ள மந்திரிகளும் இருப்பர்.

(3) மந்திரிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டுவிட்டு, அதை நிராகரித்து, தம் இஷ்டம்போல கட்டளையிட கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம்.

(4) மந்திரிசபையிடம் ஆலோசனையே கேட்காமல் காரியம் செய்ய கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம்.

**கவர்னர்—ஜெனரலின் தனித் தர்பார்**

(1) பணம், ராணுவம், ஆகியவைபற்றி மந்திரி சபைக்குப் புறம்பான தனி ஆலோசகர்கள் மூலம் கவர்னர்-ஜெனரலின் ஏகபோக நிர்வாகம்.

(2) பிரிட்டிஷ் வர்த்தகத்துக்குப் பாதகமாக மந்திரிகள் எதுவும் செய்துவிட முடியாதபடி பாதுகாப்புக்கள்.

(3) சமஸ்தானங்களில் உள்நாட்டு ஜனநாயகம் பற்றி அரசியலமைப்பில் பிரஸ்தாபமே கிடையாது.

(4) சமஷ்டியில் சேர்ந்த சமஸ்தானம், சேராத சமஸ்

தானம் இரண்டின் மீதும் பிரிட்டனின் பேரால் வைசிராய்க்கு ஆதிக்கம்.

கவர்னர்களும், கவர்னர்-ஜெனரலும், பிரிட்டிஷ் சர்க்காரின் கட்டளையை நிறைவேற்றவேண்டியவர்களே இவர்கள் தமது அதிகாரத்தைப் பிரிட்டிஷ் சர்க்காரின் இஷ்டப்படித்தான் உபயோகிக்கவேண்டும்.

சமஷ்டி அமலுக்கு வராவிட்டால், மத்திய சர்க்காரில் பொறுப்பாட்சியே கிடையாது என்று இந்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. (1) பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின் சட்டசபை 1919-ம் வருஷத்தில் நிர்ணயித்தபடியே இருக்கும். அதாவது கீழ் சபையில் சுமார் கால்பங்கும், மேல் சபையில் சுமார் மூன்றிலொரு பங்கும் நியமன அங்கத்தினர்களாலேயே நிறுவப்படும். (2) மந்திரிசபை கிடையாது. (3) வைசிராய் சில உத்தியோகஸ்தர்களை நியமித்து, அவர்கள் மூலம் நிர்வாகம் நடத்துவார். சட்டசபையின் மெஜாரிட்டியைப் புறக்கணித்தும் நிர்வாகத்தை நடத்தலாம்.

## 1935 சட்டத்திலுள்ள அடிப்படை ஊழல்கள்

மேலேயுள்ள 'மாகாணங்களில்' என்ற தலைப்பில் பிரஸ்தாபித்த (4), (5) இலக்கமிட்டிருக்கும் இரண்டும், மந்திரிகளுக்குப் பிரிட்டனின் சார்பில் விலங்குபூட்ட கவர்னருக்கு அதிகாரம் கொடுத்தன. ஆகையால் பெயரளவில் மாகாணத்தில் பார்லிமென்டரி பொறுப்பாட்சி ஏற்படுத்தினபோதிலும், சிறைச்சாலையில் கைதிகள் தமது சோற்றைத் தாமே சமைத்துக்கொள்ளலாம் என்பது போன்ற பொறுப்பாட்சிதான். அது பிரிட்டனின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொறுப்பாட்சியே. அதாவது, சுதந்திரமில்லாத பொறுப்பாட்சி. அந்தப் பொறுப்பாட்சி, பார்வைக்கு ரோஜாப்பூபோல் தோன்றும் காகித ரோஜாப்பூ.

அடுத்தபடியாக, அந்தச் சட்டத்திலுள்ள சமஷ்டி அமைப்பைக் கவனிப்போம். அந்தச் சமஷ்டி அமலுக்கு

வந்திருந்தால் இந்தியாவானது, பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தான இந்தியா என்றிருந்தது போதாமல், சமஷ்டியிலுள்ள பிரிட்டிஷ் இந்தியா, சமஷ்டியிலுள்ள சமஸ்தான இந்தியா, சமஷ்டியில் சேராத சமஸ்தான இந்தியா என மூன்று இனமாகவும், சமஷ்டியில் முக்கால்வாசி சேர்ந்த சமஸ்தானம், கால்வாசி மட்டும் சமஷ்டிக்குட்பட்ட சமஸ்தானம் என்று பல ரகங்களாகவும் மாறியிருக்கும். சமஸ்தானங்களில் ஜனநாயகமே ஏற்பட்டிருக்காது.

அந்தச் சமஷ்டியில் மந்திரிகள் இலாகா, கவர்னர்-ஜெனரல் இலாகா என்ற பிரிவு ஏற்பட்டு இரட்டையாட்சி ஏற்பட்டிருக்கும். ராணுவம் பிரிட்டிஷ் ராணுவமாகவே இருந்திருக்கும்.

அச் சட்டத்திலிருந்த சமஷ்டியும் பொறுப்பாட்சியும், போலிச் சமஷ்டியும் போலிப் பொறுப்பாட்சியுமே. இது பல விஷமங்களுக்கு இடங்கொடுத்து, இந் நாட்டை ஸ்திரமாக அடிமை நிலையிலேயே வைத்திருக்கும். முற்போக்கு சக்திகள் பிளவுற்றுப் போயிருக்கும்.

## அந்தச் சமஷ்டி ஏற்படவில்லை

தமது எதேச்சாதிகாரத்துக்குச் சிறிதளவு குறைவு ஏற்பட்டுவிடுமோ என்று பயந்ததால், சமஸ்தானாதிபதிகள் அந்தச் சமஷ்டியில் சேர முன்வரவில்லை.

காங்கிரஸ் ஆதிக்கம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து ஜின்னா சமஷ்டியை எதிர்த்தார்.

சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாகுமே என்று பயந்து காங்கிரஸும் அந்தச் சமஷ்டியை வெறுத்தது.

சமஷ்டி ஏற்பட்டாலென்ன ஏற்படாவிட்டால் என்ன, இரண்டு வகையிலும் தனது எதேச்சாதிகாரத்தை நீடிக்கலாம் என்று பிரிட்டன் கருதியதால், பிரிட்டனும் சமஷ்டியில் அக்கறை கொள்ளவில்லை.

ஆகையினால் 1935-ம் வருஷச் சட்டத்திலிருந்த சமஷ்டி திட்டம் அமலுக்கு வரவே இல்லை.

மத்திய சர்க்காரின் அமைப்பு சம்பந்தப்பட்டமட்டில் 1919 ம் வருஷத்துச் சட்டமே அமலில் இருந்தது அதாவது பெயரளவில்கூட பொறுப்பாட்சி இல்லாமல் அப்பட்டமான எதேச்சாதிகாரமே மத்திய சர்க்காரின் அமைப்பாக இருந்தது.

## இதன் பயனாக ஏற்படவிருந்த நிலைமை

(1) மாகாணங்களில் பொறுப்பாட்சியின் உருவத்துடன் பிரிட்டிஷ் எதேச்சாதிகாரத்துக்கு வசதி.

(2) மத்திய சர்க்காரில் எல்லையற்ற எதேச்சாதிகாரம்.

(3) சமஸ்தானங்கள் மீது பிரிட்டனுக்குப் பரிபூர்ண மான ஆதிக்கம்.

(4) சமஸ்தான மக்கள் மீது சமஸ்தானாதிபதியின் எதேச்சாதிகாரம்.

## காந்திஜியால் ஏற்பட்ட மாறுதல்

இதில் மாகாண சுயாட்சி விஷயத்தில் மட்டும் மகாத்மா காந்தி தமது மன உறுதியின் மூலம் ஒரு வெற்றி பெற்றார்.

மந்திரிகளைப் பதவியில் வைத்துக்கொள்ளும்வரையில் மந்திரிகளின் செய்கைகளில் கவர்னர் குறுக்கிடுவதில்லை என்று உறுதி வாங்கிக்கொள்ளும்படி காங்கிரஸ் சட்ட சபைக்கட்சித் தலைவர்களுக்கு காந்திஜி புத்திமதி கூறினார். சுமார் 4 வாரம் பேரம் நடத்திய பிறகு கவர்னர்கள் மூலம் பிரிட்டன் மறைமுகமாக அதற்கு ஒப்புக்கொண்டது.

கவர்னர் எதேச்சாதிகாரமே நடத்த விரும்பினால், மந்திரிகளை நீக்கிவிட்டுத்தான் எதேச்சாதிகாரம் செலுத்த வேண்டும். அதாவது 'பொறுப்பாட்சி' என்ற வேஷத்துடன் எதேச்சாதிகாரம் நடத்தக்கூடாது என்று காந்திஜி வற்புறுத்தினார்.

இதன்படி 1937-ம் வருஷத்திலிருந்து 1940-ம் வருஷம் வரை மாகாணங்களில் (காங்கிரஸ் பதவியிலிருந்த மாகாணங்களில்) ஓரளவு பொறுப்பாட்சி இருந்தது.

ஆனால் மத்திய சர்க்காரில் வரம்பற்ற எதேச்சாதிகாரமே இருந்தது.

## யுத்தம் வந்தபோது

யுத்தம் ஏற்பட்டவுடன், இந்திய சர்க்கார், மாகாண சர்க்காரைத் தன் எதேச்சாதிகாரத்துக்குக் கருவியாக்க முயன்றது. உடனே மந்திரிகள் ராஜிநாமாச் செய்தனர். மாகாணத்தில் கவர்னரின் எதேச்சாதிகார ஆட்சி மீண்டும் ஆரம்பமாயிற்று.

1946-ம் வருஷத்தில் பொதுத் தேர்தல் நடந்து மீண்டும் மாகாணங்களில் பொறுப்பாட்சியும் மத்திய சர்க்காரில் பழைய ஆட்சியும் தொடங்கியது.

## சிறிது நிலம் பலி

1946-ம்வருஷம் மே மாதத்தில், பிரிட்டன் ஒரு அரசியல் நிர்ணயசபைக்கு ஏற்பாடு செய்தது. அதன்படி ஏற்பட்ட அரசியல் நிர்ணய சபையில் எதுவும் உருப்படாமல் முட்டுக்கட்டையே ஏற்பட்டது.

காங்கிரஸ்-லீக் சமரசமும் ஏற்படப் போவதில்லை, பிரிட்டிஷ் ஆட்சியும் நீடிக்க முடியாது என்பதே அப்போதிருந்த நிலைமை. அதோடு பலாத்காரமும் தலையெடுத்தது.

"ஒவ்வொரு மதத்தினரும் தனி அரசியலுரிமை யுள்ள தனித் தேசீய ஜாதி" என்று ஜின்னா புகுத்திய இரு தேசீயக் கொள்கையைப் பின்பற்றுவதா,—அல்லது ஜின்னா என்ற பூதத்துக்கு இந்தியாவின் ஒரு பகுதியைப் பலியிட்டுத் தேசத்தின் பெரும் பகுதியை இரு தேசீயக் கொள்கையிலிருந்து காப்பாற்றுவதா என்று காங்கிரஸ் ஆலோசனை செய்தது.

இருதேசியக் கொள்கையையும், அடிமை நிலைமையையும் ஒப்புக்கொள்வதைவிட சிறிது நிலப்பரப்பை இழந்தாயினும் முற்போக்கு வசதியையும், சுதந்திரத்தையும் காப்பாற்றுவதே நலம் என்று காங்கிரஸ் தீர்மானித்தது.

ஆகவே தேசத்தை ஒருவாறாகப் பிளந்து விடுவதற்கும், பிரிட்டன் வெளியேறுவதற்கும், காங்கிரஸ், முஸ்லிம் லீக், பிரிட்டன் ஆகிய மூன்று தரப்பினரும் சமரசமாக இணங்கினர்.

இந்த முடிவின் பயனாக பிரிட்டன் 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ந்தேதியோடு, தனது ஆதிக்கத்தை வாபஸ் வாங்கிக்கொண்டது. சுதந்திரம் கைகூடி விட்டது.

உடனே அதற்கு ஒரு அரசியல் சாஸனமாகப் புதிய சட்டம் தயாரிப்பதென்றால் தாமதமாகும், இடைக்காலத்தில் அரசாட்சிக்குச் சட்டம் எது என்ற நிலைமை ஏற்பட்டது.

எனவே 1935-ம் வருஷத்து அரசியல் சட்டத்தில் அன்னிய ஆதிக்கம் பற்றிய விஷப்பல் பிடுங்கப்பட்டு, அவ்வாறு திருத்தப்பட்ட சட்டம், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் தாற்காலிக அரசியல் சட்டமாயிற்று.

## 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஏற்பட்ட மாறுதல்

1935-ம் வருஷத்துச் சட்டத்தில் 321 ஷரத்துக்கள் இருந்தன. அதில் 140 ஷரத்துக்கள் நீக்கப்பட்டன. 31 ஷரத்துக்களில் ஒவ்வொன்றிலும் சில நிபந்தனைகள் நீக்கப்பட்டன. 94 ஷரத்துகள் மாற்றப்பட்டன. 56 ஷரத்துக்கள் மட்டுமே உரு மாறாமல் அப்படியே இருந்தன.

சுருக்கமாகச்சொல்லுமிடத்து, பிரிட்டனுக்கும், கவர்னர்-ஜெனரலுக்கும், கவர்னர்களுக்கும் இருந்த அதிகாரங்கள் யாவும் நீக்கப்பட்டு, சட்டசபையே அதிகாரத்தின் உறைவிட

மாகச் செய்யப்பட்டது. மந்திரிகள் யாவரும் சட்டசபைக்கு உட்பட்டவர்களே என்ற நிலைமை ஏற்பட்டது. அரசியல் நிர்ணய சபையே மத்திய சட்ட சபையாகவும் வேலைசெய்தது.

## புதிய அரசியலமைப்பு ஏன்?

சென்ற இரண்டு ஆண்டுகளிடையே மத்திய சர்க்காரில் சமஸ்தானங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட மாறுதல்கள் யாவும் 'ஒப்பந்தங்கள்' மூலம் ஏற்பட்டவையே பொழிய அரசியலமைப்பின் பகுதியாக ஸ்திரப்படவில்லை. இந்த மாறுதலை ஸ்திரப்படுத்தி, (1) சர்வஜன வோட்டின் மூலம் ஜனநாயகத்தின் அஸ்திவாரமான சட்டசபைகளை விஸ்தரித்து, (2) மதத்தின் பேரால் ஏற்பட்ட தனித் தொகுதி முறையை ரத்துச் செய்து, (3) தாழ்ந்த நிலையில் இருக்கும் சமூகங்களுக்கும், ஜீவாதார உரிமைகளுக்கும் பாதுகாப்பு ஏற்படுத்தி, (4) ராஜாங்கத் தலைமையை மக்களின் பிரதிநிதிகள் மூலமே பொறுக்கி ஜனாதிபதி, கவர்னர், மந்திரிகள் ஆகிய நிர்வாகிகள் யாவரும் நேர்முகமாகவோ, ஸ்தாபன ரீதியாகவோ, சட்ட சபைகளுக்குப் பொறுப்புள்ளவர்களாக இருக்கும்படி செய்து, (5) ஜனாதிபதியிடமும் கவர்னர்களிடமும் "ஒப்படைக்கப்படும்" அதிகாரங்கள், மந்திரிகள் சம்மதத்துடனேயே உபயோகிக்கப் பட வேண்டுமென்பதை உறுதி செய்து, (6) இந்த அமைப்பைத் தேசத்தின் அடிப்படைச் சட்டமாக ஆக்குவதே புது அரசியலமைப்பின் கருத்து.

1947 ஆகஸ்டுக்கு முன்
சமஸ்தானாதிபதி
மகாராஜா
ஜான்புல்
பிரிட்டிஷ் இந்திய ஜனநாயகம்
உரிமையற்ற சமஸ்தான மக்கள்
1947 ஆகஸ்ட் 15உ
சமஸ்தானாதிபதி
இந்திய ஜனநாயகம்
சமஸ்தான மக்கள்
இப்பொழுது
யூனியன் சர்க்கார்
ராஜப்பிரமுகர்
இந்திய சமஸ்தான மக்கள்
இந்திய ஜனநாயகம்

ஐந்தாவது அத்தியாயம்

# சட்டசபைகளின் அமைப்பு: கீழ் சபைகள்

ஜனநாயகத்தின் அடிப்படையாகிய பொதுஜனத் தொடர்பு விஸ்தரிக்கப்படுவது புதிய அரசியலில் முக்கியமான அம்சம். இந்த 'பொதுஜனத் தொடர்பு' என்பது சட்டசபைகள் மூலமே ஏற்படுகிறது. சட்டசபைகளின் ஆதிக்கமே ஜனநாயக அரசியலில் முக்கியமான தத்துவம்.

அமெரிக்கா போன்ற சில நாடுகளில் சட்டசபை வேருகவும் நிர்வாக இலாகா வேருகவும் அமைக்கப்படுகின்றன. இங்கு அப்படியல்ல. சட்டசபையிலிருந்துதான் நிர்வாகிகள் (மந்திரிகள்) தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். அதுமட்டுமல்ல. ஜனுதிபதியைத் தெரிந்தெடுப்பதும் சட்டசபைகள் மூலமே. ஆகையால் ஸ்தாபன ரீதியாகப் பார்த்தால், மக்கள் உரிமையின் ஆரம்பமும் இறுதித் தீர்ப்பும் சட்டசபைகளிடமே இருக்கிறது.

இதை யெல்லாம் உத்தேசித்துச் சட்ட சபைகளின் அமைப்பை முதலில் தெரிந்துகொள்வது நலம்.

## பொதுஜனத் தொடர்பின் முக்கியமான கருவிகள்

ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண சுயாட்சிக்காக மாகாண சட்டசபை இருக்கும்.

அதுபோலவே இந்திய யூனியனிலும் இந்தியாவின் எல்லா மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கொண்டதாக யூனியன் சட்ட மன்றம் இருக்கும்.

(1) மாகாண 'மேல் சபை' (2) மாகாண 'கீழ் சபை' (3) இந்திய யூனியன் 'கீழ் சபை' (4) இந்திய யூனியன் 'மேல் சபை' என்று நம் நாட்டில் 4 விதமான சட்டசபைகள் இருக்கும் என்பதை ஏற்கெனவே கூறியுள்ளோம்.

## நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கும் சட்டசபைகள்

இந்த நான்கில் முதல் மூன்றுக்கும் வோட்டர்கள் (வாக்காளர்கள்) நேரில் வோட்டுச் செய்து இவற்றின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவ்வாறு வாக்காளர்களே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது என்ற முறைக்கு நேர்முகமான தேர்தல் என்று பெயர்.

## மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கும் சபை

யூனியன் மேல் சபை மட்டும் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மறைமுகமாக என்ற சொல் சற்று இழுக்கான கருத்தில் உபயோகிக்கப்படும் சொல் அல்ல. நேரில் தேர்ந்தெடுக்காமல், தாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் மூலம் வேறொரு சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைக்குத்தான் மறைமுகத் தேர்தல் முறை என்ற சொல்லைப் பத்திரிகைகள் உபயோகிக்கின்றன.

யூனியன் மேல் சபை அங்கத்தினர்களைச் சர்வஜன வோட்டு மூலம் மக்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். மாகாண கீழ் சபைகளிலுள்ள அங்கத்தினர்களே யூனியன் மேல்சபைக்கு சிலரை தேர்ந்தெடுப்பார்கள். இந்த ஒரு சட்டசபையைத் தவிர மற்றெல்லாச் சட்டசபைகளும் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுபவை.

## சில மாகாணங்களில் இரண்டு சபைகள்

புதிய அரசியலின் கீழ், எல்லா மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் சட்டசபைகள் உண்டு. ஆனால் சில மாகாணங்

களிலும் ஒரே ஒரு சமஸ்தானத்திலும் மேல் சபை என்று இரண்டாவது சபை ஒன்று இருக்கும்.

மேல்சபை இருக்கக்கூடிய மாகாணங்கள் (1) சென்னை (2) பம்பாய் (3) வங்காளம் (4) ஐக்கிய மாகாணம் (5) பிஹார் (6) பஞ்சாப் ஆகியவை. மத்திய மாகாணம் அல்லது மத்தியப் பிரதேசர், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் ஆகிய மூன்றில் மேல் சபை கிடையாது. சமஸ்தானங்களுள் மைசூரில் மட்டும் மேல் சபை இருக்கும். வேறெந்த சமஸ்தானத்திலும் மேல் சபை இருக்காது.

## மாகாணக் கீழ் சபைகள்

சில மாகாணங்களில் இரண்டு சட்டசபைகள் இருந்தாலும் கீழ் சபைதான் பெரிய சபை. அதுதான் உண்மையான அதிகாரமுள்ள சபை. மேல் சபைக்குக் குறிப்பிடத்தக்க அதிகாரம் எதுவும் கிடையாது. இதைப் பின்னர் ஒரு அத்தியாயத்தில் விளக்குவோம்.

சென்னை மாகாணத்தில் கீழ் சபை, மேல் சபை என்று இரண்டு சட்டசபைகள் இருக்கும்.

அவற்றுள் முதலாவதாகக் கீழ் சபையைக் கவனிப்போம். சென்னை மாகாணத்தைப் பற்றிச் சொல்வது எல்லா மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் பொருந்தும்.

### வோட்டர் தொகையும் அங்கத்தினர் தொகையும் அதிகரிக்கும்.

புதிய அரசியலில் 21 வயது வந்த எல்லோருக்கும் வோட்டுரிமை உண்டு என்று சொன்னோம். இதன் பயனாக வோட்டர்களின் தொகை இப்போதிருப்பதைவிட சுமார் 3 மடங்கு அல்லது 4 மடங்கு அதிகரிக்கலாம்.

புது அரசியலில் மாகாண சட்டசபையில் அங்கத்தினர் தொகை சுமார் 2 அல்லது 2½ மடங்காகப் பெருகக்கூடும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் கீழ் சபையில் எத்தனை அங்கத்தினர்கள் என்பது நிச்சயிக்கப்படவில்லை. அது பின்னர்தான் நிச்சயமாகும். ஆனால் இது பற்றிய கொள்கை மட்டும் அரசியல் சட்டத்தில் சொல்லப்படுகிறது.

அதன்படி எந்த மாகாணத்தின் கீழ் சபையிலும் 500 அங்கத்தினர்களுக்கு அதிகமாக இருக்காது. 60 அங்கத்தினர்களுக்குக் குறைவாகவும் இருக்காது. 75,000 வோட்டர்களுக்கு ஓர் அங்கத்தினர் (பிரதிநிதி) இருக்கலாம். அதைவிட அதிகமாக இருக்கக்கூடாது. இது தான் சட்டத்திலுள்ள கொள்கை.

இதன்படி, சென்னை மாகாணத்துக்குச் சுமார் 500 அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு கீழ் சபை இருந்தால், ஒரு லட்சம் ஜனங்கள் வசிக்கும் தொகுதிக்கு ஓர் அங்கத்தினர் வீதம் இருக்கும்.

இப்போது சராசரி 2 லட்சம் ஜனத் தொகைக்கு ஓர் அங்கத்தினர் இருந்து வருவதாகச் சொல்லலாம்.

உதாரணமாக, திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொள்வோம். அந்த ஜில்லாவுக்கு மாகாண அசெம்பிளியில் (கீழ் சபையில்) 8 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இதில் 4 பேர் 'சாதாரண' கிராமத் தொகுதி; ஒருவர் நகரத் தொகுதி; ஒருவர் முஸ்லிம் தொகுதி; ஒருவர் கிறிஸ்தவத் தொகுதி; ஒரு ஹரிஜன ஸ்தானம் ஒரு தொகுதியில் 'ரிஸர்வ்' செய்யப்பட்டது.

சாதாரணத் தொகுதியில் இரண்டு தாலூகாவுக்கு ஓர் அங்கத்தினர் என்று இருந்தது. இனிமேல் அந்த ஜில்லாவில் 15 அல்லது 16 ஸ்தானங்கள் இருக்கக் கூடுமாகையால், தாலூகாவுக்கு இரண்டு பிரதிநிதிகள் இருக்கக்கூடும்.

ஆகவே வோட்டுத் தொகுதிகள் இப்போதிருப்பதைவிட சிறியவையாக இருக்கும். இதனால் ஏற்படும் மிகப் பெரிய நன்மையொன்று உண்டு. அதாவது சட்டசபை அங்கத்தினருக்கும்

வோட்டர்களுக்கு மிடையே தொடர்பு ஏற்படுவது இப்போதிருப்பதைவிட சுலபமாகும்.

ஒரு தொகுதிக்கு ஓர் அங்கத்தினர் என்ற கொள்கை அனுஷ்டிக்கப்படுமா அல்லது பெரிய தொகுதிகளாக வைத்து, ஒரு தொகுதிக்கு இரண்டு அல்லது மூன்று அங்கத்தினர்கள் என்ற கொள்கை இருக்குமா என்பதெல்லாம் இனிமேல்தான் நிச்சயமாகும்.

## தனித்தொகுதி கிடையாது

பழைய சட்டத்துக்கும் புதிய அரசியலுக்குமுள்ள முக்கிமான வித்தியாசம், சட்டசபைத் தேர்தலில் தனித்தொகுதி ஒழிந்துவிடுவதுதான். கிறிஸ்தவர், முஸ்லிம்கள் எல்லோரும் பொதுத் தொகுதி மூலம்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஆகையால் சட்டசபை அங்கத்தினராக வர விரும்பும் நபர்களும், அவர்களது கட்சிகளும், ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகிய எல்லா வகுப்பினரின் தயவையும் நாடி, எல்லோரது ஆதரவையும் பெற்று, எல்லோருக்கும் சேவை செய்ய முயலவேண்டும். முஸ்லிம் அபேட்சகர் முஸ்லிம் வோட்டரைமட்டும் அணுகுவது, ஹிந்து அபேட்சகர் ஹிந்து வோட்டரைமட்டும் அணுகுவது என்ற பழக்கம் ஒழியும். இது ஒரு பெரும் முன்னேற்றமாகும்.

இதன் பயனாக, சிறுபான்மையோர் என்று மதிக்கப்பட்ட முஸ்லிம், கிறிஸ்தவ சமூகத்தினரில்இப்போதைவிட அதிகமான பேர் சட்டசபைக்கு வருவதுகூடஒருவேளை சாத்தியமாகலாம்.

புதிய அரசியலில் தனித்தொகுதி ஒழிந்தது மட்டுமல்ல; ஸ்தானம் ஒதுக்குவது என்ற முறைகூட ஒழிந்துவிட்டது.

## ஹரிஜனங்களுக்காக ஒரு சலுகை

பண வசதியின்மை, போதிய செல்வாக்கின்மை முதலிய காரணங்களால் தற்காலம் ஹரிஜனங்கள் மற்றவர்களைவிடச்

சிறிது பின்தங்கியவர்களாக இருப்பதால், தேர்தல் போட்டியில் அவர்களுக்கு இடமில்லாது போய்விடக்கூடும் என்ற ஒரு அச்சம் இருக்கிறது. ஆனால் வசதியில் சமத்துவம் இருக்க வேண்டும் என்பது புதிய இந்தியாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. ஆகையால் ஜனத்தொகைக்குத் தக்கபடி, அவர்களுக்குச் சட்டசபையில் இடம் கிடைக்க உத்தரவாதமளிக்கும் நோக்கத்துடன், சில தொகுதிகளில் ஸ்தானம் உத்தரவாதம் செய்யப்படும்.

இரண்டு, அல்லது மூன்று பிரதிநிதிகளுக்கு ஸ்தானம் ஏற்படுத்தக்கூடிய தொகுதிகளாகப் பார்த்து. சிலவற்றில் ஹரிஜன அங்கத்தினர்களுக்கு ஸ்தானம் ரிசர்வ் செய்யப்படும்.

'ரிசர்வ் செய்யப்படும்' என்பதற்குத் தமிழில் ஒதுக்கப்படும் என்று சொல்வதைவிட உத்தரவாதம் செய்யப்படும் என்று சொல்வதே பொருந்தும்.

இவ்வுத்தரவாத முறை எப்படி அமல் நடத்தப்பெறும் என்பது பலருக்கும் தெரிந்ததே. ஒரு தொகுதியில் 3 அங்கத்தினர் ஸ்தானம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதில் ஒரு ஹரிஜன அங்கத்தினருக்கு ஸ்தானம் ஒதுக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அந்த மூன்று ஸ்தானங்களுக்கு ஹரிஜன அபேட்சகர்கள் உட்பட 8 பேர் போட்டிபோட்டால், அதிகப்படியாக வோட்டுப்பெற்ற மூன்று பேருள் ஒருவராவது ஹரிஜன் இல்லையென்றால், ஹரிஜன அபேட்சகர்களுக்குள் யாருக்கு அதிக வோட்டு கிடைத்திருக்கிறதோ அவர் வெற்றி பெற்றதாக மதிக்கப்படுவார். அதாவது ஹரிஜனரல்லாத மற்றவர்களைவிட இவருக்குக் கிடைத்த வோட்டு குறைவாயிருந்தாலும், அந்த ஹரிஜன் வெற்றி பெற்றதாகவே மதிக்கப்படுவார். மீதமுள்ள 7 அபேட்சகர்களில் அதிக வோட்டைப் பொறுத்து 2 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஹரிஜனங்களுக்குப் பொதுத் தொகுதியில் ஸ்தானம் உத்தரவாதம் செய்யப்படுகிறதேயொழிய. அது தனித்தொகுதி மூலம் அல்ல.

## ஆங்கிலோ-இந்தியருக்கு ஒரு விசேஷ ஏற்பாடு

ஆங்கிலோ-இந்திய சமூகத்தினருக்கு ஸ்தானம் இவ்வாறு உத்தரவாதம் செய்யப்படவில்லை. அவர்கள் மிகவும் சிறிய தொகையினராகையால் எந்தத் தொகுதியிலுமே அவர்களது தொகை 5 சதவிகிதம்கூட இருக்காது. இதை யுத்தேசித்து, அரசியல் சட்டத்தில் விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகுப்பாருக்கு மாகாண சட்டசபையில் தேர்தல் மூலம் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்காது போனால், கவர்னரோ, ராஜப்பிரமுகரோ அந்த வகுப்பைச் சேர்ந்த சிலரைச் சட்ட சபைக்கு அங்கத்தினராக நியமனம் செய்யலாம்.

## அபேட்சகர் யோக்யதாம்சம்

21-வயது வந்த எல்லோருக்கும் வோட்டுரிமை உண்டு என்று ஏற்கெனவே பலதடவை சொல்லியுள்ளோம். அபேட்சகராக இருப்பதற்கும் விசேஷ 'யோக்யதாம்சம்' வேண்டியதில்லை. அதாவது சொத்துவேண்டும், அதிகமான படிப்பு வேண்டும் என்ற நிபந்தனைகள் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் சட்டசபை (கீழ் சபை)க்கு அபேட்சகராக நிற்கவேண்டுமானால், 25-வயதாகியிருக்கவேண்டும்.

## யூனியன் முழுவதிலும் மாகாண கீழ் சபை அங்கத்தினர் தொகை

சென்னை மாகாணத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு நாம் கூறியுள்ளது எல்லா மாகாணங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும் பொருந்தும்; அதாவது:

(1) தேர்தல் தொகுதிகள் சிறியவையாக இருக்கும், (2) ஒவ்வொரு ஜில்லாவிலும் சட்டசபை அங்கத்தினர் தொகை இப்போதுள்ளதைவிட சுமார் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகரிக்கலாம், (3) இந்த இரு மாறுதல்களின் பயனாக

சட்டசபை அங்கத்தினருக்கும் வாக்காளர்களுக்கு முள்ள தொடர்பு அதிகமாகும்.

இவ்வாறு எல்லா மாகாணங்களிலும் சமஸ்தானங்களி லும் சேர்ந்து (யூனியன் முழுவதிலும்) சுமார் 3,500 அங்கத் தினர்கள் இருக்கலாம். ஜனாதிபதி தேர்தலுக்கு வோட்டுப் போடுபவர்களில் இவர்களே பெருந் தொகையினர்.

## கீழ் சபைகளின் முக்கியத்துவம்

ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள கீழ் சபை அங்கத்தினர் கள் அந்தந்த மாகாணத்துக்குப் பிரதிநிதியாகச் சிலரைத் தேர்ந்தெடுத்து இந்திய யூனியன் மேல் சபைக்கு அனுப்பு வார்கள்.

மாகாண கீழ் சபையின் அங்கத்தினர்கள் அந்தந்த மாகாணத்தின் மேல் சபையின் மூன்றிலொரு பங்கு அங்கத் தினர்களையும் தேர்ந்தெடுப்பார்கள்.

மந்திரிகளும் கீழ் சபைகளுக்குத்தான் ஜவாப்தாரிகள்.

சட்டசபைகளில், கீழ் சபை எவ்வளவு முக்கியமானது என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

சாதாரணமாக, கீழ் சபைகளின் ஆயுட்காலம், (தேர்தலி லிருந்து) 5 வருஷம்.

## இந்திய யூனியன் கீழ்சபை

இந்திய யூனியன் சட்டமன்றத்தின் கீழ் சபையும் நேர்முக மாகவே தேர்ந்தெடுக்கப்படுகிறது என்று ஏற்கெனவே சொல்லி யுள்ளோம். யூனியன் கீழ் சபையில் 500 ஸ்தானங்க ளிருக்கும். இந்தியா முழுவதிலும் தொகுதிவாரியாக மக்களே நேரில் வோட்டுப் போட்டு இந்தச் சபையின் அங்கத்தினர் களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

தற்காலம் நம் மாகாணத்தை எடுத்துக்கொண்டால், மத்திய சட்டசபையில் சராசரி ஜில்லாவுக்கு ஓர் அங்கத்தினர் வீதம்கூட இல்லை. புதிய அரசியலமைப்பின்படி ஜில்லாவுக்கு 2 அங்கத்தினர்கள் வீதம் இருக்கக்கூடும். ஆகையால், தொகுதிகள் பற்றியும், அங்கத்தினர் தொகைபற்றியும், பொதுஜனத் தொடர்புபற்றியும், மாகாணக் கீழ் சபைகள் சம்பந்தமாகச் சொல்லிய அபிப்பிராயங்கள் இந்திய யூனியன் கீழ் சபையின் விஷயத்திலும் பொருந்தும்.

இந்திய யூனியன் கீழ் சபைக்கு அபேட்சகராக நிற்பதற்கும் பிரத்தியேகமான யோக்யதாம்சம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. வயது மட்டும் 25 ஆகியிருக்க வேண்டும்.

மக்களால் நேரில் தேர்ந்தெடுக்கப் படுபவையாகிய கீழ் சபைகளைப் பற்றி மட்டும் மேலே குறிப்பிட்டுள்ளோம். (1) மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் இந்திய யூனியன் மேல் சபையையும் (2) மாகாணங்களில் சர்வஜன வோட்டு இல்லாமல் தேர்ந்தெடுக்கப்படும் மேல் சபைகளையும் பற்றி அடுத்த அத்தியாயத்தில் கூறுவோம்.

அதற்கு முன்னுரை போன்றது அடுத்த பக்கத்திலுள்ள படம்.

**படத்திற்கு விளக்கம் :**

(1) 21 வயது பூர்த்தியான எல்லோரும் சேர்ந்து மாகாண, சமஸ்தானக் கீழ் சபைகளை நிறுவுகிறார்கள். (மாகாண கீழ் சபை, சமஸ்தான கீழ் சபை என்பதை 'மாகாண கீழ் சபைகள்' என்ற சொல்லால் குறிப்பிட்டிருக்கிறோம். 'ராஜ்யங்களின் கீழ் சபைகள்' என்ற சொற்றொடர் சட்டப்படி பொருத்தமாகும்.)

(2) இதே வோட்டர்கள் சர்வஜன வோட்டின் மூலம் இந்திய யூனியன் கீழ் சபையை நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்,


21 வயது வந்த எல்லோரும் வோட்டளித்து
அவர்களில்
ஸ்தல ஸ்தாபன மெம்பர்களும் நல்ல படிப்பாளிகளும் கீழ் சபை மெம்பர்களும் வோட்டளித்து
மாகாண (சமஸ்தான) கீழ் சபைகள்
யூனியன் "கீழ் சபை"
யூனியன் "மேல் சபை"
மாகாண மேல் சபைகள்
ஜனாதிபதி
மறைமுகத் தேர்தல் மூலம் ஏற்படும் சபை

(3) இந்திய யூனியன் மேல் சபையை மக்கள் நேர் முகமாகத் தேர்ந்தெடுக்கவில்லை; என்றாலும் மக்கள் தேர்ந்தெடுத்த மாகாணக் கீழ் சபைப் பிரதிநிதிகள்தான் இந்திய யூனியன் மேல் சபையை மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

(4) மாகாணங்களின் கீழ் சபைகள், இந்திய யூனியன் கீழ் சபை, இந்திய யூனியன் மேல் சபை ஆகிய மூன்றும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சர்வஜன வோட்டு அடிப்படையில் சிருஷ்டிக்கப்பட்டவை.

(5) மேலே கூறியுள்ள 3 சபைகளும் சேர்ந்துதான் இந்திய யூனியன் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும். ஆகையால் அவரும் சர்வஜன வோட்டுடன் தொடர்புள்ளவர்.

(6) சர்வஜன வோட்டு இன்றி ஸ்தலஸ்தாபன அங்கத்தினர்கள், படிப்பாளிகள், பள்ளி ஆசிரியர்கள் இவர்களை மட்டும் வோட்டர் குழாமாகக்கொண்டு, அவர்களது வோட்டின் மூலம் மாகாண மேல் சபைகள் நிறுவப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தலிலோ, யூனியன் மேல் சபையை நிறுவுவதிலோ மாகாண மேல் சபையினருக்கு உரிமையில்லை.

## ஆருவது அத்தியாயம்

# சட்டசபைகளின் அமைப்பு: மேல் சபைகள்

மாகாணங்களுள் சிலவற்றில் மட்டுமே சட்ட மன்றம், மேல் சபை, கீழ் சபை என்ற இரண்டு சபைகள் கொண்டதாக இருக்கும் என்று முந்திய அத்தியாயத்தில் கூறினேம்.

மேல் சபை என்று சொல்லப்படும் இரண்டாவது சபைகள் பற்றி சென்ற மூன்று நூற்ருண்டுகளாக உலகில் பல நாடுகளில் சர்ச்சைகள் நடந்ததுண்டு.

(1) மேல் சபைகள் அவசியமா, அனுவசியமா? (2) மேல் சபைகள் இருப்பதால் ஏதேனும் தீமையுண்டா? அல்லது நன்மையுண்டா? இவைபோன்ற சில கேள்விகள் எழுவதுண்டு.

நம் நாட்டில் ஏற்படுத்தும் மேல் சபைகளின் அமைப்பு என்ன, அதிகாரம் என்ன என்பதைக் கவனிக்காமல் மேல் சபைகள்பற்றி சாதக பாதகம் சொல்லப் புறப்படுவது சரியாகாது. ஆகையால் நம் அரசியலமைப்பில் மேல் சபைகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன என்பதை இந்த அத்தியாயத்தில் சொல்கிருேம்.

புதிய அரசியல் ஏற்படும்போது, குறிப்பிட்ட சில மாகாணங்களில் மேல் சபைகள் இருக்கும் என்ருலும், பின்னர் மாகாண கீழ் சபைகளில் பெரும்பாலோர் விரும்பினுல் மேல் சபைகளை ரத்து செய்யலாம்; அதற்கு சில நடைமுறைகள் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. அது போலவே ஆரம்பத்தில் மேல் சபை இல்லாத மாகாணங்களில் மேல் சபை வேண்டும்

என்று கீழ் சபைகள் விரும்பினால், அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கும் சில நடைமுறைகள் அரசியலமைப்புச் சட்டத்திலேயே இருக்கின்றன.

## நிதானித்துப் பரிசீலனை செய்யும் சபைகள்

சர்க்கார் செய்யும் காரியங்கள் யாவும் உத்தரவுகள் மூலமும், விதிகள்மூலமும் அமலுக்கு வருகின்றன. ஆனால் அந்த உத்தரவுகளும் விதிகளும் சட்டத்தின்படியே இருக்க வேண்டும் என்பது மிக மிக முக்கியம்.

உத்தரவுகளையும் விதிகளையும் (சட்டத்துக்குட்பட) நிர்வாகிகளும் உத்தியோகஸ்தர்களும்மாற்றிக்கொள்ளமுடியும். ஆனால் சட்டம் அப்படியல்ல. மீண்டும் சட்ட மன்றத்தில் விவாதித்துத்தான் சட்டத்தை மாற்றமுடியும். அதுவும் ஓரிரண்டு நாட்களில் செய்யக் கூடியதல்ல. இரண்டு மூன்று மாதங்கள் பிடிக்கும். ஆகையால் சட்டத்தை இயற்றும்போதே சற்று நிதானித்து இயற்ற வேண்டியது அவசியம். நன்றாக நிதானித்துச் சட்டமியற்றிய பின்னரும் மற்றொரு சபையைக் கொண்டு, சிறிது பரிசீலனை செய்து பார்க்கச் சொல்வது நலம் என்ற எண்ணம்தான் பல நாடுகளில் மேல் சபைகள் இருப்பதற்குக் காரணம்.

சமஷ்டிமுறையில் ஏற்படும் மத்திய சர்க்காரில் மேல்சபைகள் இருப்பதற்கு மற்றும் ஒரு காரணம் உண்டு. அதைப் பின்னர் ஆராய்வோம்.

அதற்கு முன்னதாக மாகாண மேல் சபைகள் எவ்வாறு புதிய அரசியலில் அமைக்கப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

## மாகாண மேல் சபைகள்

சென்னை மாகாணத்தின் சட்ட மன்றத்தில் கீழ் சபை, மேல் சபை என்று இரண்டு சபைகள் இருக்கும். ஆகையால்

மேல் சபையை விளக்குவதற்கு, சென்னை மாகாணத்தையே உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

சென்னையில் கீழ் சபைக்கு 500 அங்கத்தினர் இருந்தால், மேல் சபை சுமார் 125 பேர் கொண்டதாக இருக்கலாம். "கீழ் சபையிலுள்ள அங்கத்தினர் தொகையில், நாலிலொரு பங்கு தான் மேல்சபையில் இருக்கலாம்" என்று சட்டத்தில் சொல்லியிருக்கிறது. இதன்படி 120 பேர் கொண்ட ஒரு மேல் சபை ஏற்படுவதாக வைத்துக்கொள்வோம்.

### வோட்டர்கள்

இந்த 120 பேரும் சர்வ ஜன வோட்டுமூலம், தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். (1) உயர்ந்த படிப்பு, (2) சிறிது நிர்வாக அனுபவம், (3) கல்வி போதனைப் பொறுப்பு ஆகிய மூன்று துறைகளிலுள்ள நபர்கள் மூலம் இச் சபையில் பாதிப் பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (4) இச்சபையில் மூன்றிலொரு பங்கினரைக் கீழ் சபையே தேர்ந்தெடுக்கும். சிலரைக் கவர்னரே நியமிப்பார். இதுபற்றி சட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

(1) **ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள்**—ஜில்லா போர்டுகள், நகர சபைகள், இந்திய பார்லிமென்ட் சட்டத்தின்மூலம் குறிப்பிடக்கூடிய வேறு ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அங்கத்தினர்கள் தேர்தல் தொகுதியாக அமைந்து, மேல் சபையில் மூன்றிலொரு பங்கினரைத் தேர்ந்தெடுப்பாகள்.

சில மாகாணங்களில் திறமையான தாலூகா போர்டுகள் இருக்கலாம். சில மாகாணங்களில் பஞ்சாயத்து போர்டுகள் இருக்கலாம். பஞ்சாயத்து போர்டு அங்கத்தினருக்கும் இத்தேர்தலில் விசேஷ வோட்டுரிமையளிப்பதற்கு வசதி ஏற்படுவதாக இருக்கலாம். மாகாண சர்க்கார்களின் யோசனையைக் கேட்டு, இது இந்திய யூனியன்

பார்லிமென்டின் சட்டத்தினுல் அல்லது பார்லிமென்டின் சட்டத்தின்கீழ் * நிச்சயம் செய்யப்படும் என்று தோன்றுகிறது.

இவ்வாறு ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் மூலம் சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் தொகை சுமார் 40 ஆக இருக்கும்.

(2) சர்வகலாசாலை பட்டதாரிகள்: (பரீக்ஷை தேறி மூன்று வருஷமான பட்டதாரிகள்) சுமார் 10 பேரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

(3) பள்ளி ஆசிரியர்கள்: 'ஸெகன்டரிப் பள்ளிக்கூடம்' என்ற அந்தஸ்துக்குக் குறையாத பள்ளிக்கூடங்களில் மூன்று வருஷகாலம் ஆசிரியராக இருந்தவர்கள் ஒரு தொகுதியாக இருந்து 10 பேரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

(4) மாகாண சட்ட மன்றத்தின் கீழ்சபையினர் வோட்டு போட்டு மேல் சபையில் 40 பேரைத் தேர்ந்தெடுப்பார்கள். இந்த 40 பேர் மறைமுகமாக சர்வஜன வோட்டுப பிரதிநிதிகளாவர்.

## பேரறிஞர் நியமனம்

மேலேயுள்ள ஸ்தானங்கள் யாவும் வோட்டு மூலம் தேர்ந்தெடுக்கபபடுகின்றன. சுமார் 120 அங்கத்தினர்களுள்ள இந்தச் சபையில் 20 பேரைக் கவர்னர் நியமனம் செய்வார். ஆனல் இந்த நியமனம் அரசியல் கட்சித் தொடர்பைப் பொறுத்ததாக இருக்காது என்று எதிர் பார்க்கலாம்.

---

* 'சட்டத்தின்கீழ்' என்பதற்கு என்ன அர்த்தம் என்று சிலர் நினைக்கலாம். குறிப்பிட்டுச் சொல்லாமல் கொள்கையை மட்டும் சொல்லிவிட்டு, விவரங்களை மாகாண சர்க்கார் நிர்ணயிக்கலாம் என்று சட்டம் இயற்றிவிட்டால், பிறகு ஏற்படுத்தும் விதிகள் 'சட்டத்தின்கீழ்' செய்யப்படும் காரியமாகும்.

இலக்கியம், விஞ்ஞானம், கலை ஆகிய துறைகளிலிருந்தும் கூட்டுறவு இயக்கம், பொதுநல சமூகசேவை ஆகிய துறைகளிலிருந்துமே இவர்கள் நியமிக்கப்படுவர்.

**பதவிக்காலம்**

மேல் சபைகளில் இரண்டு வருஷத்துக்கொருதடவை, சபையின் மூன்றிலொருபங்கினர் பதவியிலிருந்து விலகுவார்கள். சபை முழுவதையும் ஏககாலத்தில் கலைப்பது என்ற முறை கிடையாது. அதாவது சாதாரணமாக ஒருவர் 6 வருஷ காலம் பதவியிலிருக்க முடியும்.*

**அபேட்சகரின் யோக்யதாம்சம்**

மேல் சபை அங்கத்தினராக வர விரும்பும் அபேட்சகர்களுக்கு 30 வயதாகியிருக்கவேண்டும். வேறு விசேஷ யோக்யதாம்சம் வேண்டுமென்று நிர்ணயிக்க இந்திய யூனியன் பார்லிமென்டுக்கு உரிமையுண்டு.**

ஆனால் அவ்வாறு விசேஷ யோக்யதாம்சம் எதுவும் நிர்ணயிக்கப்படும் என்று தோன்றவில்லை.

---

* இவ்வாறு கலைக்கப்படாமல். ஓரளவு புதுப்பிக்கப்படுவது பற்றி பின்வரும் முறையை யனுஷ்டிப்பது பழக்கம். முதலில் அந்த சபையின் ஸ்தானங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு ''திருவுளச்சீட்டு''ப் போட்டு 120 பேரையும் முதல் கோஷ்டி, இரண்டாவது கோஷ்டி, மூன்றாவது கோஷ்டி என்று பிரிப்பார்கள், முதல் கோஷ்டியினர் இரண்டாவது ஆண்டு இறுதியிலும், இரண்டாவது கோஷ்டியினர் நான்காவது ஆண்டின் இறுதியிலும் மூன்றாவது கோஷ்டியினர் ஆறாண்டு இறுதியிலும் தமது ஸ்தானத்தைக் காலி செய்ய வேண்டும். இவ்வாறு இரண்டாவது ஆண்டுக்குப் பின்னர் நடக்கும் தேர்தல்களில் வருவோர், ஆறு வருஷ காலம் பதவியிலிருப்பார்கள்.

** கீழ் சபை விஷயத்திலும் தனி யோக்யதாம்சம் வேண்டுமா என்பதை நிர்ணயிக்க இந்திய யூனியன் பார்லிமென்டுக்கு உரிமையுண்டு.

### மேல் சபை அமைப்பு முறையின் சாராம்சம்

ஒரு மாகாண மேல் சபையில் 120 அங்கத்தினர்கள் இருந்தால், அந்த 120 பேரில்:

| | | |
|---|---|---|
| ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் தேர்ந்தெடுப்பது | | 40 |
| சர்வகலாசாலை பட்டதாரிகள் | ,, | 10 |
| பள்ளி ஆசிரியர்கள் | ,, | 10 |
| கீழ் சபை மெம்பர்கள் | ,, | 40 |
| கலை, இலக்கியம் முதலிய துறைகளிலிருந்து கவர்னர் நியமனம் | | 20 |
| | ஆக | 120 |

### மேல் சபையை அமைக்கவும் ரத்து செய்யவும் சட்டத்தில் வசதி

அரசியலமைப்பில் சில மாகாணங்களுக்கு மேல் சபை ஏற்படுத்திச் சிலவற்றுக்கு ஏற்படுத்தாமல் விட்டிருக்கிறார்கள்.

ஆனால் ஏதேனும் ஒரு ராஜ்யம் (மாகாணம் அல்லது சமஸ்தானம்) மேல் சபை வேண்டாம் என்று நிச்சயித்தால், அதன் மேல் சபையை எடுத்துவிட அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழி வகுக்கப்பட்டிருக்கிறது. மேல் சபையில்லாத ஒரு மாகாணம், தனக்கு ஒரு மேல் சபை வேண்டுமென்று கருதினால், அதற்கும் வழிசெய்ய முடியும்.

### அதற்கான நடைமுறை

மேல் சபை பற்றி மாறுதல் ஏற்படுவதற்கு, பின்வரும் நடைமுறையை யனுஷ்டிக்க வேண்டும்.

புதிய அரசியலின்படி தேர்தல் நடந்து சட்டசபைகள் ஏற்பட்ட பிறகு, இது விஷயமாக அந்தந்த மாகாணத்து கீழ் சபைகள் தம் கருத்துப்படி தீர்மானம் நிறைவேற்றலாம்.

அம்மாதிரி தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமானல் சாதாரண மெஜாரிட்டி போதாது. ஆஜராயிருக்கும் அங்கத்தினர்களில் மூன்றிலிரண்டு பகுதிக்குச் சமமானவர்களும், மொத்த அங்கத்தினர்களில் பாதித் தொகையினரும் வோட்டுச் செய்தால்தான் தீர்மானம் நிறைவேறியதாக மதிக்கப்படும். அதாவது ஒரு மாகாணத்தின் கீழ் சபையில் மொத்தம் 240 அங்கத்தினர் இருப்பதாகவும், பிரஸ்தாபத் தீர்மானம் வருகிற தினத்தில் 165 பேர்தான் ஆஜராகி வோட்டுச் செய்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். ஆஜராகி வோட்டுச் செய்வோருள் மூன்றில் இரண்டு பங்கு பேர் (110 பேர்) அத்தீர்மானத்தை ஆதரித்தால் போதாது. மொத்த அங்கத்தினர் தொகையில் பாதிக்குச் சமமான, 120 பேராவது ஆதரிக்க வேண்டும். பிரஸ்தாபத் தீர்மானம் வரும் கூட்டத்தில் 210 பேர் ஆஜராயிருந்தால், 140 பேர் சாதகமாக வோட்டுச் செய்தால்தான் பிரேரணை நிறைவேறியதாக மதிக்கப்படும்.

அரசியலமைப்பிலுள்ளதை அலட்சிய புத்தியுடன் மாற்றிவிடக் கூடாது என்பதே இந்த ஏற்பாட்டின் நோக்கம். பெருவாரியான ஆதரவு இருந்தால் மாற்றுவது அவசியம், என்ற கொள்கைக்குப் பொருத்தமாக இப்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இவ்வாறு மாகாணத்தின் கீழ் சபையில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகுதான் யூனியன் பார்லிமெண்டில் சட்டமியற்றப்படும். பார்லிமெண்டில் (யூனியன் சட்டமன்றத்தில்) சாதாரண மெஜாரிட்டியுடனேயே இச்சட்டத்தை இயற்றமுடியும்.

அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் அடிப்படைச் சட்டமாகையால், அரசியலமைப்பு மூலம் ஏற்பட்ட ஸ்தாபனத்தை ரத்து செய்யவோ, ஒரு ஸ்தாபனத்தைச் சிருஷ்டிக்கவோ, எதுவாயினும், நாடு முழுதுக்கும் பொதுவான சட்டசபையினாலேயே இது செய்யப்படவேண்டும் என்பது சம்பிரதாயம். அதனால்தான் இதுபற்றிய சட்டம் பார்லிமெண்டில் இயற்றப்படவேண்டும் என ஏற்பாடாகியிருக்கிறது.

# யூனியன் மேல் சபை

மாகாண மேல் சபைக்கும், யூனியன் மேல் சபைக்கும் அமைப்பில் இரண்டு வித்தியாசங்கள் உண்டு. (1) மாகாண மேல் சபையைப்போல் அல்லாமல் யூனியன் மேல் சபையானது மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும். (2) மாகாண மேல் சபையின் அங்கத்தினர் தொகை கீழ் சபையில் கால்வாசிக்குத்தான் சமமாக இருக்கும். யூனியன் சட்ட மன்றத்தில் மேல் சபையினர் தொகை, கீழ் சபையைப் போல சுமார் பாதி இருக்கும்.

## அங்கத்தினர் தொகை

இந்திய யூனியன் சட்டமன்றத்தின் கீழ் சபையில் சுமார் 500 அங்கத்தினர்கள் இருக்கலாம்; மேல் சபையில் 250 அங்கத்தினர் வரையில் இருக்கலாம்.

மாகாண மேல் சபையில் கவர்னர் சில ஸ்தானங்களுக்கு அங்கத்தினரை நியமனம் செய்வதுபோலவே யூனியன் மேல் சபைக்கு ஜனுதிபதி சிலரை நியமனம் செய்ய முடியும். ஜனுதிபதியால் நியமனம் செய்யப்படுபவர்கள் தொகை 12 தான்.

கீழ் சபையால் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்கள் தொகை 238 வரை இருக்கலாம். ஆனுல் இவ்வாறு 238 இருக்குமா என்பது நிச்சயமில்லை. 205 ஸ்தானங்களுக்கு மட்டுமே மாகாணவாரி வினியோக ஜாபிதா தரப்பட்டிருக்கிறது.

## மாகாண கீழ் சபைகளே வோட்டுத் தொகுதிகள்

யூனியன் மேல் சபையில் சென்னை மாகாணத்துக்கு 27 ஸ்தானங்கள். அதாவது சென்னை சட்ட மன்றத்தின் கீழ் சபையிலுள்ளவர்களே (சர்வஜனவோட்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே) யூனியன் மேல் சபைக்கு, சென்னை

மாகாணத்தின் சார்பில் வோட்டர்கள். அதாவது, மாகாண கீழ் சபையிலுள்ள சுமார் 500 பேர் சேர்ந்து 27 பேரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தம்மிடையிலிருந்தே 27 பேரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று அர்த்தமில்லை. ஏனென்றால் யாருமே இரண்டு சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்க கூடாது என்று சட்டம் கூறுகிறது.

இந்த தேர்தல் ஒற்றை மாற்று வோட்டு முறைப்படி நடக்கும். 'ஒற்றை மாற்று வோட்டு' என்பதின் பொருள் பின்னர் ஓர் அத்தியாயத்தில் விளக்கப்படும்.

சென்னை மாகாணத்துக்கு 27 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது போலவே, ஜனத்தொகையை மதித்து ஒவ்வொரு மாகாணத்துக்கும், சமஸ்தானத்துக்கும், சீப் கமிஷனர் மாகாணத்துக்கும் மேல் சபையில் பின்வருமாறு ஸ்தானம் ஏற்படும்.

| | |
|---|---|
| அஸ்ஸாம் | 6 |
| வங்காளம் | 14 |
| பிஹார் | 21 |
| பம்பாய் | 17 |
| மத்தியப் பிரதேசம் (மத்திய மாகாணம்) | 12 |
| சென்னை | 27 |
| ஒரிஸ்ஸா | 9 |
| பஞ்சாப் | 8 |
| ஐக்கியமாகாணம் | 31 |
| ஹைதராபாத் | 11 |
| காஷ்மீர் | 4 |
| மத்தியபாரத் | 6 |
| மைசூர் | 6 |

| | |
|---|---|
| பாட்டியாலா | 3 |
| ராஜஸ்தான் | 9 |
| சௌராஷ்டிரம் | 4 |
| திருவிதாங்கூர்-கொச்சி | 6 |
| விந்தியப் பிரதேசம் | 4 |
| சீப் கமிஷனர் மாகாணங்கள் | 7 |

ஸி. வகுப்பு ராஜ்யங்கள் ஜாபிதாவிலுள்ள, சீப் கமிஷனர் மாகாணங்கள் மிகவும் சிறியவையாகையால் இரண்டு மூன்று ராஜ்யங்களுக்குச் சேர்ந்து ஒவ்வொரு ஸ்தானம் வீதம் மொத்தம் 7 ஸ்தானங்கள்.

**நியமன ஸ்தானங்கள்**

யூனியன் மேல் சபைக்கு ஜனாதிபதியால் நியமிக்கும் 12 அங்கத்தினர்கள் இலக்கியம், கலை, விஞ்ஞானம், சமூக சேவை ஆகிய துறைகளிலிருந்து நியமிக்கப் பெறுவார்கள்.

மேல் சபை அங்கத்தினராக வருவதற்குக் குறைந்தது 30 வயதாகி யிருக்கவேண்டும்.

யூனியன் மேல் சபை முழுதும் கலைக்கப்படுவதாக இருக்காது. இவ்விஷயத்தில் இது மாகாண மேல் சபையைப் போலவே இருக்கும். அதாவது இரண்டு வருஷத்துக்கொரு தடவை இந்தச் சபையில் மூன்றிலொரு பங்கினர் மட்டும் விலகி, அந்த ஸ்தானங்களுக்கு மட்டும் தேர்தலோ நியமனமோ நடக்கும்.

மாகாணங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், பிற்காலத்தில் மேல் சபை வேண்டுமா வேண்டாமா என்று நிர்ணயிப்பதற்கு ஒரு நடை முறை, அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. யூனியனில் மேல் சபையை ரத்துச் செய்வதற்கு ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

மேல் சபை அனுவசியம் என்றோ தீமையானது என்றோ முடிவு செய்வதற்கு முன்னர், அவற்றுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும்.

ஒரு சட்ட மன்றத்தின் மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் முரண்பாடு ஏற்பட்டால் ஒரு விஷயத்தை முடிவு செய்வதற்கு என்ன முறை கையாளப்படும் என்பதுபோன்ற விஷயங்களையும் கவனிப்பது அவசியம்.

பல முக்கியமான விஷயங்களில் கீழ் சபையின் முடிவை அதிகமாக தாமதப்படுத்தக்கூட மேல் சபைக்கு அதிகாரம் இருக்காது என்பது குறிப்பிடத் தக்க விஷயம்.

ஏழாவது அத்தியாயம்

# மாகாண மேல் சபை கீழ் சபை உறவு

**மா**காண சட்டமன்றங்களும் (கீழ் சபை, மேல் சபை இரண்டும்), இந்திய யூனியன் சட்டமன்றமும் எவ்வாறு அமைக்கப்படுகின்றன என்பதை முந்தின இரண்டு அத்தியாயங்களில் கூறினோம். கீழ் சபைக்கும் மேல் சபைக்கும் அதிகாரத்திலுள்ள வித்தியாசத்தை இந்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

மேல் சபை, கீழ் சபை இரண்டும் சம்மதித்த பின்னர் தான் ஒரு மசோதா சட்டமாக முடியும் என்பது பொது விதி. ஆனால் இந்தப் பொது விதிக்குப் பல விதிவிலக்குகள் உண்டு. அவற்றைக் கவனித்தால் மேல் சபைக்குச் சில விஷயங்களில் அதிகாரமே இல்லை யென்பது தெரியவரும். அதிகாரம் உள்ள விஷயங்களிலும் மேல் சபையின் கருததை நிராகரித்து ஒரு மசோதாவைச் சட்டமாக்கிவிட கீழ் சபைக்கு வசதியுண்டு என்பதும் தெரியவரும்.

அதுமட்டுமல்ல, மந்திரிசபைகள் கீழ் சபைக்குத்தான் பொறுப்பானவை. ஆகையால், மேல் சபையில் மெஜாரிட்டியில்லாமலே மந்திரிசபை பதவியிலிருக்க முடியும்.

கீழ் சபை தனது முடிவைப் புனராலோசனை செய்யச் சந்தர்ப்பமளிப்பதுதான் மாகாண மேல் சபையின் முக்கியமான வேலை.

### பிரேரணைகளில் மூன்று விதம்

சட்டசபை முன்னால்வரும் முக்கியமான பிரேரணைகளை மூன்றுவகையாகப் பிரிக்கலாம்.

(1) வருஷாந்தர வரவுசெலவுத் திட்டம் (பட்ஜெட் மான்யங்கள்)

(2) வரி விதிப்பு, வரி வஜா பற்றிய மசோதாக்கள், அதாவது பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்.

(3) சாதாரண மசோதாக்கள்.

## பட்ஜெட் பிரேரணை

வருஷாந்தர பட்ஜெட்டானது (வருஷாந்தர வரவுசெலவு) மேல் சபை, கீழ் சபை இரண்டிலும் ஆஜர்செய்யப்படும்.

ஆனால் பட்ஜெட் மான்யங்கள்மீது (எந்த இனத்தில் எவ்வளவு பணம் செலவிடலாமென்பது பற்றி) கீழ் சபை தான் முடிவு செய்யும். மான்யங்கள் பற்றிய பிரேரணைகள் மேல் சபையில் பிரேரிக்கப்படமாட்டா. மான்யங்களுக்கு (அதாவது பணம் செலவிடுவதற்கு) மேல் சபையின் வோட்டு அவசியமில்லை.

பொதுவாக வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி ஒவ்வொரு அங்கத்தினரும் மேல் சபையில் தனித்தனியாக அபிப்பிராயம் சொல்வதோடு திருப்தியடைய வேண்டியதுதான்.

## பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்

பண சம்பந்தமுள்ள மசோதாவை முதலில் மேல் சபையில் ஆஜர் செய்யக்கூடாது. கீழ் சபையில் விவாதமும் வோட்டும் முடிந்த பிறகுதான் மசோதாவை மேல் சபையில் வோட்டுக்கு கொண்டுவருவார்கள்.

அவ்வாறு தம்மிடம் வரும்போது மேல் சபையினர் அம் மசோதாவை அப்படியே நிறைவேற்றாமல், சில மாறுதல்களைச் சிபார்சு செய்யலாம், அல்லது நிராகரிக்கலாம்.

கீழ்சபையிலிருந்து வந்த மசோதாவை மேல் சபை அப்படியே ஆதரித்துவிட்டால் இரண்டு சபையும் மசோதாவை நிறைவேற்றியதாக ஏற்படும்.

இவ்வாறு நிறைவேற்றுவதோ, நிராகரிப்பதோ, சில மாறுதல் செய்யும்படி சிபார்சு செய்வதோ 14 நாளுக்குள் முடிந்துவிட வேண்டும். அதற்குமேல் தாமதம் செய்தால், மசோதாவைக் கீழ் சபை மீண்டும் ஒரு தடவை ஊர்ஜிதம் செய்தால் போதும். பிறகு மேல் சபைக்கு அம்மசோதாவில் அபிப்பிராயம் சொல்லவே சந்தர்ப்பம் கிடையாது.

தாமதப்படுத்தாமல் மேல் சபை அம்மசோதாவை நிராகரிப்பதாகவோ, மாறுதல்கள் சிபார்சு செய்வதாகவோ முடிவு செய்தால் அம்மசோதா மீண்டும் கீழ்சபைக்கு வரும்.

மேல் சபையில் செய்த சிபார்சுகள் சரியானவைதான் என்று கீழ் சபைக்குத் தோன்றினால், அந்தச் சிபார்சுகளை ஏற்றுக்கொள்ளலாம். இல்லையேல் சிபார்சுகளை நிராகரிக்கலாம். இந்தக் கட்டததில் கீழ சபை என்ன செய்கிறதோ அதுதான் அந்த மசோதாவின் இறுதியான முடிவு. மசோதா மறுபடியும் மேல் சபைக்குப் போவது கிடையாது.

கீழ் சபை நிறைவேற்றிய உருவத்தில் மசோதா இரண்டு சபைகளிலும் நிறைவேறியது போலவே பாவிக்கப்பட்டு கவர்னரின் கையெழுத்துக்குப் போய்விடும்!

ஆகையால் பண சம்பந்தமுள்ள மசோதாவை 14 நாள் தாமதப்படுத்தலாம் என்பதைத்தவிர மேல் சபைக்கு வேறு ஒரு அதிகாரமும் கிடையாது. கீழ் சபையில் கவனக் குறைவால் ஏதேனும் தவறு ஏற்பட்டுவிடாதிருப்பதற்காகவே, வரி மசோதா ஒரு தடவை மேல் சபைக்கு யாத்திரை செய்து திரும்புகிறது.

**சாதாரண மசோதாக்களில்**

சாதாரண மசோதாக்கள் விஷயத்தில் (1) இவ்வாறு தாமதப்படுத்தும் காலம் 14 நாள் என்றிராமல் சுமார் 4 மாதம் வரை தாமதப்படுத்த முடியும். (2) பண சம்பந்தமுள்ள மசோதாவில் மேல் சபைக்கு ஒரே தடவைதான் அபிப்பிராயம்

சொல்ல வசதி இருக்கிறது. சாதாரண மசோதாவில் இரண்டு தடவைகள் அபிப்பிராயம் சொல்ல சந்தர்ப்பம் அளிக்கப்படு கிறது.

ஆனால் இவ்வாறு சந்தர்ப்பமளித்த பிறகு, கீழ் சபை எப்படி வேண்டுமானாலும் முடிவு செய்யலாம். ஆகையால் சாதாரண மசோதாக்களிலும் கீழ சபையின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பு. இதுபற்றிய நடைமுறையைக் கவனிப்போம்.

## முதல் கட்டம்

சாதாரண மசோதாவை எந்தச் சபையில்தான் முதலில் பிரேரிக்க வேண்டும் என்ற நிபந்தனையில்லை. மேல் சபையி லும் பிரேரிக்கலாம். கீழ் சபையிலும் பிரேரிக்கலாம்.

முதலில் மேல் சபையில் பிரேரித்ததாக வைத்துக்கொள் வோம். அங்கு நிறைவேறிய பின்னர், அது கீழ் சபைக்கு வரும்போது, கீழ் சபை அதைத் திருத்தாமல் ஏற்றுக்கொண் டால், இரண்டு சபையும் நிறைவேற்றியதாக அர்த்தம். அவ் வாறின்றி கீழ் சபை அம் மசோதாவை நிராகரித்தால், அம் மசோதா அதோடு ஒழிந்தது போலதான். அதாவது மேல் சபையின் மசோதாவைக் கீழ் சபை நிராகரித்துத் தள்ளிவிட முடியும்!

கீழ் சபை ஏதாவது திருத்தம் செய்தால், பிறகு அந்த மசோதா கீழ் சபையின் மசோதாவாகிவிடுகிறது.

கீழ் சபையில் பிரேரிக்கப்பட்ட மசோதாவாயினும் சரி, அல்லது மேல் சபையில் பிரேரிக்கப்பட்டுக் கீழ் சபையில் திருத்தப்பட்ட மசோதாவாயினும் சரி, ஏதோ ஒரு விதத் தில் கீழ் சபையில் நிறைவேறிய பிறகு அந்த மசோதா மேல் சபைக்குப் போகும்.

## இரண்டாவது கட்டம்

மேல் சபை அம்மசோதாவைப் பற்றி மூன்று மாத காலம் வரை முடிவு சொல்லாமல் தாமதப்படுத்தினாலும் சரி,

அல்லது மசோதாவை நிராகரித்தாலும் சரி, அல்லது திருத்தத்துடன் நிறைவேற்றினாலும் சரி மசோதா திரும்பவும் கீழ் சபைக்கு வரும்.

மேல் சபை செய்த திருத்தத்தை முழுதும் கீழ் சபை ஒப்புக்கொண்டால், அதோடு மசோதா இரு சபைகளிலும் நிறைவேறியதாகவே மதிக்கப்படும். இல்லாவிடில் கீழ் சபை பழைய மசோதாவை, மேல் சபையின் சில திருத்தங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு அல்லது ஒரு திருத்தத்தையும் ஏற்காமல், மீண்டும் நிறைவேற்றலாம்.

## மூன்றாவது கட்டம்

மேல் சபையின் திருத்தங்களைப் புனராலோசனை செய்து, சிலவற்றை ஏற்றோ நிராகரித்தோ கீழ் சபை அம்மசோதாவை நிறைவேற்றிய பிறகு, மீண்டும் மசோதா மேல் சபைக்குப் போகும். இரண்டாவது தடவையாக தன்னிடம் வந்த அந்த மசோதாவை மேல் சபை புனராலோசனை செய்யும்.

அவ்வாறு புனராலோசனை செய்து, ஒரு மாதத்துக்குள் முடிவைத் தெரிவிக்கவேண்டும். அவ்வாறு புனராலோசனை செய்து திருத்தம் செய்தாலும் சரி, நிராகரித்தாலும் சரி, மறுபடியும் மசோதா கீழ் சபைக்கு வரும்.

திருத்தம் செய்யாமல் கீழ் சபை முடிவை மேல்சபை ஏற்றுக் கொண்டால் அத்துடன் மசோதா இரு சபைகளின் அங்கீகாரத்தையும் பெற்றதாக ஆகிவிடுகிறது.

அவ்வாறின்றி, திருத்தத்துடன் திருப்பியனுப்பினால் திருத்தத்துடனோ திருத்தமில்லாமலோ கீழ் சபை செய்யும் முடிவு தான் இறுதி முடிவு.

எட்டாவது அத்தியாயம்

# யூனியன் மேல் சபை கீழ் சபை உறவு

இந்திய யூனியன் சட்ட மன்றத்தின் மேல் சபையில் மொத்தம் 250 அங்கத்தினர், கீழ் சபையில் 500 அங்கத்தினர். யூனியன் மேல் சபை அங்கத்தினர்கள், மாகாண கீழ் சபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த மூன்று விஷயங்களையும் கவனத்தில் வைத்துக்கொண்டு தான் யூனியன் மேல் சபையின் நிலைமையை மதிப்பிட வேண்டும்.

மாகாண மேல் சபைக்கும் யூனியன் மேல் சபைக்கும் வித்தியாசம் மிகவும் சொற்பந்தான். வரவுசெலவுத் திட்டம், பண சம்பந்தமுள்ள மசோதா ஆகிய இரண்டிலும் மாகாண மேல் சபையின் நிலைமையும் யூனியன் மேல் சபையின் நிலைமையும் ஒரேமாதிரிதான்.

சாதாரண மசோதாக்களில் மேல் சபைக்கும், கீழ் சபைக்கும் முரண்பாடு ஏற்படும்போது என்ன முறை யனுஷ்டிக்கப் படும் என்பதில் மட்டும் ஒரு வித்தியாசம் உண்டு.

## பட்ஜெட் பிரேரணை

வரவுசெலவுத் திட்டத்தின்கீழ், சர்க்காரின் செலவு இனங்களுக்கு மான்யம் அளிக்கும்போது மாகாண மேல் சபையின் வோட்டை எதிர்பார்ப்பதில்லையென்று கூறினோம். யூனியன் மேல் சபையிலும் அப்படித்தான். வரவு செலவுத் திட்டம், மேல் சபையிலும் ஆஜர் செய்யப்படும். ஆனால் அங்கு வோட்டு எடுப்பது கிடையாது.

## பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்

பண சம்பந்தமுள்ள மசோதாக்களை மாகாண மேல் சபைகள் 14 நாள் தாமதப்படுத்த முடியும். இந்திய யூனியனி லும் அப்படித்தான்.

பண சம்பந்தமுள்ள மசோதாக்கள், முதலில் கீழ் சபை யில்தான் ஆஜர் செய்யமுடியும். கீழ் சபையில் நிறைவேறிய பிறகு அம் மசோதா மேல் சபைக்குச் செல்லும். அங்கு அதற்குத் திருத்தம் பிரேரிக்க முடியாது. ஆனால், சில சிபார்சுகள் செய்ய முடியும்.

சிபார்சுகளைக் கீழ் சபை பூரணமாக நிராகரிக்க முடியும். கீழ் சபையின் தீர்ப்புத்தான் இறுதியானது.

## இதர மசோதாக்கள்

வரவு செலவுத் திட்டம், பணப் பொறுப்புள்ள மசோதா, வரி மசோதா இவைத் தவிர மற்ற மசோதாக்கள் விஷயத்தில் யூனியன் சட்ட மன்றத்தில் மேல் சபைக்கு 2 சந்தர்ப்பங்கள் கொடுத்து விட்டு, அதன் முடிவை நிராகரிப்பதற்குப் பதிலாக, வேறொரு முறை கையாளப்படுகிறது. அதாவது இரண்டு சபை யினரும் சேர்ந்து ஒரே கூட்டமாகக் கூடி பிரஸ்தாப மசோதா பற்றிய மாறுபாடுகள் மீது வோட்டெடுப்பார்கள். இது பற்றிய ஒழுங்கு முறைகளைக் கீழே தருகிறோம்.

யூனியன் கீழ் சபையிலோ, மேல் சபையிலோ நிறை வேறிய ஒரு மசோதா மற்றொரு சபைக்கு வரும். அங்கு அவர் கள் சில திருத்தங்கள் செய்யக்கூடும். அவ்வாறு திருத்தங்க ளுடன் மசோதா பழைய சபைக்கு வரும்போது அந்தப்பழைய சபை திருத்தங்களை ஏற்றுக்கொண்டு விட்டால், விவகாரம் இல்லை. மசோதா இரு சபைகளிலும் நிறைவேறியதாகப் பாவிக்கப்பட்டு ஜனாதிபதியின் கையெழுத்துக்குப் போய் விடும்.

அவ்வாறின்றி ஒரு சபையின் பிரேரணையை மற்றொரு சபை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, அவ்வாறு திரும்பி வந்த மசோதா 6 மாத காலம் தாமதிக்கப்பட்டாலும் சரி, ஏற்றுக்கொள்ள முடியாத திருத்தத்துடன் அனுப்பினாலும் சரி, பின்வரும் நடைமுறை அனுஷ்டிக்கப்படும்.

**கலப்புக் கூட்டம்**

மேலே கூறியவாறு இரு சபைகளிடையே சமாசம் ஏற்படவில்லையென்பது உறுதியானவுடன் ஜனாதிபதியானவர் செய்தியனுப்பி, அல்லது அறிக்கை வெளியிட்டு, மேல் சபை கீழ் சபை இரண்டும் சேர்ந்து ஒரே சபையாகக் கூடிப் பிரஸ்தாப அபிபபிராய பேதங்கள் மீது வோட்டெடுக்கவேண்டுமென்று கோருவார். கலப்புக்கூட்டம் நடக்கும்.

எந்தத் திருத்தங்கள்மீது அபிப்பிராய பேதம் ஏற்பட்டதோ அந்தத் திருத்தங்கள் மீது வோட்டு எடுக்கப்படும். ஆஜராகி வோட்டுச் செய்பவர்களின் மெஜாரிட்டியுடன் மசோதா நிறைவேறி விட்டால் அந்த மசோதா இரண்டு சபைகளிலும் நிறைவேறியதாக பாவிக்கப்படும்.

ஆனால், ஏற்கெனவே ஒரு-சபையால் பிரேரிக்கப்பட்ட திருத்தங்களும், இடையில் ஏற்பட்ட கால தாமதத்தால் தேவையாகும் திருத்தங்களும் மட்டும்தான் பிரேரிக்கலாம். புதிதாகச் சில திருத்தங்களைக் கொண்டுவரக்கூடாது.

சில உதாரணங்களை எடுத்துக்கொண்டு இந்த நடைமுறை எவ்வாறு செயல்படும் என்பதை கவனிப்போம். யூனியன் மேல் சபையில் 250 பேர் இருப்பதாகவும், கீழ் சபையில் 500 பேர் இருப்பதாகவும், எல்லோரும் சபையில் ஆஜராவதாகவும் வைத்துக்கொள்வோம்.

ஒரு மசோதா கீழ் சபைக்கு வந்தபோது சாதகமாக 300 வோட்டும் பாதகமாக 200 வோட்டும் பெற்று நிறைவேறியது என்றும், பிறகு அது மேல் சபைக்கு போனபோது அங்கு

சாதகமாக 150 வோட்டும் பெற்று நிராகரிக்கப்பட்டதென்றும் வைத்துக் கொள்வோம்.

இரண்டு சபையும் சேர்ந்து கூடினால் என்ன ஆகும்? இடைக்காலத்தில் யாரும் தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால், இரு சபையினருமாக 750 பேர் கொண்ட அந்தக் கூட்டத்தில் சாதகமாக 400 வோட்டும் பாதகமாக 350 வோட்டும் கிடைத்து மசோதா நிறைவேறிவிடும்.

ஒரு மசோதாவுக்குக் கீழ் சபையில் 300 வோட்டுகள் கிடைத்திருந்தால் மேல் சபையில் 76 வோட்டுகள் கிடைத்தாலே போதும், மசோதா சட்டமாகிவிடும்.

அதாவது மேல் சபையிலுள்ள 250 பேரில் 174 பேர் ஒரு மசோதாவை எதிர்த்தால்கூட கீழ் சபையில் 300 வோட்டு இருந்தால் போதும்!

மேல் சபையில் ஒருவர்கூட மசோதாவை ஆதரிக்காவிட்டால்கூட கீழ் சபையில் 376 பேருடைய ஆதரவு இருந்தால் மேல் சபையின் எதிர்ப்பை முறியடித்துவிட முடியும்.

ஆனால், இவ்வாறு கீழ் சபையிலிருந்து கிளம்பின மசோதாவுக்கெதிராக் மேல் சபையில் இவ்வளவு ஏகமனதான எதிர்ப்பு இருக்கும் என்று நினைப்பது வெறும் கற்பனையேயாகும்.

ஆகையால், கீழ் சபையில் மிகவும் சொற்பமான மெஜாரிட்டியுடன் நிறைவேறும் மசோதாவில்தான் மேல் சபையின் வோட்டைப் பற்றி கவலைப்படவேண்டியிருக்கும்.

### கலப்புக் கூட்டத்தின் நோக்கம்

இரு சபையிலுமுள்ள வோட்டு பலம் ஏற்கெனவே தெரிந்திருக்கும்போது கலப்புக் கூட்டம் கூட்டி வோட்டு எண்ணுவது எதற்காக என்று சிலர் கேட்கலாம்.

மேல் சபையொன்று ஏற்படுத்துவதன் நோக்கம் என்ன என்பதை யோசித்தால், இந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்துவிடும். ஒரு சபை செய்த காரியத்தை மற்றொரு சபையைக் கொண்டு பரிசீலனை செய்வித்து, முதலில் நிறைவேற்றிய சபை தனது முடிவைப் புனராலோசனை செய்யும்படிச் சந்தர்ப்பமளிப்பதுதான் மேல் சபை அமைப்பதன் நோக்க்ம்.

தவிரவும் இரண்டு சபையிலும் மாறுபாடுகள் பற்றி விவாதம் நடக்கும்போது மசோதாவின் சாதக பாதக்ங்களைப் பொதுஜனங்கள் கூர்ந்து கவனிக்கச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அவ்வாறு கூர்ந்து கவனிக்கும் பொது ஜனங்கள் சட்டசபை அங்க்த்தினர்களை யணுகி சாதக பாதகங்களை எடுத்துரைத்துப் பேச வசதி ஏற்படுகிறது.

இடைக்காலத்தில் இந்தச் சர்ச்சைகளின் பயனுக் இரு தரப்பிலும் சிலர் தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளக் கூடும். இவ்வாறு பலரது அபிப்பிராயத்துக்கும் செவி சாய்த்துச் சமரசமான ஒரு வழியை வகுப்பது தான் ஜனநாயக வளர்ச்சிக்கு உதவியான மனப்பான்மை.

ஆகையால், இரண்டு சபைகளும் தனித்தனியாகக் கூடியபோது இருந்த வோட்டுத் தொகைக்கும், ஒரே கூட்டமாகக் கலந்துக் கூடும்போது காணப்படும் வோட்டுத் தொகைக்கும் வித்தியாசம் ஏற்படுவது அசாத்தியமல்ல.

பெரும்பாலான மசோதாக்களில் மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் முரண்பாடு ஏற்படவே காரணம் இருக்காது. ஏனென்றால் கீழ் சபையிலிருப்பவர்களைப் போலவே, மேல் சபையினரும் சாதாரண வோட்டர்களின் பிரதிநிதிகளே. கீழ் சபை நேர்முகமாக சர்வஜன வோட்டில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மேல் சபையும் சர்வஜன வோட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட

மாகாண கீழ் சபை அங்கத்தினர்களாலேயே தேர்ந் தெடுக்கப்படுகிறது.

1935 ம் வருஷத்துச் சட்டத்தில் இருந்ததுபோல மேல் சபை 'பணக்காரர் சபை'யாக அமைக்கப்பட வில்லை. சாதாரணப் பொதுஜனங்களின் பிரதிநிதிகளா லேயே அமைக்கப்படுகிறது.

ஆகவே, கீழ் சபையும், மேல் சபையும் எப்போதா யினும் முரண்பட்டால், முரண்பாட்டின் காரணங்களைச் சர்ச்சை செய்து முடிவு செய்வதற்கு அவகாசம் அளிப் பது பொதுஜன நன்மைக்கு நல்ல பாதுகாப்பாகும்.

## யூனியன் மேல் சபையின் முக்கியத்துவம்

மாகாணங்களில் மேல் சபையின் வோட்டை நிரா கரித்துக் கீழ் சபை இறுதியாக முடிவு செய்ய உரிமை யளிக்கப்பட்டிருக்கிறது. யூனியன் சட்ட மன்றத்தில் மட்டும் மேல் சபை மீது கீழ் சபைக்கு அவ்வாறு பூர்ண மான நிராகரிப்பு உரிமை இல்லாததற்கு ஒரு முக்கிய மான காரணம் உண்டு.

யூனியன் மேல் சபையானது மாகாண மேல் சபை போல அல்ல. ஒருவகையில், மாகாண சர்க்கார்களுக்கே பிரதிநிதியென்று அதைச் சொல்லமுடியும். ஆகையால் அதற்குச் சற்று அதிக கௌரவம் கொடுக்கப்படுகிறது. யூனியன் மேல் சபையினர் சாதாரண வோட்டர்களின் பிரதிநிதிகளாக மட்டுமல்லாமல், மாகாண சட்ட சபைக்கே பிரதிநிதிகள் என்ற முறையில் ஓரளவு மாகாண சுயாட்சியின் பிரதிநிதிகள். ஆகையால், அவர் களுடைய வோட்டைக் கணக்கிலெடுக்காமலே நிராகரிப் பது பொருந்தாது.

கீழ் சபையில் தெளிவான மெஜாரிட்டி யில்லாமல், சொற்ப மெஜாரிட்டியே இருக்குமானால் மேல் சபையின்

கருத்தையும் கலந்துகொள்வதே நலம் என்பதுதான் கலப்புக் கூட்டத்தின் நோக்கம்.

## 1935-ம் வருஷச் சட்டத்தில்

*1935*-ம் வருஷச் சட்டத்திலுள்ள மேல் சபைக்கும் நமது குடியாட்சிச் சட்டத்திலுள்ள மேல் சபைக்கும் வித்தியாசம் உண்டு.

(*1*) *1935*-ம் வருஷத்து அரசியலில் மாகாண மேல் சபைகள் விஷயத்தில்கூட கலப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். புதிய அரசியலில் மாகாண மேல் சபைக்கு அப்படிப்பட்ட வசதியளிக்கப்படவில்லை. ஆகையால், புதிய அரசியலிலுள்ள மாகாண மேல் சபைகள், பழைய மாகாண மேல் சபைகளைவிட மிகவும் பலவீனமானவை.

புதிய அரசியலமைப்பில் யூனியன் மேல் சபைக்கு மட்டும் கலப்புக் கூட்டம் கூட்ட வசதி தரப்படுகிறது.

(2) பழைய மேல் சபைகள் பெரும் பணக்காரர்களின் ஸ்தாபனங்களாக அமைக்கப்பட்டவை.

புதிய அரசியலமைப்பிலுள்ள மேல் சபைகள் பணக்காரரின் சபையல்ல. யூனியன் மேல் சபை சமஷ்டி முறையை ஒட்டிய ஜனநாயக ஸ்தாபனமாக நிறுவப்படுகிறது.

மாகாணங்களில் மேல் சபைகள் பணக்காரர்களின் பிரதிநிதியாக இல்லாமல், நிர்வாக அனுபவம், படிப்பு இவற்றுக்கே பிரதிநிதியாக இருக்கும். ஆகையால், அவை நிதானிப்புச் சபைகளேயொழிய முற்போக்கில் குறுக்கிடும் சபைகளல்ல.

ஒன்பதாம் அத்தியாயம்

# மேல் சபையின் அவசியம்

இன்று உலகில் ஜனநாயகச் சமஷ்டி யமைப்புள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும், சட்ட மன்றத்தில் மேல் சபைகள் இருக்கின்றன. சமஷ்டி நாடுக்ளில் மட்டுமல்லாமல் ஒருமை சர்க்கார் * இருக்கும் நாடுக்ளில்கூட பல முக்கியமான நாடுக்ளில் மேல் சபை இருக்கிறது.

ஆனால், மேல் சபையின் அமைப்பும் அதிகாரமும் ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொருவிதமாக இருக்கின்றன.

இந்தியாவில் ஏற்படுத்தும் மேல் சபைகளில் அமைப்பு பிற நாடுக்ளின் அனுபவத்தையும் ஏற்கனவே இந்நாட்டில் இருந்துவரும் சில வழக்கங்களையும் கொண்டு வகுக்கப் பெற்றது.

ஒவ்வொரு தேசத்திலும் மேல் சபை யமைப்பு ஒவ்வொரு வகையாக இருந்தாலும், மேல் சபைக்கு எவ்வளவு அதிகாரம் வேண்டும் என்பதுபற்றி அபிப்பிராய பேதமிருந்தாலும், மேல் சபையொன்று இருப்பது ஜனநாயகத்துக்கு உதவியாகவே மதிக்கப்படுகிறது.

கீழ் சபைகளும், நிர்வாக சர்க்காரும் தமது அதிகாரத்தை மிதமிஞ்சிய அவசரத்துடனே, அசம்பாவத்துடனே பிரயோகித்து விடாமல் சிறிது எச்சரிக்கை செய்வதற்கும், மக்களுக்கு நிலைமையை எடுத்துக்

---

* 'சமஷ்டி' சர்க்காருக்கும் 'ஒருமை சர்க்காருக்கும்' உள்ள வித்தியாசம் வேறொரு அத்தியாயத்தில் விளக்கப்பெறும்.

காட்டுவதற்கும் மேல் சபைகள் உதவி செய்கின்றன என்பதே பலாது அபிப்பிராயம்.*

வெளி நாடுகளிலுள்ள மேல் சபைகளையும், நம் நாட்டு மேல் சபைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கு முன்னே நமது மேல் சபைகளைப்பற்றிய பின்வரும் விவரங்களை ஞாபகப்படுத்திக்கொள்வோம்.

**(1) தொடர்ச்சி விடாத சட்டசபை**

மர்காண மேல் சபைகளையும் யூனியன் மேல் சபையையும் பூர்ணமாகக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்துவதில்லை. மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்கள் மட்டும் இரண்டு வருஷத்துக் கொருதடவை புதுப்பிக்கப்படும்.

கீழ் சபை மட்டும்தான் ஐந்து வருஷத்துக்கொரு தடவையோ, அதற்கு முன்னதாகவோகூட, முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுவிடும்.

அவ்வாறு புதுப்பிக்கப்பட்டுப் புதிதாக ஒரு கீழ் சபை நிறுவப்படும்போது மேல் சபையினர் முந்தின சட்ட மன்றத்தின் வேலையுடன் தொடர்பு உள்ளவர்களாக் இருப்பார்கள்.

கீழ் சபை மாற்றப்படும்போதும் பழைய வரலாறுடன் தொடர்புள்ளதான ஒரு சட்ட சபை இருப்பது நலம் என்பது மேல் சபை பற்றிய முக்கியமான் நோக்கங்களில் ஒன்று.

**(2) கட்சி அரசியலில் சர்வகட்சி மனப்பான்மை**

சட்ட மன்றத்தின் கீழ் சபையில் மெஜாரிட்டி யாதரவு இல்லாவிட்டால், மந்திரி சபை ராஜினமா

* இப் புத்தகத்தின் ஆசிரியர் 'சுதந்திர இந்திய அரசியல் நிர்ணயம்' என்ற தலைப்புடன் 1946-ம் வருஷத்தில் எழுதிய நூலில் (174-வது பக்கத்திலிருந்து 186-வது பக்கம் வரையில்) உலகத்திலுள்ள மேல் சபைகள் பற்றிய பல விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

செய்துப் பொதுத்தேர்தலுக்கு ஏற்பாடு செய்யும். அப்போது கீழ் சபை அங்கத்தினர்கள் எல்லோரும் பதவியிழக்கும்படி நேரிடும். மறு தேர்தலில் கட்சியின் சார்பில் அபேட்சகர்களைத் தேர்தெடுக்கும்போது, பழைய மந்திரி சபையின் கட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து விலகியவர்களுக்கு ஸ்தானம் கிடைப்பது அரிது. மந்திரி சபைக்குப் பிடிக்காதவர்களை மந்திரிக் கட்சியின் தலைவர்கள் இவ்வாறு தண்டிக்க முடியும்! ஆகையால், கீழ் சபையில் மெஜாரிட்டிக் கட்சியினரில் பலர் சுதந்திரமாக் வோட்டுச் செய்யாமல் ஓரளவு கட்சிக் கட்டுப்பாட்டுக்குட் பட்டவர்களாக இருப்பார்கள்.

மேல் சபையானது கீழ் சபையைப் போலவே 'கலைக்கப்படும் சபை' அல்லவாதலின், எந்தப் பிரசினையையும் பற்றிச் சுதந்திரமாக் வோட்டுச் செய்ய பலருக்கு வசதி இருக்கும்.

கட்சிக் கட்டுப்பாட்டில் அதிகமாகச் சிக்காமல் —மந்திரி சபை மாறினால் தம் கதி என்னவாகும் என்ற கவலையில் அடிபடாமல்,—எந்தப் பிரசினையையும் ஓரளவு நெடுங்காலத்து நன்மை தீமைகளைக் கவனித்துப் பரிசீலனை செய்வதன் மூலம் மேல் சபைகள் நல்ல தொண்டு செய்ய முடியும்.

கட்சிச் சார்பை அடிப்படையாகக் கொண்ட பார்லிமென்டரி நிர்வாகத்தில் ஓரளவு சர்வ கட்சி மனப்பான்மையைப் புகுத்துவதற்கு மேல் சபைகள் பயன்படும்.

### (3) யூனியன் சர்க்காரில் சிறிது மாகாண உணர்ச்சி

யூனியன் சர்க்காரின் மேல் சபை அங்கத்தினர்கள் மாகாண கீழ் சபைகளால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். அதுவும் மாகாண கீழ் சபையிலுள்ள மெஜாரிட்டி கட்சிக்கு மட்டும் பிரதிநிதிகளாக இராமல், எல்லாக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்படி

ஒற்றை மாற்று வோட்டு மூலம் இந்தப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள்.

ஆகையால், யூனியன் சர்க்காரின் மேல் சபையில் (1) சர்வ கட்சி மனப்பான்மை (2) கட்சிச் சார்பற்ற மாகாண உணர்ச்சி இரண்டுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்.

இந்திய யூனியன் மந்திரி சபைக் கட்சியும் மாகாண மந்திரி சபைக் கட்சியும் வெவ்வேருக இருந்தால், இரண்டினிடையேயும் பரஸ்பரம் ஓரளவு கூட்டுறவு ஏற்படுத்த யூனியன் மேல் சபை அங்கத்தினர்கள் நல்ல சமரசத் தூதர்களாக வேலை செய்ய முடியும்.

## (4) வேகத்தைக் குறைப்பது; முட்டுக்கட்டையல்ல

சர்க்காரின் பட்ஜெட் வரவுசெலவுகளிலும் பணம் சம்பந்தமுள்ள மசோதாக்களிலும் மேல் சபைக்கு அதிகாரம் இல்லையென்பதை ஏற்கெனவே கூறியுள்ளோம்.

சாதாரண மசோதாக்களில்தான் கீழ் சபையின் முடிவை 4 மாதம், அல்லது 6 மாதம் மேல் சபை தாமதப்படுத்த முடியும். ஆனல் தாமதப்படுத்த முடியுமேயொழிய நிராகரித்துவிட முடியாது.

சில நாடுகளில் மேல் சபையின் சம்மதமின்றி கீழ் சபை எதுவும் செய்யமுடியாது. புதிய அரசியலில் ஏற்படுத்தும் மேல் சபை அப்படியல்ல.

தாமதப்படுத்துவதுகூட எப்போதும் நடக்கக் கூடியதல்ல. மேல் சபையில் 4 மாதம் 6 மாதம் தாமத மேற்படாமல், சீக்கிரமாக முடிவு செய்யும்படி நிர்ப்பந்திப்பதற்குக் கீழ் சபை மெஜாரிட்டி கட்சிக்கு, மேல் சபையில் நண்பர்கள் இல்லாமலா போய்விடுவார்கள்?

ஆகையால், அபிப்பிராயபேதம் ஏற்படும்போதெல்லாம், 4 மாதம் அல்லது 6 மாதம் தாமதமேற்படும்

என்பதில்லை. மேல் சபையின் நிராகரிப்போ, திருத்தமோ அதிக தாமதமின்றி சீக்கிரமாகவே அறிவிக்கப் பட்டுவிடும்.

கீழ் சபையிலுள்ள மெஜாரிட்டி கட்சிக்கு மேல் சபையிலும் மெஜாரிட்டி இருந்தால் தாமதம் மிகவும் சொற்பமாகவே இருக்கும்.

## வாஷிங்டன் கூறின ஓர் உதாரணம்

மேல் சபை சம்பந்தமாக அமெரிக்க சுதந்திரத்தின் பிதாவான ஜார்ஜ் வாஷிங்டன் சரித்திரத்தில் ஒரு சிறு சம்பாஷணை இருக்கிறது. மேல் சபையின் உபயோகத்தைப் பற்றி அதில் ஓர் உவமை இருக்கிறது. ஆகையால், அந்தக் கதையைக் கீழே தருகிறோம்:

மேல் சபை ஒன்று எதற்கு என்பது பற்றி அமெரிக்க சுதந்திரப் போரின் தளகர்த்தனான வாஷிங்டனுக்கும், மற்றொரு பெரிய அமெரிக்க ராஜதந்திரியான ஸ்ரீ ஜெவர்ஸனுக்கும் ஒரு ருசிகரமான சம்பாஷணை நடந்தது. அமெரிக்க அரசியலமைப்பில் இரண்டு சட்ட சபைகள் இருப்பது ஸ்ரீ ஜெவர்ஸனுக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் காலை உணவருந்தும்போது இது விஷயமாக அவர் ஜெனரல் வாஷிங்டனுடன் சர்ச்சை செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் இருவருக்கும் காப்பி வந்தது. ஸ்ரீ ஜெவர்ஸன் தம் கோப்பையில் இருந்த காப்பியை டவராவில் (ஸர்ஸரில்) ஊற்றினர்.

உடனே தளபதி வாஷிங்டன், "காப்பியை ஏன் அதில் ஊற்றுகிறீர்கள்?" என்று ஸ்ரீ ஜெவர்ஸனைக் கேட்டார்.

ஜெவர்ஸன் சற்று திகைத்தாராம். உடனே வாஷிங்டன் கூறினராம்: "கோப்பையிலுள்ள காப்பி மிகவும் சூடாக இருப்பதால், அதை டவராவில் சிறிது நேரம் வைத்து ஆறவைக்கிறீர்கள் அல்லவா? மேல் சபையொன்று அமைப்பதின் நோக்கம் அதுதான். இயற்றிய

சட்டத்தைச் செனேட் (மேல்) சபையில் சிறிது நேரம் விட்டுவைத்து ஆறவைக்கிறோம்.''

''ஜனப் பிரதிநிதிகள் நல்லெண்ணம் கொண்டே, தம்மையறியாமலேயே, சிலதவருன சட்டங்களை இயற்றி விடக் கூடும். தமது தவறிலிருந்து அவர்களைக் காப் பாற்றுவதற்காகச் சில சமயங்களில் ஒரு செனேட் சபை அவசியமாகிவிடும்'' என்று மற்ரெரு அரசியல் நிபுணரான ஸ்ரீ ஹாமில்டன் எழுதியிருக்கிருர்.

## பிற நாடுகளிலுள்ள மேல் சபைகள்

### பிரிட்டன்

பிரிட்டனில் மேல் சபை தேர்தல் மூலம் ஏற்படுவ தல்ல; பரம்பரைப் பிரபுக்களும், சில சமயங்களில் மன் னர்(மந்திரி சபையின் சிபார்சுப்படி)சிருஷ்டிக்கும் பிரபுக் களும் கொண்டது. சில பிரபுக்களின் ஸ்தானம் வாரிசு படியும் வரும். இந்த மேல் சபைக்குப் பிரபுக்கள் சபை என்று பெயர்.

அதிகாரம் சம்பந்தப்பட்டமட்டில், நமது மேல் சபைக்கும் அதற்கும் இரண்டு வித்தியாசங்கள் உள.

பிரிட்டிஷ் மேல் சபை ஒரு மசோதாவை இரண்டு வருஷ காலம் தாமதப்படுத்த முடியும். ஒரு மசோதா வைக் கீழ் சபை மூன்று தடவை ஊர்ஜிதம் செய்தால் போதாது. ஒன்றன்பின் ஒன்ருக, மூன்று கூட்டங்களில் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்.

இதுதான் இன்றுவரையுள்ள நிலைமை. இதற்குத் தற்காலம் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கத்தினர் செய்ய விரும்பும் சீர்திருத்தத்தில் மேல் சபை பற்றிய கொள் கையை மாற்றவில்லை. இரண்டு வருஷம் என்றிருப் பதை ஒரு வருஷமாகவும், மூன்று கூட்டத்தில் ஊர்ஜி தம் செய்ய வேண்டும் என்பதை இரண்டு கூட்டத்தில் என்றும் திருத்துகிருர்கள்.

இந்திய யூனியனின் மேல் சபையில் 6 மாதமும் மாகாணத்தில் 4 மாதம்தான் தாமதப்படுத்த முடியும். ஊர்ஜிதம் செய்வதும் இரண்டு தடவைதான். அதுவும் ஒரே கூட்டத்தில் செய்வதற்குத் தடையில்லை.

இந்திய யூனியன் மேல் சபை யமைப்பில் 'கலப்புக் கூட்டத்துக்கு' ஏற்பாடு இருக்கிறது. பிரிட்டனில் அது கிடையாது. கொள்கை சம்பந்தப்பட்டமட்டில், பிரிட்டிஷ் மேல் சபையின் உரிமைகளை நம் மாகாண மேல் சபைகளோடு ஒப்பிடலாம்.

## அமெரிக்காவில்

அமெரிக்காவில் மேல் சபையானது, 'மாகாணத்துக்கு' இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவது. இந்திய மாகாண மேல் சபைகளைப் போல் அங்கும் இரண்டு வருஷத்துக்கொருதடவை, மூன்றிலொரு பகுதிக்குத்தான் புதுத் தேர்தல்.

ஆனால் அங்கு மேல் சபைக்கும் கீழ்சபைக்கும் முரண்பாட்டைத் தீர்த்துவைப்பதற்கு அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யவில்லை. நடைமுறையில் மட்டும், இரண்டு சபைக்கும் சமரசமான ஒரு முடிவு காண இரு சபையின் கமிட்டிகள் மூலம் முயற்சி நடக்கும். இறுதியில் தனித் தனியாக வோட்டெடுத்தே தீரவேண்டும்.

அமெரிக்காவிலிருப்பது பார்லிமென்டரி நிர்வாகமல்ல. அங்கு நிர்வாகத்தில் பார்லிமென்டுக்கு நேர்முகமான பொறுப்பில்லை. ஆகையால் அங்கு மேல் சபை கீழ் சபை முரண்பாடுகளைச் சமாளிப்பதற்கு விசேஷ நடைமுறை சம்பந்தப்பட்ட மட்டில், அங்கு மேல் சபைக்குக் கிட்டத்தட்ட ஏகபோகமான அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

## ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய சமஷ்டியில் மேல் சபையானது தேர்தல் மூலமே அமைக்கப்படுகிறது.

கீழ் சபைக்கும் மேல் சபைக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுச் சமரசம் ஏற்படாது போனால், மேல் சபை, கீழ் சபை இரண்டும் கலைக்கப்படும். பிறகு இரு சபைகளும் சேர்ந்த கலப்புக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

சாதாரணமாக ஆஸ்திரேலிய மேல் சபை முழுதும் கலைக்கப்படாமல் இந்திய யூனியன் மேல் சபையைப் போலவே இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை மூன்றிலொரு பகுதியைப் புதுப்பிப்பது என்பதே முறை.

ஆனால் மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் பிடிவாதமான முரண்பாடு ஏற்படும்போது கீழ் சபையுடன் மேல் சபையும் கலைக்கப்படுவது, ஆஸ்திரேலிய அமைப்பில் காணும் ஒரு புதுமை.

**கானடா**

கானடா மந்திரி சபை கிட்டத்தட்ட பிரிட்டிஷ் மேல் சபையைப் போன்றதுதான். அங்கத்தினர்கள் ஆயுள் முழுதும் பதவி வகிக்கலாம்.

கானடா ஒரு சமஷ்டியேயாயினும் அங்கு மேல் சபையில் எல்லா மாகாணங்களுக்கும் ஒரேமாதிரி பிரதிநிதித்துவம் இல்லை.

சாதாரணமாக எல்லா முக்கியமான நாடுகளிலும் மேல் சபைகள் இருக்கின்றன. இந்தியாவில் ஏற்படுத்தும் மேல் சபைகள், ஆயுள் முழுதும் பதவி என்ற கொள்கையில்லாமல், அதிகமான அதிகாரமும் இல்லாமல், ஜனநாயகக் கொள்கைக்கு உட்பட்டு, சட்டங்கள் சிறிதளவு நிதானமாக யோசித்து இயற்றப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் மட்டுமே நிறுவப்படுகின்றன.

மற்ற நாடுகளின் அனுபவத்தை நன்கு பயன்படுத்தி அவற்றின் நல்ல அம்சங்களை எடுத்துக் கொண்டு, பிற்போக்கு அம்சங்களை நீக்கி, நம் அரசியல் நிர்ணய சபை மேல் சபைகளை யமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

பத்தாவது அத்தியாயம்

# மந்திரிசபை அமைப்பு முறை

புதிய அரசியலில் மந்திரி சபை யமைப்பு, இப்பேர்துள்ள முறையிலேயே இருக்கும். அதாவது சட்ட சபைத் தேர்தல் நடந்த பிறகு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்ட சபையில் பெரும்பான்மையினராக இருக்கிறார்களோ, அந்தப் பெரும்பான்மையினரின் தலைவர் பிரதம மந்திரியாக வருவார். அவர் மற்ற மந்திரிகளைத் தெரிந்தெடுப்பார்.

மந்திரி சபையினர் முக்கியமெனக் கருதும் பிரேரணைகள் சட்டசபையில் நிராகரிக்கப்படாத வரையில் அவர்கள் பதவியிலிருப்பார்கள்.

ஒரு மந்திரி சபை பதவியிலிருக்கும் காலத்தில், பதவியிலிருக்கும் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து பலர் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு, பிரிந்து போவதாக வைத்துக் கொள்வோம். அது காரணமாக மந்திரி சபைக்குச் சட்ட சபையில் மெஜாரிட்டி இல்லாவிட்டால் பிரதம மந்திரி ராஜிநாமா செய்வார். அப்போது எந்தக் கட்சிக்குமே தெளிவான மெஜாரிட்டி இல்லாத நிலைமை தோன்றினால், மறு தேர்தல் நடக்கும்படி சட்டசபையைக் கலைக்கவும் வழியுண்டு. புதிய சட்ட சபையில் அப்போதைய நிலைமையில் யாருடைய தலைமைக்கு மெஜாரிட்டி இருக்கிறதோ அவர் மந்திரிசபை அமைக்கலாம். பிரதம மந்திரி ராஜிநாமா செய்தால் அவருடைய சகாக்களும் ராஜிநாமா செய்ததாகவே ஏற்படும். சட்டசபையின் ஆதரவுடன்தான் எந்த மந்திரி சபையும் பதவியிலிருக்க முடியும்.

இதற்கு பார்லிமெண்டரி மந்திரி சபைமுறை என்று பெயர்.

இது பிரிட்டனிலுள்ள சம்பிரதாயத்தைப் பின்பற்றிய முறை. இப்போது இந்தியாவில் அமலில் இருப்பது இதுதான். புது அரசியலிலும் மந்திரி சபையமைப்பு இதுவாகவே இருக்கும்.

உலகில் வேறு பல முறைகளும் இருக்கின்றன என்பதையும், நாம் பின்பற்றும் முறையில் சட்டத்தில் சொல்லப்படாத சில சம்பிரதாயங்கள் உண்டு என்பதையும் தெரிந்து கொண்டால்தான், இந்த முறையின் சாதக பாதகங்களும், இந்த முறை வெற்றிகரமாக நடப்பதற்கு என்னென்ன தேவைகள் உண்டு என்பதும் புலனாகும்.

மக்கள் அத்தனை பேரும் நேர்முகமாக நாட்டின் அரசாட்சியை நடத்துவது காரியசாத்யமல்ல. இந்தக் காரணத்தால்தான், பொதுமக்கள் தமக்குப் பிரதிநிதியாக சிலரைத் தேர்ந்தெடுத்துச் சட்டசபை என்ற ஸ்தாபனத்தையமைத்து, அதனிடம் அரசியல் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள்.

இவ்வாறு செய்வதால் 'மக்கள் ஆட்சி' யென்பது 'பிரதிநிதிகளின் ஆட்சி'யாக அமைகிறது.

தேர்ந்தெடுத்து ஐந்து வருஷத்துக்குள்ளாகவே இந்தச் சட்டசபையினர் மறுபடியும் மக்களிடம் வோட்டுக்கு வரவேண்டியிருக்குமாதலின், இடைக்காலத்தில் இந்தப் பிரதிநிதிகள் மக்களின் உணர்ச்சிகளை அலட்சியம் செய்துவிட முடியாது. ஆகையால் மக்களின் ஆட்சியானது பிரதிநிதிகளின் ஆட்சியாகவே அமலுக்கு வந்தாலும், இறுதியில் அது மக்களின் தீர்ப்புக்கு உட்பட்டதே.

தனி மனிதரின் உயிர், உடல், உடமை, மதநம்பிக்கை இவற்றைப் பாதுகாப்பது மட்டுமே அரசியலின் நோக்கமாயின், மந்திரி சபையென்று பிரமாதமான ஓர்

அமைப்பு தேவையிருக்காது. ஆனால் அரசாட்சியென்பது அவ்வளவோடு முடிவதல்ல.

**அமைச்சு: (நிர்வாகம்)**

அதனால்தான், வாழ்க்கை இவ்வளவு சிக்கலாகாத பண்டைக் காலத்தில்கூட மன்னர்கள், அமைச்சர்களின் துணையுடனேயே ஆளவேண்டும் என்ற முறை இருந்தது.

அரசாட்சியின் உறுப்புகளைக் கூறும் திருக்குறளில் பொருளாதிகாரத்தின் முதல் குறளிலேயே,

> படை, குடி கூழ், அமைச்சு நட்பு, அரண் ஆறு
> உடையான் அரசருள் ஏறு.

என்று, அரசாட்சியின் ஆறு உறுபுகளின் ஒன்றாக அமைச்சும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் வெறும் அதிகாரிகளல்ல. மன்னரின் அதிகாரமும் பொறுப்பும் எவ்வாறு செயல்படவேண்டும் என்பது பற்றிய கொள்கையை நிர்ணயிப்பவர்கள்.

இந்த அமைச்சர்கள் பணிக்குத்தான் நிர்வாகம் என்ற சொல்லை அரசியலமைப்பு நூல்களில் உபயோகிக்கிறோம்.

மக்கள் எல்லோரும் நேர்முகமாக அரசாட்சி நடத்துவது எப்படி அசாத்தியமோ அதுபோலவே சட்டசபைகளும் நேரில் தாமே அமைச்சு நடத்துவது என்பது அசாத்தியம்.

அன்றாடம் மாறிவரும் உணர்ச்சிகளையும், புதிது புதிதாக ஏற்படும் தேவைகளையும், சமூக முன்னேற்றத்துக்கான வசதிகளையும், இடையூறுகளையும் கவனித்து, குறைகளுக்குப் பரிகாரம் தேடி, கல்வி, சுகாதாரம் முதலிய வசதிகள் பற்றிய தேவையையும் அதற்காக மக்கள் எவ்வளவு வரி செலுத்தத் தயாராயிருப்பார்கள் என்பதையும் மதிப்பிட்டு, காரியம் செய்வது இப்போது சர்க்காரின் கடமையாகிவிட்டது.

இந்த வேலையை அதிகார வர்க்கத்தினிடம் விட்டு விடுவது இப்போது பயன்படாது.

## அமைச்சின் அவசியம்

சட்டசபைக்கு வருகிற ஒவ்வொருவரும், அவர் வந்த தொகுதியிலுள்ள (பிர்க்கா, தாலூகா) நிலைமையைத் தான் தெரிந்துகொள்ள முடியும். ஆகையால் மாகாண முழுதுக்கும் அல்லது தேசம் முழுதுக்கும் பொதுவான தேவைகளையும் பிரசினைகளையும் பொது நோக்குடன் கவனிப்பவர்கள் சிலர் இருப்பது அவசியம்.

பொது நோக்குடன் மட்டுமல்லாமல், பொதுஜன உணர்ச்சியுடன் தொடர்பு கொண்டு கவனிக்கவும் வேண்டும்.

ஆகையால் அவ்வப்போது வேண்டிய கொள்கைகளையும் லட்சியங்களையும் அறிந்து, என்ன சட்டங்கள் தேவையென்பது பற்றி சட்ட சபைக்கு வழிகாட்டி, சட்ட சபையின் ஆதரவை (சட்டத்தின் ஆதரவை) பெற்று, அரசியலை நடத்தி வர சில அரசியல் நிர்வாகிகள் (மந்திரிகள்) அவசியம்.

அவ்வப்போதுள்ள தேவைகளையனுசரித்து என்ன சட்டங்கள் இயற்றவேண்டும், என்ன வரிகள் போடலா மென்று யோசனை கூறுவது இவர்களது கடமையாகும்.

யார் என்ன செய்தாலும் எதுவும் சட்டத்துக்குட் பட்டே இருக்கவேண்டுமாகையால், சட்டத்தை இயற்றும் சட்டசபைக்கும் அமைச்சருக்குமிடையே என்ன உறவு இருக்க வேண்டும் என்பது முக்கியப் பிரசினை யாகிறது.

இவ்வாறு மக்களின் அரசுரிமையை இயக்கி வைப்பவர்கள் (நடத்தி வைப்பவர்கள்) 10 அல்லது 15 பேர் வேண்டும். இவர்கள் பரஸ்பரம் தொடர்பு கொண்டு கூட்டுறவாக வேலை செய்வது அவசியம். ஆகையால் இவர்களுக்கு ஒரு தலைவரும் இருக்க வேண்டும்.

## நிர்வாகத் தலைமை

ஆகையால் மக்களின் அரசுரிமையை இயங்க வைக்கும்

(நடத்திவைக்கும்) நிர்வாகிகளை (மந்திரிகளை) அல்லது நிர்வாகத் தலைவரை எவ்வாறு தெரிந்தெடுப்பது என்ற பிரச்னை ஏற்படுகிறது.

அந்த மந்திரி கோஷ்டியை, அல்லது அந்தக் கோஷ்டிக்கான ஒரு தலைவரை, மக்களே நேரில் தெரிந்தெடுப்பதா அல்லது சட்டசபைப் பிரதிநிதிகளைக் கொண்டு தெரிந்தெடுக்கச் சொல்வதா என்ற கேள்வி ஏற்படும்.

நிர்வாகத் தலைவரை மக்கள் நேரிலேயே தேர்ந்தெடுப்பது என்ற முறை அமெரிக்காவில் இருக்கிறது அங்கு நிர்வாகத் தலைவருக்குச் சட்டசபையில் இடம் கிடையாது. நாம் அந்த அமெரிக்க முறையைப் பின்பற்றவில்லை. மக்களின் பிரதிநிதி சபையான சட்டசபையே இந்த நிர்வாக கோஷ்டியை (அல்லது கோஷ்டித் தலைவரை) தெரிந்தெடுப்பது என்ற முறையை வைத்துக்கொள்கிறோம்.

அந்தக் கோஷ்டியையோ தலைவரையோ சட்டசபையார் தமக்குள்ளிருந்தே தேர்ந்தெடுப்பதா, அல்லது வெளியிலிருந்து தேர்ந்தெடுப்பதா என்ற கேள்வி ஏற்படும்.

தமக்குப் புறம்பாகவே நிர்வாக கோஷ்டியொன்றைச் சிருஷ்டிப்பது, தமக்குள்ளிருந்தே தேர்ந்தெடுத்தால் பிறகு அவர்களைச் சட்டசபைக்குப் புறம்பானவர்களாக ஆக்குவது என்ற முறை ஸ்விட்ஜர்லாந்தில் இருக்கிறது. அதை நாம் பின்பற்றவில்லை. சட்டசபையிலிருந்தே சிலரை நிர்வாகக் கோஷ்டியாக வைத்துக்கொண்டு, அவர்களைச் சட்ட சபையிலேயே வைத்துக்கொள்வது என்று ஏற்பாடு செய்கிறோம்.

ஏதோ ஒருவிதமாக நிர்வாக சபையை அல்லது நிர்வாகத் தலைவரைத் தேர்ந்தெடுத்த பிறகு அவருக்கும் சட்ட சபைக்கும் இருக்கவேண்டிய உறவு என்ன என்பதைக் கவனிப்போம்.

(1) நிர்வாகிகள் விரும்புகிற சட்டத்தை நிறைவேற்றித் தர சட்டசபை சம்மதிக்கவில்லையானாலும், சட்டசபை என்ன உதவியளிக்கிறதோ அதைக் கொண்டு திருப்தி யடைந்து நிர்வாகக் கோஷ்டி சட்டசபையின் ஊழியனாகக் காரியம் செய்து வரவேண்டுமா அல்லது (2) தமக்குப் பிடிக்காத சட்டத்தைச் சட்டசபை நிறைவேற்றினாலும், அதையும் இந்த நிர்வாக கோஷ்டியினர் வேலைக்காரர் போல அமல் நடத்த வேண்டுமா? அல்லது,

(3) சட்ட சபையின் மெஜாரிட்டியும், நிர்வாக சபையும் எந்த விஷயத்தில் ஒத்துப் போகிறதோ அதை மட்டும் செய்வது என்று, இரு தரப்பினரும் திருபதியடைவதா? அல்லது,

(4) நிர்வாகிகள் கோருவதைச் சட்டசபை மெஜாரிட்டியார் ஆதரிக்காத போது, நிர்வாகிகள் விலகிப் புதுநிர்வாகிகளைத் தெரிந்தெடுக்க வசதி செய்வதா? அல்லது,

(5) சட்டத்துக்கு பட்டு நிர்வாகிகள் எது செய்தாலும் அவர்களது அன்றாட வேலையில் சட்டசபை குறுக்கிடாமல், நிர்வாகச் சபையின் அதிகாரம் இன்னது, சட்டசபையின் அதிகாரம் இன்னது, என்று வரையறுத்து விடுவதா? அல்லது.

(6) முரண்பாடு ஏற்படும் போது, சட்டசபையைக் கலைத்து, புதிய சட்டசபை ஏற்படுத்தியோ, சட்டசபையைப் புதுப்பிக்காமலோ, புது நிர்வாக கோஷ்டி பதவிக்குவர ஏற்பாடு செய்வதா? இவைபோன்ற பல கேள்விகளுக்கு இடமுண்டு.

இந்தப் பலவகை ஏற்பாடுகளுக்கும் உலகில் உதாரணங்கள் காட்ட முடியும்.

நிர்வாக சபை கோரும் சட்டங்களுக்குச் சட்டசபை சம்மதிக்காவிட்டாலும், நிர்வாக சபையின் விருப்பத்துக்கு மாறான சட்டத்தைச் சட்டசபை இயற்றினாலும், நிர்வாகிகள் பதவியிலிருந்து சட்டசபையின் ஊழியனாக இருக்கவேண்டும் என்ற முறை ஸ்விட்ஜர்லாந்தில இருக்கிறது.

ஸ்விட்ஜர்லாந்தில் சட்டசபை நிறைவேற்றிய சட்டத்தைப் பொதுஜன வோட்டுக்கு விடவும், சர்க்கார் சில சட்டங்கள் இயற்ருவிடில், ஜனங்களாகவே ஒரு மசோதாவுக்குப்பிரேரணை யனுப்பவும் வசதி அளிக்கப்படுகிறது. ஆகையால் அங்குள்ள நிர்வாக அமைப்பு முறை அந்நாட்டுக்குப் பொருந்தும். அந்த நாடு ஜனத்தொகையும் நிலப்பரப்பும் மிகவும் குறைவாகவுள்ள நாடு என்பதோடு அங்குள்ள சமஷ்டி சர்க்காரில் அதிக அதிகாரம் கிடையாது. 35 கோடி ஜனத்தொகையுள்ள நம் நாட்டில் சட்டங்களுக்குத் தனித்தனியாக பொதுஜன வாக்கெடுப்பு சாத்தியமல்ல. ஆகையால் ஸ்விட்ஜர்லாந்திலுள்ள முறை இங்கு பொருந்தாது.

நிர்வாகத் தலைவர் கோரும் சட்டத்தைச் சட்டசபை இயற்ருவிட்டாலும், நிர்வாகி பதவியிலிருக்க வேண்டியதே. நிர்வாகிக்குப் பிடிக்காத சட்டத்தைச் சட்டசபை இயற்றினுல் மூன்றிலிரண்டு பங்கு மெஜாரிட்டியுடன் இயற்றினுல் மட்டுமே நிர்வாகத் தலைவர் அதைச் சட்டமாக மதிக்கவேண்டும். சட்டத்துக்குட்பட்டு நிர்வாகி எது செய்தாலும் சட்டசபை குறுக்கிடாது. நிர்வாகத் தலைவரின் அதிகாரம் இன்னது என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இது அமெரிக்காவிலுள்ள முறை.

அமெரிக்காவிலுள்ள முறை, ஏதோ ஒரு காலத்தில் ஏற்பட்டது. அங்கு சட்டசபைக்கும் நிர்வாகத் தலைவருக்குமிடையே அதிகார பாகுபாடு இருப்பது சில சமயங்களில் முன்னேற்றத்துக்கு இடையூருக இருக்கிறது. இதை உணர்ந்து அந்த முறையை மாற்றவேண்டும் என்ற அபிப்பிராயம் அந்தநாட்டிலேயே பரவி வருகிறது. ஆகையால், அந்த முறையும் நமக்குச் சரிப்படாது.

நாம் இங்கு பின்பற்றுவது பிரிட்டிஷ் முறை. அமெரிக்காவும் ஸ்விட்ஜர்லாந்தும் நீங்கலாக, பல நாடுகளிலும் உள்ள நிர்வாக அமைப்பு பிரிட்டிஷ் முறையைத் தழுவியதே. அந்தந்த நாட்டு மக்களின் மனப்பான்மைக்குத் தக்கபடி

நடைமுறையில் சில வித்தியாசங்கள் காணப்பட்டாலும் மந்திரி சபையும் சட்ட மன்றமும் பரஸ்பரம் பூர்ணமான தொடர்புகொண்டு, பரஸ்பரம் பொறுப்பும் உள்ளதாக இருக்கவேண்டும் என்பது பல நாடுகளில் இருக்கும் முறை. அதையே நாம் இங்கு வைத்துக்கொள்கிறோம்.

இந்த முறைக்குப் பார்லிமெண்டரி அமைச்சு என்று பெயர்.

## பார்லிமெண்டரி முறையின் பொது அம்சங்கள்

பிரிட்டனிலுள்ள பார்லிமெண்டரி மந்திரி சபை முறை, அமெரிக்காவிலுள்ள நிரந்தர நிர்வாகம் ஆகிய இரண்டு முறைகளுள், பார்லிமெண்டரி நிர்வாக முறையே இந்திய அரசியலமைப்பில் பின்பற்றப்படுகிறது என்பதைக் கூறினோம்.

நடைமுறை பற்றிய சில நுணுக்கங்களில் வேற்றுமை இருந்தாலும், முக்கியமான விஷயங்களில் பிரிட்டனிலுள்ள முறைக்கும், இந்தியாவில் ஏற்பட்டுள்ள முறைக்கும், பிரான்ஸிலுள்ள முறைக்கும் வித்தியாசமில்லை.

ஆயினும், (1) பிரிட்டனில் அந்த முறை ஏற்பட்ட வரலாறுகளையும் (2) பிரான்ஸின் அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளையும் (3) இந்திய அரசியலமைப்பில் சட்டத்தில் எது சொல்லப்பட்டிருக்கிறது, எது சொல்லாமல் விடப்பட்டிருக்கிறது என்பதையும் இனி ஆராய்வோம்.

பல நாடுகளிலுள்ள பார்லிமெண்டரி நிர்வாக முறையிலுள்ள முக்கியமான பொது அம்சங்களைப் பின்வருமாறு விவரிக்கலாம்:

(1) சட்ட மன்றத்தின் கீழ் சபையில் பெரும்பான்மையோரின் ஆதரவுடன்தான் ஒரு மந்திரி சபை பதவியிலிருக்க முடியும்.

ஒரு மந்திரி சபைக்குச் சட்டமன்றத்தின் கீழ் சபையில் ஆதரவு இல்லையென்றால், அந்த மந்திரி சபை பதவியிலிருக்க முடியாது.

(2) ஒரு மந்திரி சபை கவிழ்ந்தால், (அதாவது மந்திரி சபைக்குச் சட்டசபையில் மெஜாரிட்டி இல்லையென்றால்) யாருடைய தலைமைக்கு மெஜாரிட்டி கிடைக்குமோ, அவரைக் கொண்டு மந்திரி சபை அமைக்க முயற்சி நடக்கும்.

அவ்வாறு ஒரு மந்திரி சபை அமைக்க முடியவில்லையாயின், சட்டசபையைக் கலைத்து மறுபடியும் பொதுத் தேர்தல் நடத்தி, புதிய சட்டசபையில் யாருடைய தலைமைக்கு மெஜாரிட்டி இருக்குமென்று பார்த்து மந்திரிகள் நியமிக்கப்படுவார்கள்.

ஒரு மந்திரிசபைக்குச் சட்டசபையில் மெஜாரிட்டி இல்லாதபோது, அந்தச் சட்டசபையைக் கொண்டேதான் வேறு மந்திரிசபை அமைக்கவேண்டும் என்பதில்லை. வேறு மந்திரி சபை ஏற்படுத்த முயற்சி செய்யாமலே சபையைக் கலைத்து மறுபடியும் பொதுத் தேர்தல் நடத்தலாம். இவ்வாறு செய்வதற்கு அரசியல் சம்பிரதாய பாஷையில் 'மக்களின் தீர்ப்பை நாடுவது'* என்று சொல்வார்கள்.

(3) மந்திரிசபைக்கு மெஜாரிட்டி இருக்கிறதே என்ற காரணத்துக்காகச் சட்ட சபையைக் கலைக்காமல், ஒரே சட்ட சபையை வெகுகாலம் நீடித்துவிடமுடியாது. கீழ் சபையை இத்தனை வருஷத்துக்கொருதடவையாவது புதுப்பிக்கவேண்டும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும்.

மேலேயுள்ள மூன்று அம்சங்களும் சில நாடுகளில் சட்டத்திலேயே சொல்லப்படுகிறது. சில நாடுகளில் சட்டத்தில்

---

* ஒரு மந்திரி சபைக்கு மெஜாரிட்டி இருக்கும்போது கூட, ஏதேனும் பெரிய பிரச்னை இருந்தால், மக்களின் தீர்ப்பை நாடி பொதுத் தேர்தல் நடத்துவதுண்டு. ஆனல் இது பிரிட்டனில்தான். மற்ற நாடுகளில் இது வழக்கமில்லை.

சொல்லப்படாமல் சம்பிரதாயமாக அனுஷ்டானத்தில் இருக்கிறது.

ஆனால் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள நாடுகளைவிட சம்பிரதாயத்துக்கே விடப்பட்டுள்ள பிரிட்டனில் இந்தமுறை வெற்றிகரமாக நடக்கிறது.

## வேறு சட்டங்களால் அமைப்பு உருவாகிறது

சட்டத்தில் சொல்லாமலே எப்படி ஒரு முறை அமலிலிருக்க முடியும் என்று சிலர் திகைக்கலாம். மந்திரி சபையைப்பற்றி சட்டத்தில் இல்லாவிட்டாலும் வேறு விஷயங்கள் பற்றிய சட்டம் அமலுக்கு வரும்போது அதன் விளைவாகவே மந்திரி சபை பற்றிய நிலைமையும் உருவாகிவிடுகிறது.

பிரிட்டனில், "சர்க்கார் என்ன வரி விதிப்பதானாலும், என்ன செலவு செய்வதானாலும், ஒரு வருஷத்துக்கதிகமாக ஒரு ராணுவத்தை வைத்துக்கொள்ள வேண்டுமானாலும், பார்லிமென்டின் சம்மதம் வேண்டும்." என்று சட்டம் இருப்பதால், பார்லிமென்டின் ஆதரவு இல்லாமல் மந்திரிசபை பதவியில் இருக்கமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. அதாவது பார்லிமென்டரி ஜனநாயக மந்திரிப் பொறுப்பாட்சியைத் தவிர வேறு வழியில்லை யென்று செய்துவிட்டது.

அதோடு பார்லிமென்டின் ஆயுட்காலம் 5 வருஷம்தான் என்பதற்கும் சட்டம் இருக்கிறது.

பார்லிமென்டில் மெஜாரிட்டி ஆதரவு உள்ளவர்தான் மந்திரியாக இருக்கலாம் என்றோ, மந்திரிசபையில் கூட்டுப் பொறுப்பு இருக்கவேண்டும் என்றோ, பிரதம மந்திரி ராஜீநாமா செய்தால் எல்லா மந்திரிகளும் ராஜிநாமா செய்ததாக மதிக்கப்படுவர் என்றோ பிரிட்டனில் சட்டமில்லை. ஆயினும், சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளால் இவையெல்லாம் அமலுக்கு வந்துவிட்டன.

பிரிட்டனில் பார்லிமென்டரி மந்திரி முறை ஏற்பட்ட

வரலாற்றை விவரிப்பதானால், பிரிட்டிஷ் சரித்திரம் முழுவதையும் விவரிக்கவேண்டியிருக்கும் விவரிக்காமல் சுருக்கமாகச் சொல்வதானால், ஒரே வாக்கியத்தில் சொல்லிவிடலாம். அங்கு சர்வாதிகார மன்னர்களின் துலைக் கருவியாகச் சிருஷ்டிக்கப்பட்ட பிரிவி கவுன்ஸிலின் சிறு கமிட்டி, ஜனநாயகப் பார்லிமென்டரி மந்திரி சபையாக மாறுதலடைந்து, வேலை செய்து வருகிறது.

இந்த மாறுதல்கள் 1628-ம் வருஷத்துக்கும் 1701-ம் வருஷத்துக்குமிடையே உருவானவை என்று சொல்லலாம். 1628-ம் வருஷத்துக்கு முன்னர் இங்கிலாந்தில் ஒரு பார்லிமென்டும் ஓர் அமைச்சர் குழாமும் இருக்கத்தான் செய்தன. என்றாலும்; பார்லிமென்டை லட்சியம் செய்யாமலே அமைச்சு நடத்த முடியும். பார்லிமென்டைக் கூட்டாமலே நிர்வாகம் செய்ய முடியும் என்ற நிலைமை இருந்தது.

ஆனால் 1641-ம் வருஷத்தில் பார்லிமென்டின் சார்பில் மன்னருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பெரிய மகஜரில்,

"உங்களது அரசியல் காரியங்களைக் கவனிப்பதற்காக, முக்கியமான பதவியில் உங்கள் அருகில் வைத்துக் கொள்ள நியமிக்கப்பெறுபவர்கள், பார்லிமென்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயுள்ளவர்களாக இருக்கவேண்டும்." என்று ஒரு கோரிக்கை இருந்தது. இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படாததால், அங்கு உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டு, முதலாவது சார்லஸ் என்ற மன்னர் தூக்கிலிடப்பட்டார். பிறகு இடைக்காலத்தில் பார்லிமென்டின் பேரால் சிறிது காலம் ஓர் எதேச்சாதிகாரம் நடந்தது. 1688-ம் வருஷத்தில் இரண்டாவது சார்லஸ் பார்லிமெண்டின் பழைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதிலிருந்து பார்லிமென்டின் ஆதிக்கம் அமலுக்கு வந்தது. மன்னரின் நிர்வாக சபை, பார்லிமென்டரி நிர்வாக சபையாயிற்று. மீண்டும் முடியரசும் எற்பட்டது. அந்த முடியரசானது பார்லிமென்டரிப் பொறுப்பாட்சிக்கு உட்பட்ட முடியரசாக அமைந்தது.

பார்லிமெண்டின் ஆதரவுடன் மந்திரிகள் என்ன முடிவு செய்தாலும், மன்னர் அதற்குக் கையெழுத்திட்டு அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நிலைமையும் ஏற்பட்டது.

எந்தச் சட்டமும், மன்னரின் கையெழுத்துடன்தான் அமலுக்கு வர முடியும் என்ற முறை இருந்தபோதிலும், 1702-ம் வருஷத்துக்குப் பிறகு எந்தச் சட்டத்துக்கும் மன்னர் (அல்லது ராணி) கையெழுத்துப் போட மறுத்ததில்லை.

அதாவது பார்லிமென்டின் முடிவை மீற மன்னருக்கு உரிமையில்லை யென்று ஏற்பட்டது.

ஆயினும், அப்போதும் மந்திரி சபையின் ஆலோசனைகள் மன்னரின் தலைமையிலேயே நடந்துவந்தன.

### பிரதமர் பதவியின் ஆரம்பம்

இப்போதெல்லாம், மந்திரிசபையின் கூட்டத்தில் மன்னர் ஆஜராக இருப்பதே கிடையாது. இது ஒரு விசித்திரமான சந்தர்ப்பம் காரணமாக ஏற்பட்டது. 1714-ம் வருஷத்தில் ஆன் ராணி இறந்த பிறகு, அடுத்த வாரிஸ் பாத்தியதை யுள்ளவர் கத்தோலிக்க மதத்தினராக இருந்தார். கத்தோலிக்கர்கள் பிரிட்டிஷ் சிம்மாசனத்தில் இருக்கக்கூடாது என்று ஒரு சட்டம் இருந்ததால், ஜார்ஜ் என்ற ஒரு ஜெர்மன் சிற்றரசரைப் பிரிட்டனின் ராஜாங்கப் பதவிக்குக் கொண்டு வருவதென்று தீர்மானித்தார்கள். அந்த ஜார்ஜ் மன்னருக்கு ஆங்கில மொழி தெரியாது. ஆகையால் அவர் மந்திரிசபைக் கூட்டத்துக்கே வருவதில்லை. மந்திரிசபைக் கூட்டத்துக்கு மன்னர் தலைமை வகிப்பதற்குப் பதிலாக, மந்திரி சபையில் ஒருவர் தலைமை வகிப்பது என்ற முறை ஏற்பட்டது. இவரது பதவி பிரதம மந்திரிப் பதவியாயிற்று.

### கூட்டுப் பொறுப்பு

பிரதமரே மந்திரி சபையின் சார்பில் முடிவு தெரிவிப்பார் என்பதிலிருந்து கூட்டுப் பொறுப்பும் அமலுக்கு வந்தது.

இவ்வாறு உருவான மந்திரிசபை யமைப்பின், முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

(1) மந்திரிகள் பார்லிமெண்ட் அங்கத்தினர்களாக இருக்கவேண்டும். (மேல் சபை, கீழ் சபை இரண்டும் சேர்ந்தது பார்லிமெண்ட்.)

(2) மந்திரிகள் சர்க்காரின் அன்றாட நிர்வாகக்கொள்கை யில் கூடுமானமட்டில் ஒரே அபிப்பிராய முள்ளவர்களாக இருக்கவேண்டும்.

(3) மந்திரி சபையில் அபிப்பிராய பேதமிருந்தாலும் தலைவருக்குகட்டுப்பட்டு, ஒரே கொள்கையை நிறைவேற்ற வேண்டும். அதாவது கூட்டுப் பொறுப்பு இருக்கவேண்டும்.

இவையனைத்தும் பல நாடுகளில் சட்டபூர்வமாக அமலில் இருக்கின்றன.

## பிரெஞ்சுச் சட்டம்

1946-ம் வருஷ இறுதியில் பிரான்ஸில் அமலுக்கு வந்த புது அரசியலமைப்பில் மந்திரிசபை யமைப்பு பற்றி சில ஷரத்துக்கள் இருக்கின்றன. அவற்றின் சாராம்சம்:

(1) பொதுத்தேர்தல் நடந்து சட்டசபை கூடும்போது பிரெஞ்சு ஜனாதிபதி பலரையும் கலந்தாலோசித்து ஒரு பிரதம மந்திரியை தெரிந்தெடுப்பார். அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி தனது சகாக்களைத் தெரிந்தெடுத்து, தாம் அனுஷ்டிக்கப்போகும் கொள்கையைப் பார்லிமெண்டின் முன் சமர்ப்பிக்க வேண்டும். மந்திரி சபைமீது பார்லிமெண்டுக்கு நம்பிக்கை இருப்பதாக ஒரு பிரேரணை வரும். சபையின் மொத்த அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் நம்பிக் கையை ஊர்ஜிதம் செய்தால்தான் அந்த மந்திரி சபை பதவி யில் அமர்த்தப்படும்.

(2) பதவியில் இருக்கும்போதே ஏதேனும் ஒரு பிரச்னை

யில் சர்க்காருக்கு மெஜாரிட்டியில்லையென்றால், மந்திரிக ளாகவே ஒரு நம்பிக்கை பிரேரணையைக் கொண்டுவருவார்கள். சபையின் மொத்த அங்கத்தினரில பாதிப்பேருக்கதிகமாக அதை எதிர்த்தால் மந்திரி சபை ராஜிநாமா செய்யும். அதாவது பாதிப்பேர் ஆதரிக்கவேண்டும் என்பதில்லை. பாதிப்பேர் எதிர்க்காமலிருந்தால் போதும், மந்திரி சபை நீடிக்கலாம். எந்தச் சமயத்திலும் சபையில் யார் வேண்டுமானாலும் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரலாம்.

(3) 18 மாதத்திற்குள் இரண்டு தடவை மந்திரி சபை நெருக்கடி ஏற்படடால், சட்டசபையைக் கலைத்து, பொதுத் தேர்தல் நடக்க வேண்டுமென்று பிரதம மந்திரி கோரலாம். அந்தக் கோரிக்கைப்படி ஜனாதிபதி பொதுத்தேர்தலுக்கு ஏற்பாடு செய்வார்.

சட்டசபையின் ஆயுட்காலம் எவ்வளவு என்பது அரசிய லமைப்பில் சொல்லப்படவில்லை. சட்டசபையே சாதாரணச் சட்டத்தின் மூலம் இதை நிச்சயித்துக் கொள்ளலாம்.

பிரிட்டனைப்போலல்லாமல், பிரான்ஸில் எப்போதுமே சட்ட சபையில் இரண்டு மூன்று கட்சிகளோடு நில்லாமல் ஏழெட்டுக் கட்சிகள் இருக்கும். பிரிட்டனிலிருப்பது போன்ற தெளிவான கட்சிமுறை அங்கு இல்லை. மந்திரி சபைகள் அடிக்கடி மாறும். ஆகையால் ஒவ்வொரு தடவையும் பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்வது பெரும் சங்கடமாகிவிடும். இதை உத்தேசித்து அங்கு மந்திரி சபை நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் சட்டசபையைக் கலைக்கும்படி கோருவதற்கு இடம் தராமல், சில நிபந்தனைகள் ஏற்படுத்தப்படு கின்றன.

பிரான்ஸிலுள்ள இந்த ஏற்பாடுகள் பார்லிமென்டரி மந்திரி சபை முறைக்கு முரண்பட்டவையல்ல. பிரிட்டிஷ் முறையின் கருத்துதான் அந்தச் சட்டத்தில் இருக்கிறது. பிரிட்

டனில் சம்பிரதாயத்துக்கு விடப்பட்ட நடைமுறையை, பிரான்ஸில் சட்டமாக இயற்றியிருக்கிறார்கள்.

## நமது முறை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இந்த நடைமுறை பற்றி பிரிட்டனைப்போல மௌனம் சந்திக்கவுமில்லை. பிரான்ஸைப்போல இவ்வளவு நுணுக்க விவரங்களுடன் ஏற்பாடு செய்யவுமில்லை.

### சட்டத்தில் சொல்லியுள்ளது

மந்திரி சபை சம்பந்தமாக இந்திய அரசியலமைப்பில் தெளிவாகச் சொல்லியுள்ளவை:

(1) மந்திரி சபையானது கூட்டுப் பொறுப்பில் சட்ட மன்றத்தின் கீழ் சபைக்குப் பொறுப்புள்ளதாக இருக்க வேண்டும்.

(2) எந்த மந்திரியும் மந்திரியாகத் தெரிந்தெடுக்கப் படும் காலத்தில் சட்டமன்றத்தின் அங்கத்தினராக இல்லா விட்டாலும், 6 மாதத்துக்குள்ளாகவேனும் சட்டமன்றத்தின் அங்கத்தினராக ஆகிவிட வேண்டும். இல்லாவிட்டால் மந்திரிப் பதவியில் இருக்கக்கூடாது.

(3) சட்டமன்றத்தின் கீழ் சபை 5 வருஷத்துக் கொரு தடவையாவது கலைக்கப்பட வேண்டும். அதற்கு முன்னரே கலைக்கப்படலாம்.

(4) ஒருவர் பிரதம மந்திரியாகத் தெரிந்தெடுக்கப்படு வார். மற்ற மந்திரிகள் பிரதம மந்திரியின் யோசனைப்படி தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

### சட்டத்தில் சொல்லாதது

எந்த நிலைமையில் சட்டசபையைக் கலைக்க வேண்டும் என்பதைச் சட்டத்தில் சொல்லவில்லை. எந்தச் சமயத்தில்

மந்திரி சபை ராஜிநாமா செய்ய வேண்டும்" என்பதையும் சொல்லவில்லை.

ஆனால் சட்டசபையின் ஆதரவில்லாமல் சட்டமியற்றவும் முடியாது வரி விதிக்கவும் முடியாது. மந்திரி சபை சட்ட சபைக்குப் பொறுப்புள்ளது என்பதும் சட்டத்தில் சொல்லப் பட்டிருப்பதால், சட்டசபையின் விருப்பத்துக்கு மாருக யாரும் பதவியிலிருக்க முடியாது என்பது உறுதி செய்யப்பட் டிருக்கிறது.

சில விஷயங்களைச் சட்டத்திலேயே சொல்லியிருக்கிறது. நம் நாட்டில் அரசியல் கட்சியமைப்பும் கட்சிக் கட்டுப்பாடும் எவ்வாறு உருவாகின்றன என்பதைக் கவனித்து, சமய சந்தர்ப் பங்களுக்குத் தக்கபடி அரசியலமைப்பு வளைந்து கொடுப்பதற் கும், இயற்கையான வளர்ச்சியை ஒட்டி சம்பிரதாயங்கள் உருவாவதற்கும் வசதி செய்திருக்கிறது.

பதினோராவது அத்தியாயம்

# மந்திரி சபையும் சட்டசபையும் - கட்சிக் கட்டுப்பாடு -

சட்டசபைக்கு வழி காட்டி, அவ்வப்போது திறமையான நிர்வாகத்துக்கு என்ன புதிய சட்டங்கள் தேவையென் பதை எடுத்துச் சொல்லி, மசோதாக்கள் பிரேரித்து, சட்ட சபையின் அங்கீகாரத்தைப் பெற்று நிர்வாகம் நடத்துவது மந்திரி சபையின் வேலை என்று முன்னர் கூறியுள்ளோம்.

இயற்றப்படும் சட்டங்களை அதிகாரிகள் துர்வினியோகம் செய்கிறார்களா என்று கவனித்து, மக்களின் புகார்களை மந்திரி களின் கவனத்துக்குக் கொண்டுவருவது சட்டசபை அங்கத் தினர்களின் கடமை. சட்டசபையின் அங்கத்தினர்கள் மசோதாக்களும் கொண்டுவரலாம்.

எந்தக் காரியமும் சட்டத்தின்படிதான் நடக்கவேண்டும். எந்தச் சட்டமும் சட்டசபையின் சம்மதத்துடன்தான் நிறை வேற முடியும். ஆகையால் சட்டசபையின் ஆதரவின்றி மந்திரி சபை பதவியிலிருக்க முடியாது.

இந்தக் கொள்கைகளை அனுஷ்டிக்கும்போது, ஒரு நாட் டில் ஸ்திரமான ஆட்சி முறை நடைபெற வேண்டுமானால், சர்க்கார் ஏதேனும் ஒரு கொள்கையை உறுதியுடனும், திறமை யுடனும் பின்பற்ற வேண்டுமானால், சட்டசபையில் ஓரளவு ஸ்திரமான மெஜாரிட்டி அவசியமாகிறது.

இந்த ஸ்திரமான மெஜாரிட்டி ஆதரவுக்குச் சட்டசபை யில் கட்டுப்பாடுள்ள கட்சிகள் அவசியமாகின்றன.

ஆகவே மந்திரி சபை, சட்டசபை, சட்டசபைக் கட்சிகள், வோட்டர்கள் இவர்களிடையே பரஸ்பரம் செல்வாக்கும் தொடர்பும் எவ்வாறு அமைகிறது என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம்.

மந்திரிசபை சட்டசபைக்கு உட்பட்டதுதான். ஆயினும் மந்திரி சபை சட்டசபையின் வேலைக்காரனல்ல. சட்டசபையின் ஆதரவு இல்லையென்றால் மந்திரிகள் பதவி வகிக்க முடியாது. ஆயினும் "உங்கள்மீது நம்பிக்கை இல்லை" என்று சொல்ல சட்டசபைக்கும் மெஜாரிட்டி கட்சிக்கும் தைரியம் வராத வரையில், மந்திரிகளுக்குச் சட்டசபை ஓரளவு கட்டுப் பட்டுத்தான் நடக்கவேண்டியிருக்கும். இல்லாவிட்டால் எந்தக் காரியமும் உருப்படாது.

## சட்டசபை மீது
## மந்திரி சபைக்கு ஆதிக்கம்

மந்திரி சபையென்பது சட்டசபையின் ஒரு கமிட்டியே யென்றாலும், சட்டசபை மீது அந்தக் கமிட்டிக்கு ஆதிக்கம் ஏற்பட்டுவிடுகிறது!

சில விஷயங்களில் பிரேரணை கொண்டுவர மந்திரி சபைக் குத்தான் உரிமையுண்டு. தனி நபர்கள் கொண்டுவர முடியாது. உதாரணமாக, வரவு செலவுத் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். ஓர் இனத்தில் செலவைக் குறைப்பதற்குச் சாதாரண அங்கத்தினர்கள் பிரேரணை கொண்டுவர முடியுமே யொழிய, ஒரு செலவை அதிகப்படுத்த தனி அங்கத்தினர்கள் பிரேரணை கொண்டுவர முடியாது.

சர்க்கார் கொண்டுவருகிற மசோதாக்களுக்குத்தான் சட்ட சபையில் முதல் இடம் கொடுக்கப்படும் என்றும் ஒரு சம்பிர தாயம் ஏற்பட்டிருக்கிறது.

சட்டசபையின் சிருஷ்டியான மந்திரி சபைக்குச் சட்ட சபையைவிட அதிக அதிகாரம் இருப்பது ஜனநாயகமாகுமா என்று சிலர் நினைக்கலாம்.

இவ் விஷயத்தில் சட்டசபைக்கும் மந்திரி சபைக்கு மிடையே ஏற்படும் உறவானது, சிகிச்சை பெறுபவனுக்கும் டாக்டருக்குமிடையேயுள்ள உறவு போன்றது. ஒரு டாக்டரை பொறுக்கிய பின், டாக்டர் நமது பணத்தைப் பெற்று, நமக்குச் சிகிச்சை செய்தபோதிலும், அவரிடம் நமக்கு நம்பிக்கை யிருக்குமளவும், அவரது "உத்தரவுகளுக்கு" நாம் கட்டுப்படு வதுதான் நல்லது. அவர் மீது சந்தேகம் இருந்தால் அவரை நீக்கிவிடலாம். ஆனால் அவரை டாக்டராக வைத்துக் கொள்ளும் வரையில் அவருக்கு நம் மீது சில அதிகாரங்கள் ஏற்பட்டு விடுகின்றன!

(இந்த டாக்டர் உவமை எல்லா அம்சங்களிலும் பொருந்தாது.)

## ஆதிக்கக் கட்சியும் எதிர்க் கட்சியும்

பிரதம மந்திரியானவர் சட்ட சபையில் மெஜாரிட்டி கட்சியின் பிரதிநிதி என்ற முறையிலேயே தலைவராக வந்திருக் கிறார். அதே சட்டசபையில் எதிர் கட்சி யொன்று இருக் கிறது. எதிர் கட்சியும் ஏதேனும் ஒரு காலத்தில் மெஜாரிட் டிக் கட்சியாக மாறக்கூடும். அப்போது அவர்கள் பதவிக்கு வரக்கூடும். அவர்களிலும் பிரதம மந்திரியாக வரக்கூடியவர் கள் இருப்பார்கள். ஆகையால் எதிர் கட்சியினர் மெஜாரிட்டி கட்சித் தலைவரின் அமலில் குற்றம் கண்டுபிடித்துக்கொண்டே யிருப்பார்கள். இவர்களது விவாதம் மெஜாரிட்டிக் கட்சியி லேயே சிலரது மனதையும் அபிப்பிராயத்தையும் மாற்றி விடக்கூடும். ஆகையால் பிரதம மந்திரி தமது கட்சியி லுள்ள பெரும்பான்மை அபிப்பிராயத்தைமட்டுமல்ல, எதிர் கட்சிலுள்ள சில அபிப்பிராயங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டி யிருக்கும்.

ஆனால் அடிப்படைக் கொள்கைகளில் எதிர் கட்சிக்கு விட் டுக் கொடுத்தால் பிரதம மந்திரிக்குத் தமது கட்சியில் பலரது

ஆதரவு போய்விடும். தமது கட்சியின் அடிப்படைக்கொள்கைகளுக்கு உட்பட்டு நடப்பதன் மூலம்தான் எந்த மந்திரிசபையும் சட்டசபை மீதும் தம்மை ஆதரிக்கும் கட்சியின்மீதும் ஆதிக்கம் பெறுகிறது.

ஆகையால் தெளிவான சில அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமையுள்ளதான அரசியல் கட்சிகள் இருப்பது பார்லிமென்டரி நிர்வாகத்தின் ஸ்திரத்தன்மைக்கு மிக மிக அவசியம்.

சட்டப்படி ஒரு மந்திரிசபைக்கு வேண்டியது சட்டசபையின் மெஜாரிட்டி ஆதரவுதான். ஆனால் காரியாம்சத்தில் மந்திரிகளைப் பதவிக்குக் கொண்டுவருவது மெஜாரிட்டி கட்சியின் ஆதரவே.

## திட்டத்துடன் தேர்தல் போட்டி

வெகு நாளாக ஜனநாயகப் பார்லிமென்டரி ஆட்சி இருந்துவரும் நாடுகளில் ஓர் அரசியல் கட்சியானது பொதுத் தேர்தலில் போட்டியிடும்போதே, அதற்குச் சட்டசபையில் மெஜாரிட்டி கிடைத்து, அந்தக் கட்சியின் சார்பில் மந்திரி சபை பதவிக்கு வந்தால் என்ன செய்யும் என்பதும் ஓரளவு தெரிந்திருக்கும். ஆகையால் பொதுத் தேர்தலில் வோட்டு போடுபவர்கள் தமது அபேட்சகரின் சொந்த குணதிசயத்தையோ கோளாறுகளையோ பொருட்படுத்தாமல், 'இன்ன கொள்கைகளையும், திட்டங்களையும் கடைப்பிடிப்பதாக அறிவித்து இன்னார் தலைமையிலுள்ள இன்ன கட்சிக்கு வோட்டுச் செய்கிறோம்' என்ற மனப்பான்மையுடனேயே வோட்டுச் செய்வார்கள்.

பொதுத் தேர்தல் முடிந்த பிறகு பெரும்பான்மைக் கட்சியின் சார்பில் யார் தலைவர் என்பது பற்றிச் சாதாரணமாக சந்தேகம் இருப்பதில்லை. ராஜாங்கத் தலைவர் (ராஜாவோ, கவர்னரோ, உதைபதியோ) அந்தக் கட்சி தலைவரைக்கொண்டே மந்திரிசபையை அமைக்கச் சொல்லுவார்.

சாதாரணமாக அந்த மந்திரிசபை கலையும் வரையில் அந்தத் தலைமை மாறாது. மந்திரிசபை கவிழ்ந்ததாயின், மறுதேர்தலில்கூட, அதே தலைவர் இருப்பது உண்டு. ஆகையால் கட்டுப்பாடான கட்சிகள் இருப்பது பார்லிமென்டரி நிர்வாக முறையில் முக்கியமான அம்சமாகிவிட்டது.

## பொறுப்புள்ளதான எதிர் கட்சி தேவை

நம் நாட்டில் பார்லிமென்டரி நிர்வாகம் ஆரம்பித்து இன்னும் அதிக காலம் ஆகவில்லை. ஆகையால் அனுபவ பூர்வமான சம்பிரதாயங்கள் ஏற்பட்டாகவில்லை. நிர்வாகப் பொறுப்புணர்ச்சியுடன் நிணயமான திட்டங்களை அறிவித்துப் போட்டி யிடக்கூடிய கட்சியமைப்புக்கள் இன்னும் ஏற்பட்டாகவில்லை. காங்கிரஸ் கட்சி மட்டும்தான் அந்த முறையில் சிறிது அனுபவம் பெற்றிருப்பதாகச் சொல்லிக்கொள்ள முடியும். எதிர்கட்சி என்று சொல்லிக்கொண்டு சில கட்சிகள் இருந்தாலும், அவை தமக்கென்று ஒரு திட்டம் வைத்துக் கொள்ளவில்லை. பதவியில் இருக்கும் கட்சிக்கு எதிர்வாதம் செய்வதைத் தவிர மாற்றுத் திட்டம் எதுவும் அவற்றுக்கு இல்லை. ஆகையால் பொறுப்புள்ளதான எதிர்க்கட்சி என்று சொல்லக்கூடிய அந்தஸ்து அவற்றுக்கு ஏற்பட்டாகவில்லை.

காலம் செல்லச் செல்லத்தான் இந்த நிலைமை மாறும்; பொறுப்புள்ள பதவிக் கட்சி இருப்பது போல, மாறியுள்ள எதிர் கட்சிகளும் படிப்படியாக இந் நாட்டில் உருவாகும் என்று எதிர்பார்க்கலாம்.

---

# மந்திரி சபை மாறுதல் - பிறநாட்டுச் சம்பிரதாயங்கள்

பிரிட்டனில் எப்போதுமே இரண்டு அல்லது மூன்று கட்சிகளுக்குமேல் இருந்ததில்லை. மூன்று கட்சிகள் இருந்தாலும் அந்த மூன்ருவது கட்சி மிகவும் சிறியதாகவும், பதவிப் பொறுப்புக்கு வேண்டிய பலம் இல்லாததாகவும் இருக்கும். பெரும்பாலும் இரண்டு கட்சிகள்தான் இருக்கும். ஆகையால் ஒரு மந்திரி சபை தோற்கடிக்கப்பட்டால் எதிர் கட்சியார் மந்திரி பதவிக்கு வருவது சாத்தியம்.

ஆனல் தோற்கடிக்கப்பட்ட மந்திரி சபை, அல்லது சட்டசபையின் ஆதரவு குறைந்துவரும் ஒரு மந்திரி சபை, உடனே ராஜிநாமா செய்து, எதிர் கட்சியிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தே தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ராஜிநாமா செய்யாமல் பொதுஜனங்களின் ஆதரவு தமக்கு இருக்கிறதா இல்லையா என்று பார்க்க, ஒரு பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்து சட்டசபையைக் கலைத்துவிட முடியும்.

## பிரிட்டிஷ் சம்பிரதாயங்கள்

மந்திரி சபை மாறுதல் பற்றி பிரிட்டனிலுள்ள இந்தச் சம்பிரதாயங்கள் எவ்வாறு உருவாயின என்பதைப் பார்ப்போம்.

பார்லிமென்டில் ஒரு பொதுத் தேர்தல் நடந்தவுடன் கீழ் சபையில் தொழிற்கட்சிக்கு 350 ஸ்தானங்களும், கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 265 ஸ்தானங்களும இருந்ததாக வைத்துக் கொள்வோம்.

தொழிற் கட்சி பதவிக்கு வரும். இவ்வாறு பதவிக்கு வந்து சுமார் இரண்டு வருஷகாலம் ஆகும்போது தேசத்தில் தொழிற் கட்சிமீது சிறிது அதிருப்தி ஏற்படலாம். இடைக்காலத்தில் சில பார்லிமெண்ட் அங்கத்தினர் இறப்பது காரணமாக, அல்லது ராஜிநாமா செய்வது காரணமாக 10 ஸ்தானங்கள் காலியாகி, உப தேர்தல் நடந்து, உப தேர்தல்களில் தொழிற் கட்சி ஸ்தானங்கள் சிலவற்றைக் கன்சர்வேட்டிவ் கட்சி கைப்பற்றக்கூடும்.

பார்லிமெண்டிலுள்ள தொழிற்கட்சி அங்கத்தினர்களில் சிலர், சில பிரச்னைகளில் கன்சர்வேட்டிவ்களுடன் வோட்டு செய்வதாக இருக்கலாம்.

இவ்வாறு தொழிற் கட்சியின் பலம் குறைய ஆரம்பித்தால், தொழிற்கட்சி மந்திரி சபை என்ன செய்யும்? தமது மெஜாரிட்டி மைனாரிட்டியாகும் வரை காத்துக்கொண்டிருக்காது. அதிருப்தி பெருகுவதற்கு முன்னதாகவே ஒரு பொதுத் தேர்தலை நடத்திப் பார்க்கலாமே என்று யோசித்துப் பார்லிமென்டைக் கலைக்கும்படி மன்னருக்கு யோசனை கூறும். (ஆனால் அலட்சிய புத்தியுடன் யோசனை கூறினால் தேசத்தில் அக்கட்சிமீது கோபமே ஏற்படும்.)

முற்காலத்தில் (ராணி விக்டோரியா காலத்தில்) இம்மாதிரி மந்திரிகள் யோசனை கூறினபோது, அந்த ராணி யுக்தானுசாரமாக அந்த யோசனையை ஏற்கவோ, நிராகரிக்கவோ செய்ததுண்டு. இப்போது மந்திரி என்ன யோசனை கூறினாலும் ஏற்றுக்கொள்வது என்ற சம்பிரதாயம் ஏற்பட்டு விட்டது.*

---

* இதுபற்றி ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. விக்டோரியா ராணி காலத்திலும் பார்லிமென்டைக் கலைப்பது பற்றிய யோசனையில்தான் இவ்வாறு ராணி தன் யுக்தானுசாரமாக ஏற்கவோ நிராகரிக்கவோ செய்தாரே யொழிய, மற்றெல்லா விஷயத்திலும் மந்திரியின் யோசனையை ஏற்றுத்தான் நடந்து கொண்டார்.

## கீழ் சபையைக் கலைக்கும்படி யோசனை

பார்லிமென்டைக் கலைக்கும் விஷயத்தில் மன்னர் (ராணி) யுக்தானுசாரமாக மந்திரியின் யோசனையை நிராகரித்திருந்தாலும், அதை எதேச்சாதிகாரம் என்று நாம் சொல்லிவிட முடியாது. ஏனென்றால், அடுத்த மந்திரி சபை இந்த நிராகரிப்பு பற்றிய 'பழியை' * ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கும்.

இது எப்படி என்று பார்ப்போம். பார்லிமென்ட் கலைப்பு யோசனையை மன்னர் நிராகரித்தவுடன், அந்த மந்திரி சபை ராஜிநாமா செய்யும். உடனே மன்னர் வேறொருவரை மந்திரி சபை அமைக்கச் சொல்லுவார். புதிய மந்திரிசபைக்குப் பார்லிமென்டில் மெஜாரிட்டி கிடைத்துவிட்டால், மன்னரின் நிராகரிப்புக்குப் பார்லிமென்டின் சம்மதம் கிடைத்துவிட்டதாக அர்த்தம். இல்லாவிட்டாலும் பழைய நிராகரிப்புக்குப் புது மந்திரி பொறுப்பேற்றுக் கொண்டதாக மதிக்கப்படும். அந்தப் புதிய மந்திரியும் பார்லிமென்டைக் கலைக்கும்படி யோசனை சொல்லக் கூடும். அப்போது பார்லிமென்டைக் கலைப்பது தவிர வேறு வழி கிடையாது.

சில சமயங்களில் மெஜாரிட்டி கட்சியார் தமக்கு ஆதரவு குறைவதைப் பார்த்துப் பார்லிமென்டைக் கலைக்கும்படி யோசனை கூறுவதற்குப் பதிலாக, பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, எதிர் கட்சியைப் பதவியில் வைக்கும்படி யோசனை கூறலாம். இப்படிப்பட்ட நிலைமையில் எதிர்கட்சிக்கும் மெஜாரிட்டி இருக்காது. ஆகையால் எதிர்கட்சித் தலைவர் பெயரளவில் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்டு, பார்லிமென்டைக் கலைக்கும்படி யோசனை

---

* மன்னர் செய்யும் எந்தக் காரியத்துக்கும் ஏதாவது ஒரு மந்திரி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பது பிரிட்டிஷ் சம்பிரதாயம். பதவியிலுள்ள மந்திரியோ பதவிக்கு வரப்போகும் மந்திரியோ மன்னரின் காரியத்துக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

கூறலாம். மன்னருக்கு இவ்வாறு யோசனை கூறுவது ரகசிய மாகத்தான் இருக்கும். ரகசியத்தை வெளியிடாமல் இருப்பதற் காக மந்திரிமார்கள் பதவிக்கு வரும்போதே சத்தியப்பிர மாணம் எடுத்துக்கொள்வது வழக்கம்.

ஒரு மந்திரி சபை மாறிய பிறகு பார்லிமென்ட் கலைப்பு யோசனை வந்தால் மன்னர் (ராணி) நிராகரிப்பது வழக்க மில்லை. எந்த மந்திரிசபைக்குப் பொது ஜனங்களின் ஆதரவு இருக்கிறது என்பது பொதுத் தேர்தலில் வெளிப் பட்டுவிடும்.

பதவியிலுள்ள ஒரு மந்திரி பார்லிமென்டைக் கலைக்கும் படி யோசனை கூறினால் மன்னர் நிராகரிப்பது என்ற வழக்கம் விக்டோரியா ராணி காலத்துடன் மறைந்துவிட்டது. அந்த உரிமை ராணிக்கு (மன்னருக்கு) உண்டா, இல்லையா என்பது வேறு விஷயம். இப்போதெல்லாம் மன்னர் பார்லிமென்ட் கலைப்பு விஷயத்திலும் பிரதம மந்திரியின் யோசனையை நிராகரிப்பதில்லை.

அடுத்தபடியாக ஒரு மந்திரி சபைக்கு மெஜாரிட்டி இல்லை யென்றால், மந்திரிசபை ராஜிநாமா செய்துதான் தீரவேண் டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் நம்பிக்கையில்லாத் தீர் மானம் வந்து நிறைவேறினால், அல்லது பட்ஜெட் மான்யக் கோரிக்கை மீது தோற்கடிக்கப்பட்டால், ராஜிநாமா செய்வதைத் தவிர வேறு வழி இருக் காது. அப்போது ராஜிநாமா செய்துவிட்டு, எதிர் கட்சியிடம் பதவியை ஒப்படைக்கலாம், அல்லது பொதுத் தேர்தல் வேண்டுமென்று கூறலாம்.

தமது கட்சியில் சிலர் சில பிரச்னைகளில் எதிர்க்கட்சியுடன் வோட்டு செய்யும் நிலைமை ஏற்பட்டால், "இந்தப் பிரேரணை தோற்றால் மந்திரிசபை ராஜிநாமா செய்யும்" என்று பிரதமர் எச்சரிப்பார். ராஜிநாமா செய்து பொதுத் தேர்தல் வந்தால் தமக்கு மறுபடியும் தேர்தலில் ஸ்தானம் கிடைக்குமா என்று ஒவ்வொரு அங்கத்தினரும் சிந்திக்க வேண்டியிருக்கும். இந்த

நிலைமையை உத்தேசித்துச் சிலர் தம் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு இணங்கிவிடுவதுண்டு.

இவ்வாறு பல நடமுறைகள்மூலம் பிரிட்டனில் கட்சிக் கட்டுப்பாடு காப்பாற்றப்படுகிறது. இதைப் பார்த்தால் மந்திரிசபை பார்லிமென்டுக்குப் பொறுப்புள்ளதாக இருப்பது போலவே, பார்லிமெண்டும் மந்திரிசபைக்குப பொறுப்புள்ளது என்று சொல்லலாம்!

## சில விசேஷ நிலைமைகள்

இரண்டு கட்சிகளோடு நிற்காமல் 3 கட்சிகள் ஏற்பட்டு, எந்தக் கட்சிக்கும் தெளிவான மெஜாரிட்டி இல்லாவிட்டால் பதவிக்கு வரும் கட்சி தனது திட்டத்தை நிறைவேற்ற முடியாமல், எதிர் கட்சியினரின் திட்டமும் நிறைவேருமல் முற்போக்கு ஸ்தம்பிக்கக் கூடும். ஆனல் மறு தேர்தலில் நிலைமை தெளிவுபட்டுவிடும் என்பது பிரிட்டனின் அனுபவம்.

இதுபற்றி பொதுப்படையாகச் சொல்லிக்கொண்டு போவதைவிட 1920-ம் வருஷத்துக்கும் 1935-ம் வருஷத்துக்குமிடையே பிரிட்டனில் மந்திரி சபை மாறுதல்கள் பற்றிய சில நிலைமைகளை விவரிப்பது சிறிது பயனுள்ளதாகும்.

1923-ம் வருஷத்தில் பிரதம மந்திரியாக இருந்த பால்ட்வினுக்குப் பார்லிமென்டில் மெஜாரிட்டி இருந்தபோதிலும் ஒரு புதிய கொள்கையில் மக்களின் தீர்பபைப் பெறுவதற்காக அவர் ராஜிநாமா செய்து, பார்லிமென்டைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்தார்.

1924-ம் வருஷத்தில் பொதுத் தேர்தலின் முடிவில் மூன்று கட்சிகள் இருந்தன; மூன்றுக்கும் தனி மெஜாரிட்டி இல்லை. கன்சர்வேடிவ் கட்சியைவிட தொழில் கட்சிக்கு ஸ்தானங்கள் குறைவாகவே இருந்தாலும் லிபரல் கட்சியின் ஆதரவுடன் தொழிற்கட்சி பதவி வகிக்க முடிந்தது.

ஆனல் இது அதிக காலம் நீடிக்கவில்லை. 1924ம் வருஷத்தில் ஜனவரி மாதத்தில் கூடின பார்லிமென்டை 1924-ம்வருஷம்

அக்டோபர் மாதத்திலேயே கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தினார்கள். எந்தக் கட்சிக்கும் தெளிவான மெஜாரிட்டி இல்லாததால் பார்லிமெண்டின் ஆயுள் குறுகியது!

1931-ம் வருஷத்தில் சர்வ கட்சி கூட்டுறவில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கே அதிக ஸ்தானங்கள் இருந்தபோதிலும் சர்வ கட்சி மந்திரி சபை தொழிற் கட்சியின் தலைமையிலேயே இருந்தது.

## பிரிட்டனைப் பிரான்ஸுடன் ஒப்பிட்டால்

மந்திரிசபை மாறுதல், பார்லிமெண்ட் கலைப்பு இவை சம்பந்தமாகப் பிரான்ஸையும், பிரிட்டனையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். 1920-ம் வருஷத்துக்கும் 1935-ம் வருஷத்துக்குமிடையே (15 வருஷ காலத்தில்) பிரிட்டிஷ் பார்லிமெண்ட் 6 தடவை கலைக்கப்பட்டிருக்கிறது.

புதிதாகத் தேர்ந்தெடுத்த ஒரு பார்லிமெண்ட் 5 வருஷம் பதவியிலிருக்க முடியுமாயினும், 1922-ம் வருஷத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்லிமெண்டை 1923-ம் வருஷத்தில் கலைத்தார்கள். மீண்டும் 1924-ம் வருஷத்தில் கலைத்தார்கள். 1929-ம் வருஷத்தில் தேர்ந்தெடுத்த பார்லிமெண்டை 1931-ம் வருஷத்தில் கலைத்தார்கள். இதே 15 வருஷ காலத்தில் பிரான்ஸில் ஒரு பார்லிமெண்ட் கூட அதன் 4 வருஷ வாய்தாவுக்கு முன்னதாகக் கலைக்கப்படவில்லை.

ஆனால் மந்திரி சபைகளைப் பார்ப்போம். 1920-ம் வருஷத்துக்கும் 1935-ம் வருஷத்துக்குமிடையே பிரிட்டனில் 6 தடவை தான் மந்திரிசபை மாறியது. பிரான்ஸிலோ அதே காலத்துக்குள் சுமார் 20 தடவை மந்திரி சபை மாறியிருக்கும்! இவ்வாறு பிரான்ஸில் மந்திரிசபை அடிக்கடி மாறுவதால்தான் அங்கு மந்திரிசபை மாறும்பொழுது பார்லிமெண்டைக் கலைப்பது என்ற வழக்கம் ஏற்படவில்லை.

ஆனால் 1946-ம் வருஷத்தில் தயாரித்த புதிய பிரெஞ்சு அரசியலில், 18 மாதத்துக்குள் இரண்டு தடவை மந்திரி சபை

நெருக்கடி ஏற்பட்டால் பார்லிமென்டைக் கலைக்கும்படி கோர மந்திரி சபைக்குச் சட்டபூர்வமாக உரிமையளித்திருக்கிறார்கள்.

பிரான்ஸில் ஏழெட்டுக் கட்சிகள் இருப்பதால், எந்தச் சமயத்திலும் எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டியிருக்காது கட்சி பலம் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும். மறு தேர்தல் மூலம் எந்தக் கட்சிக்கும் ஸ்திரமான மெஜாரிட்டி கிடைக்கும்படி செய்வதும் அங்கு சாத்தியப்படாது. ஆகையால் பிரான்ஸில் மந்திரிசபைக்குப் பார்லிமென்ட் மீதுள்ள ஆதிக்கம் மிகவும் குறைவு இதனால்தான் பிரெஞ்சு சர்க்கார்கள் எந்தக் கொள்கையையும் ஸ்திரமாகவும் உறுதியுடனும் பின்பற்ற முடிவதில்லை.

பிரிட்டனில் மந்திரிசபை அமைப்பு சம்பந்தமாக மன்னருக்கு அதிக சிரமம் கிடையாது. மந்திரி சபை அமைப்புக்கு மன்னரின் முயற்சியே தேவையில்லை. பிரான்ஸில் அப்படியல்ல. மந்திரி சபை அமைப்பின்போது ஜனாதிபதி ஒவ்வொருவராக அழைத்து கட்சிகளிடையே கூட்டுறவு ஏற்படுத்த முயலவேண்டியிருக்கும்.

கட்டுப்பாடான ஒரு தனிக்கட்சியின் ஆதரவுடன் பிரெஞ்சு மந்திரி சபை பதவி வகிக்க வசதியில்லாமல், எப்போதும் ஏழெட்டுக் கட்சிகள் இருப்பதால், சட்ட சபையில் யாரேனும் சிலருக்குச் சில ஆசைகள் காட்டி, சலுகைகள் வினியோகிக்க வேண்டியிருக்கும். பிரிட்டிஷ் மந்திரிகள் போல, பிரெஞ்சு மந்திரிகள், தாக்ஷண்யம் காட்டாமல் பதவியிலிருக்க முடியாது.

## இந்தியாவுக்கு ஏற்றது எது?

இந்தியாவில் ஒரு மந்திரிசபைக்கு நெருக்கடி ஏற்படும் போது சட்ட சபைக் கலைக்கவேண்டுமா என்பதைப் பிரதம மந்திரியின் இஷ்டத்துக்கு விடுவதா, ஜனாதிபதியின் இஷ்டத்துக்கு விடுவதா, இங்கு கட்சிப் பாகுபாடுகள் பிரான்ஸைப் போல அமைகின்றனவா, பிரிட்டனைப்போல அமைகின்றனவா

என்பதைப் பொறுத்தே இது பற்றிய அனுஷ்டானம் உருவாகும். ஆனால் சட்டப்படி இவ்வுரிமை ஜனாதிபதியினுடையதே.

பிரிட்டனைப்போல பார்லிமென்டில் இரண்டு கட்சிகளே போதிய பலமுள்ளவை என்ற நிலைமை இருந்தால் மந்திரி சபைகள் அடிக்கடி மாருமல், அவசியமான பொதுத் தேர்தல்கள் இல்லாமல் தவிர்க்க முடியும்.

## ஜனநாயகத்தின் தர்மகர்த்தா

சட்டசபையைக்கலைத்துப்பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்யலாம், சட்ட சபையைக் கலைக்கும்படி யோசனை கூறலாம் என்றெல்லாம் சொல்லும் இடங்களில் வாசகர்களுக்கு ஒருவிதமான திகைப்பு ஏற்பட்டிருக்கும். யார் கலைப்பார்கள், பிரதம மந்திரியே உத்தரவு போட முடியுமா, யாருக்கு யோசனை கூறுவார்கள், மந்திரிகள் ராஜிநாமா செய்யும் போது ராஜிநாமாவை யாரிடம் சமர்ப்பிப்பார்கள் என்றெல்லாம் சிலர் திகைப்படையலாம்.

கட்சி பலம் மாறுவது நிமித்தமாக, மந்திரி சபையும் சட்ட சபையும் மாறும்போது சர்க்காரின் நிர்வாகப் பொறுப்பை மற்றொருவர் கைக்கு மாற்றிக் கொடுக்கும் தர்மகர்த்தா யார், தற்காலிகமாக 'பெட்டிச் சாவி' யாரிடம் இருக்கும் என்ற கேள்விகள் எழலாம்.

இதற்குச் சுருக்கமாகப் பதில் சொல்லலாம். நிர்வாகப் பொறுப்புக்கும் அதிகாரத்துக்கும் தர்மகர்த்தாவாக, ராஜாங்க அதிகாரத்தின் சின்னமாக, ஒருவர் வேண்டும் என்பதற்குத் தான் 'ராஜாங்கத் தலைமை' என்ற பதவி ஏற்பட்டிருக்கிறது. குடியரசுகளில் இந்தப் பதவியை வகிப்பவர் ஜனாதிபதி, அல்லது அவரால் நியமிக்கப்படும் கவர்னர்கள்.

## பதின்மூன்ருவது அத்தியாயம்

# குடியரசுச் செங்கோலின் உறைவிடம்

எந்தக் குடியரசிலும் அதிகாரங்கள் யாவும் மக்களிடமிருந்தே உற்பத்தியாகின்றன என்ருலும், அந்த ராஜாங்க அதிகாரத்தின் சின்னமான செங்கோலும், முத்திரையும் ஒரே நபரிடம்தான் இருக்க முடியும்.

பிரிட்டிஷ் முடியரசில் செங்கோலும் முத்திரையும் மன்னரிடம் இருக்கிறது.

ஆனல் இந்தியா முடியரசல்ல; குடியரசு. ஆகையால் மற்றெல்லாக் குடியரசுகளிலும் இருப்பதுபோல, இந்தியக் குடியரசின் செங்கோலும், முத்திரையும் ஜனதிபதி (ராஷ்டிரபதி) என்ற ஒருவரிடம் இருக்கும். ஜனதிபதியே இந்தியா முழுதுக்கும் ராஜாங்கத் தலைவர்.

அதுபோலவே இந்திய யூனியனின் உறுப்பான மாகாணங்களுக்குக் குடியரசுச் செங்கோலும் முத்திரையும் கவர்னர்களிடம் இருக்கும்.

சமஸ்தானங்களில் இந்தப் பொறுப்பு ராஜப்பிரமுகர்களிடம் இருக்கும்.

இவர்களுக்குத் தனியதிகாரம் மிக மிகக் குறைவு. அன்ருட நிர்வாகத்தில் குறிப்பிடத் தக்க எந்த அதிகாரமும் இவர்களிடம் இல்லை.

ஆயினும், ஜனதிபதி, கவர்னர்கள், ராஜப்பிரமுகர்கள் ஆகியோரைக் குடியரசுச் செங்கோலின் தர்மகர்த்தாக்கள் என்று சொல்லலாம்.

இவர்களுடைய அதிகாரத்தைக் கவனிக்குமுன் இவர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு பதவிக்கு வருகிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

## (1) ஜனாதிபதி

*1950*–ம் வருஷம் ஜனவரி மாதம் 26ந் தேதி யன்று புதிய அரசியல் அமலுக்கு வரும் தேதியில் பதவிக்கு வரவிருக்கும் ஜனாதிபதி இப்போதுள்ள அரசியல் நிர்ணய சபையினாலேயே தேர்ந்தெடுக்கப்படுவார். பிறகு வரும் ஜனாதிபதிகள் அப்படியல்ல.

### ஜனாதிபதி தேர்தல் முறை

புதிய அரசியல் அமலுக்கு வந்த பின், இந்தியா முழுவதிலும் சட்டசபைகளுக்குத் தேர்தல் நடக்கும்.

அந்தத் தேர்தலின் போது ஒவ்வொரு சபையும் எவ்வாறு நிறுவப்படும் என்பதை 5-வது அத்தியாயத்திலும் 6-வது அத்தியாயத்திலும் சொல்லியிருக்கிறோம்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபைகளுள் (1) மாகாண கீழ் சபைகள் (மேல் சபைகளல்ல) (2) இந்திய யூனியன் கீழ் சபை (3) இந்திய யூனியன் மேல் சபை ஆகிய மூன்றின் அங்கத்தினர்களும் வோட்டுப்போட்டு ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தத் தேர்தலில் ஒற்றை மாற்று வோட்டு முறையே அனுஷ்டிக்கப்படும். ஆகையால் மெஜாரிட்டி கட்சியைச் சேர்ந்தவர்தான் வெற்றி பெறுவார் என்பது நிச்சயமில்லை.

இவ்வாறு புதிதாக ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி ராஜிநாமா செய்துவிடுவார்.

## அபேட்சகர் யோக்யதாம்சம்

ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்க அபேட்சகராக நிற்பவர் இந்தியாவின் குடியரசுப் பிரஜையாக இருக்கவேண்டும், 35 வயது ஆகியிருக்கவேண்டும். யூனியன் கீழ்சபை அங்கத்தினர் பதவிக்குள்ள யோக்யதாம்சம் பெற்றவராக இருக்கவேண்டும். தேர்தலுக்கு நிற்கும்போது அவர் மந்திரி பதவியையோ, கவர்னர் பதவியையோ தவிர வேறெந்த உத்தியோகமும் வகிப்பவராக இருக்கக்கூடாது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி 5 வருஷ காலம் பதவியிலிருப்பார். அடுத்த ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்கும் வரை இவரது பதவி நீடிக்கும்.

ஒரு தடவை ஜனாதிபதியாக இருந்தவர் மறுபடியும் அந்தப் பதவிக்கு அபேட்சகராக நிற்க முடியும்.

## ஜனாதிபதியை நீக்க விசேஷ நடைமுறை

அரசியலமைப்புக்கு முரணாக நடந்தார் என்ற காரணத்துக்காக ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஒருவரை நீக்க முடியும்.

ஆனால் அவ்வாறு குற்றஞ் சாட்டி நீக்குவதற்கு, ஒரு விசேஷ நடைமுறையை அனுஷ்டிக்கவேண்டும். அது பின்வருமாறு:—

யூனியன் சட்ட மன்றத்தின் மேல் சபை அல்லது கீழ் சபையில்தான் இதுபற்றிய நடவடிக்கைகள் தொடங்க வேண்டும்.

முதல் முதலாக புகார் இரண்டு சபைகளுள் ஏதேனும் ஒன்றில் ஆஜர் செய்யப்படும். மற்றொரு சபைதான் இதன்மீது தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

நடவடிக்கை தொடங்குமுன் கீழ் சபை அல்லது மேல் சபை அங்கத்தினரில் கால்வாசிப் பேர் கையெழுத்திட்டு,

14 நாள் முன்னறிவிப்புடன் ஜனாதிபதிமீது கண்டனப் பிரேரணை கொண்டுவரப்போவதாகத் தீர்மானம் அனுப்பவேண்டும்.

அவ்வாறு பிரேரணை அனுப்பப்பட்ட பிறகு, அதுபற்றி விசாரணை நடத்தவேண்டியதே என்ற தீர்மானத்துக்கு அந்தச் சபையின் மொத்த அங்கத்தினர் தொகையில் மூன்றில் இரண்டு பேருடைய ஆதரவு வேண்டும்.

இவ்வாறு ஒரு சபையில் தீர்மானமான பிறகு, புகார் ஜாபிதா (குற்றப் பத்திரிகை) மற்றொரு சபைக்குப் போகும். விசாரணை வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது கீழ் சபையில் என்றால், விசாரணை நடத்தவேண்டியது மேல் சபை. புகார் பிரேரித்தது மேல் சபையாயின், விசாரணை நடத்த வேண்டியது கீழ் சபை. அப்போது அந்தச் சபை ஒரு நீதி மன்றத்தைப் போல வேலை செய்யும்.

விசாரணையின் போது, ஜனாதிபதி நேரிலோ, அல்லது பிரதிநிதிகள் (வக்கீல்கள்) மூலமோ ஆஜராகி சமாதானம் சொல்லலாம், விவாதிக்கலாம்.

புகார் ருசுவாகிவிட்டது என்ற தீர்மானத்துக்குச் சபையில் மொத்த அங்கத்தினரில் மூன்றில் இரண்டுபேர் சாதகமாக வோட்டு செய்தால்தான் தீர்மானம் நிறைவேறியதாக மதிக்கப் படும்.

அவ்வாறு தீர்மானம் நிறைவேறிய தேதியிலிருந்து ஜனாதிபதி நீக்கப்பட்டதாக அர்த்தம். உடனே உதவி ஜனாதிபதி பதவிக்கு வருவார்.

## (2) உதவி ஜனாதிபதி

ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும்போதே ஓர் உதவி ஜனாதிபதியும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

உதவி ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் மாகாண சட்ட சபை அங்கத்தினர்கள் கலந்துகொள்வதில்லை,

யூனியன் பார்லிமென்டின் மேல் சபை கீழ் சபை அங்கத்தினர்கள் வோட்டுப்போட்டு (ஒற்றை மாற்று வோட்டுப் முறைப்படி) உதவி ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பார்கள்.

ஜனாதிபதியின் ஸ்தானம் காலியாக இருக்கும்போது, அல்லது ஜனாதிபதி தமது வேலைகளைச் செய்ய சக்தியற்றுப் போகும்போது, உதவி ஜனாதிபதியானவர் ஜனாதிபதிக்குள்ள எல்லா அதிகாரங்களோடும் பதவியிலிருப்பார்.

சாதாரண காலத்தில் அவர் யூனியன் மேல் சபையின் சபாநாயகராக* இருப்பார்.

## (3) கவர்னர்கள்

மேலே கூறியவாறு, புதிதாகப் பதவிக்கு வரும் ஜனாதிபதியே, மாகாணங்களுக்குக் கவர்னர்களை நியமனம் செய்வார்.

இந்தப் பதவிக்குத் தேர்தல் வேண்டுமா என்று அரசியல் நிர்ணயசபையில் சர்ச்சை நடந்ததுண்டு. இறுதியில் இந்தப் பதவிக்குத் தேர்தல் வேண்டாமென்றும், ஜனாதிபதியைக் கொண்டு நியமனம் செய்யும்படி ஏற்பாடு செய்வதே நலம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்குக் காரணம் உண்டு.

இந்தியாவில் எத்தனை சர்க்கார்கள் இருந்தாலும் இந்தியா முழுதும் ஒரே பொது ராஜாங்கம்தான். ஆகையால், மாகாணங்களில் ராஜாங்கத் தலைவர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே இருப்பதுதான் சிக்கலுக்கு இடம் தராத ஏற்பாடு. ஜனாதிபதியோ தேசம் முழுவதின் சட்டசபை பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; ஆகையால், அவர் தமக்குப் பிரதிநிதியாக கவர்னர்களை நியமனம் செய்வதில் தவறில்லை.

---

* உதவி ஜனாதிபதி தேர்ந்தெடுக்கும்போது மேல் சபை ஓர் உதவி சபாநாயகரையும் தேர்ந்தெடுக்கும். உதவி ஜனாதிபதியானவர் ஜனாதிபதியாகிவிட்டால் உதவி சபாநாயகர், மேல் சபையின் சபாநாயகராவார்.

இந்திய யூனியன் சர்க்கார் விஷயத்தில் ஜனாதிபதிக்கு என்ன நிலைமையோ, அதே நிலைமைதான் மாகாண சர்க்கார் விஷயத்தில் கவர்னர்களின் நிலைமை.

கவர்னர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பெறுபவரின் யோக்ய தாம்சம் ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகராக இருப்பவரின் யோக்யதாம்சம் போன்றதே.

ஆனால், அவர் அந்த மாகாணச் சட்டசபையில் அங்கத்தின ராவதற்கு வேண்டிய யோக்யதாம்சம் பெற்றவராக இருக்க வேண்டியதில்லை. அதாவது, வெளி மாகாணத்திலிருந்தும் ஒரு வரை ஜனாதிபதி நியமிக்க முடியும்.

கவர்னர்கள் சாதாரணமாக 5 வருஷகாலம் பதவி வகிக் கலாம். ஆனால், எந்த சமயத்திலும் ஜனாதிபதி கவர்னரைப் பதவியிலிருந்து நீக்கமுடியும்.

கவர்னர்கள் சாதாரணமாக எல்லா விஷயங்களிலும் மந்திரி சபையின் யோசனையுடனேயே காரியம் செய்ய வேண்டும் என்றாலும், யுக்தானுசாரமாகச் செய்யவேண்டிய சில காரியங்கள் இருப்பின், அவற்றில் அவர் ஜனாதிபதிக்குக் கட்டுப்பட்டவர்.

## (4) ராஜப் பிரமுகர்கள்

சமஸ்தானங்களில் கவர்னருக்குப் பதிலாக ராஜப் பிர முகர்கள் இருப்பார்கள். அதிகாரத்தில் இவர்களுக்கும் கவர் னர்களுக்கும் வித்தியாசம் கிடையாது. இவர்களை ஜனாதிபதி நியமனம் செய்வதில்லை. இவர்கள் வாரிஸ் பாத்தியமாக பத விக்கு வருகிறார்கள். ஆனாலும் ஜனாதிபதியானவர் யாரை அங்கீகரிக்கிறாரோ அவர்தான் ராஜப் பிரமுகராக பதவியில் இருக்க முடியும். அதாவது, இவர்களது பதவி, ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

## பதினான்காவது அத்தியாயம்

# ராஜாங்கத் தலைவரின் அந்தஸ்தும், அதிகாரமும்

சுருக்கமாகச் சொல்லுமிடத்து குடியரசுகளிலும், பிரிட்டன் போன்ற ஜனநாயக முடியரசுகளிலும் ராஜாங்கத் தலைவரின் அந்தஸ்து மிகமிகப் பெரியது. அந்தப் பதவியைவிட அதிக அந்தஸ்து வேறெதற்கும் இல்லை. தேசப் பற்றுடன் ஜனநாயகத்தை மதித்து நடக்கும் ஜனாதிபதிக்கு மந்திரிகள் மீது ஏராளமான செல்வாக்கு இருக்கும். ஆனால், அதிகாரம் என்று சொல்லக்கூடியது அநேகமாக எதுவுமே இல்லை.

மந்திரி சபை நெருக்கடிகளின்போது சட்ட சபையைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமா அல்லது இருக்கிற சட்டசபையை வைத்துக்கொண்டே மந்திரி சபையை மாற்றியமைக்க வேண்டுமா என்ற பிரச்னை ஏற்படும். அப்போதுதான் அந்த விஷயத்தில் ஜனாதிபதி யுக்தானுசாரமாக ஏதேனும் செய்யலாம். சரியான முறையில் பொறுப்புணர்ச்சியுள்ள ஜனநாயகச் சம்பிரதாயங்கள்படி மந்திரிகள் நடந்துகொண்டால், இந்த அதிகாரத்தைக்கூட ஜனாதிபதி தம் மந்திரிகளின் கருத்துப்படியே உபயோகிப்பார்.

இதுதான் அரசியல் சம்பிரதாயப்படியுள்ள நிலைமை.

## சட்டமும் கருத்தும்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 395 ஷரத்துக்களையும் புரட்டினால், சட்ட வாசகத்தில் ஒரு விசித்திரமான நிலைமையைக் காணலாம்.

ஜனாதிபதி, கவர்னர் இவர்களுக்கு அதிகாரம் கொடுக்கும் ஷரத்துகள் சுமார் 100 இருக்கின்றன. ஜனாதிபதி அதைச் செய்வார், கவர்னர் இதைச் செய்வார், இந்த அதிகாரியை நியமிப்பார், அந்த அதிகாரியை நியமிப்பார்—என்றெல்லாம் பல பிரிவுகளில் காணப்படும்.

ஆனால், மந்திரி என்ன செய்வார், என்ன செய்ய முடியும் என்று பார்த்தால், மந்திரிகளைப்பற்றி 4 அல்லது 5 ஷரத்துக்கள் தான் இருக்கின்றன! அது மட்டுமல்ல, அவற்றில்கூட மந்திரிகளின் கடமையைச் சொல்கிறார்களே ஒழிய அதிகாரம் இருப்பதாக ஒரு ஷரத்துக்கூட இல்லை. ஜனாதிபதிக்கும் கவர்னருக்கும் 'யோசனை கூறி உதவுவார்கள் என்பது மட்டும் தான் மந்திரிகளைப்பற்றிச் சட்டத்திலுள்ள ஷரத்து.

இதைப் பார்த்தால், மந்திரிகளுக்கு அதிகாரமே இல்லை; ஜனாதிபதிக்கும், கவர்னர்களுக்கும் ராஜப்பிரமுகர்களுக்கும் தான் எல்லா அதிகாரமும் என்று தோன்றும்.

உண்மை இதற்கு நேர்மாறானது மந்திரியின் யோசனை என்பது தீர்ப்புக்குச் சமம்.

'ஜனாதிபதி செய்வார்' என்று சட்டத்தில் சொல்லப்படும் எல்லா நிர்வாகக் காரியங்களும் மந்திரிகளாலேயே செய்யப்படும். மந்திரி யோசனை கூறுவார் என்று சட்டத்தில் சொல்லப்படும். ஆனால், இந்த யோசனையென்பது தீர்ப்பு என்றே பொருள்படும.

## அரசியலில் மூன்று அம்சங்கள்

அரசியல் காரியங்களை மூன்று இனமாகப் பிரிக்கலாம்.

(1) சட்டமியற்றும் அதிகாரம்.

(2) நிர்வாக அதிகாரம்.

(3) ராஜாங்கக் காரியம்.

சட்டமியற்றும் அதிகாரம் சட்டசபையிடம் இருக்கும்.

நிர்வாகத்தை நடத்தும் அதிகாரம் மந்திரிகளிடம் இருக்கும்.

இவ்விரண்டுக்கும் ராஜாங்க முத்திரையை யளிப்பது ராஜாங்கத் தலைவரிடம் ஒப்படைக்கும் பொறுப்பு.

### ராஜாங்க தலைவரின் அவசியம்

கட்சி விவாதத்துக்குப் புறம்பாக நின்று தேசத்தின் ராஜாங்க அதிகாரத்துக்கு ஒரு தர்மகர்த்தா போல இருப்பவர் ஜனாதிபதி.

சர்க்கார்கள் மாறலாம்; ஆனால் ராஜாங்கம் மாறாது. அடிக்கடி கட்சி பலத்துக்குத் தக்கபடி மாறுவது சர்க்கார். இந்த மாறுதல்களுக்கு அப்பாற்பட்டது ராஜாங்கம்.

மந்திரி சபைக்குக் கட்சி உண்டு. ராஜாங்கம் எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டது.

மந்திரிகள் போகலாம், வரலாம்: சட்டசபை கூடலாம், கலையலாம்; ஆனால், இவற்றிடையே நிலையாக நிற்பது ராஜாங்கமும் ராஜாங்கத் தலைமையும்.

சட்டங்களை இயற்றுவது சட்டசபைகள். ஆனால், அவற்றைச் சட்டமாக வெளியிடுமுன் அதில் ஜனாதிபதியின் (அல்லது கவர்னரின்) சம்மதம் (கையெழுத்து) வாங்கப்படும்.

நிர்வாக உத்தரவுகள் போடுவது மந்திரிகள். ஆனால், சர்க்கார் உத்தரவுகள் அமலுக்கு வரும்போது ஜனாதிபதியின் பேரால் அமலுக்கு வரும்.

### ராஜாங்க அதிகாரம்

அரசியல் அதிகாரங்களை (1) சட்டமியற்றும் அதிகாரம் (2) நிர்வாக அதிகாரம் (3) ராஜாங்க அதிகாரம் என்று

மூன்றாகப் பிரித்தால், ராஜாங்க அதிகாரம் அதாவது ராஜாங்கத் தலைமை பற்றிய அதிகாரம் எது என்ற கேள்வி ஏற்படுகிறது.

சட்டசபையையும், நிர்வாகத்தையும் இயங்கவைப்பது ராஜாங்கத் தலைமையின் அதிகாரம்.

பெண்டுலம் (தொங்கட்டம்) உள்ள கடிகாரத்தை இதற்கு உதாரணமாக* எடுத்துக் கொள்வோம். சாவி கொடுத்தால், அதன் வில்லில் முறுக்கேறி கடிகாரம் ஓடுகிறது. கடிகாரம் ஓடுவதற்குள்ள சக்தி முழுவதும் அதில் இருக்கிறது.

ஆனால் சாவி கொடுத்த பிறகு ஒருமுறை பெண்டுலத்தை ஆட்டிவிடவேண்டும், பிறகுதான் கடிகாரம் ஓட ஆரம்பிக்கிறது.

சாவி கொடுக்காமல் பெண்டுலத்தை ஆட்டிவிட்டால் கடிகாரம் ஓடாது. சாவி கொடுத்தாலும், பெண்டுலத்தை ஒருதடவை ஆட்டிவிட்டால்தான் கடிகாரம் ஓட ஆரம்பிக்கும்.

இவ்வாறு அரசியல் கடிகாரத்தின் பெண்டுலத்தை ஆட்டிவைக்கும் பொறுப்பும் உரிமையும் ராஜாங்கத் தலைவரின் அதிகாரமாகும்.

சட்டமியற்றல், நிர்வாகம், ஆகிய இரண்டுக்கும் உபரியாக குறிப்பிடும் ராஜாங்க அதிகாரங்கள் என்ன என்பதைப் பின்வருமாறு விவரிக்கலாம்:

(1) பிரதம மந்திரியை நியமிப்பது.

(2) சட்டங்களுக்குச் சம்மதம் அளிப்பது,

(3) சட்டசபையைக் கூட்டுவது.

(4) ஒரு கூட்டம் முற்றுப்பெற்றதாக அறிவிப்பது.

---

* எந்த உவமையுமே வெகுதூரம் செலுத்திப் பார்க்கக்கூடாது என்ற எச்சரிக்கை இந்த உவமை விஷயத்திலும் அவசியம்!

(5) சட்டசபையைக் கலைப்பது.

(6) அகஸ்மாத்தான சிக்கல்களை நீக்குவது.

(7) உயர்தர நீதிபதிகள், உத்யோக நியமனக் கமிஷன், அட்வோகேட் ஜெனரல் ஆடிட்டர் ஜெனரல் முதலிய நியமனங்கள் செய்வது.

மேலே யுள்ளவைகளில் ஜனாதிபதி யுக்தானுசாரமாகச் செய்யக்கூடியது 5-வது அதிகாரம் மட்டும்தான். அதாவது சட்டசபையைக் கலைப்பது ஒன்றில்தான், சில அபூர்வமான சந்தர்ப்பங்களில் மட்டும் ஜனாதிபதி யுக்தானுசாரமாக காரியம் செய்ய முடியும். மந்திரிகளை நியமிப்பதில் சட்டசபையின் கட்சி நிலைமையை அலட்சியம் செய்ய முடியாது. மற்றெல்லா விஷயங்களிலும் ஜனாதிபதியின் அதிகாரம் என்பது மந்திரிகளின் அதிகாரமே.

## ஜனாதிபதி வெறும் பொம்மையல்ல

அப்படியானால், ஜனாதிபதி வெறும் பொம்மையா? இல்லை. அவர் நாட்டுக்கு முக்கியமான சேவை செய்யமுடியும். பிரிட்டிஷ் மன்னரின் நிலைமைபற்றி ஸ்ரீ பேக்ஹாட் என்ற பெரிய ஆசிரியர் கூறியிருப்பது ஜனநாயக ராஜாங்கத் தலைவரின் உரிமையைச் சரியாகச் சித்திரிக்கிறது:—

"நம் நாட்டில் இருப்பதுபோன்ற முடியரசில் மன்னருக்கு மூன்று உரிமைகள் உண்டு:

(1) தம்மிடம் மந்திரிகள் கலந்து பேச வேண்டுமென்று கோரும் உரிமை.

(2) மந்திரிகள் நல்ல காரியம் செய்யும்போது ஊக்கப்படுத்தும் உரிமை.

(3) தவறு செய்யும்போது எச்சரிக்கும் உரிமை."

எல்லா நிர்வாக அதிகாரமும் உண்மையில் மந்திரிகளிடமே

இருப்பினும், மேலேயுள்ள 3 நோக்கங்களுடன், மந்திரி சபைக்கும் ஜனாதிபதிக்குமுள்ள உறவுகள் பற்றி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சில ஏற்பாடுகள் சொல்லப்படுகின்றன.

## ஜனாதிபதியும் மந்திரி சபையும்

"ஜனாதிபதி தம் நிர்வாக அலுவல்களைச் செய்வதில் அவருக்கு உதவி செய்யவும் யோசனை கூறவும் ஒரு மந்திரி சபை இருக்கவேண்டும்" என்று சட்டம் கூறுகிறது. ஆயினும், உண்மையில் நிர்வாகம் மந்திரி சபையிடமே யிருக்குமாதலின், ஜனாதிபதியின் பேரால் என்னதான் நடக்கிறது என்பது அவருக்குத் தெரியவேண்டாமா?

ஆகையால், பிரதம மந்திரிமீது பின்வரும் கடமைகள் சட்டத்தின் மூலம் சுமத்தப் படுகின்றன:

(1) யூனியன் சர்க்காரின் நிர்வாகத்தைப்பற்றியும், சட்டமாக இயற்ற விரும்பும் மசோதாப் பிரேரணைகள்பற்றியும் மந்திரி சபையின் முடிவுகளை ஜனாதிபதிக்குப் பிரதமர் அறிவிக்க வேண்டும்.

(2) சர்க்காரின் நிர்வாகம்பற்றியும் சட்டமியற்றுவது சம்பந்தமான பிரேரணைகள் பற்றியும் ஜனாதிபதி ஏதேனும் தகவல் கோரினால் பிரதமர் கொடுக்கவேண்டும்.

(3) மந்திரி சபையின் (கூட்டு) ஆலோசனைக்கு வராமலே ஏதேனும் ஒரு மந்திரி தனியாக முடிவு செய்துள்ள எந்தக் காரியத்தையும், முழு மந்திரிசபையும் சேர்ந்து ஆலோசனை செய்ய வேண்டுமென்று ஜனாதிபதி * கோரினால், புனராலோசனைக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

---

* ஜனாதிபதி என்பதற்குப் பதில் கவர்னர் ராஜப்பிரமுகர் என்ற வார்த்தையுடன் மாகாணங்கள், சமஸ்தானங்களிலும் இதே உறவு இருக்கும்.

**நிர்வாகத் தலைவர் :**
**படைகளின் தலைமையதிகாரி**

"இந்திய யூனியனின் நிர்வாக அதிகாரம் முழுவதுக்கும் ஜனாதிபதியே உறைவிடமாவார். அந்த நிர்வாக அதிகாரத்தை அவர் நேர்முகமாகவோ, தமக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகள் மூலமோ, இந்த அரசியலமைப்பின்படி பிரயோகிக்க வேண்டும்.

"தேசத்தின் பாதுகாப்புப் படைகளின் (ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றின்) தலைமையதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கும். அந்த அதிகாரத்தை அவர் எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பது சட்டத்தின்மூலம் ஒழுங்குபடுத்தப்படும்" என்று சட்டத்தில் சொல்லப்படுகிறது.

**கவர்னர்கள், ராஜப்பிரமுகர்கள்**

இந்திய அரசியலில் ஜனாதிபதியின் அதிகாரத்தைப்பற்றிச் சொன்னது முழுதும் கவர்னரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ராஜாங்க அதிகாரத்துக்குப் பொருந்தும்.

மாகாணங்களின் அதிகார எல்லைக்குட்பட்டு அவர் ராஜாங்கத் தலைவராக இருப்பார்.

ஓரே ஒரு வித்தியாசம்தான். அன்றாட நிர்வாக விஷயத்தில் அவர் மந்திரி சபையின் தீர்ப்புப்படியே நடப்பார். ஆனால், அந்த சமயத்தில் அகில இந்திய பொதுத் தொடர்புக்காக, சில சந்தர்ப்பங்களில் அவர் ஜனாதிபதியை அனுசரித்து நடக்க வேண்டியிருக்கும்.

ராஜப்பிரமுகர்களின் நிலைமை கவர்னர்களின் நிலைமையைப் போன்றதே.

பதினைந்தாவது அத்தியாயம்

# சுதந்திர ராஜ்யங்களின் யூனியன்
# - சமஷ்டி அமைப்பு -

சட்டசபைகள், மேல் சபைக்கும் கீழ் சபைக்குமுள்ள உறவு; மந்திரிசபை யமைப்பு, ராஜாங்கத் தலைமை ஆகியவற்றைப்பற்றி ஆராய்ந்தபோதெல்லாம் இந்த ஒவ்வொரு இனத்திலும் மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலுமுள்ள அமைப்பு என்ன என்பது சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால், மாகாண சர்க்காரின் அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதை வாசகர்கள் ஓரளவு தெரிந்துகொண்டிருக்கக்கூடும்.

## சுதந்திரமும் ஐக்கியமும்

இரண்டு முக்கியமான தத்துவங்கள் மூன்றாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன :

(1) நமது புது அரசியலில் மாகாண சர்க்கார்களும், சமஸ்தான சர்க்கார்களும் இந்திய யூனியன் சர்க்காரின் கிளை ஸ்தாபனங்களல்ல அதாவது மாகாணங்கள் பல விஷயங்களை இந்திய யூனியன் ஆதிக்கத்தில் விடாமல் தாமே சுதந்திரமாகச் சட்டமியற்றி நிர்வகித்துக் கொள்ள முடியும்.

(2) தமது எல்லைக்குள் பல விஷயங்களில் சுதந்திரம் வைத்துக்கொண்டு, தேசம முழுதுக்கும் பொதுவாக நிர்வகிப்பதே நல்லது என்று கருதப்படும் விஷயங்களில் மட்டும் அதிகாரமுள்ளதான ஓர் இந்திய யூனியன் சர்க்காரில் மாகாணங்கள் கூட்டுறவாக ஒன்று சேருகின்றன.

இப்படிப்பட்ட ஓர் அமைப்புக்கு சமஷ்டியென்று பெயர்.

## யூனிட்டரி அல்ல; சமஷ்டி

இந்திய அரசியல் சமஷ்டி முறையில் அமைவது யூனிட்டரி முறையில் அமைந்ததல்ல. யூனிட்டரி என்ற சொல்லுக்கு என்ன தமிழ்ச் சொல்லை உபயோகிக்கலாம் என்ற பிரச்னையில் இறங்காமல் யூனிட்டரி சர்க்கார் என்றால் என்ன என்பதைக் கவனிப்போம்.

இந்திய அரசியலை ஒரு யூனிட்டரி சர்க்காராக அமைத்தால், எல்லா அதிகாரங்களும் இந்திய யூனியன் சர்க்காரிலேயே குவிக்கப்பட்டு, பிறகு அந்த இந்திய யூனியன் சர்க்கார் தன்னிடமுள்ள சில அதிகாரங்களை மட்டும் மாகாண சர்க்கார்களிடம் விட்டு வைத்து, கட்டளையிடும் உரிமையையும் கண்காணிப்பு உரிமையையும் வைத்துக்கொள்ளும். ஒவ்வொரு விஷயத்திலும் மாகாண சர்க்கார்கள் மத்திய சர்க்காரின் கட்டளைப்படியே நிர்வகிக்கவேண்டியிருக்கும். எல்லா விஷயங்களிலும் இந்திய யூனியன் சர்க்கார் சட்டமியற்ற முடியும் என்ற நிலைமை இருக்கும்.

இந்த யூனிட்டரி முறைதான் பிரிட்டனிலும் பிரான்ஸிலும் இருப்பது.

உதாரணமாக, பிரிட்டனில் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் மொழியிலும், நாகரிகத்திலும், பழக்க வழக்கங்களிலும் பரஸ்பரம் ஓரளவு மாறுபாடுடைய பிரதேசங்கள். ஆயினும், பிரிட்டிஷ் பார்லிமென்ட் இந்த மூன்று பிரதேசங்களையும் பற்றி எல்லா விஷயங்களிலும் சட்டம் இயற்ற முடியும். இப்படிப்பட்ட அமைப்புக்கு யூனிட்டரி முறை என்று பெயர்.

சமஷ்டி தத்துவத்துக்கும் யூனிட்டரி தத்துவத்துக்குமுள்ள

வேற்றுமை, ஒற்றுமை என்ற சொல்லுக்கும் ஒருமை என்ற சொல்லுக்குமுள்ள வேற்றுமை போன்றது

ஆகையால், யூனிட்டரி சர்க்கார் என்பதை ஒருமை சர்க்கார் என்றும், சமஷ்டி சர்க்காரைக் கூட்டுறவு சர்க்கார் என்றும் சொல்லலாம்.

இந்திய சர்க்கார் ஒருமை சர்க்காரல்ல. 'ஒற்றுமை சர்க்கார்' என்பதை, அந்தச் சர்க்காருக்குத் தரப்பட்டுள்ள பெயரிலிருந்தே யாவரும் புரிந்துகொள்ளலாம்.

நமது இந்திய யூனியன் சர்க்காரின் காரணப் பெயர் 'யூனியன் ஆப் ஸ்டேட்ஸ்' அதாவது ராஜ்யங்களின் இணைப்பு. 'ராஜ்யங்களின்' என்ற பன்மையை உபயோகித்திருப்பது, ஒவ்வொரு ராஜ்யத்தின் தனி நிலைமையை எடுத்துக் காட்டுகிறது.

மாகாணங்கள் 'சமஸ்தானங்கள்' என்ற பெயரையே மாற்றி எல்லாவற்றுக்கும் ஸ்டேட்ஸ் (ராஜ்யங்கள்) என்றே பெயரிடப்படுகிறதுப், இவை மத்திய சர்க்காரின் கிளை ஸ்தாபனங்கள் அல்ல என்பதைக் காட்டுகிறது.

இவ்விஷயத்தில் நாம் அமெரிக்கா, ஆஸ்டிரேலியா, போன்ற விசாலமான நிலப்பரப்புள்ள நாடுகளைப் பின்பற்றியிருக்கிறோம். அங்கெல்லாம் இருப்பது சமஷ்டி அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், அங்கு 48 மாகாணங்களும் 48 ராஜ்யங்கள். அமெரிக்க சர்க்கார் இந்த 48 ராஜ்யங்களின் ஐக்கியம்.

இந்தியாவிலுள்ள 9 மாகாணங்களும் 9 சமஸ்தானங்களும் அரசியலமைப்பில் 18 தனித்தனி ராஜ்யங்கள்.

### அதிகாரப் பங்கீட்டின் நோக்கம்

பொதுஜனங்களின் நன்மைக்காக, சர்க்கார் மூலம் நடக்க வேண்டிய காரியங்களை, அதனதன் தன்மைக்குத் தக்கபடி

(1) சிலவற்றை இந்திய யூனியன் சர்க்காரிடமும், (2) சில வற்றை மாகாண சர்க்கார்கள் இந்திய யூனியன் சர்க்கார்கள் இரண்டுக்கும் பொதுவாகவும். (3) சிலவற்றை மாகாணங்களிடமும் அரசியல் நிர்ணய சபை பங்கிட்டிருக்கிறது.

தேசப்பாதுகாப்பு, வெளிநாட்டு வர்த்தகம், ரயில் போக்குவரத்து, தபால் முதலியன போன்றவற்றை இந்தியா முழுவதும் சேர்ந்துதான் நிர்வகிக்க முடியும். இல்லாவிடில் திறமையாக நிர்வகிக்க முடியாது. பொதுஜன ஆரோக்கியம், வைத்தியம், கல்வி, கிராம முன்னேற்றம், விவசாயம், நீர்ப்பாசனம் முதலியவற்றைத் தனித்தனியாக நிர்வகித்துக்கொள்வதே நலம். சிலவற்றை மாகாணங்களே செய்துகொள்ளலாமென்றாலும் எல்லா மாகாணங்களும் ஒரே கொள்கையை அனுஷ்டிப்பது நலம்.

உதாரணமாக ஏதேனும் தொத்து நோய் பரவும்போது சென்னை மாகாணம் மட்டும் சட்டம் இயற்றி, திருவாங்கூரில் சட்டமில்லாவிட்டால் சென்னையில் இயற்றிய சட்டம் கோரிய பலனைத் தராது. ஆகையால் இதுபோன்ற சில விஷயங்களில் மாகாணங்கள் இந்திய யூனியன் சர்க்கார் இரண்டும் சட்டமியற்ற வசதியிருப்பது நல்லது.

## மூன்று ஜாபிதாக்கள்

இதை உத்தேசித்து சர்க்கார் மூலம் நடக்கவேண்டிய காரியங்களின் மொத்த ஜாபிதா ஒன்றைத் தயாரித்து, அதை மூன்று ஜாபிதாவாக பிரித்திருக்கிறார்கள்.

(1) இந்திய யூனியன் சர்க்கார் சட்டமியற்றி நிர்வகிக்கக்கூடிய விஷய ஜாபிதா.

(2) இந்திய யூனியன் சர்க்காரும் மாகாண சர்க்காரும் சட்டமியற்றி நிர்வகிக்கக்கூடிய விஷய ஜாபிதா.

(3) மாகாணங்கள் மட்டும் சட்டமியற்றக்கூடிய விஷய ஜாபிதா.

இவற்றை முறையே (1) யூனியன் ஜாபிதா (2) பொது ஜாபிதா (3) மாகாண ஜாபிதா அல்லது 'ராஜ்யங்கள் ஜாபிதா' என்று சொல்லலாம். 'ராஜ்யங்கள் ஜாபிதா' என்பதுதான் சட்டத்திலுள்ள வாசகம்.

இம்மூன்றில் பொது ஜாபிதாவையும், மாகாண ஜாபிதாவையும் இங்கு ஆராயவோம். (ஜாபிதா 127-பக்கம்)

இவ்விரண்டிலும் மாகாணங்கள் சட்டமியற்ற முடியும். மாகாண ஜாபிதாவுக்கும் பொது ஜாபிதாவுக்குமுள்ள வித்தியாசம் ஒன்றே ஒன்றுதான். பொது ஜாபிதாவில் ஏதேனும் ஒன்றில் யூனியன் சட்டமன்றம் சட்டமியற்றினால், மாகாண சர்க்கார் அவ்விஷயத்தில் இயற்றும் சட்டம் யூனியன் சட்டத்துக்கு முரணபாடற்றே இருக்கவேண்டும்.

மாகாண ஜாபிதாவில் மாகாண சட்ட மன்றம்தான் சட்டமியற்றலாம் அதுபோலவே யூனியன் ஜாபிதாவில் யூனியன் மட்டுமே சட்டம் இயற்றலாம்.

முரண்படாதிருக்க

யூனியன் பார்லிமென்ட் தன் ஜாபிதாவுக்குட்பட்டு இயற்றிய சட்டமும் மாகாண சட்ட மன்றம் தனது ஜாபிதாவுக்குட்பட்டு இயற்றின சட்டமும் முரண்பட்டால் முரண்பாடுள்ள அளவுக்குமட்டும் மாகாணச் சட்டம் அடிபட்டு போகும். ஆனால் யூனியன் சர்க்கார் இயற்றிய சட்டம் அதன் ஜாபிதாவுக்குப் புறப்பானதாயின், மாகாண சட்டமே செல்லுபடியுள்ளதாகும்.

எந்த ஜாபிதாவிலுமே இல்லாததாக ஒரு புதிய விஷயம் ஏற்பட்டால் (அணுசக்தி போல) அது யூனியன் விஷயமாக மதிக்கப்படும்.

ஒரு விஷயம் மாகாண விஷயமாக இருந்தாலும், பார்லிமென்டின் மேல் சபையில் மொத்த அங்கத்தினரில் மூன்றிலிரண்டு பங்கினர் சேர்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அந்த

விஷயத்தில் இந்திய யூனியனே சட்டமியற்ற வேண்டுமென்று கோரினால், எவ்வளவு காலத்துக்கு அவ்வாறு சட்டமியற்ற வேண்டுமென்று கோருகிறார்களோ, அதை அனுசரித்து யூனியன் பார்லிமென்ட் சட்டமியற்றலாம். 'இப்படிப்பட்ட கோரிக்கைக்குப் பார்லிமென்டின் மேல் சபையில் மூன்றிலிரண்டு பேரது ஆதரவு வேண்டும்' என்று நிபந்தனை போட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. யூனியன் மேல் சபை உண்மையில் மாகாணக் கீழ் சபைகளின் பிரதிநிதி சபை. ஆகையால் பெருவாரியான மாகாணங்கள் விரும்பினாலொழிய, இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை நிறைவேறப் போவதில்லை. ஆகையால் மாகாணங்களின் விருப்பப்படி மாகாணங்களுக்கு உதவி செய்வதே இந்த விசேஷ ஏற்பாட்டின் நோக்கம்.

பொது விஷயங்களில் ஒரு மாகாணம் இயற்றும் சட்டம் இந்திய சட்டத்துக்கு முரண்பட்டதாக இருப்பினும், அந்த மாகாணச் சட்டம் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டால், முரண்பாடு முரண்பாடாக மதிக்கப்பட மாட்டாது மாகாணச் சட்டம் செல்லுபடியுள்ளதாகவே மதிக்கப்படும் என்று 254 (2) என்று ஒரு பிரிவில் சொல்லியிருக்கிறது.

இவ்வாறு ஓர் ஏற்பாடு இல்லையென்றால், ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெற வசதியில்லாத காரணத்தால் சில சட்டங்கள் கோர்ட்டில் செல்லுபடியற்றது என்று அடிபட்டுவிடும். ஆகையால் இந்த ஷரத்து, சிறிது சந்தேகாஸ்பதமான மாகாண மசோதாவுக்குச் சாதகமான ஒரு பாதுகாப்பேயாகும்.

## இரண்டு பாதுகாப்புக்கள்

யுத்தம், அல்லது யுத்த அபாயம், அல்லது பெரிய உள்நாட்டுக் கலகம் உண்டாகும் நெருக்கடி ஏற்பட்டால் ஜனாதிபதி பிரகடனம் வெளியிட்ட பிறகு, மாகாண விஷயங்களில் இந்திய யூனியன் சர்க்கார் தலையிட முடியும்.

யூனியன் ஜாபிதாவில் யூனியன் பார்லிமெண்ட் இயற்றும் சட்டம் மாகாணங்களில் அமலுக்கு வராமல் மாகாணங்கள் மூட டுக்கட்டை போடாமல் பாதுகாத்துக் கொள்ளவும் யூனியன் சர்க்காருக்கு உரிமையுண்டு.

மாகாண சுதந்திரம் பூர்ணமாக அங்கீகரிக்கப் படுகிறது. ஆனால், தத்தம் எல்லைக்குள் காரியம் செய்யும் போது மாகாணச் சட்டம் யூனியன் சட்டத்துக்கு முரணாக இருக்கக்கூடாது. யூனியன் சட்டங்கள் எல்லா இடங்களிலும் அமல் நடப்பதற்கு உதவி புரிவது மாகாணங்களின் கடமை. இதுதான் மாகாண சமஸ்தான சர்க்கார்களுக்கும் யூனியன் சர்க்காருக்கு மிடையே யுள்ள உறவு.

இதில் சில ஷரத்துக்களைப் படிப்பவர்கள், மாகாண சுதந்திரம் பாதிக்கப்படுவதாக தவறாக நினைப்பார்கள். ஆனால் மூரண்பாடுகள் பற்றிய இந்தப் பாதுகாப்புகள் எல்லா சமஷ்டியிலும் உண்டு. இந்தத் தத்துவத்துக்கு (Supremacy of Federal Law) சமஷ்டிச் சட்டத்தின் 'உயர்வு என்று பெயர்.

"(1) சட்டத்தில் தெளிவாக சமஷ்டி சர்க்காருக்கு என்று சொல்லப்படாத எல்லா அதிகாரங்களும், (2) ராஜ்யங்களுக்கும் இல்லையென்று மறுக்கப்படாத எல்லா அதிகாரங்களும் மாகாணங்களுக்கே" என்று கூறும் அமெரிக்க அரசியலமைப்பில்கூட சமஷ்டி, சர்க்கார் தன் ஜாபிதாவுக்குட்பட்டு இயற்றும் சட்டங்கள் மாகாணச் சட்டங்களை அடித்துவிட முடியும். அதுமட்டுமல்ல, சமஷ்டி சர்க்காரின் ஜாபிதாவில்இல்லாத ஒரு விஷயமாக இருந்தாலும், அந்த ஜாபிதாவிலுள்ள காரியங்களை நிறைவேற்றுவதற்குச் சமஷ்டி சர்க்கார் என்ன சட்டம் வேண்டுமானாலும் நிறைவேற்றலாம் என்று அமெரிக்காவில் ஏற்பட்டுவிட்டது இதற்கு (Implied Powers) ஊகிக்க வேண்டிய அதிகாரங்கள் என்பார்கள். உதாரணமாக, அமெரிக்காவில் சமஷ்டி ஜாபிதாவில் பாங்குகள் என்ற இனம் கிடையாது. ஆகையால் பாங்கிகள்பற்றி அமெரிக்க பார்லிமெண்ட் சட்டம் இயற்றியபோது கோர்ட்டில் வழக்கு வந்தது. ஆனல் நாணயச்

செலாவணி என்ற இனம் சமஷ்டி ஜாபிதாவில் இருப்பதால் பாங்குகள்பற்றியும் அதிகாரம் இருப்பதாக 'ஊகிக்க வேண்டும்' என்று கோர்ட் தீர்ப்பளித்தது.

அதுபோலவே கல்வி, சுகாதாரம் என்ற இனங்கள் அந்த சமஷ்டி ஜாபிதாவிலில்லை. ஆனால் (General Welfare) மக்களின் க்ஷேமத்துக்குச் சமஷ்டி சர்க்கார் ஏற்பாடு செய்யலாம் என்று சட்டம் இருப்பதால் கல்விக்குச் சமஷ்டி நிதியிலிருந்து பணம் செலவிட முடிகிறது.

இந்தியச் சட்டத்தின் வாசகத்துக்கும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலியவற்றின் சமஷ்டிச் சட்டத்துக்கும் வித்தியாசம் இருந்தாலும் காரியார்த்தத்தில் அந்தச் சமஷ்டிகளில் மாகாணங்கள் இன்று அனுபவிக்கும் சுதந்திரத்தை விட, நம் புதிய அரசியலில் மாகாணங்களின் நிலைமை எவ்விதத்திலும் குறைந்ததல்ல.

இந்திய சமஷ்டியே சிதைந்து, மாகாணங்கள் ஆப்கானிஸ்தானைப்போல, அல்லது பாகிஸ்தானைப் போல ஆகவேண்டும் என்று எண்ணுபவர்கள்தான், புதிய அரசியலில் மாகாண சுதந்திரம் இல்லையென்று சொல்ல முடியும். இந்தியா ஒரே தேசமாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டால், நியாயமான மாகாண சுதந்திரத்துக்கும் முற்போக்குக்கு உதவியான கூட்டுறவுக்கும் புதிய அரசியலில் ஏற்பாடு இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

# ராஜ்யங்கள் சட்டமியற்றி நிர்வகிக்கும் விஷய ஜாபிதா

இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்களில் மாகாணங்களும், சமஸ்தானங்களும் மட்டுமே சட்டமியற்றி நிர்வகிக்கலாம். (1935 ம் வருஷத்து சமஷ்டித் திட்டத்திலுள்ள ஜாபிதாவில் இருந்த பல இனங்கள் இந்த ஜாபிதாவில் இருக்கின்றன. பழைய ஜாபிதாவிலுள்ள எண்களை ஒவ்வொரு இனத்தின் இறுதியிலும் குறிப்பிட்டிருக்கிறோம்.)

(1) பொதுஜன அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது (யூனியன் கடற்படை, ராணுவப் படை, விமானப் படை முதலியவற்றைச் சாதாரண நிர்வாகத்துக்குதவியாக உபயோகிப்பது நீங்கலாக) —1

(2) போலீஸ், ரயில்வே போலீஸ், கிராமப் போலீஸ் உள்பட —3

(3) நீதி பரிபாலனம்—இந்திய யூனியன் ஸுப்ரீம் கோர்ட், ஹைக்கோர்ட் நீங்கலாக மற்றக் கோர்ட்டுகளை ஸ்தாபிப்பதும் அமைப்பை நிர்ணயிப்பதும், ஹைக்கோர்ட்டின் அதிகாரிகளும் ஊழியர்களும், மேலவாரக் கோர்ட்டுகள், ரெவின்யூ கோர்ட்டுகள், சுப்ரீம் கோர்ட்டைத் தவிர மற்ற கோர்ட்டுகளில் கட்டணம் வசூலிப்பது —1, 2

(4) சிறைச்சாலைகள், இளங் குற்றவாளிகள், சீர்திருத்தப்பாடசாலைகள், கைதிகள்; வெளி மாகாணத்துச் சிறைகளை உபயோகிப்பதற்கு அந்த மாகாணங்களுடன் வசதிக்கு ஒப்பந்த ஏற்பாடுகள் செய்துகொள்வது —4.

(5) நகரசபைகள், ஜில்லா போர்டுகள், அபிவிருத்தி டிரஸ்டுகள், சுரங்கக் குடியேற்ற ஸ்தாபனங்கள், ஸ்தல சுயாட்சிக்காக ஏற்படுத்தும் மற்ற ஸ்தல ஸ்தாபனங்கள், கிராம நிர்வாக அமைப்புகள் —13.

(6) பொது சுகாதாரம், ஆரோக்கியம், ஆஸ்பத்திரிகள், மருந்து வினியோகக்

கடைகள் (டிஸ்பென்ஸரிகள்) —14.

(7) க்ஷேத்திர யாத்திரை, வெளிநாட்டுஸ்தல யாத்திரைகள் தவிர —5.

(8) மயக்கம் தரும் திராவகங்களின் (குடி வகைகள்) உற்பத்தி, தயாரிப்பு, போக்குவரத்து, கையிருப்பு வைத்தல், வாங்குதல், விற்றல் —31.

(9) உடல் காயத்தால் வலிமையற்றவர்களுக்கும், எந்த வேலைக்கும் லாயக்கற்றவர்களுக்கும் கஷ்டநிவாரண உதவி —32.

(10) இடுகாடுகள், சுடுகாடுகள் —16.

(11) கல்வி—சர்வகலாசாலை கல்வியுட்பட (ஆனால் கப்பலோட்டும் கல்வி சில உயர்தர தொழில் நுட்ப விஞ்ஞானக் கல்லூரிகள் காசி சர்வகலாசாலை, அலிகார் சர்வகலாசாலை, டில்லி சர்வகலாசாலை இன்னும் யூனியன் பார்லிமென்டினால் தேசம் முழுதும் முக்கியமாக மதிக்கத்தக்கதெனக் கருதும் ஸ்தாபனங்கள் இதில் சேராது) —17.

(12) புத்தகசாலைகள், அபூர்வப் பொருள் காட்சிகள் (மியூஸியம்) இன்னும் இவை போன்ற மாகாண சர்க்காரின் ஆதிக்கத்திலோ, பணச் செலவிலோ நடந்து வரும் ஸ்தாபனங்கள், பண்டைக்கால சரித்திர ஞாபகச் சின்னங்கள் (யூனியன் பார்லிமென்டின் ஆதிக்கத்துக்குக் கொண்டுவரப்படாதவை) —10

(13) ரஸ்தாக்கள், சாலைகள், பாலங்கள், ஆற்றைக் கடக்கும் படகு போக்குவரத்து வசதி, (இவற்றுள் அகில இந்திய சாதனங்களாக மதிக்கப்படுபவைக்கு விதிவிலக்கு), நகரசபைகளின் டிராம் வண்டிப் போக்குவரத்து, உள்நாட்டு கால்வாய் ஆற்றுப் படகுப்போக்குவரத்து. யந்திரக் கருவியில்லாத வண்டிகள் —16

(14) விவசாயம், விவசாயக் கல்வி, விவசாய ஆராய்ச்சி, பூச்சி நோய்த்தடுப்பு —20

(15) ஆடு, மாடு முதலியவற்றைப் பராமரித்து, அச்செல்வம் அழிந்து போகாமல் பாதுகாத்து, அவற்றின் தரம் உயரும்படி செய்தல், மிருக நோய்களைத் தடுப்பது, மிருக வைத்தியப் பயிற்சியும் வைத்தியமும் —20

(16) மாட்டுப்பவுண்டுகள் (அடைப்புக் கொட்டகைகள்), மாடுகள் அத்துமீறி பிறர் நிலத்தில் பிரவேசிப்பதைத் தடுத்தல் —20

(17) ஜல வசதி, குடி தண்ணீர், விவசாய நீர்ப்பாசன வசதிகள், கால்வாய்கள், வடிகால்கள், கரைப் பிணைப்புகள், நீர்த்தேக்கம், நீர் வீழ்ச்சிச் சக்தி உற்பத்தி (இந்திய யூனியன் ஆதிக்கத்தில் வருபவை தவிர) —19.

(18) நிலம்; நில உடைமை உரிமைகள்; நில அனுபவ உரிமைகள்; நிலச்சுவான்—குடியானவன் உறவு; மேல் வார வசூல்; நில வில்லங்கம்; பரிவர்த்தனை; நில அபிவிருத்தி; விவசாயக் கடன்கள்; நிலக் குடியேற்றம்—21.

(19) காடுகள். —22.

(20) காட்டு மிருகங்கள்; பறவைகள். —25.

(21) மீன் பிடித்தல் —24.

(22) மைனர் கார்டியன் கோர்ட்டுகள் (கோர்ட் ஆப் வார்ட்ஸ்). வில்லங்கப்பட்ட (ஜமீன்) எஸ்டேட்டுகள். —21

(23) சுரங்கங்களையும் சுரங்க அபிவிருத்தியையும் ஒழுங்குபடுத்துவது. (யூனியன் நிர்வாகத்துக் குட்பட்டவை தவிர) —23

(24) தொழில்கள் - (யூனியன் பார்லிமென்டினால் அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்ததென சட்டத்தின் மூலம் அறிவிக்கப்படாதவை. —29

(25) காஸ் எண்ணெய்—ஆவி. காஸ் தொழிற்சாலைகள் —26

(26) ஒருமாகாண எல்லைக்குட்பட்ட வாங்குதல்—விற்றல் வர்த்தகம், அகில இந்திய உற்பத்திப் பொருளென யூனியன் பார்லிமென்ட் அறிவிப்பது தவிர மற்றெல்லாப் பொருள்களும். —27

(27) பொருளுற்பத்தி, சேகரிப்பு விநியோகம் (மேலே குறிப்பிட்ட விதிவிலக்குடன்). —29

(28) சந்தைகள்; தாவணிகள்

(29) முகத்தல் அளவை; நிறுத்தல் அளவை 'ஸ்டாண்டர்ட்' ஏற்படுத்துவது நீங்கலாக.

(30) லேவாதேவி; லேவாதேவிக்காரர், விவசாயக்கடன் நிவாரணம்.

(31) சத்திரங்கள், சாவடிகள் அவற்றை நடத்துவோர். —28

(32) சட்டத்தின்படி சில ஸ்தாபனங்களை ரெஜிஸ்டர் செய்து அமைத்தல். அவற்றை ஒழுங்குபடுத்துதல்; செயலற்றுப் போகும்போது அவற்றை முடிவுக்குக் கொண்டு வருதல்: சர்வகலாசாலைகள் ரெஜிஸ்டர் செய்யப்படாத வர்த்தக, இலக்கிய, விஞ்ஞான, மத சம்பந்தமான சங்கங்கள்; கூட்டுறவு சங்கங்கள். —33

(33) நாடகக் கொட்டகைகள்; நாடகக் காட்சிகள், (பிலிம்களை காட்சிக்கு அனுமதிப்பது நீங்கலாக) ஸினிமாக்கள்; வேடிக்கை விளையாட்டுகள், பொழுதுபோக்குகள் —35

(34) பந்தயம் சூதாட்டம். —36

(35) சர்க்காருக்குச் சொந்தமான அல்லது சர்க்காரிடம் உள்ள கட்டிடங்கள்,

நிலங்கள், வேறு அமைப்புகள் —8

(36) சொத்துக்கள் சர்க்கார் ஆர்ஜிதம் செய்வது (அகதி சொத்து தவிர).

(37) மாகாண சமஸ்தான சட்டசபைத் தேர்தல்கள். (யூனியன் பார்லிமெண்டின் சட்டங்களுக்குட்பட்டு)

(38 மாகாண சமஸ்தான சட்டசபை அங்கத்தினர்கள் மேல்சபை சபாநாயகர், உதவி சபாநாயகர், மேல்சபை அக்ராசனர், உப அக்ராசனர் ஆகியோரின் சம்பளம், படி முதலியவை —12

(39) சட்டசபைகளின் அங்கத்தினர்களுக்கும். சட்டசபைக் கமிட்டிகளுக்கும் அதிகாரங்கள், சலுகைகள், உரிமைகள், அவர்கள் அங்கத்தினர் பதவி காரணமாகச் செய்த காரியங்களுக்காக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் செய்வது.—12.

(40) மந்திரிகளின் சம்பளம்; படி —12

(41) மாகாண (சமஸ்தான) உத்யோகங்கள்; உத்யோக நியமனக் கமிஷன்.—6

(42) சர்க்கார் பென்ஷன்கள் (அதாவது சர்க்காரின் கஜானாவிலிருந்து) அல்லது பொது நிதியிலிருந்து செலுத்த வேண்டிய பென்ஷன்கள் —7

(43) மாகாண சமஸ்தான சர்க்காரின் பொதுக்கடன் -5

(44) புதையல்கள். —21

(45) நிலவரி; நிலவரி விதிப்பது; வசூலிப்பது; நிலம் பற்றிய தஸ்தாவேஜுகள்; உரிமைச் சிட்டைகள். ஸர்வே; நிலவரி வருமானத்தின் மீது விலங்கப் பொறுப்பு ஏற்படுத்துவது. —39

(46) விவசாய வருமானத்தின் மீது வரி. —41

(47) நிலச் சொத்து வாரிசு சம்பந்தமான வரிகள். —43

(48) நில சொத்து பற்றிய எஸ்டேட் வரி.

(49) நிலங்கள் கட்டிடங்கள் மீது வரி. —42

(50) சுரங்க உரிமைகள் மீது வரி (தேசத்தின் சுரங்கச் செல்வம் பற்றி யூனியன் பார்லிமெண்ட் செய்யும் சட்டத்துக்குட்பட்டு). —44

(51) மாகாணத்துக்குள் உற்பத்தியாகிற மற்ற உபயோகத்துக்கான சாராயப் பொருள்கள் அபினி, கஞ்சா முதலிய லாகிரிப் பொருள்கள் மீதும் வரி விதிப்பு; மாகாணத்துக்கு வெளியேயிருந்து வரக்கூடிய பொருள்கள் மீது மாகாண வரிக்கு நேர்போகாத வரிகள் (மருந்து அல்லது வாசனைத் திரவியங்கள் நீங்கலாக). —40

(52) ஏதேனும் ஒரு ஊரில் அல்லது சிறு பிரதேசத்தின் உபயோகத்துக்கோ, உள்ளூர் விற்பனைக்கோ, பொருள்கள் உள்ளே வரும்போது அவற்றின் மீது வரி விதிப்பது —49

(53) மின்சார சக்தி உபயோகத்தின் மீதும், விற்பனை மீதும் வரி.

(54) விற்பனை வரி; பத்திரிகைகள் தவிர மற்ற விற்பனைகள் மீது. —48

(55) விளம்பர வரி: பத்திரிகைகளில் பிரசுரமாகும் விளம்பரங்கள் நீங்கலாக.

(56) ரஸ்தாக்கள், சாலைகள், அல்லது உள்நாட்டுக் கால்வாய்கள் மூலம் கொண்டு போகப்படும் பொருள்கள் மீது வரி—52.

(57) யந்திரசாதன உதவியுடனோ யந்திரமில்லாமலோ இயங்கும் வாகனங்கள் வண்டிகள், டிராம் வண்டிகள் உள்பட.

(58) மிருகங்கள் மீதும், படகுகள் மீதும் வரி —47.

(59) டோல் வரிகள் —53

(60) உத்யோகங்கள். வக்கீல், டாக்டர் தொழில்கள், வர்த்தகர், சம்பள வேலை முதலியவற்றின் மீது வரி—46

(61) தலைக்கட்டு வரிகள் —45.

(62) ஆடம்பரப் பொருள்கள் மீது வரி, தமாஷா, கேரப் போக்கு வரிகள், பந்தயம் சூதாட்டம் மீது வரிகள் —50.

(63) ஸ்டாம்புவரி சம்பந்தமாக யூனியன் விஷயஜாபிதா திட்டத்திலுள்ளதைக் தவிர மற்ற ஸ்டாம்பு விகிதங்கள்.

(64) இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் பற்றிய சட்டத்துக்கெதிராக நடைபெறும் குற்றங்கள்.

(65) சுப்ரீம் கோர்ட் தவிர மற்ற கோர்ட்டுகளுக்கு இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்களில் அதிகாரம் கொடுப்பது.

(66) கோர்ட் பீஸ் கட்டணம் தவிர, இந்த ஜாபிதாவிலுள்ள எல்லா விஷயங்கள் சம்பந்தமாகவும் பீஸ் கட்டணங்களை விதிப்பது.

## பொது விஷய ஜாபிதா

(1) கிரிமினல் சட்டம். இந்தியன் பீனல் கோடிலுள்ள எல்லா சட்டங்களும். யூனியன் ஜாபிதாவிலும், மாகாண ஜாபிதாவிலு முள்ளவை நீங்கலாக. ஆனால் ராணுவம் கடற்படை, விமானப் படையை இதற்கு உபயோகிக்கும் உரிமை இந்த ஜாபிதாவில் சேர்ந்ததல்ல —1

(2) கிரிமினல் வழக்குகளின் நடைமுறை கிரிமினல் பிரொஸீஜர் கோடில் இப்போதுள்ள எல்லா விஷயங்களும். —2

(3) பொதுஜன அமைதியையும், பந்தோபஸ்தையும் பாதுகாக்கவும் பொது ஜன உபயோகத்துக்கான சாமான்களும் ஜல சப்ளை சாக்கடை போன்ற வசதிகளும் தடைபடாமல் பாதுகாப்பதற்காகவும் சிலரைக் காவலில் வைப்பது. மாகாண ஜாபிதாவிலுள்ள 1-வது இனம்.

(4) மேலே பிரஸ்தாபிக்க காவல் கைதிகளை வெளி மாகாண சிறைக்கு மாற்றுவதற்கான ஏற்பாடு —3

(5) விவாகம், விவாகரத்து

மைனர்கள் பராமரிப்பு, ஸ்வீகாரம், உயில் (மரண சாஸனம்) வாரிஸ், வாரிஸ் அற்ற சொத்துகள், அவிபக்த குடும்பம், அதில் பாகப் பிரிவினை —6, 7.

(6) நிலசொத்து தவிர மற்ற சொத்துக்களின் விற்பனை, பரிவர்த்தனை தஸ்தாவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வது —8

(7) காண்டிராக்டுகள் பாகப்பிரிவினை, ஏஜென்ஸி, சாமான்கள் போக்குவரத்துபற்றிய காண்டிராக்டுகள். விவசாய நிலம் பற்றிய காண்டிராக்டுகள் நீங்கலாக. —10.

(8) தீங்கிழைப்பு பற்றிய வழக்குகள் —14.

(9) இன்ஸால்வென்ஸி-12.

(10) டிரஸ்டுகள்: டிரஸ்டிகள். —9

(11) சர்க்கார் நியமிக்கும் டிரஸ்டிகள், அட்மினிஸ்டிரேட்டர்கள் (டிரஸ்ட் நிர்வாகிகள்) —12

(12) சாட்சியம், பிரமாணம் சட்டங்களையும் சில தஸ்தாவேஜுகளையும் ருசுச் செய்ய வேண்டாத சாட்சியங்களாக அங்கீகரிப்பது. —5

(13) ஸிவில் வழக்குகளின் நடைமுறை, (ஸிவில் புரொஸீஜர்கோட்)காலாவதி நிர்ணயம் மத்யஸ்த தீர்ப்பு—(ஆர்பிட்ரேஷன்) —4

(14) கோர்ட் அவமதிப்பு, சுப்ரீம் கோர்ட் நீங்கலாக.

(15) ஸ்திரமான பிழைப்பில்லாமல் ஊர் சுற்றுவோர், நாடோடிக்கூட்டங்கள் —28.

(16) பைத்தியக்காரர்; மூளைப்பலவீனம்: அது பற்றிய சிகிச்சை வசதிகள்—18

(17) மிருகங்கள் இம்சிக்கப்படாமல் தடுப்பது.

(18) உணவுப்பொருள்களிலும் இதரபொருள்களிலும் கலப்படம்; பழைய மாகாண ஜாபிதாவில். —30.

(19) அபினி பற்றிய அகில இந்திய சட்டத்துக்குட்பட்டு விஷப் பொருள்கள், திராவகங்கள். —19.

(20) பொருளாதார சமூக திட்டங்கள்.

(21) வியாபாரம், தொழில்களில் ஏகபோக ஸ்தாபனங்கள்.

(22) தொழிற் சங்கங்கள்; தொழில் தகராறுகள். —29.

(23) சமூக க்ஷேமப் பாதுகாப்பு இன்ஷுரன்ஸ்; வேலையில்லாக் கஷ்டம், சம்பளக் கூலி வேலைகள். —28.

(24) உழைப் பாளிகளின் உழைப்புநிலைமைகள், பிராவிடென்ட் சேமிப்பு நிதிகள்; நியமிப்போர் பொறுப்பு; தொழிலாளர் நஷ்ட ஈடு; வயோதிக, பலவீன, பிரசவ கால உதவிகள். —27.

(25) தொழிற்கல்வி, தொழிலாளர் பயிற்சி.

(26) வக்கீல், வைத்தியம் முதலிய உத்யோகத்தொழில்கள்.

(27) பாகிஸ்தான்பிரிவினை நிமித்தமாகஅகதியானவர்கள்

பராமரிப்பும் புனர் வாழ்விப்பும்.

(28) தர்மங்கள்; தர்மஸ்தாபனங்கள், மத, தர்ம சொத்துக்கள்; மத ஸ்தாபனங்கள் பழைய மாகாண ஜாபிதாவில் —34.

(29) ஒரு மாகாணத்திலோ சமஸ்தானத்திலோ உள்ள தொத்து நோய், அல்லது விவசாயப் பயிரை அழிக்கும் புழு பூச்சிகள் பரவாமல் தடுப்பது. —31.

(30) ஜனன மரணக் கணக்குகள் (பழைய மாகாண ஜாபிதாவில்). —14.

(31) சிறிய துறைமுகங்கள் பழைய மாகாண ஜாபிதாவில். —18.

(32) உள்நாட்டு ஆறு கால்வாய் யந்திர சாதன படகுப் போக்குவரத்து. —32.

(33) யூனியன் மேற் பார்வையில் கொண்டுவரப்படும் பொருள்களின் உற்பத்தி, வினியோகம், வியாபாரம்—மாகாண ஜாபிதாவில் 26, 27 உடன் சோத்துப் பார்க்கவும்.

(34) விலைக் கட்டுப்பாடு.

(35) யந்திரத்தில் இயங்கும் வண்டிகள், அவற்றின் வரிவிதிப்பு பற்றிய கொள்கைகள். — 25

(36) தொழிற்சாலைகள்-26

(37) பாயிலர்கள், நீராவி உற்பத்திப் பாத்திரங்கள்—21

(38) மின்சாரம்.

(39) பத்திரிகைகள்; புத்தகங்கள்; அச்சுக்கூடங்கள்.

(40) புதைந்தகட்டிடங்கள் ஞாபகச் சின்னங்கள் இருக்கும் இடங்கள்—அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்தவை யென யூனியன் பார்லிமென்ட் கருதுபவை நீங்கலாக.

(41) அகதி சொத்தென அறிவிக்கப்படும் சொத்துக்களின் நிர்வாகமும் வினியோகமும்,

(42) யூனியனோ மாகாணமோ, சமஸ்தானமோ ஆர்ஜிதம் செய்யும் சொத்துக்களுக்கு என்ன நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்ற கொள்கை: அந்த நஷ்ட ஈட்டைக் கொடுப்பது பற்றிய கொள்கை.

(43) மற்றொரு மாகாணத்துக்கு அல்லது சமஸ்தானத்திற்குச் சேரவேண்டிய வரியை வசூலித்துக் கொடுப்பது.

(44) ஸ்டாம்புக் கட்டணவிகிதங்கள், ஜுடிஷியல் கோர்ட் ஸ்டாம்புகள் தவிர மற்ற ஸ்டாம்புகட்டணங்கள்.

(45) இந்த ஜாபிதாவிலும் மாகாண ஜாபிதாவிலுமுள்ள விஷயங்கள் பற்றி புள்ளி விவரங்கள் திரட்டுவது.

(46) இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் பற்றி ஸுப்ரீம் கோர்ட் தவிர மற்றக் கோர்ட்டுகளுக்கு அதிகாரமளிப்பது.

(47) இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் சம்பந்தமான பீஸ், கட்டணங்கள்.

பதினாறாவது அத்தியாயம்

# யூனியன் நிர்வாக விஷயங்களும் வரி வினியோகமும்

பொதுஜன நன்மைக்காகவும், தேசப் பாதுகாப்புக்காகவும், முன்னேற்றத்துக்காகவும சர்க்கார் மூலம் நடைபெற வேண்டிய காரியங்களை, (1) யூனியன் ஜாபிதா, (2) ராஜ்யங்கள் (மாகாண சமஸ்தான) ஜாபிதா (3) பொது ஜாபிதா என்று மூன்று ஜாபிதாக்களாகப் பிரித்திருக்கிறார்கள் என்று முந்தின அத்தியாயத்தில் கூறினோம்.

'ராஜ்யங்கள் ஜாபிதாவும்', 'பொது ஜாபிதாவும்', முன் அத்தியாயத்தின் அனுபந்தமாகத் தரப்பட்டிருக்கின்றன. யூனியன் விஷய ஜாபிதா இந்த அத்தியாயத்தின் அனுபந்தமாகத் தரபபடுகிறது.

யூனியன் ஜாபிதாவைப் பற்றி இரண்டு விஷயங்கள் குறிப்பிடுவது அவசியம்.

(1) பல அயல்நாட்டுச் சமஷ்டிகளில் இருப்பதைவிட காரியாப்சத்தில் இந்திய யூனியன் நிர்வாகத்தில் விடும் விஷயங்கள் அதிகமில்லை.

(2) சில வரிகள் யூனியன் சர்க்காருக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ஒரு பகுதியை ராஜ்யங்களிடையே (மாகாண, சமஸ்தானங்களிடையே) பங்கிட்டுக் கொடுப்பதற்குச் அரசியலமைப்புச் சட்டத்தில் ஷரத்துக்கள் இருக்கின்றன. பல அயல்நாட்டுச் சமஷ்டிகளில் மாகாணங்களுக்கு வசதியான இபபடிப்பட்ட ஓர் ஏற்பாடு இல்லை.

(3) இரண்டு வருஷ அனுபவத்தைக் கொண்டு வரி

வருமான விநியோகம் பற்றி மாறுதல்கள் சிபார்சு செய்ய ஒரு நிதிக் கமிஷன் நியமிக்கப்படும். இந்தக் கமிஷன் பின்னர் 5 வருஷத்துக்கொரு தடவை சிபார்சுகள் செய்யும். அதன்படி யூனியன் சர்க்கார் மாறுதல் செய்து யூனியன் சட்ட மன்றத்துக்கு அறிவிக்கும். இது இந்திய அரசியலமைப்பில் நிதிப் பாகுபாடு பற்றி குறிப்பிடத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமான ஓர் அம்சம்.

யூனியன் நிர்வாக விஷயங்கள் பற்றிய ஜாபிதாவில் 97 விஷயங்கள் இருப்பதைப் பார்த்து சிலர் பிரமிப்படையலாம். உண்மையில் இதில் சில இனங்கள் ஒரே இனத்தின் பல பிரிவுகளேயாகும். உதாரணமாக, ஆஸ்திரேலியச் சட்டத்தில் தேசப் பாதுகாப்பு என்று சொல்லும் ஒரே ஓர் இனம் இந்த ஜாபிதாவில் (1 முதல் 9 வரை) 9 இனமாகத் தரப்படுகிறது. 1935-ம் வருஷத்துச் சட்டத்தில் வெளிநாட்டு உறவு என்று ஒரே இனமாகத் தரப்பட்டது. இந்த ஜாபிதாவில் (10 முதல் 15 வரை) 6 இனமாகத் தரப்படுகிறது.

## அமெரிக்க உதாரணம்

அமெரிக்க அரசியல் சட்டத்திலும் ஆஸ்திரேலியச் சட்டத்திலும் மாகாண ஜாபிதாக்களைப் பற்றியோ பிரஸ்தாபிக்காமல் சமஷ்டி ஜாபிதாவை மட்டும் சொல்கிறார்கள். அமெரிக்க சமஷ்டி ஜாபிதாவில்.—

(1) தேசப் பாதுகாப்புக்காகவும், பொதுஜன க்ஷேமத்துக்காகவும் ஏற்றுமதி வரி தவிர என்ன வரி வேண்டுமானாலும் விதிக்க அதிகாரமுண்டு—என்று சொல்லிவிட்டு,

(2) கடன் வாங்குதல்,

(3) வெளிநாடுகளுடன் வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல், மாகாணங்களிடையே (ராஜ்யங்களுக்கிடையே) வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துதல்.

(4) பிரஜா உரிமை, இன்ஸால்வென்ஸி,

(5) நாணயம் அச்சடித்தல், அதன் மதிப்பை நிர்ணயித்தல், வெளிநாட்டு நாணயம், கள்ள நாணயத் தடுப்பு,

(6) தபால் ஆபீஸ்கள், தபால் ரஸ்தாக்கள்,

(7) விஞ்ஞானம், கலைகளை வளர்த்தல், பேட்டென்ட் உரிமைகளைப் பாதுகாத்தல்.

(8) சுப்ரீம் கோர்ட் (யூனியன் நீதிமன்றப்) தவிர மற்ற கோர்ட்டுகளை ஏற்படுத்துதல்,

(10) கடல் கொள்ளையைத் தடுத்தல்,

(11) யுத்தம், சமாதானம்,

(12) ராணுவம் வைத்துக்கொள்ளுதல்,

(13) கடற்படை வைத்துக்கொள்ளுதல்,

(14) தரைப் படை, கடற்படை ஒழுக்கம்,

(15) உள்நாட்டுக் கலகத்தையும் வெளி ஆக்கிரமிப்பையும் தடுக்க பொதுஜனப் படைகளை உபயோகித்தல்,

(16) படைப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல்,

(17) சமஷ்டி சர்க்காரின் தலைநகர் துறைமுகங்கள் கோட்டைகள் மீது ஆதிக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விட்டு,

(18) மேலேயுள்ள காரியங்கள் சரியாக நிர்வகிக்கப்படுவதற்கு வேண்டிய எல்லாச் சட்டங்களையும் இயற்றலாம்— என்று ஒரு ஷரத்தைச் சேர்த்திருக்கிறார்கள்.

இந்திய யூனியன் ஜாபிதாவிலுள்ள அத்தனை விஷயங்களும் அமெரிக்க சமஷ்டி ஜாபிதாவிலுள்ள கடைசி வாக்கியத்தில் அடக்கம்.

## யூனியன் ஜாபிதாவின் சாராம்சம்

சுருங்கச் சொல்லுமிடத்து: (1) தேசப் பாதுகாப்பு, (2) வெளிநாட்டு உறவு, (3) தபால், ரயில், விமானம் முதலிய போக்குவரத்து சாதனங்கள், (4) வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகம், (5) ஒரு மாகாண எல்லைக்கு அப்பால் வியாபிக்கும் வர்த்தகம், (6) நாணயச் செலாவணி, (7) ஏரான

மான பணச் செலவுள்ள ஆராய்ச்சிக் கல்வி இவையே இந்திய அரசியலமைப்பில், யூனியன் சர்க்காருக்கு விடப்படுகின்றன.

காசி சர்வகலாசாலை போன்ற சில ஸ்தாபனங்கள் அகில இந்திய முறையிலேயே நிர்வகிக்கப்படுவது இங்கு வழக்க மாகிவிட்ட காரணத்தால், அது போன்ற விஷயங் களும் யூனியன் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க அரசியலமைப்பில் (1) சமஷ்டி சர்க்காரின் அதிகாரம் என்று சொல்லப்பட்டிருப்பதையும், (2) "ராஜ்யங் களுக்கு இல்லை" என்று சொல்லும் அதிகாரங்களையும் சேர்த் தால், அங்கு சில விஷயங்களில் சமஷ்டி சர்க்காருக்கே ஏக போகம் என்பதும், சில விஷயங்கள் சமஷ்டிக்கும் மாகாணங் களுக்கும் பொது என்பதும் தெரியும்.

வீணை தகராறுக்கு இடமில்லாமல் செய்வதற்காக, இந்திய அரசியலில், அமெரிக்க அரசியலில் இருப்பது போல முழு மொத்தமாகச் சொல்லாமல், இனம் இனமாகத் தனித் தனியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

## வரிவருமான வசதிகள்

இந்திய அரசியல் சட்டத்தில் மாகாண ஜாபிதாவி லுள்ள இனங்களில் 45-வது இனம் முதல் 62 வரையுள்ளவை மாகாணங்களின் வரி ஆஸ்பதங்களை விவரிக்கின்றன. இவற் றின்மீது யூனியன் சர்க்கார் வரி விதிக்க முடியாது. யூனியன் ஜாபிதாவிலுள்ள இனங்களில் 82-வது இனம் முதல் 92வரை யுள்ள 11 இனங்கள் யூனியன் சர்க்காரின் வரிவருமான ஆஸ் பதங்களை அறிவிக்கின்றன.

ஆனல் சில வரிகள் விஷயத்தில், வரி விதிப்பதுதான் யூனியன் சர்க்கார் மூலம் நடக்குமேயொழிய அவற்றில் ஒரு பகுதி இறுதியில் மாகாண சர்க்காரின் பொக்கிஷத்துக்கே வந்துசேரும்.

**வரி வினியோகம்**

யூனியன் சர்க்கார் விதிக்கும் வரிகளுள்; (1) வருமான வரியில் பாதிப பாகம் ராஜயங்களிடையே வினியோகிக்கப்படும்; (2) அநேகம் ஸ்டாம்பு கட்டணங்கள் யூனியனால் வசூலிக்கபபட டாலும், அந்த இனத்தின் வருமானம் முழுதும் ராஜ்யங்களிடையே வினியோகிக்கபபடும்; (3) வாரீஸ் வரி, எஸ்டேட் வரி முதலியவற்றை நிர்ணயிப்பது யூனியன் சர்க்காரென்றாலும், அதன் வருமானத்தை அடைவது மாகாணங்களும் ராஜ்யங்களும்தான்.

சுருக்கமாகச் சொல்வதானால் யூனியன் ஜாபிதாவிலுள்ள 87, 88, 89 90, 92 ஆகிய இனங்களிலுள்ள வருமானததில யூனியன் சர்க்கார் தனக்கென்று எதுவும் வைத்துக்கொள்வதில்லை. 'வசூலிப்புச் செலவு போக' மீதமுள்ளது முழுவதும் ராஜ்யங்களிடையே வினியோகிக்கப்படுகிறது.

84-வது இனத்தில் சாராயக் கலப்புள்ள மருந்துகள், வாசனைத் திரவியங்கள் மீதுள்ள வரி முழுதும் மாகாணங்களுக்கே உரியது.

அதே 84-வது இனத்திலுள்ள மற்ற சுங்க வரிகள் பற்றியும் யூனியன் சட்டமொன்றும் சட்ட மியற்றி மாகாணங்களுக்கும் ராஜ்யங்களுக்கும் குறிப்பிட்ட தொகைகளைக் கொடுக்கலாம்.

சில மாகாணங்களில் பிற்போக்குப் பிரதேசங்களின் நன்மைக்காக, யூனியன் சர்க்காரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் திட்டம் போடடால், அதற்கு யூனியன் சர்க்கார் மான்யம் அளிக்கும்.

சில சமஸ்தானங்கள் இதற்கு முன்னர் கடல்சுங்கம் போன்ற வரிகள் வசூலித்திருக்கின்றன. புதிய மாறுதல்களால் அவற்றின் வரியமைப்பு பாதிக்கப்படுவதை முன்னிட்டு சில வருஷங்களுக்குச் சில சமஸ்தானங்களுக்குப் பண உதவி செய்வதாக ஒப்பந்தம் இருக்கிறது.

## சில பொது விதிகள்

யூனியன் சர்க்காரின் சொத்துமீது மாகாண சர்க்கார்களும், சமஸ்தான சர்க்கார்களும் வரி விதிக்கக்கூடாது. அது போலவே மாகாண சர்க்கார்களின் சொத்துமீதும், வருமானத்தின மீதும் யூனியன் சர்க்கார் வரி விதிக்கக் கூடாது.

எந்த மாகாணமும் மற்றொரு மாகாணத்துடனுள்ள ஏற்றுமதி, இறக்குமதி மீது வரிகள் போடக்கூடாது. விற்பனை வரி விஷயத்திலும் இது பொருந்தும். இந்த இரண்டு தடைகளுக்கும் விதி விலக்குகள் உண்டு.

## நிதிக் கமிஷன்

வரிகளை இவ்வாறு விநியோகிப்பதில் ஏதேனும் மாறுதல் வேண்டுமா என்பது பற்றியும், மத்திய சர்க்காரிலிருந்து மாகாணங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும் 'உதவி மான்யங்கள்' அளிக்கும்போது என்ன கொள்கை யனுஷ்டிக்க வேண்டுமென்பது பற்றியும், சமஸ்தானங்களுடன் நிதி சம்பந்தமாகச செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்களில் ஏதேனும் மாறுதல் தேவையா என்பது பற்றியும் சிபார்சு செய்யும் அதிகாரத்துடன் ஜனாதிபதி ஒரு நிதிக் கமிஷன் நியமிப்பார். முதல் தடவையாக இந்தக் கமிஷன் 1952-ம் வருஷத்தில் (புது அரசியல் அமலுக்கு வந்து இரண்டு வருஷத்துக்குள்) நியமிக்கப்படும். ஐந்து வருஷத்துக்கொரு முறை இது இடைக்காலத்து அனுபவத்தைக் கொண்டு, மாறுதல்கள் சிபார்சு செய்யும்.

யூனியன் பொறுப்பில் இல்லாத விஷயங்களுக்கும் யூனியன் பொக்கிஷத்திலிருந்து பண உதவியளிக்க சட்டம் தடையாகாது.

## பதினொருவது அத்தியாயத்தின் அனுபந்தம்

# யூனியன் சர்க்கார் சட்டமியற்றி நிர்வகிக்கும் விஷய ஜாபிதா

யூனியன் சர்க்கார் சட்டமியற்றக்கூடிய விஷயங்களின் ஜாபிதா கீழே தரப்படுகிறது 1935-ம் வருஷத்து சட்டத்துடன் ஒப்பிட்டு, புது ஜாபிதாவில் ஒவ்வொரு இனத்துக்கும் சமமாக 1935-ம் வருஷத்து ஜாபிதாவில் இருந்த இனங்களின் இலக்கம் ஒவ்வொரு இனத்தின் இறுதியிலும் தரப்படுகிறது.

இந்த ஜாபிதாவிலுள்ள இனங்களில் மட்டுமல்லாமல், பதினைந்தாவது அத்தியாயத்தின் அனுபந்தத்திலுள்ள 'பொது ஜாபிதா' இனங்களிலும் யூனியன் சர்க்கார் சட்டமியற்றலாம்.

(1) இந்தியாவையும் அதன் ஒவ்வொரு பகுதியையும் பாதுகாப்பது. பாதுகாப்புக்கான தயாரிப்புகள், யுத்த காலத்தில் யுத்தத்தை நடத்துவதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களும், யுத்தம் முடிந்த பிறகு படைக்கலைப்புக்கு வேண்டிய எல்லாக் காரியங்களும் —1

(2) கடற்படை, ராணுவம், விமானப் படை, யூனியனின் மற்ற ஆயுதப் படைகள். —1

(3) கன்டோன்மென்டுள்ள (ராணுவத்தார்வாழும் நகரங்களின்) பிரதேசத்துக்கு எல்லை நிர்ணயிப்பது; அந்தப் பிரதேசங்களின் ஸ்தல ஸ்தாபன சுயாட்சி, அங்கு நகர அதிகாரிகளை ஏற்படுத்துவதும் அவர்களது அதிகாரங்களும், வாடகை கட்டுப்பாடு உட்பட அந்த பிரதேசங்களில் ஜாகை வசதிகளை ஒழுங்கு படுத்துவது. —2

(4) கடற்படை, தரைப்படை, விமானப்படை; கட்டிட அமைப்புகள். —2

(5) ஆயுதங்கள், துப்பாக்கிகள், ஆயுதத்துக்கால மருந்துகள், வெடி மருந்துகள். — 29, 30

(6) அணுசக்தி அதன் உற்பத்திக்கான சுரங்கப்

பொருள் ஆஸ்பதங்கள்.

(7) பாதுகாப்புத் தேவைக்கும் யுத்தத்தை நடத்துவதற்கும் அவசியமானவையென்று சட்ட மன்றத்தினால் அறிவிக்கப்படும் தொழில்கள்.

(8) துப்பறிவு, புலன்விசாரிப்புக் காரியாலயம். —1

(9) பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, இந்தியாவின் பத்திரத்தன்மை இவற்றுக்காக முன்னெச்சரிக்கையாக சிலரைப் பந்தோபஸ்தில் வைப்பது; அவ்வாறு பந்தோபஸ்தில் வைக்கப் பட்டவர்கள். —1

(10) வெளிநாட்டு விவகாரங்கள், எந்த வெளிநாட்டுடனும் உறவு ஏற்படுத்தக்கூடிய விஷயங்கள் —3

(11) ஸ்தானிகர், கான்ஸல் வர்த்தக, பிரதிநிதித்துவம். —3

(12) ஐக்கிய நாடுகள் சங்கம்.

(13) சர்வதேச மகாநாடுகளிலும், சங்கங்களிலும், மற்ற ஸ்தாபனங்களிலும், கலந்து கொள்வதும், அவற்றில் செய்த தீர்மானங்களை அமலுக்குக் கொண்டு வருவதும்.

(14) வெளி நாடுகளுடன் உடன்படிக்கைகள், ஒப்பந்கள் செய்வது, அவ்வொப்பந்தங்களின்படி காரியம் செய்வது, வெளி நாட்டாருடன் சில பொது ஏற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இணங்குவது.

(15) யுத்தமும், சமாதானமும்.

(16) வெளி நாட்டிலுள்ளவர்கள் மீது அதிகாரப் பிரயோகம்.

(17) பிரஜாதத்துவம்; பிரஜைகளாக்குவது; அன்னியர் —49.

(18) வழக்குகளுக்காக, கோர்ட்டுகள் கோருவோரை அனுப்பிக் கொடுப்பது —3.

(19) இந்தியாவுக்குள் வெளியாரை அனுமதிப்பது; இந்தியர் வெளிநாட்டில் குடியேறுவது; இந்தியாவைவிட்டு வெளியேற்றுவது; பாஸ்போர்ட்டுகள்; (பிரயாண அனுமதிச் சீட்டுகள்; விஸாக்கள்) —50

(20) வெளி நாடுகளுக்கு க்ஷேத்திர யாத்திரை. —17

(21) நடுக்கடலிலோ விமானத்திலோ நடக்கும் கொள்ளைகள், தேசங்களின் சட்டங்களுக்கெதிராகத் தரையிலோ, கடலிலோ, விமானத்திலோ செய்த குற்றங்கள்.

(22) ரயில்பாதைகள்.

(23) சட்டமன்றம் இயற்றின சட்டத்தின் மூலம் தேசிய ரஸ்தாக்கள் என்று அறிவிக்கப்பட்ட ரஸ்தாக்கள்

(24) உள்நாட்டு கால்வாய் ஆற்றுப் போக்குவரத்து மார்க்கங்களுள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று பார்லிமென்ட் அறிவிக்கும்

ஜலப் போக்குவரத்து மார்க்கங்களில் யந்திரத்தால் இயங்கும் கப்பல்கள் போக்குவரத்து. போக்குவரத்து சம்பந்தமாக விதிகளை ஏற்படுத்துவது

(25) கடல்களில் கப்பலோட்டுவது, கடல் பொங்கும்போதுள்ள கப்பல் போக்குவரத்து, வர்த்தகக் கப்பலோட்டும் தொழிலில் பயிற்சியும், கல்வி வசதியும், ராஜ்யங்களும் (மாகாணங்களும் சமஸ்தானங்களும்) மற்ற ஸ்தாபனங்களும் அளிக்கும் கல்வியையும் பயிற்சியையும் ஒழுங்குபடுத்துவது. —21

(26) தீப ஸ்தம்பங்கள் (கலங்கரை விளக்குகள்) தீபக்கப்பல்கள், வெளிச்சங்கள், கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் பந்தோபஸ்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்வது. —25

(27) சட்டமன்றம் இயற்றும் சட்டத்தின் மூலம், அல்லது ஏற்கெனவேயுள்ள சட்டத்தின்படி பெரிய துறைமுகம் என்று மதிக்கப்படும் துறைமுகங்கள். அவற்றின் எல்லைகளை நிர்ணயிப்பது. துறைமுக அதிகார ஸ்தாபனங்களை யமைப்பது, அவற்றின் அதிகாரங்கள். —22

(28) துறைமுகத்தில் ஆரோக்கிய பந்தோபஸ்து, குவாரன்டைன், அது சம்பந்தமான ஆஸ்பத்திரிகள், மாலுமிகள ஆஸ்பத்திரிகள், கப்பல் ஆஸ்பத்திரிகள் —18

(29) விமானப் போக்குவரத்து. விமானங்கள்; விமானம் ஓட்டுதல்; விமான நிலையங்கள் அமைப்பது; விமானப் போக்குவரத்து. விமான நிலையங்களின் உபயோகம் பற்றி ஒழுங்குகள் ஏற்படுத்துவது; விமான மோட்டும் தொழிற் கல்விப்பயிற்சி, ராஜ்யங்களோ இதர ஸ்தாபனங்களோ கல்வியையும் பயிற்சியையும் ஒழுங்குபடுத்துவது —24

(30) ரயில்பாதை கடலில் செல்லும் கப்பல்கள், விமானம், தேசிய நீரோட்டப் பாதைகளில் செல்லும் யந்திரக் கப்பல்கள் ஆகியவற்றில் பிரயாணிகளையும் சாமான்களையும் ஏற்றிச் செல்லுதல் —26

(31) தபால் தந்தி, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி ரேடியோ ஒலி பரப்பு, புதிய செய்தி யறிவிப்பு சாதனங்கள் —5

(32) யூனியனுக்குச் சொந்தமான சொத்துக்களும், அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானமும்; ஆனால் மாகாணங்களிலோ, சமஸ்தானங்களிலோ உள்ள யூனியன் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் யூனியன் சட்டமன்றம் வேறு விதமாக முடிவு செய்யாத அளவுக்கு மாகாண சமஸ்தான சட்டங்களுக்கு உட்பட்டு —10

(33) யூனியன் காரியங்க

னுக்காக சொத்துக்கள் ஆர்ஜி தம் செய்வது, அல்லது கட்டடம் யிட்டுப பெறுவது,

(34) சமஸ்தானாதிபதிகளின் எஸ்டேட்டுகளை சம்பந்த மான "கோர்ட்ஸ் ஆப் வார்ட்ஸ்" (சொத்து நிர்வாகக் கோர்ட்டுகள்) —1

(35) யூனியனின் கடன் —46

(36) செலாவணி, நாணயம் அச்சிடுதல், செல்லுபடியளவு நிர்ணயித்தல், வெளி நாணய மாற்று மதிப்பு —5

(37) வெளிநாட்டுக் கடன்.

(38) ரிசர்வ் பாங்கு.

(39) தபாலாபீஸ் சேமிப்பு பாங்கு —7

(40) இந்திய சர்க்காரோ ராஜ்யங்களின் சர்க்காரோ நடத்தும் லாட்டரிகள். —48

(41) வெளி நாடுகளுடன் வியாபாரம்; சுங்க எல்லைகளுக்கப்பாலுள்ள பொருள் ஏற்றுமதியும் இறக்குமதியும். சுங்க எல்லைகளை நிர்ணயித்தல். —19

(42) மாகாணங்களிடையே நடக்கும் வர்த்தகமும் வியாபாரமும்

(43) வர்த்தகக் கம்பெனிகள் பாங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், ரொக்க முதலீட்டுக் கம்பெனிகள் ஆகியவ ஏறுள்ள ஸ்தாபன அமைப்பு, ஒழுங்குகள் ஏற்படுத்தல், சில சமயங்களில் அவற்றைக் கலைப்பது முதலிய காரியங்கள்; கூட்டுறவுச் சங்கங்கள் இதில் வரமாட்டா —33

(44) வர்த்தக ஸ்தாபனமாயினும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒரு மாகாண எல்லைக்கப்பால் வியாபிக்கும் சங்க ஸ்தாபனங்கள் அமைப்பு ஒழுங்குமுறை, கலைப்பு. (சர்வகலாசாலைகள் இந்த இனத்தில் வரமாட்டா) —33

(45) பாங்கித் தொழில் —13

(46) வசூல் உண்டிகள (பரிவர்த்தனை உண்டிகள்) செக்குகள், பிராமிசரி நோட்டுகள், இவைபோன்ற மற்ற வரவு செலவுக் கருவிகள். —28

(47) இன்ஷூரன்ஸ் —37

(48) பங்கு மார்க்கெட்டுகள்; வாய்தா பேர மார்க்கெட்டுகள்.

(49) ஒருவர் புதிதாகக் கண்டு பிடித்த கருவிகளையும் முறைகளையும் பற்றிய உரிமையைப்பதிவு செய்வது, காபிரைட் உரிமை; வர்த்தக அடையாளங்கள்: வர்த்தகப் பொருள் இடுகுறி அடையாளங்கள். —27

(50) அளவுகளிலும் எடையிலும் நிர்ணய அளவுகள் ஏற்படுத்துவது. —51

(51) இந்தியாவுக்கு வெளியே ஏற்றுமதி செய்யும் பொருள்கள் பற்றியும், மாகாணத்தை விட்டு வெளி மாகாணத்துக்கு விற்பனைக்கனுப்பும் பொருள்களைப பற்றியும்

சரக்குகளின் தரத்தை நிர்ணயிடபது.

(52) யூனியன் ஆதிக்கத்தி லிருபபந்த, நலமென யூனியன் சட்ட மன்றத்தினுல் அறிவிக்கபபடும் தொழில்கள் —34

(53) மண்ணெண்ணெய், பெட்ரோலியம் முதலியன கிடைக்கும் நிலங்களையும் சுரங்கங்களையும்பற்றி ஒழுங்குகள் ஏற்படுததுவதும், அபிவிர்ததி செய்வதும் பெட்ரோலியம பெட்ரோலியப் பொருள் தீப்பிடித்து அபாயம் விளைவிக்கக்கூடியது என்று சட்டமன்றததினுல் அறிவிக்கப்படும் இதர திராவகங்களும பொருள்களும். —32

(54) யூனியன் ஆதரவில் பராமரிபபதே நலமென சட்ட மன்றத்தில் அறிவிக்கப்படும் சுரங்கங்களையும் சுரங்கத் தொழிலபிவிர்ததியையும ஒழுங்குபபடுத்துவது —36

(55) சுரங்கங்களிலும் எண்ணெய் வயல்களிலும் வேலை செய்வோரின 'பததிரத்தை பாதுகாக்கும ஒழுங்குமுறைகள் ஏற்படுததுவது

(56) ஒரு ராஜ்யத்துக்கப்பால் மற்றொரு ராஜ்யத்தில் ஓடும் ஆறுகள் பாசனபபிரதேசங்களல் எவற்றை யூனியனே பராமரிபபது நல்லதென்று சட்டமன்றம் அறிவிக்கிறதோ அவற்றை அபிவிர்த்தி செய்வதும் ஒழுங்குகள் ஏறபடுததுவதும்.

(57) இந்திய எல்லைக்கப்பாலுள்ள கடல்களில் மீன் பிடித்தல். மீன் பண்ணைகள் ஏற்படுத்தல். —23

(58) யூனியன் ஸ்தாபனங்கள்மூலம் உப்பு தயாரிப்பது, சேகரம் செய்வது, வினியோகிப்பது, மற்றவர்கள் நடத்தும் உப்புத் தய்ாரிபபு, சேகரம், வினியோகத்தை ஒழுங்குபடுத்திக் கட்டு திட்டங்கள் ஏறபடுததுவது. —47

(59) அபினி பயிரிட்டுத் தயாரித்து ஏற்றுமதிக்கு விற்பனை செயவது. —31

(60) காட்சிகளுக்கு ஸினிமா பிலிம்கள் அனுமதிப்பது.

(61) யூனியன் ஊழியர்கள் சம்பந்தமான தொழில் தகராறுகள்.

(62) இவ்வரசியலமைப்பு அமலுக்கு வரும்போது "நேஷனல் லைப்ரரி." "இந்தியன் மியூஸியம் "இம்பீரியல் வார் மியூஸியம்", "விக்டோரியா மெமோரியல்" 'இந்தியன் வார் மெமோரியல்" என்ற பெயர்களுடன் நடந்து வரும் புத்தகாலயங்கள், மியூஸியம்களின் நிர்வாகம். இந்திய சர்க்காரின் பணத்தில், அல்லது பண உதவியால் நடந்து தேசிய முககியத்துவம் வாய்ந்ததென்ச் சட்டமன்றததால் அறிவிக்கப்படும் இதர ஸ்தாபனங்கள். —11

(63) காசி ஹிந்து சர்வ கலாசாலை, அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலை, டில்லி சர்வ கலாசாலை என்று அழைக்கப் பட்டு வரும் சர்வ கலாசாலை களும், இவை போன்ற கலாசாலைகளும். —13

(64) முழுதுமோ ஒரளவோ இந்திய சர்க்காரின் பணப் பொறுப்பில் நடக்கும் விஞ் ஞானக் கலவி, தொழில நுட்பக் கல்வி ஸ்தாபனங் களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததென யூனியன் சட்ட மன்றதால் அறிவிக்கப்படும இதர விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்வி ஸ்தாபனங் களும். —12

(65) உத்தியோகப் பயிற்சி, தொழில் பயிற்சி தொழில் நுட்பப் பயிற்சி, யூனியன் ஸ்தாபனங்கள் —12

(66) உயர்தரப் படிப்பு, ஆராய்ச்சி, விஞ்ஞானத் தொழில் நுட்ப போதனை ஸ்தாபனங்களின் பரஸ்பரம் இணைப்பும், சரியான "தரநிர்ணயமும்."

(67) புராதன சரித்திர முக்கியத்வம் வாய்ந்த சின்னங்கள், சாஸனங்கள், தஸ்தாவேஜுகள் முதலியன. —15

(68) இந்திய சர்வே; நிலப பரப்பிற்கடியிலுள்ள ஆழப் பொருள சர்வே, தாவர, விலங்குகள் சர்வே "மனித இன' வருப்பு பழக்க வழகக விவர ஆராய்ச்சிகள்; சீதோஷ்ண வானிலை ஆராய்ச்சி ஸ்தாபலங்கள். —14

(69) ஜனத்தொகை கணக் கெடுப்பு —16

(70) யூனியன் உத்யோக வர்க்கங்கள அகில இந்திய உத்யோகங்கள்: யூனியன் உத்யோக நியமனக் கமிஷன். —8

(71) யூனியன் பென்ஷன் கள் —9

(72) யூனியன் சட்ட மன் றத்துக்கும், ராஜ்யங்களின் சட்ட மன்றங்களுக்கும் யூனி யன் ஜனாதிபதி உப ஜனாதி பதி பதவிக்கும் தேர்தல்கள், தேர்தல் கமிஷன். —40

(73) யூனியன் சட்ட மன் றத்தின், யூனியன் மேல் சபை சபாநாயகர், உதவி சபா நாயகர், யூனியன் கீழ் சபை சபாநாயகர் உதவி சபாநாய கர் சம்பளமும் படியும் —41

(74) யூனியன் சட்ட மன்ற மெம்பர்கள், கமிட்டிக ளின் மெம்பர்கள், ஆகியோ ரின் அதிகாரம் சலுகைகள். பிறரது நடவடிக்கைகளிலிரு ந்து பாதுகாப்பு முதலியன, அந்த கமிட்டிகளில சாட்சி யார் கொடுக்க ஆஜராகும்படி சிலரைக் கட்டாயப்படுத் தும் அதிகாரம் —41

(75) ஜனாதிபதி கவர்னர் கள ஆகியோரின் ஊதியம், படிகள் விசேஷ கவுரவச் சலுகைகள், ராஜா உரிமைகள்,

யூனியன் மந்திரிகளின் சம்ப ளம் படி, ஆடிட்டர் ஜெனரலின் சம்பளம் படி, ரஜா உரிமை, இதர சவுகரியங்கள்.

(76) யூனியன் சர்க்காரின் கணக்கையும் ராஜ்யங்கள் கணக்குகளையும் தணிக்கை செய்வது.

(77) அகில இந்திய நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) ஸ்தாபனம் செய்வது, அமைப்பு, அதிகார எல்லை, கட்டணங்கள், அந்த கோர்ட்டில் வக்கீல் தொழில் நடத்தும் உரிமை. —53

(78) ஹைக் கோர்ட்டுகள் நிறுவுதலும் அவற்றின் அமைப்பும், (ஆனால் ஹைக்கோர்ட்டுகளின் சிப்பந்திகளை நியமிப்பது தவிர) ஹைக் கோர்ட்டில் வக்கீல் தொழில் நடத்தும் உரிமையை நிர்ணயிப்பது. —53

(79) ஒரு ஹைக்கோர்ட் அதிகாரப் பிரதேசத்தை ஒரு மாகாணத்துக்கப்பால் விஸ்தரிப்பது; மாகாணத்துக்கு வெளியில் அதிகாரமிருப்பின் அதை மாகாண எல்லைக்குட்படுத்துவது —53

(80) ஒரு ராஜ்யத்தின் போலீஸாரின் அதிகார எல்லையை அந்த ராஜ்ய எல்லைக்கப்பாலும் வியாபிக்கும்படி விஸ்தரிப்பது; அவ்வாறு வியாபிக்கும்போது அந்த அன்னிய மாகாண சர்க்காரின் சம்மதம் அவசியம். ஒரு மாகாணத்தின் போலீஸாருக்கு, மாகாணத்துக்கு வெளியேயுள்ள ரயில்வே பிரதேசத்தில் அதிகாரமளிப்பது —39

(81) மாகாணத்துக்கு மாகாணம் குடிபெயருவது, மாகாணத்துக்கு மாகாணம் போவோர் விஷயமாக தொத்து நோய் பாதுகாப்பு தாமத விடுதிகள் (குவாரன்டைன்.) —50

(82) விவசாய வருமானம் தவிர மற்ற வருமானங்கள் மீது வருமான வரி. —54

(83) ஏற்றுமதி வரி உட்பட மற்ற சுங்கவரிகள். —44

(84) புகையிலைமீதும், இந்தியாவில் உற்பத்தியாகிற அல்லது தயாரிக்கப்படுகிற இதரப் பொருள்கள்மீதும் உள்நாட்டுச் சுங்கம் [மனிதர் அருந்தக்கூடிய சாராயப் பொருள்களும், அபினி கஞ்சாவும் இதர லாஹிரிப் பொருள்களும் இந்த இனத்தில் சேராது]; லாஹிரி சத்துள்ள, சாராய சத்துள்ள, அபினி—மருந்துப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள் இதில் சேரும். —45

(85) கம்பெனி வரி. —46

(86) தனி மனிதர் அல்லது கம்பெனிகளின் மூலதனத்தில் விவசாய நிலம் தவிர மற்ற சொத்தின் மூலதன மதிப்பின்மீது வரி, கம்பெனிகளின் மூலதனத்தின்மீது வரி —55

(87) விவசாய நிலம் தவிர மற்ற சொத்துகள்மீது "எஸ்

டேட் வரி"

(88) விவசாய நிலம் நீங்கலாக, மற்ற சொத்துக்கள் மீது வாரிசு வரி. —56

(89) ரயில் கப்பல், விமானம் ஆகியவற்றல் வந்திறங்கும் பிரயாணிகள் மீது பிரயாண முடிவு வரி; ரயில் பிரயாணக் கட்டணம் சாமான் கட்டணம் இவற்றின் மீது வரி. —57

(90) பங்கு மார்க்கெட்டுகளிலும் வாய்தா பேர மார்க்கெட்டுகளிலும், ஸ்டாம்புக் கட்டணம் தவிர இதர வரிகள்.

(91) உண்டியல்கள், செக்குகள், பிராமிசரி நோட்டுகள் கப்பலில் அனுப்பும் சாமான்களின் பட்டியல், ரொக்க உத்தரவாதக் கடிதங்கள். இன்ஷூரன்ஸ் பாலிஸிகள், பங்கு பரிவர்த்தனை, டிபெஞ்சர்கள். (கம்பெனி அடமானம்) பிராக்ஸி (பிரதிநிதி அத்தாட்சிகள்) ரசீதுகள்—ஆகியவற்றின் மீது ஸ்டாம்புக் கட்டண விகிதங்கள். —58

(92) பத்திரிகைகளின் விற்பனை, அவற்றில் பிரசுரமாகும் விளம்பரம் ஆகியவற்றின் மீது வரி விதிப்பது.

(93) இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் பற்றி ஏற்படக் கூடிய குற்றங்கள். —42

(94) இந்த ஜாபிதாவிலுள்ள எந்த விஷயங்கள் பற்றியும் தகவல், ஆராய்ச்சி, புள்ளி விவரங்கள் சேகரிப்பு முதலியன. —43

(95) இந்த ஜாபிதாவில் தொடர்புள்ளதாக ஏற்படும் விவகாரங்களில் சுப்ரீம் கோர்ட் (அகில இந்திய நீதி மன்றம்) நீங்கலாக இதர கோர்ட்டுகளின் அதிகார வியாபகமும் அதிகாரமும்; கடற்படை கோர்ட்டுகளின் அதிகாரம். —53

(96) இந்த ஜாபிதாவிலுள்ள எந்த விஷயத்தையும் பற்றியும் "பீஸ்" கட்டணங்கள்-நீதிமன்ற "பீஸ்" இதில் சேராது. —59

(97) ராஜ்யங்கள் ஜாபிதாவிலோ, பொது ஜாபிதாவிலோ, சேர்க்கப்படாத எல்லா விஷயங்களும் வரிகளும்.

குறிப்பு:—"ராஜ்யங்கள்" என்பது மாகாணங்களையும் சமஸ்தானங்களையும் குறிக்கும்.

பதினேழாவது அத்தியாயம்

# சட்டம் இயற்றும் நடைமுறைகள்

யூனியன் சட்ட மன்றத்திலும், மாகாண சட்டசபைகளி லும் சட்டம் இயற்றும்போது கீழ் சபை, மேல் சபை முரண் பாடுகளைத் தீர்ப்பது பற்றி ஏற்கெனவே ஏழாவது அத்தியா யத்திலும் எட்டாவது அத்தியாயத்திலும் சொல்லியிருக்கிறோம். இங்கு சொல்வது மசோதா சட்டமாவதற்குள்ள சடங்குகளை யும், சட்டசபைகளின் நடைமுறைகளையும் பற்றியது.

எந்த மசோதாவும் மேல் சபை கீழ் சபை இரண்டிலும் நிறைவேறினால்தான் மசோதா நிறைவேறியது என்று அர்த்தம். ஆனால், இவ்வாறு இரு சபைகளும் நிறைவேற்றிய வுடனேயே அல்லது 7-வது; 8-வது அத்தியாயத்தில் சொல் லப்பட்டபடி, நிறைவேறியதாக 'பாவிக்கப்பட்டவுடனே' அதற்குச் சட்டம் என்ற அந்தஸ்து ஏற்பட்டுவிடாது.

ராஜாங்கத் தலைவர் (யூனியனின் ஜனாதிபதி, மாகாணங் களின் கவர்னர், சமஸ்தானங்களின் ராஜப் பிரமுகர்) அம் மசோதாவுக்கு அங்கீகாரம் அளித்த பிறகுதான், அது சட்டம் என்ற அந்தஸ்தை அடைகிறது.

## யூனியன் மசோதாவுக்கு ஜனாதிபதியின் அங்கீகாரம்

ஒரு மசோதா யூனியன் பார்லிமென்டின் இரண்டு சபைகளிலும் நிறைவேறிய பிறகு, அல்லது நிறைவேறியதாக "பாவிக்கப்பட்ட" பிறகு அது ஜனாதிபதியின் அங்கீகாரத்துக் குப் போகும்.

இவ்வாறு அங்கீகாரத்துக்குப் போகும் மசோதாக்

களில் பண சம்பந்தமான மசோதாக்களைப் பற்றி கவனிக்கு முன், பண சம்பந்தமற்ற சாதாரண மசோதாக்களைக் கவனிப்போம்.

**சாதாரண மசோதாக்களில்**

பண சம்பந்தமற்ற மசோதாக்கள் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்போது, அவர் "அங்கீகாரம் அளிக்கலாம்; அல்லது அங்கீகாரம் அளிக்க மறுப்பதாக அறிவிக்கலாம்" என்று அரசியலமைபபுச் சட்டம் கூறுகிறது.

அங்கீகாரம் அளித்தால், மசோதா சட்டமாக அமலுக்கு வந்துவிடும். அங்கீகாரம் அளிக்க மறுத்துவிட்டால், உடனே மசோதா செத்துப் போனதாக அர்த்தமில்லை. சட்டமன்றம் வற்புறுத்தினால் அவர் அங்கீகாரம் அளிதததே தீரவேண்டும்.

இது சம்பந்தமாகச் சட்டத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்:

ஒரு மசோதா பண சம்பந்தமான மசோதாவாக இல்லாவிடில், (மசோதாவில் திருப்திக் குறைவான அம்சம் இருப்பதாக அவருக்குத் தோன்றினால்) அம் மசோதாவைப் புனராலோசனை செய்யும்படியோ, அல்லது திருத்தங்கள் செய்யும்படியோ ஜனாதிபதி சிபார்சு செய்து, கூடிய, சீக்கிரத்தில் சட்ட மன்றத்துக்குத் திருப்பி யனுப்பலாம். அவ்வாறு திருப்பி அனுப்பியபிறகு சட்ட மன்றம் ஜனாதிபதி சிபார்சுசெய்த திருத்தத்துடனோ திருத்தம் இல்லாமலோ அந்த மசோதாவை நிறைவேற்றிவிட்டால், பிறகு அம் மசோதாவுக்கு ஜனாதிபதி சம்மதம் மறுக்கக்கூடாது.

ஆகையால் ஜனாதிபதியின் சம்மத மறுப்பு இறுதியானதல்ல. சட்ட மன்றத்தின் தீர்ப்பே இறுதியானது.

**மாகாணங்களில்**
**கவர்னர் அங்கீகாரம்**

...மாகாண மசோதாக்களுக்குக் கவர்னர் சம்மதம் வேண்

டும். யூனியன் மசோதாக்கள் பற்றிக் கூறிய நடைமுறை மாகாண மசோதாக்கள் விஷயத்திலும் பொருந்தும்.

ஒரே ஒரு வித்தியாசம். சில மசோதாக்களுக்குக் கவர்னர் சம்மதம் அளிக்காமல், ஆனால் சம்மதம் மறுக்கவும் செய்யாமல், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அனுப்புவதாகச் சொல்லலாம்.

அவ்வாறு அனுப்பப்படும்போது, ஜனாதிபதி சில யோசனைகளுடன் மசோதாவைக் கவர்னர் மூலம் மாகாணச் சட்டமன்றத்துக்குத் திருப்பியனுப்பலாம். அந்தச் சிபார்சுகளைச் சட்டமன்றம் 6 மாத காலத்துக்குள் புனராலோசனை செய்யவேண்டும். புனராலோசனை செய்து சட்டசபை ஏற்றுக்கொண்டுவிட்டால், அங்கீகாரம் நிச்சயமாகக் கிடைத்துவிடும். ஏற்கவில்லையென்றால் மறுபடியும் மசோதா கவர்னரால் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும். (அவர் என்ன செய்வார் என்பது சட்டத்தில் சொல்லப்படவில்லை. சம்மதம் கொடுக்கலாம்; கொடுக்காமலுமிருக்கலாம்.)

ஆனால் இது எல்லா விஷயங்களிலுமல்ல. ஜனாதிபதியின் சம்மதம் தேவையென்று கவர்னர் கருதினால்தான் இந்த நிலைமை. இது உண்மையில் மாகாண சட்டசபைக்கு உதவிசெய்வதற்காகவே ஏற்பட்டிருக்கிறது. யூனியன் சட்டத்துடன் முரண்படுகிறது என்ற காரணத்துக்காக, 'குறிப்பிட்ட மாகாணச் சட்டம் செல்லுபடியற்றதாக, கோர்ட்டில் முடிவாகாதபடி தடுப்பதற்கு ஜனாதிபதியின் சம்மதம் ஒரு வசதியாகும் என்பதை 15-வது அத்தியாயத்தில் "முரண்படாதிருக்க" என்ற சிறிய தலைப்பின் கீழ் சொல்லியிருக்கிறோம்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்வது கவர்னர்தான். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் கவர்னர் சில மாகாண மசோதாக்களை ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அனுப்பக் கடமைப்பட்டவர்.

அதாவது, மாகாண சட்டசபைகள் நிறைவேற்றிய ஒரு

மசோதா, ஒரு ஹைக்கோர்ட்டின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்துவதாகவோ, ஹைக்கோர்ட்டுக்கு இந்த அரசியலமைப் பில் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்துக்கு அபாயம் விளைவிப்பதாகவோ கவர்னருக்குத் தோன்றினால், அதை அவர் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அனுப்பியே தீரவேண்டும்.

இது நீதிமன்றத்தின் சுதந்திரத்துக்கு ஒரு பாதுகாப் பாகும்.

**பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்**

பண சம்பந்தமில்லாத மசோதாக்களில் யூனியனில் ஜனாதிபதியும் மாகாணத்தில் கவர்னரும் அங்கீகாரமளிக்காமல் மசோதாவைத் திருப்பியனுப்பும்போது, சட்ட மன்றம் தன் கருத்தை ஊர்ஜிதம் செய்தால், பிறகு அங்கீகாரம் அளிக்கப் பட்டே தீரவேண்டும் என்று மேலே கூறியுள்ளோம்.

அதைப் படித்தவுடன் ஒரு சந்தேகம் ஏற்படும் பண சம்பந்தமுள்ள மசோதாக்கள் பற்றி இம்மாதிரி இல் லையே, அவற்றில் ஜனாதிபதியின் (அல்லது கவர்னரின்) முடி வே இறுதியானதா என்று சிலர் கேட்கலாம்.

*பண சம்பந்தமுள்ள மசோதா எதுவும் சட்டசபைக்கு வருமுன்னரே ஜனாதிபதியின் முன்னனுமதியைப் பெறவேண் டும் என்று சட்டம் இருக்கிறது. ஜனாதிபதியின் அனுமதி யென்பது உண்மையில் மந்திரி சபையின் அனுமதிதான். இவ் வாறு அனுமதி பெற்று, சட்டசபைக்கு வரும் மசோதாவில் சட்டசபை அதிலுள்ள வரியையோ செலவையோ, கடனையோ குறைக்க முடியுமே யொழிய, அதிகரிக்க முடியாது என்றும் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முன்னனுமதியுடன் பிரேரிக்கப்பட்டுள்ள மசோதாவுக்கு ஜனாதிபதி சம்மதம்

---

* இந்தப் பாராவிலும் இனி வரும் பாராக்களிலும் 'ஜனாதிபதி' என்ற சொல்லுக்குப் பதிலாக 'கவர்னர், ராஜப்பிரமுகர்' என்று வைத் துக்கொண்டால் 'யூனியனைப் பற்றிச் சொல்வது ராஜ்யங்களுக் கும் பொருந்தும்.

மறுப்பார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அவ்வாறு சம்மதம் மறுக்கப்பட்டால் மந்திரிகளின் சார்பில் மறுக்கப்பட்டதாகவே அர்த்தம்.

## வரவு செலவு பட்ஜெட்டும் சட்டசபையும்

வருஷாந்தர வரவு செலவு பட்ஜெட்டைச் சட்டசபைமுன் ஜனாதிபதியோ கவர்னரோ ஆஜர் செய்விக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது வரவு செலவு மான்யம்பற்றிய கோரிக்கைகளும் ராஜாங்கத்தலைவரின் சிபாரிசுடனேயே வருகிறது. இந்த மான்யங்கள் நிறைவேறிய பிறகும் எல்லா மான்யங்களையும் சேர்த்து வரும் தொகையைச் சர்க்காரின் 'மொத்த நிதி'* யிலிருந்து வினியோகிப்பதற்கு ஒரு மசோதா வரும். [மாகாணங்களில் ஒரு தனி 'நிதி மசோதா' வேண்டுமென்பது பழைய அரசியலமைப்பில் இல்லை ]

இந்த மசோதா கீழ் சபை, மேல் சபை இரண்டிலும் வரும்போது, மான்யங்களை மாற்றக்கூடிய எந்தத் திருத்தமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்த மசோதா ஜனாதிபதியோ, கவர்னரோ சிபார்சு செய்த மான்யங்களுக்கு கட்டபட்டதேயாதலின், இவற்றுக்கும் ஜனாதிபதி அல்லது கவர்னரின் அங்கீகாரம் நிச்சயம்.

இவ்வாறு வருஷாந்தர பட்ஜெட் கூட்டத்தின்போது சர்க்காரின் ஒவ்வொரு கொள்கையையும் விவாதிப்பதற்கு, கீழ் சபைக்கு மூன்று சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. (1) வரவு செலவுத் திட்டத்தின் மீது பொதுவிவாதம், (2) பிறகு மான்யங்கள் மீது விவாதமும் வோட்டும், (3) அப்பால் நிதி மசோதா மீது விவாதமும் வோட்டும். மான்யக் கோரிக்கைகள் மீது மந்திரிகளின் ஏதேனும் ஒரு பிரேரணை தோற்றவுடன் மந்திரி

---

* யூனியனிலும், ராஜ்யங்களிலும், 'மொத்த நிதி' (Consolidated Fund) என்ற ஒரு நிதி ஏற்படுத்தி, சர்க்காரின் எல்லா வரிப்பணங்களும், கடன் தொகைகளும் அதில் சேகரிக்கப்பட்டு அதிலிருந்தே வினியோகிக்கப்படவேண்டும் என்பது புதிய சட்டத்திலுள்ள புது ஏற்பாடு.

சபை ராஜிநாமா செய்யாவிட்டாலும், நிதி மசோதா கீழ் சபையில் தோற்கடிக்கப்பட்டால் பிறகு மந்திரிகள் பதவியிலிருக்க முடியாது. ஆகையால் பட்ஜெட் கூட்டமே சட்டசபையின் மிக மிக முக்கியமான கூட்டம்.

## வோட்டு தேவையில்லாதச் செலவுகள்

வருஷாந்தர வரவுசெலவில்; ஒவ்வொரு செலவுக்கும் மான்யக்கோரிக்கை பிரேரித்து கீழ் சபையில் வோட்டு எடுக்க வேண்டும். ஆனல் ஜனதிபதி, கவர்னர், நீதிபதிகள், உத்யோக நியமனக் கமிஷனர், சட்டசபைகளின் தலைவர்கள், ஆடிட்டர்-ஜெனரல் ஆகியோரின் சம்பளம், முதலியவற்றுக்கும் சர்க்கார் கொண்டுள்ள கடனுக்கு வட்டி, கடன் மீட்சி ஆகியவற்றுக்கான தொகைகளுக்கும், கோர்ட்டுத் தீர்ப்புகள் மூலம் ஏற்படும் செலவுகளுக்கும், சட்டமன்றத்தின் வோட்டுத் தேவையில்லை. ஆனல் இவைபற்றி சட்டசபைகள் விவாதிக்க முடியும். இந்தச் செலவுகள் யாவும் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமோ, சட்ட மன்றத்தின் சட்டங்கள் மூலமோ ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் என்பதால் இச்செலவுகள் 'பந்தக செலவுகளாக' (சர்க்கார் ஏற்கெனவே தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டுள்ள செலவுகளாக) மதிக்கப்படுகின்றன.

## சட்டசபைக் கூட்டங்கள் பற்றிய சில சொற்கள்

சட்டசபையின் கூட்டங்கள் சம்பந்தமாக சில சொற்களை புரிந்துகொள்வது அவசியம். சட்ட சபைகளை கூட்டி வைப்பவர் ராஜாங்கத் தலைவர். கூட்டும்படி அழைப்பதற்கு ஆங்கிலத்தில் "சம்மன்" (Summon) செய்தல் என்று சொல்வார்கள்.

இவ்வாறு செப்டம்பர் மாதம் 15-ந் தேதி ஜனதிபதி சட்ட சபையைக் கூட்டும்படி அழைத்தார் என்று வைத்துக் கொள்வோம். அக்டோபர் 15-ந் தேதி வரை கூட்டம் நடந்து சபை ஒத்திப்போட்டிருக்கலாம். அக்டோபர் 15-ந் தேதியிலிருந்து அந்த மாதம் முழுதும் கூட்டம் நடக்கவில்லை யென்று

வைத்துக்கொள்வோம். அப்போதும் சட்டரீதியாக 'சபை நடந்து வருவதாகவே' மதிக்கப்படும்.

கூட்டத்தை 'சமாப்தி செய்வதாக ஜனாதிபதி அறிவிக்காதவரையில் சட்டசபை மண்டபம் பூட்டியிருந்தால்கூட சட்டத்தின் பரிபாஷையில் சபை கூடியிருப்பதாகவே மதிக்கப் படும்!

ஜனாதிபதி சபைக்கூட்டத்தைச் சமாப்தி செய்ததாக அறிவித்து, மறுபடியும் 'கூட்டாத வரையில்' சட்டசபை 'கூடாத சமயம்'. உதாரணமாக ஒரு தடவை பிப்ரவரியில் சட்டசபைக் கூட்டம் ஆரம்பித்து, மே மாதம் 15ம்தேதிவரை நடந்து, கூட்டம் ஜூன் 15ம்தேதி வரை ஒத்திப்போட்டதாக வைத்துக்கொள்வோம். அந்த ஜூன் 15ம்தேதிவரையில் சட்டசபை கூடியிருப்பதாகவே மதிக்கப்படும். இடையில் ஜூன் 5-ம்தேதியன்று ஜனாதிபதி பழைய சட்டசபைக்கூட்டம் சமாப்தியானதாக அறிக்கை வெளியிட்டால், ஜூன் 5ம் தேதியிலிருந்து சபை, 'கூடியிருக்கவில்லை' என்பார்கள். இவ்வாறு சமாப்தி செய்வதற்கு ஆங்கிலத்தில் (Prorogue) 'பிரொரோக்' செய்வது என்பார்கள். *

'சபைக் கலைப்பு புதிய பொதுத் தேர்தல் நடத்துவதற்காக கீழ் சபையை கலைக்கும்போதுதான் சபை கலைக்கப்பட்டதாக மதிக்கப்படும்.

ஆகவே 'சபையமர்ந்திருக்கும் காலம்' (Sitting) 'சபை கூட்டப்பட்டிருக்கும் காலம்' (Session), 'கூட்டம் சமாப்தி செய்யப்பட்டிருக்கும் காலம்' (Prorogation),, 'சபை கலைக்கப்

---

* சட்டசபைக் கூட்டம் இவ்வாறு சமாப்தி செய்யப்பட்டிருக்கும் காலத்தில்தான் ஜனாதிபதி அவசரச் சட்டங்கள் போட முடியும். ஆகையால் சட்டசபை திறந்திருக்காத சமயத்தில் சர்க்கார் ஒரு அவசரச் சட்டம் இயற்ற விரும்பினால், இவ்வாறு சபைக் கூட்டம் "சமாப்தி செய்யப்பட்டதாக" அறிவித்து விடுவதுண்டு.

பட்டிருக்கும் காலம்' (Dissolution) என்று நான்குவிதமான காலங்கள் உண்டு. சபையைக் கூடும்படி அழைத்து, முதலில் சபை அமர்ந்ததிலிருந்து, சபைக் கூட்டம் சமாப்தி செய்யப்படும் காலம் வரையில் ஒரு "ஸெஷன்". ஒரு ஸெஷனில் இரண்டு மூன்று 'ஸிட்டிங்' இருக்கலாம்.

ஒரு "ஸெஷனின்" கடைசி "ஸிட்டிங்குக்கும்" மற்றொரு ஸெஷனின் முதல் "ஸிட்டிங்குக்கும்" இடையே 6 மாத காலத்துக்கு அதிகம் இருக்கக்கூடாது. ஆகையால் சட்டசபையைக் கூட்டாமலே மந்திரிகள் காரியம் செய்துகொண்டுபோக விரும்பினால் அது பலிக்காது.

சபையின் கூட்டத்தைக் கூட்டி வைப்பவர் ஜனாதிபதி. அவ்வாறு கூடின சபை சில நாட்கள் அமர்ந்த பிறகு ஒத்திப் போடும்போது, மறுபடி ஜனாதிபதி அழைப்பு அனுப்ப வேண்டியதில்லை. சபாநாயகரே அழைத்தால் போதும். சபையை ஜனாதிபதி "சமாப்தி செய்தால்" பிறகு ஜனாதிபதியே "அழைப்பு" அனுப்ப வேண்டும்.

**சபைக் கலைக்கப்படுவதன் விளைவுகள்**

சபைக்கூட்டம் சமாப்தி செய்யப்பட்டு புதிய கூட்டம் கூட்டப்படாத காலத்தில்தான், ஜனாதிபதி. கவர்னர், ராஜப் பிரமுகர் ஆகியோர், தம் அதிகார எல்லைக்குட்பட்டு அவசரச் சட்டம் பிறப்பிக்கலாம்.

கூட்டம் சமாப்தி செய்யப்பட்டுள்ள காலத்தில் சட்டசபையிலுள்ள மசோதா காலாவதியாகி ரத்தாகிவிடாது. ஆனால் சபை கலைக்கப்பட்டு விட்டால், சில மசோதாக்கள் ரத்தாகும். எல்லா மசோதாக்களுமல்ல, சில மசோதாக்கள் மட்டுமே. அவையாவன:

(1) கீழ் சபையில் இன்னும் நிறைவேறாமல், ஆனால் விவாதத்திலிருக்கிற மசோதாவும்,

(5) கீழ் சபையில் நிறைவேறி, மேல்சபையில் இன்னும் நிறைவேறாமல் இருக்கிற மசோதாவும், கீழ் சபை கலைக்கப்படும்போது ரத்தாகிவிடும்.*

(6) கீழ் சபையில் நிறைவேறாமல், மேல் சபையில் விவாதத்திலிருக்கும் மசோதா "சபைக் கலைப்பினால்" காலாவதியாகாது.

ஒரு மசோதா இரு சபையிலும் நிறைவேறுவதற்கு முன்னதாகக் கீழ் சபை கலைந்துவிட்டால் அம் மசோதாவை மறுபடியும் விவாதிக்க புதிய கீழ்சபைக்கு உரிமை வேண்டும் என்பதே இதன் கருத்து. கீழ் சபையின் முக்கியத்துவத்துக்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

## ஜனாதிபதியின் சட்டங்கள்

சட்ட சபையினால் இயற்றப்படாமலே தாற்காலிகமாக அமலுக்கு வரும் சட்டம் அவசரச் சட்டம் எனப்படும். அவசரச் சட்டம் என்றால் சிலர் அடக்குமுறைச் சட்டம் என்று நினைப்பது சகஜம். ஏனென்றால் 1947-ம் வருஷத்துக்கு முன் மத்திய சர்க்கார் இயற்றின அவசரச்சட்டங்கள் பெரும்பாலும் அடக்குமுறைச் சட்டங்களாக இருந்திருப்பதால், 'அவசரச் சட்டம்' என்றாலே 'அடக்குமுறைச் சட்டம்' என்று சிலர் நினைப்பதுண்டு அது தவறு.

அவசரச் சட்டம் என்பதன் உண்மையான பொருள் அதுவல்ல. 'சட்டசபைக் கூட்டம் நடைபெறாமலிருக்கும் போது அதாவது, சட்டசபை ரஜாவில் இருக்கும்போது அவசரமாக ஏதேனும் சட்டம் இயற்ற வேண்டியிருந்தால், அதற்கு ஒரு ஏற்பாடு வேண்டாமா? யஜமான் வெளியூருக்குப் போனால் தனது ஏஜெண்டுக்கு ஓர் அதிகாரப் பத்திரம்

* ஆனால் இந்நூலின் 64-வது பக்கத்தில் விவரித்துள்ள கலப்புக் கூட்டத்துக்கு ஜனாதிபதி அழைப்பு அனுப்பின பின்னரே சபை கலைக்கப்பட்டது என்றால், எந்த மசோதாவுக்காக கலப்புக் கூட்டம் கூட்டப்பட்டதோ அம் மசோதா "உயிருடன்" இருக்கும்.

கொடுத்துவிட்டுப் போவதுபோல, சட்டசபை ரஜாவில் செல்லும்போது சட்டசபையின் சார்பில் காரியம் செய்ய ஜனாதிபதிக்கும், கவர்னர்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்படு கிறது என்பது ஒரு சம்பிரதாயம். அந்த அதிகாரத்தை உப யோகித்து ஜனாதிபதி சட்டம் வெளியிட்டால், அதற்கு ஜனாதிபதியின் சட்டம் என்று பெயர். ஆனால் உண்மையில் அதை 'ஜனாதிபதியின் சட்டம்' என்று சொல்வதைவிட மந்திரிசபையின் தாற்காலிகச் சட்டம் என்று சொல்வதே பொருந்தும். ஆனாலும், அரசியலமைப்பில் அவ்வாறு சொல் வது வழக்கமில்லை. ஜனாதிபதியின் பேராலேயே சட்டம் வெளியிடப்படும். அவ்வாறு ஒரு சட்டம் வெளியிட்டால் சட்டசபை கூடின பிறகு அந்தச் சட்டத்தைச் சபை அங்கீகரிக் கலாம்; அல்லது நிராகரிக்கலாம். அல்லது திருத்தலாம். சட்ட சபையின் தீர்ப்பே இறுதியானது. இதுபற்றிய நடை முறையைக் கீழே தருகிறோம்:—

சட்ட மன்றத்தின் இரண்டு சபைகளும் கூடியிருக்கும் சமயத்தில் ஜனாதிபதி அவசரச் சட்டம் போட முடியாது. சபைக் கூட்டம் நடைபெறாத சமயத்தில் உடனடியாக செய்ய வேண்டியதான காரியம் ஏதேனும் இருந்து, ஒரு சட்டத்துக்கு அவசியமேற்பட்டிருப்பதாக ஜனாதிபதிக்குத் தோன்றினால் (மந்திரிகளுக்குத் தோன்றினால்) அவ்வாறு ஒரு சட்டம் இயற் றலாம். மீண்டும் சட்டசபை கூடின பின்னர் 6 வார காலம் தான் அது அவசரச் சட்டமாக இருக்கும். அதற்கு முன்னதா கவே சட்ட மன்றம் அதை நிராகரித்து விட்டால் அதோடு அந்த அவசரச் சட்டம் ரத்தாகிவிடும்.*

நிராகரிக்காமல் அவசரச் சட்டத்தை மசோதாவாகப்

---

* இந் நூலின் பத்தொன்பதாவது அத்தியாயத்தில் விவரிக்கப்படும் நெருக்கடிப் பிரகடனத்துக்கும் இதற்குள் வித்தியாசம் இருப்ப தைக் கவனிக்க வேண்டும். நெருக்கடிப் பிரகடனம் இரண்டு மாத காலம் சட்ட மன்றத்தின் நிராகரிப்பைப் பொருட்படுத்தா மல் அமலில் இருக்க முடியும்.

பாவித்துத் திருத்தத்துடன், அல்லது திருத்தமில்லாமலோ சட்டசபை விரும்பினால் சட்டமாக்கலாம்.

## கவர்னர்களின் சட்டங்கள்

யூனியனில் அவசரச் சட்டத்துக்கு ஓர் ஏற்பாடு இருப்பது போலவே அதே போன்ற நிபந்தனைகளுடன், ராஜ்யங்களின் சட்ட மன்றத்துக்குட்பட்டு, கவர்னர்களும் ராஜப் பிரமுகர்களும் சட்ட மன்றத்தின் ரஜாவின்போது சட்டமியற்றலாம்.

அது சாதாரணச் சட்டமாக இருந்தாலும், ஜனாதிபதியின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்க வேண்டியிருக்குமானால் அதே தன்மையுள்ள அவசரச் சட்டமும் ஜனாதிபதியின் பரிசிலனைக்குப் பிறகு ஜனாதிபதியின் சம்மதத்துடனே அமலுக்கு வர வேண்டும்.

## பதினெட்டாவது அத்தியாயம்

# சட்டத்தின் ஆட்சியைக் காக்கும் நீதி மன்றங்கள்

மற்ற அமைப்புகளிலுள்ளதைவிட, சமஷ்டி முறையில் அமையும் அரசியலில் நீதிமன்றங்களுக்கு விசேஷப் பொறுப்பு உண்டு. அந்தப் பொறுப்புக்களுக்கேற்ற சுதந்திரம் அவற்றுக்கு இருப்பது அவசியம். அதற்கேற்றபடி இங்கு 'சுப்ரீம் கோர்ட்' என்ற யூனியன் நீதிமன்றம் ஒன்று ஏற்படும். அதன் அதிகாரங்களையும் அமைப்பையும் கீழே தருகிறோம்.

நாகரிக ஆட்சியின் முக்கியமான அம்சம் சட்டத்தின் ஆட்சி. அதாவது, எந்தப் பெரிய அதிகாரியின் விருப்பு வெறுப்புக்களையும் விட சட்டமே அதிக வல்லமையுள்ளது. அதிகாரிகள் எது செய்தாலும், சட்டத்தின்படி செய்திருக்கிறார்களா என்பது மிகவும் முக்கியம்.

சர்க்கார் சர்வ வல்லமையுள்ளதல்ல; சர்க்கார் செய்யும் காரியத்தைச் சட்டத்தின் பேரால் ஒருவன் எதிர்த்து வழக்காட முடியும்.

நீதிபதிகளும், நீதிமன்றங்களும் அரசாங்கத்தாலேயே நிறுவப்பட்டாலும், சர்க்கார் போடும் நிர்வாக உத்தரவுகளும், நிர்வாக நடவடிக்கைகளும் சட்டத்துக்கு முரண்பட்டால், நீதிமன்றங்கள் சர்க்காருக்கெதிராகத் தீர்ப்பளிக்க முடியும். இவ்வாறு சுதந்திரமான நீதிமன்றங்கள் மக்களின் உரிமைகளுக்குப் பெரும் பாதுகாப்பாகும்.

சட்டத்தின் முக்கியத்துவம் காப்பாற்றப்படுவதன் மூலம் சட்ட சபைகளின் முக்கியத்துவமும் ஊர்ஜிதமாகிறது.

## சட்டமும் அரசியலமைப்பும்

இந்தியாவில் நீதி மன்றங்களுக்கு மற்ெறாரு பெரிய பொறுப்பும் இருக்கிறது.

பிரிட்டன் போன்ற நாடுகளில், பார்லிமெண்ட் (சட்ட மன்றம்) என்ன சட்டம் இயற்றினாலும், அது செல்லுபடியுள்ளதே. தற்காலம் பிரிட்டிஷ் பார்லமெண்டில் சுமார் 600 அங்கத்தினர் இருப்பதை மாற்றி, 300 அங்கத்தினர் என்றோ, 1200 அங்கத்தினர் என்றோ மாற்ற வேண்டுமென்று ஒரு சட்டம் நிறைவேற்ற முடியும். ஏனென்றால் அங்கு அரசியலமைப்புச் சட்டம் என்று எதுவும் கிடையாது.

பிரான்ஸைப் போன்ற நாடுகளில் அப்படியல்ல. அங்கு சட்டமன்றம் என்ன சட்டம் இயற்றினாலும், அது அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டதாகவே இருக்கவேண்டும். ஆகையால் பார்லிமெண்ட் இயற்றிய சட்டம் செல்லுபடியுள்ளதா என்று சொல்ல நீதிமன்றங்களுக்கு அதிகாரமுண்டு. இந்தியாவிலும் அதுபோலதான்.

இந்தியாவானது பிரான்ஸைப் போல ஒருமை சர்க்காராக (யூனிட்டரி சர்க்காராக) இல்லாமல் சமஷ்டியாக இருப்பதால், நீதி மன்றங்களுக்கு மற்றொரு முக்கியமான வேலை இருக்கிறது. இங்கு ஓர் அகில இந்திய சர்க்காரும் 18 மாகாண, சமஸ்தான சர்க்கார்களும் இருப்பதால், சர்க்கார்களிடையே சட்ட சம்பந்தமாக ஏற்படும் தகராறுகளிலும் நீதி மன்றங்கள் தீர்ப்பளிக்க வேண்டியிருக்கும்.

இந்திய யூனியன் பார்லிமெண்ட் இயற்றின ஏதேனும் ஒரு சட்டம் (அரசியலமைப்புக் குட்பட்டு) மாகாணங்களுக்கு இருக்கவேண்டிய உரிமையைப் பாதிக்கிறதா என்பது பற்றியும் நீதிமன்றங்கள் தீர்ப்புக் கூற முடியும்.

## சுப்ரீம் கோர்ட் : யூனியன் நீதி மன்றம்

இவ்வாறு சர்க்கார்களிடையே ஏற்படும் வழக்குகளை இந்

தியா முழுதுக்கும் பொதுவான ஒரு நீதிமன்றுர்தான் நிர்ண யிக்க முடியும். ஆகையால் சாதாரண வழக்குகள் ஹைக் கோர்ட்டுகளுடன் நின்று போனாலும், சர்க்கார்களிடையே ஏற்படும் வழக்குகளையும், அரசியலமைப்புச் சட்டத்தின் பேரால் ஏற்படும் வழக்குகளையும் இறுதியாக பைசல் செய்ய ஒரு கோர்ட் அவசியம்.

இதற்காக ஏற்படுத்தும் இந்திய யூனியன் நீதி மன்றத் துக்கு சுப்ரீம் கோர்ட் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

அதில் ஒரு பிரதம நீதிபதியும் இதர நீதிபதிகள் ஏழு பேருக்கதிகப்படாமலும் இருப்பார்கள். பார்லிமெண்ட் சட்ட மியற்றி ஏழு என்பதை அதிகப்படுத்த முடியும்.

சுப்ரீம் கோர்ட்டின் (யூனியன் நீதி மன்றத்தின்) பிரதம நீதிபதிக்கு ஆங்கிலத்தில் 'சீப் ஜஸ்டிஸ் ஆப் இந்தியா' (Chief Justice of India) என்று பெயர்.

## சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரம்

யூனியன் நீதி மன்றத்தின் முக்கியமான வேலை, ஒரு சட் டம் அரசியலமைப்புச் சட்டப்படி செல்லுபடியுள்ளதா என் பதை நிர்ணயிப்பதுதான். ஆனால் கிரிமினல் வழக்குகளில் சில சந்தர்ப்பங்களிலும், சில பெரிய ஸிவில் வழக்குகளிலும் (அரசியலமைப்புச் சட்டம் பற்றிய பிரச்னை இல்லாவிட் டாலும்) மாகாண ஹைக்கோர்ட்டுகளிலிருந்து வரும் அப் பீல்களை முடிவு செய்ய சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

## கோர்ட்டின் அமைப்பு

சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதிகள் இந்திய ஜனாதிபதியால் பிரத்தியேக முத்திரையுடன் கையெழுத்திட்டு நியமிக்கப் படுவார்கள். மற்ற நியமனங்களைப் போல அல்லாமல் இந்த நியமனத்துக்கு விசேஷ கவுரவம் உண்டு.

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளை நியமிக்கும்போது ஜனாதிபதி ஏற்கெனவேயுள்ள சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், ஹைக்கோர்ட் நீதிபதிகள் ஆகியோரில் தமக்கு யுக்தமென்று தோன்றுவோரில் சிலரைக் கலந்துகொண்டு நியமனம் செய்வார்.

சுப்ரீம் கோர்ட்டின் மற்ற நீதிபதிகளை நியமிக்கும்போது ஜனாதிபதி, பிரதம நீதிபதியைக் கலந்தே நியமிப்பார்.

குறைந்தது 5 வருஷ காலமாவது தொடர்ச்சியாக ஹைக்கோர்ட் நீதிபதியாக இருந்தவர்கள்தான் சுப்ரீம் கோர்ட் நீதிபதிப் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள். சிலர் இவ்வாறு 5 வருஷம் ஹைக்கோர்ட் நீதிபதியாக இருந்திராவிட்டாலும், பெரிய சட்ட தத்துவ நிபுணராக இருந்தால், அவரை நீதிபதியாக நியமிக்க சட்டம் இடம் தருகிறது. பெரிய சட்ட மேதாவிகளின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ள வசதி யிருக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

இந்த நீதிபதிகளின் சம்பளம் அரசியலமைப்புச் சட்டத்திலேயே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நீதிபதியாக நியமிக்கப்படுபவர் காலவரையறையின்றி 65 வயது வரையில் நீதிபதியாக இருக்கலாம். மந்திரி சபை மாறுதல்கள் போன்ற அரசியலபிப்பிராய மாறுதல்களால் நீதிபதிகளின் சுதந்திரம் பாதிக்கப்படலாகாது என்பதே இந்த ஏற்பாட்டின் நோக்கம். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் பதவியிலிருந்து விலகிய பிறகு, இந்தியாவின் எந்த நீதிமன்றத்திலும் வக்கீலாகத் தொழில் நடத்தக் கூடாது.

ஒரு நீதிபதி திறமையிழந்து விட்டார் என்ற காரணத்துக்காகவோ, தவருக நடந்து கொள்கிருர் என்ற காரணத்துக்காகவோ அவரை வேலையிலிருந்து நீக்கமுடியும். ஆனல் அலட்சியமாக நீக்கிவிட முடியாது.

நீதிபதியை நீக்குவதற்கு யூனியன் பார்லிமென்டின் சம்மதம் வேண்டும். நீதிபதியை நீக்கிவிடும்படி ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் சட்ட மன்றத்தில் சாதாரண

மெஜாரிட்டியுடன் நிறைவேறினால் போதாது. (1) சட்ட சபையின் மொத்த அங்கத்தினரில் பாதிப்பேரும் (2) ஆஜரா யிரு பேரில் மூன்றிலிரண்டு பகுதியினரும் ஆதரித்தால்தான் தீர்மானம் நிறைவேறியதாக மதிக்கப்படும். இப்படி மேல் சபை கீழ் சபை இரண்டிலும் தீர்மானம் நிறைவேறின பின் னரே ஒரு நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்க முடியும்.

## ஜீவாதார உரிமை வழக்குகளுக்கு விசேஷ வசதி

(1) யூனியன் சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்கார்களுக்கு மிடையே ஏற்படும் வழக்குகளும் (2) ஒரு பக்கத்தில் இந்திய சர்க்காரும் ஒரு மாகாணமும், மற்றொரு பக்கத்தில் வேறு மாகாணம் என்ற நிலையிலுள்ள வழக்குகளும் (3) மாகாணங்க ளிடையே ஏற்படும் வழக்குகளும்தான் நேரடியாக சுப்ரீம் கோர்ட்டுக்கு வரும், மற்ற வழக்குகள் யாவும் ஹைக்கோர்ட் டில் ஒரு தடவை கவனிக்கப்பட்ட பிறகுதான் சுப்ரீம் கோர்ட் டுக்கு வரும்.

அரசியலமைப்புச்சட்டத்தின் ஜீவாதாரஉரிமைப்பகுதியில் பிரஸ்தாபித்த உரிமைகள் பற்றி சுப்ரீம் கோர்ட்டில் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' (கைதிகளை ஆஜர்படுத்தி விடுதலை செய்யும் உத்தரவுகள்) கோரி மனுச் செய்ய முடியும்.

ஜீவாதாரஉரிமைதவிர மற்றகாரியங்களுக்காக 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டுக்கு வருவதற்குப் பார்லிமெண்ட் சட்டமியற்றலாம்.

## ஸிவில், கிரிமினல் அப்பீல்கள்

சுப்ரீம்கோர்ட் என்பது முக்கியமாக அரசியலமைப்புச் சட்டம் பற்றிய பிரச்னைகளை முடிவு செய்யவே ஏற்பட்டது என்பதை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்வது அவசியம். அவ்வாறு ஒரு வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு வரவேண்டு மானால், "அரசியலமைப்பு சட்டம் பற்றிய பிரச்னை இந்த வழக்கில் இருக்கிறது" என்று ஹைக்கோர்ட்டில் அத்தாட்சி வாங்கவேண்டும். ஹைக்கோர்ட் அவ்வாறு அத்தாட்சியளிக்க மறுத்தால் வழக்கைத்தாக்கல் செய்ய அனுமதிகோரி யூனியன்

நீதிமன்றத்தில் மனுச் செய்து அனுமதி பெற்றபின்தான் வழக்கில் விசாரணை நடக்கும்.

சாதாரண ஸிவில் வியாஜ்யங்களில், வியாஜ்யத்தின் சொத்து மதிப்பு ரூ 20,000–க்கு அதிகமென்று ஹைக்கோர்ட் கூறினால்தான் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்ய முடியும்.

கிரிமினல் வழக்குகளில், (1) ஒரு ஹைக்கோர்ட் நீதிபதி வேறு கோர்ட்டிலிருந்த வழக்கை தமது விசாரணைக்கு வரவழைத்து மரண தண்டனை விதித்திருந்தால், அல்லது (2) ஏற்கெனவே எதிரி விடுதலை செய்யப்பட்ட வழக்கில் ஹைக்கோர்ட் அப்பீல் நடந்து தூக்கு தண்டனை விதிக்கப் பட்டால், அல்லது (3) சுப்ரீம் கோர்ட் கவனிக்க வேண்டியதே என்று ஹைக்கோர்ட் அத்தாட்சி யளித்தால் மட்டுமே சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யமுடியும்.

## ஹைக்கோர்ட்டுகள்

ஹைக்கோர்ட் நீதிபதிகளும் ஜனாதிபதியாலேயே நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் 60 வயது வரை பதவியிலிருக்கலாம். இவர்களையும் பதவியிலிருந்து நீக்க வேண்டுமானால், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் விஷயத்தில் கூறியதுபோலவே, யூனியன் பார்லிமென்ட் மொத்த அங்கத்தினரில் பாதியும், ஆஜரான மெம்பர்களில் மூன்றிலிரண்டுபேரும் அந்தக் கோரிக்கையை ஆதரிக்க வேண்டும்.

மாகாணங்களில் ஜில்லா ஜட்ஜுகளை, மாகாண கவர்னர்கள், ஹைக்கோர்ட் பிரதம நீதிபதியைக் கலந்துகொண்டு நியமிப்பார்கள். உதவி ஜில்லா ஜட்ஜுகள், ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜுகள், ஜாயின்ட் ஜில்லா ஜட்ஜ், உதவி ஜில்லா ஜட்ஜ் ஆகியோர் தவிர மற்ற கீழ்க்கோர்ட் நீதிபதிகள் உத்தியோக நியமனக் கமிஷனையும் ஹைக்கோர்ட் பிரதம நீதிபதியையும் கலந்துகொண்டு கவர்னரால் நியமிக்கப்படுவார்கள்.

பத்தொன்பதாவது அத்தியாயம்

# நெருக்கடிப் பிரகடனங்கள்

ஏந்தத் தேசமாக இருந்தாலும், யுத்தம்போன்ற நெருக்கடிகள் வரும்போது, உள்நாட்டில் சில கட்டுப்பாடுகள் இல்லாமல் நிர்வாகம் நடத்தமுடியாது.

34 கோடி மக்களின் வாழ்க்கையில், அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்புடன் அமையும் ஒரு ராஜாங்கம் 'அவ்வாறு வரும்போது பார்த்துக்கொள்ளலாம்' என்று அலட்சியமாக இருக்கமுடியாது.

எந்த அரசியல் சட்டத்திலும் அரசியல் நிர்வாக முறையை யுத்தகாலத்துக்கும் நெருக்கடிச் சந்தர்ப்பத்துக்கும் ஏற்றபடி மாற்றி யமைத்துக்கொள்வது பற்றிய நடைமுறையையும் குறிப்பிட்டு விடுவதுதான் நலம். யூனிட்டரி சர்க்கார்களில் (ஒருமை சர்க்கார்களில்) இது அவ்வளவு அவசியமில்லை. சமஷ்டிகளில் இது மிகவும் அவசியம். ஏனென்றால், நெருக்கடிகளில் சமஷ்டி சர்க்கார்கள். மாகாண சர்க்கார்களின் சில காரியங்களில் தலையிடும் அவசியம் ஏற்படலாம்.

## (1) நெருக்கடிப் பிரகடனம்

யுத்தம், வெளி ஆக்கிரமிப்பு, பெரிய உள்நாட்டுக் கலவரம் இவற்றால் 'இந்தியாவின் பத்திரத்தன்மைக்கு, அல்லது இந்தியாவின் ஏதேனும் ஒருபகுதியின் பத்திரத்தன்மைக்கு' அபாயம் ஏற்படக்கூடிய பெரும் நெருக்கடி இருப்பதாக ஜனாதிபதி பிரகடனம் வெளியிடலாம். அப்போது யூனியன் சர்க்காருக்குச் சில புது அதிகாரங்கள் வந்து சேரும்

நெருக்கடிப் பிரகடனத்தை வெளியிடுபவர் ஜனாதிபதி;

ஆனால் மந்திரிகளின் யோசனைப்படியே பிரகடனம் வெளியிடப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி வெளியிட்ட பிரகடனம் இறுதியானதல்ல. சட்ட மன்றம் இந்தப் பிரகடனத்தை ரத்துச் செய்துவிட முடியும். இதுபற்றிய விவரங்களை ஆராய்வோம்.

ஜனாதிபதி வெளியிட்ட ஒரு நெருக்கடிப் பிரகடனத்தை அவர் மற்றொரு பிரகடனத்தின் மூலம் வாபஸ் வாங்கலாம்.

அந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டவுடனே அமலுக்கு வந்துவிடும். ஆனாலும் அவ்வாறு வெளியிடப்பட்ட பிரகடனம் சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அவ்வாறு சட்டமன்றத்தினிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரகடனத்தை அங்கீகரித்து சட்ட மன்றம் தீர்மானம் நிறைவேற்ற வில்லையானால், இரண்டு மாதத்துக்குள் பிரகடனம் ரத்தாகிவிட்டதாகவே மதிக்கப்படும்.

பிரகடனம் வெளியிடும் சமயத்தில் சட்ட மன்றம் கலைந்திருந்து மறுதேர்தல் முடிவு பெறுபலிருப்பதாக வைத்துக் கொள்வோம் கலைக்கபபடாத சபையான யூனியன் மேல் சபை (ராஜ்யங்கள் சபை) அந்தப பிரகடனத்தை அங்கீகரித்துத் தீர்மானம் செய்ததாகவும், கீழ் சபையில் பட்டும் அங்கீகாரம் அறிவிக்கப்படாமலிருப்பதாகவும், வைத்துக்கொள்வோம். கீழ் சபை கூடி ஒருமாத காலவரையில்தான் பிரகடனம் அமலில் இருக்கும். அதற்குள்ளாகக் கீழ் சபைப் பிரகடனத்தை அங்கீகரிததால்தான் பிரகடனம் நீடிக்கும். நெருக்கடி இருப்பதாக ஜனாதிபதி வெளியிடும் பிரகடனம் சட்ட மன்றத்தின் ஆதரவை எதிர்பார்க்காமல் அதிக காலம் நீடிக்க முடியாது.

சட்ட மன்றத்தின் கீழ் சபை நடந்து கொண்டிருந்தால் ஜனாதிபதியின் பிரகடனத்துக்கு இரண்டுமாத வாழ்வுதான். சட்டசபை கலைந்திருந்தால், சிறிதுகாலம் நீடிக்கலாம். ஆனால் சட்டசபை மறுபடியும் கூடி ஒரு மாதமாகியும் பிரகடனத்

தைச் சட்டசபை அங்கீகரிக்கவில்லையென்றால் பிரகடனம் அந்நாடு செத்துவிடும்.

மேற்கூறிய வாய்தா முடியுமுன் சட்டமன்றத்தில் இரு சபைகளும், நெருக்கடிப் பிரகடனத்தை அங்கீகரித்துவிட்டால் பிரகடனம் நீடிக்கும்.

பிரகடனம் அமலிலிருக்கும்போது மாகாண சர்க்கார்கள் தமது அதிகாரத்தை எவ்வாறு ஆள நடத்தவேண்டும் என்று நிர்ணயிப்பதோடு யூனியன் சட்ட மியற்றக்கூடிய விஷயங்களின் ஜாபிதாவுக்குப் புறம்பான விஷயங்களிலும் யூனியன் சர்க்கார் சட்ட மியற்றி நிர்வகிக்கலாம்.

யூனியன் சர்க்கார் வசூலிக்கும் சில வரிகளை மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதுபற்றி சட்டத்திலுள்ள முறைகளில் சில மாறுதல்கள் செய்யவும் யூனியன் சர்க்காருக்கு அதிகாரமிருக்கும்.

ஆனால் இதுபற்றி போடப்படும் உத்தரவுகளும் அமலுக்கு வரும் விதிகளும் உடனுக்குடன் யூனியன் சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

## (2) மாகாணம் பற்றிய நெருக்கடி

இதுவரைக் கூறியது இந்தியா முழுவதும் சேர்ந்து நடவடிக்கை யெடுக்கவேண்டிய நெருக்கடிகளைப் பற்றியது.

ஒவ்வொரு மாகாணத்தையும் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றுவதோடு, மாகாண நிர்வாகம் இந்த அரசியலமைப்பை யனுசரித்து நடக்கவேண்டும் என்பதிலும் யூனியன் சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு.

ஆகையால் தனியாக அந்தந்த மாகாணத்தை மட்டும் பாதிக்கக்கூடிய நெருக்கடிகள்பற்றி சட்டத்தில் தனி ஏற்பாடுகள் அவசியம். ஆனால், அதுபற்றி நெருக்கடிப் பிரகடனம் வெளியிடும் அதிகாரத்தைக் கவர்னர்களிடமும், ராஜப்பிர

முகர்களிடமும் விடுவதில்லை. ஏனென்றால் அவர்கள் தேர்தல் மூலம் வந்தவர்களல்ல. கவர்னர்களை நியமிப்பவரும் ராஜப் பிரமுகர்களை 'அங்கீகரிப்பவருமான' ஜனதிபதியிடமே இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப் படுகிறது.

கவர்னரிடமிருந்தோ, ராஜப் பிரமுகரிடமிருந்தோ கிடைத்த ஓர் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர், ஒரு மாகாணத்தின் அல்லது சமஸ்தானத்தின் நிர்வாகம் அரசியல் அமைப்புப்படி நடப்பது சாத்தியப்படாது என்று ஜனதிபதிக்குத் தோன்றினல் அவர் ஒரு பிரகடனம் வெளியிடலாம்.

இந்தப் பிரகடனமும், ஏற்கெனவே கூறிய பிரகடனத்தைப்போலவே இரண்டு மாதம்தான் சட்ட மன்றத்தின் அங்கீகாரமின்றி அமலில் இருக்க முடியும்.

மாகாணம்பற்றி ஜனதிபதியின் பிரகடனத்தை யூனியன் சட்ட மன்றம் அங்கீகரித்த பிறகும், அதை நீடிக்க வேண்டுமென்று சட்ட மன்றம் 6 மாதத்துக்குள் மற்ருெரு தீர்மானம் நிறைவேற்றினல்தான் 6 மாதத்துக்கதிகமாக நீடிக்கும்.

இப்படிப் பல தடவை நீடிக்க முடியுமென்ருலும் 3 வருஷத்துக்கு மேல் அந்தப் பிரகடனத்துக்கு ஆயுள் கிடையாது.

இம்மாதிரியான பிரகடனம் அமலில் இருக்கும்போது, (1) மாகாண சட்டமன்றத்தின் அதிகாரத்தை யூனியன் ஜனதிபதியிடம் ஒப்படைக்க யூனியன் சட்ட மன்றத்துக்கு அதிகாரமுண்டு, (2) மேலே குறிப்பிட்டபடி அதிகாரம் பெறும் ஜனதிபதியும், யூனியன் சட்ட மன்றமும் யூனியன் அதிகாரிகளுக்குப் புதிய அதிகாரங்களை அளிக்கலாம். (3) சட்ட மன்றத்தின் கீழ் சபை கூடாத சமயத்தில் ஜனதிபதியே இந்தியாவின் பொக்கிஷத்திலிருந்து பணம் செலவு செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

இடைக்காலத்தில் செய்த ஏற்பாடுகளில் மாகாண உரிமைக்கு முரண்படும் அம்சங்கள் ஏதேனும் இருந்தால்,

பிரகடனம் அமலில் இல்லாமல் நின்றுபோய் ஒரு வருஷத்துக்குப் பின் அந்த அம்சங்கள் ரத்தாகும்.

இம்மாதிரியான நெருக்கடிப் பிரகடனங்களின்போது பிரஜா உரிமை பற்றிய 19-வது ஷரத்திலுள்ள பிரசங்க சுதந்திரம், சங்கம் சேரும் சுதந்திரம் முதலியவற்றுக்குப் பாதகமாகவும் சில சட்டங்கள் இயற்ற முடியும். பிரஜா உரிமைகளுக்கு நீதிமன்றத்தில் போய் வாதாடலாம் என்ற உரிமையும் பாதிக்கப்படலாம்.

## (3) நிதி சம்பந்தமான நெருக்கடி

இந்தியா முழுவதின் நாணய நிலைமைக்கோ ரொக்க வசதி பற்றிய நிலைமைக்கோ (ஸ்திரத் தன்மைக்கோ) நெருக்கடி இருப்பதாக ஜனாதிபதிக்குப் புலப்பட்டால், 'நிதி பற்றிய நெருக்கடி' இருப்பதாகப் பிரகடனம் வெளியிடலாம்.

முதலில் கூறிய அகில இந்தியப் பிரகடனம் பற்றிய நிபந்தனைகளும் நடைமுறையும் இதற்கும் பொருந்தும்.

இவ்வாறு நெருக்கடிப் பிரகடனம் அமலில் இருக்கும் காலத்தில், பண வரவுசெலவு பற்றி சில கொள்கைகளை யனுஷ்டிக்கும்படி யூனியன் சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்குத் தாக்கீது அனுப்பலாம்.

அதோடு, (1) மாகாணங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைக் குறைக்கும்படி தாக்கீது அனுப்பலாம்; (2) பண சம்பந்தமுள்ள மசோதாக்கள் மாகாண சட்ட மன்றங்களில் நிறைவேறிய பிறகு கவர்னர் அங்கீகாரமளிப்பதற்கு முன்னதாக ஜனாதிபதியின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கோரலாம்; (3) சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் சம்பளத்தையும்கூட குறைக்கும்படி ஜனாதிபதி ஏற்பாடு செய்யலாம்.

## கவனிக்க வேண்டிய விஷயம்

பெரிய நெருக்கடி ஏற்படும்போது யூனியன் சர்க்கார் மாகாண விஷயங்களில் தலையிடலாம் என்பதைச் சிலர் ஆக்ஷேபிப்பதுண்டு. இவர்கள் ஒரு விஷயத்தை மறந்துவிடுகிருர்கள். யூனியன் சர்க்கார் என்பது அந்நிய சர்க்காரல்ல. அது எல்லா மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் பொது சர்க்கார் அதன் சட்ட மன்றங்களுள், மேல் சபையில் 100க்கு 95 பேர் மாகாண சட்டசபை அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். யூனியன் பார்லிமெண்டின் கீழ் சபையோ, இந்தியா முழுவதிலுமுள்ள பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவது. எந்த நெருக்கடியிலும் யூனியன் சட்டமன்றத்தின் உரிமை பாதிக்கப்படவில்லையாதலின், எவ்வளவு பெரிய நெருக்கடியிலும், இந்தியாவில் ராஜாங்கம் பொதுஜனத் தொடர்புடனேயே நடக்கிறது. சட்டமன்றத்தின் அங்கீகாரமின்றி பிரகடனம் 2 மாதம்தான் அமலில் இருக்கும். அப்போதும் நிர்வாகம் செய்வது ஜனதிபதியல்ல; பெயரளவில்தான் ஜனதிபதி செய்வதாகச் சொல்லப்படும். காரியாம்சத்தில் சட்ட மன்றத்துக்குப் பொறுப்புள்ள யூனியன் மந்திரிகளே காரியம் செய்கிருர்கள்.

ஆகையால், நெருக்கடிப் பிரகடனகாலத்திலும் ஜனநாயகத்துக்கு முரண்பாடாக நடைபெருது. மாகாண சுயாட்சியானது இந்திய ஜனநாயகச் சமஷ்டிக் கொள்கைப்படி அமலுக்கு வருவதற்குப் பதிலாக, நெருக்கடி இருக்கும் காலத்தில் மட்டும் அது சிறிதளவு யூனிட்டரி ஜனநாயக முறையில் செயல்படும். * யூனிட்டரி அமைப்பு ஜனநாயகத்துக்கு முரணல்ல.

---

* யூனிட்டரி அமைப்புக்கும், சமஷ்டி அமைப்புக்குமுள்ள வித்தியாசத்தை 11-வது அத்தியாயத்தில் காணலாம்.

## இருபதாவது அத்தியாயம்

# கதம்பம்

நமது அரசியல் சட்டத்தின் பல பகுதிகளைத் தனித் தனியே அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு சட்டத்தின் கருத்தையும் நடைமுறையும் ஆராய்ந்து வந்த போது, சிற்சில பகுதிகளைச் சொல்லாமல் விட்டிருந்தோம். அவற்றில் முக்கியமானவற்றை இங்கு தொகுத்துத் தந்திருக் கிறோம்.

## சில வகுப்பினருக்குச் சலுகைகள்

மற்ற வகுப்பினரைவிட சிறிது பின்தங்கியிருப்பவர்களுக் காகவும், சில விஷயங்களில் பெரும்பாலான மக்களுடன் தொடர்பற்று இருப்பவர்களின் தேவைகளை உத்தேசித்தும், நமது அரசியலமைப்பில் சில சலுகைகளும் பிரத்தியேக வசதி களும் செய்து கொடுக்கப்படுகின்றன.

மத சம்பந்தமான உரிமைகள் யாவற்றுக்கும் ஜீவாதார உரிமைகள் பற்றிய ஷரத்துக்களிலேயே நல்ல பாதுகாப்பு இருக்கிறது. இங்கு குறிப்பிடுவது அதுவல்ல. (1) பொருளாதாரம், கல்வி முதலியவற்றில் அதிக முன்னேற்ற மடையாதிருக்கும் ஹரிஜனங்கள் (ஷெட்யூல்ட் வகுப்பினர் என்ற ஜாபிதாவில் குறிக்கப்படும் ஜாதியார்), (2) பட்டண வாழ்க்கையுடன் அதிகத் தொடர்பில்லாமல் மலைப் பிரதேசத் தில் பண்டைப் பழக்கவழக்கங்களுடனும் கடுமையான ஜாதிக் கட்டுப்பாடுடனும் வாழும் சில மலைஜாதியார், (3) சரித்திர சம்பந்தமான காரணங்களால், இதுவரையில் மேனாட்டு வாழ்க்கை முறையிலேயே தொடர்பு கொண்டு வாழ்ந்த கார ணத்தால், இந்தியாவின் இதர சமூகங்களுடன் அதிகத்

தொடர்பில்லாமல் வாழ்ந்து வந்துள்ளவர்களான ஆங்கிலோ—இந்தியர் ஆகியவர்களைப் பற்றியே இந்த இடத்தில் நாம் குறிப்பிடுகிறோம்.

இந்த மூன்று வகையினருக்கும் இந்திய ஜனநாயக அரசியலில் போதிய பிரதிநிதித்துவம் இருப்பதற்காகவும், முற்போக்கு வசதி இருப்பதற்காகவும் சில தாற்காலிக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஷெட்யூல்ட் வகுப்பினர் (ஹரிஜனங்கள்) சம்பந்தப்பட்டமட்டில் அவர்களுக்குச் சட்டசபையில் சரியான அளவு ஸ்தானம் கிடைப்பதற்காகச் சாதாரண தொகுதியில் ஸ்தானம் உத்தரவாதம் செய்யப்படுகிறது.

சட்டசபைத் தேர்தல் முடிவில் ஆங்கிலோ—இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவமே இல்லாது போய்விட்டால், கவர்னர்கள் மாகாண கீழ் சபைக்கு இவ்வகுப்பில் சிலரை நியமனம் செய்யலாம். ஜனாதிபதி யூனியன் ஜன சபைக்கு (கீழ் சபைக்கு) 2 அங்கத்தினரை நியமனம் செய்யலாம்.

'ஷெட்யூல்ட் டிரைப்ஸ்' என்ற ஜாபிதாவில் குறிப்பிடும் மலைப்பிரதேச ஜாதியாருக்கும் சட்டசபைகளில் பொதுத் தொகுதியில் ஸ்தானம் ஒதுக்கப்படும்.

சர்க்கார் உத்தியோகங்களிலும் சர்க்காரின் நிர்வாகத் திறமைக்குப் பாதகமில்லாதபடி பார்த்துக்கொண்டு, ஹரிஜனங்களுக்கும், மலைஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் சிறிது சலுகை இருப்பதன் அவசியம் கவனிக்கப்படும். கல்வி சம்பந்தமாக ஆங்கிலோ இந்தியரின் சில விசேஷத் தேவைகள் கவனிக்கப்படும்.

ஹரிஜனங்கள், மலைஜாதியர்* ஆகிய இரு பான்மையின

*ஷெட்யூல்ட் வகுப்பினர், ஷெட்யூல்ட் மலைஜாதியினர் ஷெட்யூல்ட் மலைஜாதிப் பிரதேசங்கள் என்ற ஜாபிதாக்களில் யார் யாரைச் சேர்க்கலாம் என்பது பற்றி ஜனாதிபதியும், பார்லிமென்டும் அவ்வப்போது விதிகள் இயற்றலாம்.

ருக்கும் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக்களும் சலுகைகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கண்காணித்து இடையிடையே ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கென்று ஒரு விசேஷ அதிகாரியை ஜனாதிபதி நியமிப்பார். அந்த அதிகாரியின் அறிக்கை யூனியன் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும்.

## மலைஜாதியாரின் பிரதேசங்கள்

அஸ்ஸாம் மாகாணத்தில் சில பிரதேசங்கள் மலைஜாதியினர் பிரதேசங்களாக இருக்கின்றன. அந்தப் பிரதேசங்களுக்கு ஸ்தல சுயாட்சி யளித்து, மாகாண சர்க்காரிடம் இருக்கும் சாதாரண பொறுப்புக்கள் சிலவற்றை இந்த ஸ்தல ஸ்தாபனங்களிடமே விடவேண்டும் என்று ஏற்பாடு செய்யப் படுகிறது.

அந்தப் பிரதேசங்களின் நிர்வாகம் பற்றி கவர்னர்களிடம் சிறிது விசேஷப் பொறுப்பும் ஜனாதிபதியின் மேற்பார்வையும் இருக்கும்.

## உத்தியோக நியமனக் கமிஷன்

அரசியல் கட்சிப் பலம் எவ்வாறு மாறினாலும், அவ்வப் போதுள்ள சர்க்காரின் கொள்கைகளை உண்மையுடன் நிறைவேற்றி வைப்பவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளுமே. இவர்கள் திறமையுள்ளவர்களாக இருப்பது அவசியம். இவர்கள் அகாரணமாக நீக்கப்படாதிருப்பதும், நியாயமான முறையில் தெரிந்தெடுக்கப்படுவதும் மிக மிக அவசியம். சில உத்தியோகஸ்தர்கள் தனி மாகாணங்களில் வேலை செய்தாலும், எந்த மாகாணத்துக்கும் லாயக்குள்ளவர்களாக இருப்பது அவசியம். ஆகையால் அகில இந்திய ஸிவில் உத்தியோக வர்க்கம், அகில இந்திய போலீஸ் வர்க்கம் என்று சிலர் இருப்பது நலம் என்று பார்லிமெண்ட் கருதினால், அதற்கு ஏற்பாடு செய்ய வசதி யளிக்கப்படுகிறது.

மற்றபடி யூனியன் சர்க்காருக்கு வேண்டிய சிப்பந்திகளை யும், மாகாணங்களுக்கு வேண்டிய சிப்பந்திகளையும் தெரிந் தெடுப்பதற்காக நியாயமான முறையில் போட்டிப் பரீட்சை கள் நடத்துவதற்கும், சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்கும் ஒரு யூனியன் உத்தியோக நியமனக் கமிஷனும், மாகாண, சமஸ்தான உத்தியோக நியமனக் கமிஷன்களும் இருக்கும். ஒவ்வொரு மாகாணமும் தனித்தனியாக உத்தியோக நியமனக் கமிஷன் வைத்துக்கொள்ளாமல், தம்மிடையே ஒப்பந்தம் செய்துகொண்டு இரண்டு மூன்று மாகாணங்கள் சேர்ந்து ஒரு உத்தியோக நியமனக் கமிஷன் வைத்துக்கொள்ளலாம்.

இந்தக் கமிஷன்களில் பாதிப்பேராவது 10 வருஷ காலம் சர்க்கார் உத்தியோகத்தில் அனுபவமுள்ளவர்களாக இருக்க வேண்டும். கமிஷன் மெம்பர்கள் 6 வருஷ காலம் பதவியி லிருக்கலாம் இவர்கள் தவருக நடந்துகொண்டால்தான் இவர்களை வேலையிலிருந்து நீக்கலாம். நீக்குவதற்கு முன்ன தாக ஜனாதிபதி இவர்கள் மீதுள்ள புகாரைச் சுப்ரீம் கோர்ட் டிடம் சமர்ப்பித்து, சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புப்படியே நீக்கலாம்.

அதாவது உத்தியோக நியமனக் கமிஷன் என்பது மிகவும் உயரிய அந்தஸ்துள்ள ஒரு ஸ்தாபனமாகும்.

## ஒற்றை மாற்று வோட்டு முறை

இதற்கு முன் சில அத்தியாயங்களில், சில தேர்தல்கள் 'ஒற்றை மாற்று வோட்டு முறையில் நடைபெறும் என்று கூறியிருக்கிறோம். அந்த வோட்டு முறையின் முழு வாசகம் 'ஒற்றை மாற்று வோட்டுடன் கூடின வீதாச்சாரப பிரதி நிதித்துவ முறை' யென்பதாகும்.

'பங்கீட்டு வோட்டு' 'ஒற்றை வோட்டு' என்ற இரண்டு முறைகளிலுமுள்ள சில குறைபாடுகளை உத்தேசித்து இரண் டுக்கும் சாரசமாகக் கண்டு பிடிக்கப்பட்ட முறை 'ஒற்றை மாற்று வோட்டு முறை.'

உதாரணமாக, 480 பேர் வோட்டர்களாக இருந்து, 5 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், 480 பேரில் 250 பேர் மெஜாரிட்டிக் கட்சியைச் சேர்ந்தவர்களென்றும், மெஜாரிட்டி கட்சியிலிருந்து 'ஏ' 'பி' 'ஸி' 'டி' 'இ' என்ற ஐந்து பேரும், எதிர்கட்சியிலிருந்து 'க' 'ச' 'ட' 'த' என்ற 4 பேரும் போட்டி போடுகிறார்களென்றும் வைத்துக் கொள்வோம்.

(1) 'பங்கிடு வோட்டு முறையில்' 480 பேரில் ஒவ்வொரு வரும் 5 பேருக்கு வோட்டுச் செய்யலாம். மெஜாரிட்டி கட்சியிலுள்ள 250 பேரும் கட்டுப்பாடாக வோட்டுச் செய்தால், அத்தனை ஸ்தானங்களும் மெஜாரிட்டி கட்சிக்கே போய்விடும் ஏ. பி. ஸி. டி. இ. என்ற ஐவரும் 250 வோட்டுகள் வீதம் வெற்றி பெற்று விடுவார்கள். மற்ற அபேட்சகர்களுக்குத் தோல்வி நிச்சயம். ஏனென்றால் அவர் களுக்கு 230 வோட்டுக்கு மேல் கிடைக்கமுடியாது. இந்த வோட்டு முறையில் சிறுபான்மைக் கட்சிக்கு ஒரு ஸ்தானம் கூட கிடைக்க முடியாது.

(2) ஒவ்வொரு வோட்டரும் ஒருவருக்குத்தான் வோட்டுச் செய்யலாம் என்றிருந்தால் அதற்கு ஒற்றை வோட்டு முறை யென்று சொல்லலாம் இந்த முறையில், கட்சிக் கட்டுப் பாடு சீர்குலையாதிருக்க வேண்டுமானால், மெஜாரிட்டி கட்சியி லுள்ள 250 பேரும், தமமை 5 பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு தமது வோட்டுகளைத் தமது அபேட்சகரிடையே வினியோ கிக்க வேண்டும். அப்போது என்ன நடக்கும்?

ஏ — 50, பி — 50, ஸி — 50, டி — 50, இ — 50, வோட்டுகள் பெறலாம். மீதம் 230 வோட்டுகள் இருக்கும். எதிர் கட்சியார் தம்மிடையே ஒப்பந்தம் செய்துகொண்டு தம்மை 4 கோஷ்டியாகப் பகிர்ந்துகொண்டு ஒவ்வொருவரும் 57 வோட்டு வீதம் போடமுடியும்.

அப்போது க, ச, ட, த ஆகிய நால்வருக்கும் தலைக்கு

57 வோட்டு வீதம் கிடைத்துவிடும். அதாவது சிறுபான்மைக் கட்சியில், 4 பிரதிநிதிகள் வெற்றி பெற்றுவிட முடியும். மெஜாரிட்டி கட்சிக்கு ஒரே ஒரு பிரதிநிதிதான் என்று ஆகி விட முடியும்!

கட்சியில் கட்டுப்பாடு சிதைந்தால்தான் மெஜாரிட்டி கட்சிக்கு ஒரு ஸ்தானத்துக்கதிகமாகக் கிடைக்க முடியும். இதுவே ஒற்றை வோட்டு முறை.

(3) பங்கீடு வோட்டு முறை பெரும்பான்மைக் கட்சிக்கு ஏகபோக வசதியளித்துச் சிறுபான்மைக் கட்சிக்கு இடமே இல்லாமல் செய்துவிடுகிறது. ஒற்றை வோட்டு முறையோ பெரும்பான்மைக் கட்சியைவிட சிறுபான்மைக் கட்சிக்கு அதிகப் பிரதிநிதித்துவத்தை அளித்துவிடுகிறது.

இதை உத்தேசித்து இந்த இரண்டு முடிவுக்கும் பொதுவாக ஒரு முறையை அனுஷ்டிக்கிறார்கள். அதற்குத்தான் ஒற்றை மாற்று வோட்டு என்று பெயர்.

இதில் ஒவ்வொரு வோட்டரும், எல்லா அபேட்சகருக்கும் வோட்டுப் போடலாம். ஆனால் வோட்டுச் சீட்டில் இவர் "இன்னார்தான் எனக்கு மிகவும் பிரியமானவர்; அவர் இல்லாவிட்டால் இன்னாருக்குக் கிடைக்கட்டும். அவருக்கும் கிடைக்காவிட்டால், அடுத்தபடியாக எனக்குப் பிரியமானவர் இன்னார் —" என்று சொல்வதுபோல ஒவ்வொரு அபேட்சகர் விஷயத்திலும் தனது பிரியம், 'எந்த வரிசைக்கிரமத்தில்' இருக்கிறது என்று குறிப்பிடும் பொருட்டு, ஒவ்வொரு அபேட்சகரின் பெயருக்கும் எதிரே 1, 2, 3, 4 என்று இலக்கம் போடுவார்.

பிறகு வோட்டெண்ணும்போது ஒவ்வொருவரும் பெற்ற முதல் வோட்டு எத்தனை என்று பார்ப்பார்கள். மொத்த ஸ்தானங்களின் தொகையாகிய 5 உடன் ஒன்றைக் கூட்டி, அவ்வாறு கிடைக்கும் தொகையாகிய 6 என்ற எண்ணைக் கொண்டு, மொத்தம் பதிவான வோட்டுகளின் தொகையான 480-ஐ வகுத்து, அவ்வாறு வரும் தொகையுடன் ஒன்றைக்

கூட்டுவார்கள். நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் 480-ஐ 6-ல் வகுத்து வருவது 80. ஆகையால் யாருக்கு 'முதல் வோட்டாக' 81 வோட்டுகள் கிடைக்கின்றனவோ, அவர் வெற்றிபெற்றதாகக் கருதப்படுவார். இவ்வாறு 'முதல்வோட்டு' மூலம் 5 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டால, பிறகு வோட்டு எண்ணவேண்டியதில்லை. இல்லாவிட்டால் 81 வோட்டுக் கிடைத்தவர்களை வெற்றி பெற்றவர் என்று அறிவித்துவிட்டு, இரண்டாவது வரிசையில் யாருக்கு எவ்வளவு வோட்டுக் கிடைக்கிறது என்று பார்ப்பார்கள். இப்படியே வரிசைக் கிரமமாக எண்ணுவார்கள்.

இந்த முறையில் எல்லாக் கட்சிகளுக்கும் அவரவரது விதாச்சாரத்துக்குத் தக்கபடி பிரதிநிதித்துவம் கிடைப்பதற்குச் சந்தர்ப்பம் உண்டு. அதனைல்தான் இதற்கு 'விதாச்சாரப் பிரதிநிதித்துவம்' என்று பெயர். இதில் சாதாரணமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதாவது, ஒவ்வொரு வோட்டரும் தமக்கு யாரிடம் அதிகப் பிரியம் இருக்கிறது என்பதை 'வரிசைக் கிரமமாக' குறிப்பிட்டு வோட்டுப் பதிவு செய்யமுடியும்.

## தேர்தல் கமிஷன்

தேர்தல்கள் நேர்மையாக நடக்கவேண்டுமென்பது ஜனநாயகத்தில் மிகவும் முக்கியம். இதை உத்தேசித்து தேர்தல் ஏற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக, யூனியன் தேர்தல் கமிஷன் ஒன்று நியமிக்கப்படும். ஒரு பிரதான தேர்தல் கமிஷனரும், அவருக்குத் துணையாக பிரதேசவாரியாக பல கமிஷனர்களும் இருப்பார்கள். பிரதான தேர்தல் கமிஷனரை பதவியிலிருந்து நீக்க வேண்டுமானல், சுப்ரீம் கோர்ட் நீதிபதியை நீக்குவதற்குள்ளது போன்ற நடைமுறையை அனுஷ்டிக்கவேண்டும்.

## மொழிப் பிரச்னை

மொழிப் பிரச்னைபற்றி சுருக்கமாகச் சொல்வதாயின், (1) ஹிந்தி மொழியே ராஜாங்கப் பொது மொழியாகும் என்ற கொள்கையை மட்டும் ஊர்ஜிதம் செய்து, (2) உடனடியாக அது அமலுக்கு வராமல், ஆங்கிலமே இந்திய யூனியன் சர்க்காரின் உத்தியோக மொழியாக 15 வருஷகாலத்துக்கு இருந்து வரும் என்றும், (3) மாகாணங்களில் பல விஷயங்களை மாகாண மொழியிலேயே நடத்துவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுபற்றி சட்டத்திலுள்ளதைச் சுருக்கிச் சொல்வது கஷ்டம். ஆகையால் இதுபற்றிய சட்ட ஷரத்துக்களின் முழு வாசகத்தையும் இப் புத்தகத்தின் இறுதியிலுள்ள அனுபந்தத்தில் தந்திருக்கிறோம். சட்ட மன்றங்களில், ஆங்கிலமும், ஹிந்தியும் தெரியாதவர்கள் தமக்குத் தெரிந்த மொழியில் பேசலாம்.

## இந்திய ராஜ்யங்களிடையே வரியில்லா வர்த்தகம்

மாகாணங்களிடையே நடக்கும் வர்த்தகத்தின்மீது வரி விதிக்கக்கூடாது என்பது எல்லா நாடுகளிலுமுள்ள கொள்கை. அது இந்திய அரசியலமைப்பிலும் உண்டு.

ஆனால் இப்போது உணவுப் பஞ்சம் முதலிய சங்கடங்கள் இருப்பதால் ஜில்லாவிட்டு ஜில்லா, சில பொருள்களில் ஏற்றுமதிக் கட்டுப்பாடு இருப்பதுபோல, மாகாணங்களிடையேயும் இவ்வாறு கட்டுப்பாடுகள் அவசியமாகலாம் என்பதை முன்னிட்டுச் சில விதிவிலக்குகள் அளிக்கப்படுகின்றன. ஆனால் இது சம்பந்தமாக யூனியன் சட்டமன்றம்தான் சட்டமியற்ற முடியும். அவ்வாறு யூனியன் பார்லிமென்ட் இயற்றும் சட்டத்தில் ராஜ்யங்கள், பரஸ்பரம் பாதகமாகத் தடையேற்படுத்த உரிமையளிப்பதாகவோ, சில மாகாணங்களுக்கு மட்டும் சலுகையளிப்பதாகவோ இருக்கக்கூடாது. ஆனால் சில பொருள்களில் பஞ்சம் ஏற்படும் நிலைமையைச் சமாளி

பதற்கு மட்டும் சிறிது தாரதம்யம் காட்டலாம். தனியாகக் குறிப்பிட்டுச் சட்டம் இயற்றித்தான் அவ்வாறு செய்யலாம்.

எந்த மாகாணமும் வெளி மாகாணத்திலிருந்து இறக்குமதியாகும் பொருள்மீது வரிபோட்டால், அதற்குக் குறைவாக இல்லாமல் தன் மாகாணத்தின் பொருள்மீதும் வரிபோட வேண்டும். ஆனால் இதற்கான மசோதா மாகாண சட்டசபையில் வருவதற்கு முன்னதாகவே ஜனாதிபதியின் அனுமதியைப் பெறவேண்டும். சுதந்திர வர்த்தகம் பற்றிய பொது விதியும் விதி விலக்குகளும் நேர்மையான முறையில் வேலை செய்கின்றனவா என்று கண்காணிக்க, யூனியன் சட்ட மன்றம் ஓர் அதிகாரியை நியமிக்கலாம். சில சமஸ்தானங்கள் வெளி மாகாணங்களிலிருந்து வரும் பொருள்கள்மீது வரி விதிக்கும் வழக்கம் இருந்துவருகிறது. யூனியன் சர்க்காருக்கும், அந்த சமஸ்தானங்களுக்கும் இது பற்றி ஏற்கனவேயுள்ள ஒப்பந்தங்கள் பத்து வருஷகாலத்துக்கே நீடிக்கும்.

**விற்பனை வரிபற்றி தாற்காலிக விதிவிலக்கு**

ஒரு மாகாணத்தை விட்டு மற்றொரு மாகாணத்தில் நடக்கும் பேரங்கள் மீது எந்த மாகாணமும் விற்பனை வரி போடக்கூடாது என்று அரசியல் சட்டத்தில் தடை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தற்காலம் சில மாகாணங்களில் அம்மாதிரி வரிகள் இருக்கின்றன. அவற்றை உடனடியாகவே ரத்து செய்தால் அந்த மாகாணங்களுக்குச் சிறிது சங்கடமாக இருக்கும். அதை உத்தேசித்து இப்போதுள்ள வரிகளை 1951-ம் வருஷம் மார்ச் மாதம்வரை நீடிக்க அனுமதிக்கப்படுகிறது.

## இந்தியாவின் பிரஜை எனும் உரிமை

இந்தியாவில் பூர்ண உரிமையும் பூர்ணமான பொறுப்பும் உள்ளவர்கள் யார்? அதாவது இந்திய யூனியனின் பிரஜை

(குடி) என்ற அந்தஸ்துள்ளவர்கள் யார் யார்? இதுபற்றி அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சிலர் தம் பிறப்பு காரணமாகவே இந்தியாவின் பிரஜைகள். சிலர் இப்போதைய இந்திய எல்லைக்கு வெளியே பிறந்தவர்களாயினும் இந்தியாவில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டதால் இந்தியர்களாகிறார்கள். சிலர் இந்தியாவிலேயே பிறந்தவர்களாயினும் இடைக்காலத்தில் இந்தியாவைவிட்டு வேறு நாட்டுக்கு (பாகிஸ்தானுக்கு) குடி பெயர்ந்துபோய், மறுபடியும் இந்தியாவுக்கே திரும்பி வந்திருக்கிறார்கள். பழைய இந்தியா பிளக்கப்பட்டுப் பாகிஸ்தான் ஏற்பட்டதால், இம்மாதிரியான தர்மசங்கடங்கள் ஏற்பட்டன. இவர்களுக்கும் பிரஜை என்ற அந்தஸ்தை அளிப்பதற்கு அரசியல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், சில நாடுகள் (பிரிட்டன் போன்ற நாடுகள்) அங்குள்ள இந்தியருக்கு அந்நாட்டின் இயற்கையான பிரஜைகளுக்குரிய உரிமைகளை அளிக்க முன்வந்தால், அந்நாட்டின் பிரஜைகளுக்கு இந்தியாவில் அதுபோன்ற உரிமைகள் அளிப்பது அவசியமாகலாம். இதற்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதுபற்றிய சட்ட ஷரத்துக்கள் இந்நூலின் அனுபந்தத்தில் 2, 3, 4-வது பக்கங்களில் இருக்கின்றன.

## அரசியல் பதவிகளின் சம்பளம்

ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, கவர்னர்கள், நீதிபதிகள், மந்திரிகள், சட்டமன்ற சபாநாயகர்கள், உதவி சபாநாயகர்கள், சட்டசபை அங்கத்தினர்கள், ஆடிட்டர்-ஜெனரல் ஆகியோரின் சம்பளம்பற்றி அரசியலமைப்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதன்படி புதிய அரசியல் அமலுக்கு வரும்போது ஜனாதிபதியின் சம்பளம் மாதம் ரூ. 10,000. கவர்னர்களின் சம்பளம் ரூ. 5,500.

உதவி ஜனாதிபதி, யூனியன் மேல் சபை அக்கிராசனராக இருக்கும்போது, அந்தப் பதவிக்குள்ள சம்பளத்திலேயே இருப்பார். அவர் ஜனாதிபதியாக வேலை செய்யும் காலத்தில் ஜனாதிபதிக்குரிய சம்பளம் அவருக்குக் கொடுக்கப்படும்.

யூனியன் சட்டமன்றத்தின் மேல் சபை அக்கிராசனருக்கும், கீழ் சபை சபாநாயகருக்கும் தற்காலம் அரசியல் நிர்ணய சபை அக்கிராசனருக்குள்ள சம்பளமே இருந்து வரும். மாகாண சட்டமன்றங்களின் சபாநாயகர்கள் அக்கிராசனர் ஆகியோருக்கு இப்போதுள்ள சம்பளமே நீடிக்கும்.

யூனியன் நீதி மன்றத்தின் பிரதம நிதிபதிக்கு மாதம் ரூ. 5000 சம்பளம். மற்ற நீதிபதிகளுக்கு ரூ. 4000.

ஹைகோர்ட் பிரதம நீதிபதிக்கு ரூ. 4000; மற்ற ஹைகோர்ட் நீதிபதிகளுக்கு ரூ. 3500.

ஆடிட்டர்-ஜெனரல் சம்பளம் ரூ. 4000.

மேலேயுள்ளது 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ம் தேதி யன்று அமலுக்கு வரும் சம்பளம்.

பிறகு பார்லிமென்ட் சட்டமியற்றி இந்தப் பதவிகளுக்குரிய சம்பளங்களை நிர்ணயிக்கலாம். ஆனால், ஒருவர் பதவியிலிருக்கும்போது, அவரது சம்பளத்தைக் குறைக்கக்கூடாது. இவர்களது சம்பளம் அரசியல் கட்சிக் காரணங்களால் பாதிக்கப்படலாகாது என்பதே இதன் கருத்து. உத்தியோக நியமனக் கமிஷன் அங்கத்தினர் சம்பளம் விஷயத்திலும் இதே கொள்கைதான்.

மந்திரிகளின் சம்பளம், சட்டமன்ற அங்கத்தினர் சம்பளம் இவற்றைப் பற்றி யூனியன் சட்டமன்றமும், ராஜ்யங்களின் சட்டமன்றங்களும் அவ்வப்போது எப்படி வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம். புதிதாகச் சட்டமியற்றாத வரையில் இப்போதுள்ள சம்பளத் திட்டமே நீடிக்கும்.

## தனி ஸ்தானம் பத்து வருஷத்துக்கே

ஹரிஜனங்களுக்கும், ஷெட்யூல்ட் வகுப்பினருக்கும் பொதுத் தொகுதியில் ஸ்தானம் ஒதுக்கும் தனி வசதி பத்து வருஷ காலத்துக்குப் பிறகு இருக்காது. அதாவது அந்தப் பத்து வருஷ காலத்துக்குள் தனி ஏற்பாடு இல்லாமலே, அவர்களும் மற்றவர்களைப் போல, ஜனசங்கியைக்குத் தக்கபடி, பிரதிநிதித்துவம் பெறக்கூடிய நிலைமையை அடைந்து விடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ராஜ்யங்கள் உறவு

ஒரு ராஜ்யத்திலிருந்து மறு ராஜ்யத்தின் வழியாகவோ அல்லது மறு ரஜ்யத்திற்கோ செல்லும் நதிகளின் தண்ணீரையும், நதிப் பள்ளத்தாக்குகளையும் கட்டுப்படுத்துவதோ அல்லது உபயோகிப்பதோ போன்ற விஷயங்களில் ஏற்படும் உரிமைத் தகராறுகளையும் சச்சரவுகளையும் மத்தியஸ்த தீர்ப்புக்கு விட பார்லிமென்ட் சட்டமியற்றலாம். இவ்வாறு ஏற்பாடு செய்யப்படும்போது அந்தத் தகராறுகள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லமாட்டா.

ராஜ்யங்களிடையே ஏற்படக்கூடிய தகராறுகள்பற்றி பரிசீலனை செய்யவும், தகராறுகளைத் தீர்ப்பதற்கு வழிகாணவும், ஜனாதிபதிக்குச் சிபார்சுசெய்ய 'ராஜ்யங்கள் உறவுக் கவுன்ஸில்' ஒன்றை ஜனாதிபதி விரும்பினால் நியமிக்கலாம்.

## ராஜாங்கத் தலைவரின் கவுரவத்துக்குப் பாதுகாப்பு

ஜனாதிபதியோ, கவர்னர்களோ, ராஜப் பிரமுகர்களோ, தம் உத்தியோக நிமித்தமாகச் செய்த எந்தக் காரியத்துக்காகவும் கோர்ட்டுகளில் அவர்கள்மீது வழக்குத் தொடரமுடியாது. ஜனாதிபதி மீது புகார் இருந்தால், ஏற்கெனவே இப் புத்தகத்தின் 108-ம் பக்கத்தில் (சட்டத்தின் 61-வது ஷரத்தில்)

விவரிக்கப் பெற்றுள்ள நடைமுறைப்படி யூனியன் சட்ட மன்றம் நடவடிக்கை எடுக்கலாம்.

உத்தியோக காலத்தில், தனி முறையில் செய்த காரியங்களுக்காகக்கூட ராஜாங்கத் தலைவர்கள்மீது ஸிவில், கிரிமினல் வழக்குகள் தொடர முடியாது.

1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26ம் தேதிக்கு முன் ஏதேனும் ஓர் இந்திய சமஸ்தானதிபதியுடன் இந்திய சர்க்கார் ஏற்படுத்திக்கொண்ட ஒபபந்ததகின்படி, சமஸ்தானதிபதியின் உரிமைகள் மரியாதைகள் பற்றி ஏதேனும் உறுதிமொழியோ, உத்தரவாதமோ அளிக்கப் பெற்றிருந்தால் சட்டமன்றங்கள் சட்டமியற்றும்பொழுது, அவ்வுத்தரவாதங்களையும் உறுதி மொழிகளையும் கருததில்கொண்டே காரியம் செய்யவேண்டும்

யூனியன் சர்க்கார் தன் அதிகார எல்லைக்குட்பட்டு அனுப்பும் தாக்கீதுகளை எந்த ராஜ்யமேனும் மதித்து நடக்காவிடில், அந்த ராஜ்யததின் நிர்வாகம் இவ்வரசியல் சட்டத்தின்படி நடைபெறவில்லை என மதித்து, ஜனதிபதி நெருக்கடிப் பிரகடனம் வெளியிட முடியும்.

இவை பற்றிய ஷரத்துகள், சட்டத்தில் 'பலவகை' என்ற தலைப்புடன் ஒரு தனி அத்தியாயத்தில் தரப்படுகின்றன.

## தாற்காலிக, இடைக்கால ஏற்பாடுகள்

ஏற்கனவேயுள்ள அரசியல் அமைப்பிலிருந்து புதிய அரசியலமைப்புக்கு மாறும்பொழுது, அனுவசியமான சீர்குலைவு ஏற்படாதிருப்பதற்ாக, சட்டத்தில் சில ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இவற்றை, 'மாறுதல் காலத்து' ஏற்பாடுகள் என்று சொல்லலாம்.

சில விஷயங்களில் இப்போதுள்ள நிலைமையே சிறிது காலம் நீடிக்க வேண்டியிருக்கும். உதாரணமாக, 1950-ம் வருஷம் ஜனவரி மாதத்திற்குள்ளாகப் புது அமைப்பிலுள்ள

சட்ட சபைகளை ஏற்படுத்திவிட முடியாது. ஆகையால் இப்பொழுதுள்ள சட்டசபைகளே நீடிக்க வேண்டியிருக்கும். இதுபோன்ற விஷயங்களுக்காகச் செய்யும் ஏற்பாடுகளைத் 'தாற்காலிக ஏற்பாடுகள்' என்று சொல்லலாம்.

காஷ்மீர் பற்றி இப் புத்தகத்தில் 16-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் தாற்காலிக ஏற்பாடு என்ற இனத்தைச் சேர்ந்தன. இப்போதுள்ள சில சட்டங்களை நீடிப்பதற்கும் ஷரத்துக்கள் இருக்கின்றன.

## சட்டத்தின் பெயரும், தொடக்கமும்

இந்தத் தலைப்புடன் உள்ளதுதான் சட்டத்தின் கடைசி அத்தியாயம். இதில் மூன்று ஷரத்துக்கள் இருக்கின்றன:

"இந்த அரசியல் அமைப்புக்கு 'இந்தியாவின் அரசியல் அமைப்பு' என்று பெயர் வழங்கவேண்டும்.

"இந்த அரசியல் அமைப்பு 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

"(அன்றுமுதல்) 1947-ம் வருஷத்து இந்திய சுதந்திரச் சட்டமும் 1935-வது வருஷத்து இந்திய அரசியல் சட்டமும் ரத்தானதாக மதிக்கப்படும்.

"இந்திய வழக்குகளுக்குப் பிரிட்டனின் பிரிவி கவுன்சிலில் அப்பீல் கிடையாது என்ற சட்டம் அப்படியே இருக்கும்."

## இருபத்தோராவது அத்தியாயம்

# அரசியல் அமைப்பைத் திருத்த நடைமுறை

நமது அரசியலமைப்புச் சட்டத்தில் குறைகளே இல்லையென்று சொல்லுபவர் யாரும் இருக்க முடியாது. ஏனென்றால் இது மனிதனால் இயற்றப்பட்ட சட்டம். தேசத்தில் சரித்திர சம்பந்தமான காரணங்களால் சில கவலைக்கிடமான பிரச்னைகள் இருக்கின்றன. பூர்ண மான சமூக ஐக்கியம் ஏற்பட்டாகவில்லை மனித சுபாவத்தைக் கருத்தில் கொள்ளாமல் சட்டம் இயற்றமுடியாது. மனிதன் குறைபாடுள்ளவன். மனிதன் இயற்றும் சட்டம் குறைபாடற்றதாக இருக்கமுடியாது. பலர் சேர்ந்து விவாதித்து வோட்டெடுத்துச் செய்யும் முடிவுகள் யாருக்கும் பூர்ண திருப்தியை அளிக்கமுடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மை, அது எந்த காலத்தில் எந்த நிலைமையில் இயற்றப்படுகிறது என்பதையும் பொறுத்திருக்கிறது. நாம் 1935-ம் வருஷத்தில் ஓர் அமைப்பைத் தயாரித்திருந்தால் அது வேறு விதமாக இருந்திருக்கும். 1955ம் வருஷத்தில் தயாரித்தால் மற்றொரு வகையாக இருக்கக்கூடும். இப்போதைய நிலைமையில் எது சாத்தியமோ, எதற்குப் பெருவாரியான ஆதரவு இருக்குமோ, அதை அரசியல் நிர்ணய சபை செய்திருக்கிறது.

ஆனால் அவ்வப்போது காணப்படும் குறைகளையும், அவ்வப்போது காலப்போக்கில் நிரந்தரமாக ஏற்படும் மாறுதல்களையும் உத்தேசித்து மாறுதல்கள் செய்ய அரசியலமைப்பிலேயே ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால்

அலட்சியமாக மாறுதல் செய்யாமல் போதிய அளவு பெரும் பான்மையான ஆதரவுடன்தான் மாற்ற முடியும்.

மாகாண உரிமைகளில் மாறுதல் செய்யும் விஷயத்தில் இரட்டிப்புப் பாதுகாப்பு இருக்கிறது. இதுபற்றிய நடை முறை 368-வது ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் சாராம்சம் வருமாறு :

அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமானல், அதற்கான மசோதா யூனியன் பார்லிமெண்டில்தான் வர வேண்டும். இரண்டு சபைகளிலும் அது தனித் தனியாக நிறை வேற வேண்டும்.

நிறைவேறுவதற்குச் 'சாதாரண மெஜாரிட்டி' போதாது. அதாவது வோட்டெடுக்கிற தினத்தில் எத்தனை பேர் ஆஜராக இருக்கிருர்களோ, அதில் மட்டும் மெஜாரிட்டி (பாதிக்கு மேற் பட்ட தொகை) இருந்தால் போதாது. ஆஜராயிருப்ப வர்களில் மூன்றிலிரண்டு பகுதியினரின் ஆதரவு வேண்டும். உதாரணமாக, யூனியன் கீழ் சபை 480 பேர் கொண்டது என்று வைத்துக்கொள்வோம். அரசியல் திருத்த மசோதா வரும் கூட்டத்தில் 210 பேர்தான் வந்திருந்தார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதில் மூன்றிலிரண்டு பங்கான 140 பேர் ஆதரவு இருந்தால் போதாது.

அந்தச் சபையின் மொத்த அங்கத்தினர்களில் பாதிப் பேருக்கு மேற்பட்ட ஆதரவுவேண்டும். அதாவது, 241 பேரின் ஆதரவு வேண்டும். சபையில் 450 பேர் வந்திருந்தால், 300 பேரது ஆதரவு வேண்டும். அன்று சபையில் 250 பேர்தான் ஆஜராகயிருந்தார்கள் என்ருல், 250 பேரிள் 241 பேரது ஆதரவு வேண்டியிருக்கும்.

### மாகாணங்கள் சம்மதம் தேவை

மேலே கூறியது பொதுவிதி. ஆனல் மாகாணங்களைப் பாதிக்கக்கூடிய சில ஷரத்துக்களை மாற்றுவதாயின் மேலே

யுள்ளபடி, யூனியன் சட்ட மன்றத்தில் நிறைவேறினால் மட்டும் போதாது. இந்தியாவிலுள்ள 18 ராஜ்யங்களில் 9 ராஜ்யங்களாவது திருத்தத்துக்குச் சாதகமாக ஊர்ஜிதம் செய்து தீர்மானம் நிறைவேற்றின பிறகுதான், மாறுதல் அமலாகிவர முடியும். (ஊர்ஜிதம் செய்யும் இந்தத் தீர்மானத்துக்குச் சாதாரண மெஜாரிட்டி போதும்.) இவ்வாறு மாகாணங்களின் சம்மதமின்றி மாற்றக்கூடாது என்று நிபந்தனையுள்ள ஷரத்துக்களின் ஜாபிதா பின் வருமாறு:

(1) ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் முறை; யூனியன் நிர்வாக உரிமையின் அதிகார எல்லை; ராஜ்யங்களின் நிர்வாக உரிமையின் அதிகார எல்லை; சீப் கமிஷனர் மாகாணங்களின் ஹைகோர்ட்டுகள் பற்றிய ஷரத்து.

(2) யூனியன் நீதிமன்றம் பற்றிய ஷரத்துகள்; மாகாண ஹைகோர்ட்டுகள் பற்றிய ஷரத்துக்கள்.

(3) சட்டமியற்றும் உரிமை பற்றி யூனியனுக்கும் ராஜ்யங்களுக்குமிடையே அதிகாரப் பங்கீடு; அதுபற்றிய யூனியன் ஜாபிதா, பொது ஜாபிதா, ராஜ்யங்களின் ஜாபிதா.

(4) யூனியன் சட்ட மன்றத்தில் ராஜ்யங்களுக்குள்ள பிரதிநிதித்துவம்.

(5) சட்டத்தைத் திருத்தும் நடைமுறைபற்றிய ஷரத்து.

மேலேயுள்ள ஐந்தும் மாகாணங்களையும் சமஸ்தானங்களையும் பாதிக்கும் விஷயங்களாகையால், மாகாண சமஸ்தான சட்ட சபைகளின் ஊர்ஜிதம் அவசியம் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

# பிரதிக்கினை

ஜனாதிபதி, கவர்னர்கள், ராஜப்பிரமுகர்கள், உயர்தர நீதிபதிகள், மந்திரிகள், சட்டமன்ற அங்கத்தினர் எல்லோரும் தமது பதவியில் அமருமுன், ஒரு சத்தியப்பிரமாணம் அல்லது பிரதிக்கினை எடுத்துக்கொள்ள வேண்டும். மந்திரிகள் இரண்டு பிரதிக்கினைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒன்று அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருப்பது; மற்றொன்று சர்க்காரின் ரகசியத்தைக் காப்பாற்றுவது.

ஜனாதிபதியும், கவர்னர்களும், ராஜப் பிரமுகர்களும் எடுத்துக்கொள்ளும் பிரமாணத்தில்,

> "அரசியலமைப்பையும் சட்டத்தையும் பேணி, பாதுகாத்து, காப்பாற்றுவதாக"

பிரதிக்கினை எடுத்துக்கொள்கிறார்கள். மற்றெல்லோரும்,

> "அரசியலமைப்புக்கு விசுவாசமாக நடந்து கொள்வதாகப்" பிரமாணம் செய்து கொள்கிறார்கள்.

நீங்களும், இந் நூலை எழுதிய நானும், மேலே கூறிய ஒரு பதவியையும் வகிக்காதிருக்கலாம். நாம் பிரதிக்கினை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சட்டம் சொல்லவில்லை.

ஆயினும் அரசியலமைப்புக்கு விசுவாசமாக நடந்து கொள்வதுதான் உண்மையான தேசப் பக்தி. நம் நாட்டில் எல்லோரும் இவ்வரசியலமைப்பினிடம் பூர்ண விசுவாசத்துடன் நடந்து கொள்ளுவோமானால், இந்த அரசியலமைப்பு நமது தேச முன்னேற்ற விருப்பங்கள் யாவற்றையும் நிறைவேற்றித்தரும் காமதேனுவாக அமையும். இதுவே இந் நூலின் முடிவுரையாகும்.

வாழ்க பாரத சமுதாயம்!

# ஷரத்துக்கள் அட்டவணை

[நம் அரசியலமைப்புச் சட்டம் 22 'பகுதிகளும் 8 தப்ஸில்களும் கொண்டது. சில பகுதிகள் அத்தியா யங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

முக்கியமான பகுதிகளையும் அத்தியாயங்களையும் சட்டததிலுள்ள வரிசையிலேயே பெரிய எழுத்தில் எழுதி, சம்பந்தப்பட்ட ஷரத்துக்களைக் குறிப்பிட்டு அந்த ஷரத்துக்களின் கருத்து இந்தப் புத்தகத்தில் எந் தப் பக்கங்களில் இருக்கின்றன என்பதையும் கீழே தருகிறோம்.

ஒவ்வொரு தப்ஸிலும் சட்டத்தின் சில ஷரத்து களுடன் தொடர்பு கொண்டது. ஆகையால் சம்பந் தப்பட்ட தப்ஸில்களின் கருத்து, ஷரத்துக்களின் கருத்தைத்தரும் இடங்களிலேயே இருக்கும்.]

1. **யூனியனும் அதன் பிரதேசங்களும்** (ஷரத்து: 1 முதல் 4)

*பெயரும் நிலப்பரப்பும்: பக். 13 (அனு. 2); நடைமுறை பக். 14.*

2. **பிரஜை எனும் உரிமை** (ஷரத்து: 5—11)
*பக். 181 (அனு. 2—4)*

3. **ஜீவாதார உரிமைகள்** (ஷரத்து: 12—35)
*பக். 4 (அனு. 4—7)*

4. **ராஜாங்க லட்சியம் பற்றிய கொள்கைகள்** (ஷரத்து: 36—51)
*பக். 4 (அனு. 7—11)*

5. **யூனியன்** (ஷரத்து ; 52—78)

ஜனாதிபதி : பக். 6—20; தேர்தல் 107; யோக்யதாம்சம்—பதவிக்காலம்—108; ஜனாதிபதியை நீக்க விசேஷ நடைமுறைகள்—108—109, உதவி ஜனாதிபதி: பக். 109—110; மந்திரிசபை: பக். 20—21.

**சட்ட மன்றம்** (ஷரத்து: 79—122)

மேல் சபை அமைப்பு: பக். 53, 55; கீழ்சபை அமைப்பு: பக். 42-43, அங்கத்தினர் யோக்யதாம்சம்: பக். 43,—55; கூட்டங்கள் பற்றிய சம்பிரதாயம்: 154—155; சட்டம் இயற்றும் நடைமுறை: மேல் சபை, கீழ் சபை உறவு: 63—65; ஜனாதிபதி சம்மதம்: பக். 149; பண சம்பந்தமுள்ள மசோதாக்கள்: 63, 151.

**ஜனாதிபதி அவசரச் சட்டம்** (ஷரத்து: 123)
பக்: 156; 157.

**நீதி மன்றம்** (ஷரத்து: 124—147)
பக்: 160—164.

**ஆடிட்டர்-ஜெனரல்** (ஷரத்து: 148—151)
சம்பளம் பக். 182.

6. **மாகாணங்கள்**

கவர்னர் : (ஷரத்து: 153—162)
நியமனம்: 6, 110, யோக்யதாம்சம்: 111, பதவிக்காலம்: 111.
மந்திரி சபை: (ஷரத்து: 163—164)
பக்: 77—105.
சட்ட மன்றங்கள் (ஷரத்து: 168—212)
மேல்சபை அமைப்பு: 47-52; கீழ்சபை அமைப்பு: 37-42; அங்கததினர் யோக்யதாம்சம்: 41; கூட்டங்கள் சம்பிரதாயங்கள்: 154—155 சட்டமியற்றும் நடைமுறை: மேல் சபை கீழ்சபை உறவு: 57—61; சட்ட அங்கீகாரம்: 149—151; பணசம்பந்தமான மசோதா 58, 151.

கவர்னர் அவசரச் சட்டம்:—(ஷரத்து: 213) பக். 158.
நீதிமன்றம்:—(ஷரத்து: 214—237) பக். 164.

7. சமஸ்தானங்கள் (ஷரத்து: 238)
பக். 8—9, 10—17
காஷ்மீர்: 16.

8. சீப் கமிஷனர் மாகாணங்கள் (ஷரத்து; 239-242)
பக். 13—15.

9. இதர பிரதேசங்கள் (ஷரத்து; 243)
பக். 13—15.

10. மலைஜாதிப் பிரதேசங்கள் (ஷரத்து: 244)
பக். 173.

11. யூனியன்—ராஜ்யங்கள் உறவு
(ஷரத்து; 245—266)
பக். 5—119—147.

12. வரிவருமான | வினியோகம்
முதலியன (ஷரத்து: 264—300)
பக். 137—139—180.

13. இந்திய ராஜ்யங்களிடையே
வர்த்தகம் (ஷரத்து; 301—307)
பக். 179—180.

14. யூனியன் ராஜ்யங்கள்
உத்தியோக வர்க்கம் (ஷரத்து: 308—323)
பக். 173.

15. தேர்தல் (ஷரத்து: 324—329)
பக், 178.

16. சிறுபான்மையினருக்கு
விசேஷ வசதிகள் (ஷரத்து; 330—342)
பக். 39—40, 170—171, 172.

17. பொது மொழி (ஷரத்து: 343—351)
பக். 179, (அனு. 11—16)

18. நெருக்கடி ஏற்பாடுகள் (ஷரத்து; 352—360)
பக். 164—170.

19. பலவகை விஷயங்கள் (ஷரத்து: 361—367)
பக். 182, 183.

20. அரசியல் சட்டத்தைத்
திருத்த நடைமுறை (ஷரத்து: 368)
பக். 185.

21. தாற்காலிக, இடைக்கால
ஏற்பாடுகள் (ஷரத்து : 362—392)
பக். 183.

22. சட்டத்தின் பெயரும்
தொடக்கமும் (ஷரத்து : 393—395)
பக். 184.

---

| இடம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| பக். 53 வரி 16 | கீழ் சபையால் | மாகாண கீழ்சபைகளால் |
| பக். 60 வரி 24 | மலேசோதா | மசோதா |
| பக். 76 வரி 12 | கானடா மந்திரிசபை | கானடா மேல்சபை |
| பக். 79 வரி 15 | அமைச்சகர்கள் | அமைச்சர்கள் |
| பக். 84 வரி 3 | தெடர்பு | தொடர்பு |
| பக். 87 வரி 9 | வருத்ஷக்கு | வருஷத்துக்கு |
| பக். 96 வரி 25 | பெரும்பான்ம | பெரும்பான்மை |
| பக். 97 வரி 20 | மாறியுள்ள | பொறுப்புள்ள |
| பக். 169 வரி 4 | பிரஜா | ஜீவாதார |
| ,, வரி 6 | ,, | ,, |

# அனுபந்தம்

(1) இந்திய யூனியன் எல்லைகளும் அதிலுள்ள ராஜ்யங்களின் எல்லையும்,

(2) இந்தியாவின் "பிரஜை" என்பது யார்,

(3) உத்தரவாதம் செய்யப்படும் ஜீவாதார உரிமைகள்,

(4) இந்திய அரசியல் நிர்வாகத்தின் பொது லட்சியங்கள்,

(5) ராஜாங்க மொழி,

—முதலியவற்றைப்பற்றிப் பொதுப்படையாக விளக்கியிருக்கிறோம்.

ஆயினும் இவை சட்டத்தில் எங்கு, எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியும் பொருட்டு முழு விவரங்களுடன் இதுபற்றிய ஷரத்துக்களின் கருத்தை இவ்வனுபந்தத்தில் தருகிறோம்.

1 முதல் 4 வரையுள்ள ஷரத்துகள் யூனியன், ராஜ்யங்கள் ஆகியவற்றின் எல்லையைப் பற்றியவை.

5 முதல் 11 வரையுள்ள ஷரத்துகள் "இந்தியப் பிரஜை" என்பதன் இலக்கணம்.

14 முதல் 35 வரையுள்ள ஷரத்துகள் ஜீவாதார உரிமைகள் பற்றியவை.

36 முதல் 51 வரை அரசியல் நிர்வாகத்தின் பொது லட்சியங்கள்.

343 முதல் 351 வரையுள்ளவை ராஜாங்க மொழியைப் பற்றியவை.

இவை தனித்தனியாக அனுபந்தத்தில் தரப்படுகின்றன. இவற்றுள் அரசியல் நிர்வாகத்தின் பொதுலட்சியங்கள் பற்றிய அனுபந்தமும் மொழிபற்றிய அனுபந்தமும் மட்டும் சட்டத்தின் வாசகத்திலேயே அமைக்கப் பட்டிருக்கின்றன.

மற்ற அனுபந்தங்கள் ஷரத்துவாரியாக கருத்தைமட்டும் கூறுகின்றன

# 1. இந்திய யூனியனின் நிலப்பரப்பும், ராஜ்யங்களின் எல்லைகளும்

1. (1) இந்தியா அதாவது பாரத தேசம், பல ராஜ்யங்களின் யூனியனாக (கூட்டுறவாக), ஐக்கியமாக இருக்கும்.

(2) இந்தியாவின் ராஜ்யங்களும், அவற்றின் நிலப்பரப்பும் எவை என்பது முதலாவது தப்ஸிலின் (ஷெட்யூலின்) 'ஏ', "பி", "ஸி" பகுதியில் சொல்லப்பட்டிருக்கும். (இப்புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தைப் பார்க்கவும்).

2 (ஏ) ராஜ்யங்களின் நிலப்பரப்பும், (பி) முதலாவது தப்ஸிலில் "டி" பகுதியில் பிரஸ்தாபிக்கப்பட்ட பகுதிகளும் (ஸி) இந்திய யூனியன் பெறக்கூடிய இதர நிலப்பரப்பும் சேர்ந்ததும் இந்தியாவின் நிலப்பரப்பு

3. பார்லிமெண்ட் சட்டமியற்றி ராஜ்யங்களின் எல்லையை மாற்றலாம்; சில ராஜ்யங்களைப் பிரித்துப் புது ராஜ்யங்கள் ஏற்படுத்தலாம்; ஒரு ராஜ்யத்தின் விஸ்தீர்ணத்தைக் குறைத்து மற்றொன்றின் விஸ்தீர்ணத்தை அதிகரிக்கலாம். இரண்டு ராஜ்யங்களை ஒன்று சேர்க்கலாம். இரண்டு ராஜ்யங்களின் பகுதிகளைச் சேர்த்துப் புது ராஜ்யமாக்கலாம்.

அவ்வாறு செய்யும்போது மாகாணங்களைக் கலந்து கொண்டே செய்யவேண்டும். (விவரங்கள் இப்புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ளன)

4. இரண்டாவது ஷரத்துப்படியும் மூன்றாவது ஷரத்துப்படியும் சட்டமியற்றிக் காரியம் செய்யும்போது அதன் விளைவாகச் சட்டமன்றப் பிரதிநிதித்துவம் முதலிய பல விஷயங்களுக்கான ஏற்பாடுகளும் அந்தச் சட்டங்களில் இருக்க வேண்டும்.

# 2. பிரஜைகள்

**5. (ஏ) இந்தியாவின் எல்லைக்குள் பிறந்த எல்லோரும் இந்தியாவின் பிரஜைகள்.**

(பி) ஒருவனது தாயோ, தகப்பனோ இந்திய எல்லையில் பிறந்தவராயின் அவரும் இந்தியப் பிரஜையே.

(ஸி) 1950 ஜனவரி 26-ந் தேதிக்கு முன்னர் 5 வருஷ காலம், அதாவது 1945 ஜனவரி 26-ந் தேதியிலிருந்து ஒருவன் இந்தியாவில் வசித்தவனாயின் (அவனோ, அவனது பெற்றோரோ வேறிடத்தில் பிறந்தவராக இருப்பினும்) அவன் இந்தியனே.

6. ஒருவன் இப்போதைய இந்திய எல்லைக்குள் பிறந்திராவிட்டாலும், இந்தியாவில் ஐந்து வருஷகாலம் வாழ்ந்திராவிட்டாலும், பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வந்தவனாயின் (ஏ) அவனோ அவனது பெற்றோரோ "பழைய இந்தியாவில்" (பிரிக்கப்படாத பழைய இந்தியாவில்) பிறந்தவராயிருப்பதோடு (பி) (1) 1948 ஜூலை 19-ந் தேதிக்கு முன்னதாகவே இந்தியாவிற்கு வந்து இங்கு குடியேறினவனாக இருக்க வேண்டும். (2) 1948 ஜூலை 19-ந் தேதிக்குப் பிறகுதான் மேலே குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த மாஜி பாகிஸ்தானி, இந்தியாவுக்குள் வந்தான் என்றால் அவன் மனுப் போட்டுத்தான் இந்தியாவின் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ள முடியும். மனுப் போடுவதற்கு முன் ஆறு மாதகாலமாவது அவன் (புதிய) இந்தியாவில் குடியிருந்திருக்க வேண்டும்.

7. ஒருவன் இந்திய எல்லைக்குள்ளேயே பிறந்துவிட்டு, பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு அங்கு ஓடிப்போனவனாக இருந்தால், அவன் இந்தியாவின் பிரஜையாக மதிக்கப்படமாட்டான்.

ஆனால் அவன் அவ்வாறு ஓடிப்போன பிறகு இந்திய சர்க்காரின் அனுமதிச் சீட்டுடன் இந்தியாவில் குடியேற வந்திருந்தால், அவன் மேலே சொல்லியபடி மனுப்போட்டு இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ளலாம்.

8. ஒருவன் இதுவரையில் இந்தியாவில் வாழாமல் வெளியே வாழ்ந்தாலும் அவனது பெற்றோர்கள், இந்தியாவில் பிறந்தவராக இருந்து, அவன் வசிக்கும் நாட்டிலுள்ள இந்திய ஸ்தானிகரிடம் மனுச் செய்து அவன் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ளப்பட்டால் அவனும் இந்தியப் பிரஜையாக மதிக்கப்படுவான்.

9. தானாகவே வேறொரு நாட்டின் பிரஜையாக ஒருவன் மாறினால் அவன் இந்தியப் பிரஜையாக மதிக்கப்படுவதில்லை.

11. மேலேயுள்ள ஷரத்துக்களுக்குப் புறம்பாக ஒருவன் இந்தியாவின் பிரஜையென்ற அந்தஸ்தைப் பெறுவது பற்றி இந்திய யூனியன் சட்டசபை அவ்வப்போது சட்டமியற்றலாம்.

## 3. ஜீவாதார உரிமைகள்

12-13 மேற்கண்ட ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக உள்ள பழைய சட்டங்கள் செல்லுபடியாக மாட்டா. ஜீவாதார உரிமைகளைப் பறிக்கும் அல்லது குறைக்கும் ரீதியில் இனியும் சட்டமியற்றக் கூடாது.

14. சட்டத்தின் முன் எல்லாப் பிரஜைகளும் சமம்.

15. மதம், இனம், ஜாதி, ஆண்-பெண், பிறப்பிடம் என்ற காரணங்களுக்காக எந்தப் பிரஜையிடமும் அரசாங்கம் பாரபட்சம் காட்டக் கூடாது. கடைகள், ஹோட்டல்கள், கேளிக்கை ஸ்தலங்கள், கிணறு, குளங்கள் முதலிய பொது ஸ்தலங்களை உபயோகிப்பதில் மேற்கண்ட காரணங்களுக்காகத் தடை விதிக்கக்கூடாது. ஸ்திரீகள் குழந்தைகள் சம்பந்தமாக அரசாங்கம் விசேஷ வசதிகள் செய்து கொடுப்பதை இந்த ஷரத்து தடுக்காது

16. அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவதற்கு எல்லாப் பிரஜைகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அரசாங்க பதவிக்கு ஒருவரை நியமிக்கு முன் அவரது முந்திய வாழ்விடம் சம்பந்தமாக அரசாங்கம் நிபந்தனை விதிப்பதை இந்த ஷரத்து பாதிக்காது. பிற்பட்ட வகுப்பினருக்கு உத்தியோகங்களை அரசாங்கம் ஒதுக்குவதை இந்த ஷரத்து தடுக்காது. ஒரு குறிப்பிட்ட மத ஸ்தாபனத்தில் அந்த மதத்தைச் சேர்ந்தவரே உத்தியோகம் வகிக்க வேண்டும் என்று கூறும் சட்டங்களை இந்த ஷரத்து பாதிக்காது.

17. தீண்டாமை ஒழிக்கப்படுகிறது. தீண்டாமையை அனுஷ்டிப்பது சட்ட விரோதம். அதற்குத் தண்டனை உண்டு.

18. ராணுவம் அல்லது கல்வி சம்பந்தமாகவன்றி வேறு பட்டங்கள் எதையும் அரசாங்கம் வழங்கக் கூடாது. இந்தியப் பிரஜைகள் அயல்நாடு எதனிடமும் பட்டம் பெறக் கூடாது.

19. எல்லோருக்கும் பேச்சு, எழுத்து சுதந்திரம் உண்டு. ஆனால் அவதூறாகவோ, ஆபாசமாகவோ, அரசாங்கத்தைக்

கவிழ்க்கும் ரீதியிலோ பேசவும், எழுதவும் கூடாது என்று அரசாங்கம் தடுக்கலாம்.

ஆயுதமின்றி சமாதானமாகக் கூட்டம் கூடும் சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு. பொதுஜன ஒழுங்குக்காக இந்த உரிமையை நியாயமான அளவு அரசாங்கம் கட்டுப்படுத்தலாம்.

சங்கங்களை அமைக்கவும், இந்தியா முழுவதும் தடையின்றிப் போய் வரவும், இந்தியாவில் எந்த இடத்திலும் வசிக்கவும், சொத்துக்களை வாங்கவும், அனுபவிக்கவும், விற்கவும், எந்த உத்தியோகத்தை அல்லது வர்த்தகத்தை நடத்தவும் எல்லோருக்கும் உரிமைகள் உண்டு. ஆனால் பொது நன்மைக்காக இந்த உரிமைகள் மீது நியாயமான வரையறைகளை விதிக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு.

20. சட்டத்தை மீறும் நபரையே குற்றவாளியாகக் கருதலாம். அக் குற்றத்துக்குச் சட்டப்படியே தண்டனை விதிக்கலாம்.

21. சட்ட ரீதியான நடைமுறைகளிலல்லாது (கோர்ட் வழக்கு முதலியவற்றாலல்லது) வேறு வழியில் ஒருவரது உயிரையோ, நபர் சுதந்திரத்தையோ பறிக்கக் கூடாது.

22. ஒரு நபரைக் காவலில் வைத்தால் அதற்கான காரணங்களை அவரிடம் சீக்கிரமே தெரிவிக்க வேண்டும். வக்கீலை அமர்த்துவதற்கு அந் நபருக்கு உரிமை உண்டு. காவலில் வைக்கப்பட்டு 24 மணி நேரம் கழிவதற்கு முன் அவரை ஒரு மாஜிஸ்டிரேட் முன் ஆஜர்படுத்த வேண்டும்.

அந்நிய விரோதிகள் விஷயத்திலும், முன்னெச்சரிக்கைக்காகக் காவலில் வைக்கப்படும் நபர்கள் விஷயத்திலும் மேற்கண்ட ஷரத்து பிரயோகமாகாது.

முன்னெச்சரிக்கைக்காக, ஒரு நபரை மூன்று மாதங்களுக்கு அதிகமாகக் காவலில் வைக்கக் கூடாது. 3 மாதத்திற்கு மேல் காவலில் வைக்கலாம் என ஹைகோர்ட் நீதிபதி அந்தஸ்துடையோரின் "ஆலோசனை போர்டு" கூறினால், அவ்விதமே செய்யலாம். 3 மாதத்திற்கு அதிகமாக நபர்களைக் காவலில் வைப்பது சம்பந்தமாகப் பார்லிமென்டும் சட்டமியற்றலாம். காவலில் வைக்கப்பட்டதன் காரணங்களைச் சம்பந்தப்பட்ட நபர்களுக்குச் சீக்கிரமே தெரிவித்து, எதிர்த்து மனுச் செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

23. நபர்களை விபசாரத்துக்கு உபயோகிப்பது குற்றமாகும். நபர்களிடம் நிர்ப்பந்த வேலை வாங்குவதும் குற்றமாகும். பொதுக் காரியங்களுக்காகப் பிரஜைகளிடம் அரசாங்கம் கட்டாய சேவை பெறலாம் என்பதை இது தடுக்காது.

24. பாக்டரி, சுரங்கம் முதலிய ஆபத்தான வேலைகளில் பதிநான்கு வயதுக்குக் குறைந்த குழந்தைகளை நியமிக்கக் கூடாது,

25. தாங்கள் விரும்பும் மதத்தை அனுஷ்டிக்கவும் பரப்பவும் எல்லாப் பிரஜைகளுக்கும் உரிமை உண்டு. ஆனால் மதம் சம்பந்தமான நிதி, அரசியல்போன்ற லௌகீக விஷயங்களை ஒழுங்குபடுத்தி வரையறுக்க அரசாங்கம் சட்டமியற்றலாம். சமூக க்ஷேமம்; சீர்திருத்தம், பொதுவான ஹிந்துமத ஸ்தாபனங்களில் எல்லா ஹிந்துக்களையும் அனுமதிப்பது முதலிய காரியங்களுக்காக அரசாங்கம் சட்டமியற்றலாம்.

26. மத தர்ம காரியங்களுக்காக ஸ்தாபனங்களை நடத்தவும், சொத்துக்களை வாங்கிப் பரிபாலிக்கவும் எல்லா மதத்தினருக்கும் உரிமை உண்டு.

27. ஒரு குறிப்பிட்ட மத காரியத்திற்காக அரசாங்கம் செலவிடும் நிதிக்கு வரி செலுத்துமாறு எந்த நபரையும் நிர்ப்பந்திக்கக் கூடாது

28. முழுதும் அரசாங்க நிதியால் நடக்கும் கல்வி ஸ்தாபனங்களில் மதபோதனை கூடாது. எண்டோமென்ட் கல்வி ஸ்தாபனங்களில் மதபோதனை நடத்த எண்டோமெண்டார் விரும்பினால் அவ்விதமே நடத்தலாம். கல்வி ஸ்தாபனத்தில் மத போதனை அல்லது வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு கார்டியனின் அனுமதியின்றி மைனர் பையன்களைக் கேட்கக் கூடாது.

29. ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் சொந்த பாஷை, அல்லது லிபி அல்லது கலாசாரத்தைப் பேணி வளர்க்க உரிமை உண்டு. அரசாங்கத்தால் நடத்தப்படும் அல்லது அரசாங்க உதவி பெறும் கல்வி ஸ்தாபனத்தில் சேரக்கூடாது என மத, இன, ஜாதி, பாஷை காரணமாக யாரையும் தடுக்கலாகாது.

30. மத மைனாரிட்டியினர், அல்லது பாஷை மைனாரிட்டியினர் சொந்த கல்வி ஸ்தாபனங்களை ஸ்தாபித்து நிர்வகிக்க

லாம். அர்த்தகைய கல்வி ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி அளிப்பதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டக்கூடாது.

31. சட்டத்தின் மூலமாக அல்லாது எவருடைய சொத்தும் பறிக்கப்படலாகாது. பொது நன்மைக்காகச் சில சொத்துக்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தால், அவ்விதம் எடுத்துக் கொள்ளும் சொத்துக்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். நஷ்ட ஈடுமுறை, கொள்கை முதலியவை பற்றி ஷரத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. சொத்துரிமை—நஷ்ட ஈடு சம்பந்தமாக ஏற்கெனவே நிறைவேறிய சட்டங்கள், இப்போது மசோதா ரூபத்தில் உள்ள சட்டப் பிரேரணைகள் ஆகியவை பற்றி இந்த ஷரத்தில் சில விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

32. ஜீவதார உரிமைகளை அமல் நடத்துவது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டின் (யூனியன் நீதிமன்றத்தின்) உதவியை நாட பிரஜைகளுக்கு உரிமை உண்டு. அது சம்பந்தமாக உத்தரவுகளைப் பிறப்பிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. இவ்விதம் சுப்ரீம் கோர்ட்டுக்கு உள்ள அதிகாரத்தை இதர கோர்ட்டுகளுக்கு வழங்கவும் பார்லிமென்ட் சட்டமியற்றலாம் அரசியல் திட்டத்தில் கண்ட முறைப்படி அன்றி வேறு வழிகளில் ஜீவாதார உரிமை அமலை நிறுத்தி வைக்க முடியாது.

33. ராணுவப் படைகளும், பொதுஜன ஒழுங்கைப் பாதுகாக்கும் படைகளும், ஜீவாதார உரிமைகளை அனுபவிப்பது சம்பந்தமாக வரையறைகளை விதிக்க பார்லிமென்ட் சட்டமியற்றலாம்.

34. ராணுவச் சட்டம் அமலில் உள்ள பிரதேசங்களில் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதை, ஜீவாதார உரிமை ஷரத்துகள் பாதிக்க மாட்டா.

35. ஜீவாதார உரிமை அமல் சம்பந்தமாகத் தேவைப்படும் சட்டங்களை யூனியன் பார்லிமென்டும், மாகாண சமஸ்தான சட்ட சபைகளும் இயற்றலாம்.

## 4. ராஜாங்க நிர்வாகம் பற்றிய பொது லட்சியங்கள்

36. இந்தப் பகுதியில் "அரசாங்கம்" என்ற பதமானது

இந்திய யூனியன் சர்க்கார், இந்திய யூனியன் பார்லிமென்ட், மாகாண சமஸ்தான சர்க்கார்கள், மாகாண சமஸ்தான சட்ட சபைகள் இந்திய சர்க்காரின் கீழுள்ள இதர அதிகார ஸ்தாபனங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும்.

37. இந்தப் பகுதியில் கண்ட ஷரத்துக்களை அமல் நடத்த வேண்டும் என கோர்ட் மூலம் கோர முடியாது. ஆயினும் தேச நிர்வாகத்தில் இந்த லட்சியங்களை இன்றியமையாத லட்சியங்களாகக் கருதவேண்டும். சட்டங்களை இயற்றும்போது அவற்றில் இந்த லட்சியங்களை உபயோகிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

38. வாழ்வின் சகல துறைகளிலும் சமூக நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி ஆகியவை நிறைந்த சமூக அமைப்பை நிறுவி அரசாங்கம் பாதுகாக்கவேண்டும். இவ்விதம் மக்களின் க்ஷேமத்தை அரசாங்கம் பேணி வளர்க்கவேண்டும்.

39 கீழ்க்காணும்காரியங்களை நிறைவேற்றுவதில் அரசாங்கம் முக்கியமாகக் கவனம் செலுத்தவேண்டும்:—

(அ) ஜீவனோபாயத்திற்குப் போதுமான வசதி பெற பிரஜைகள் (ஆண், பெண்) அனைவருக்கும் சம உரிமை உண்டு.

(ஆ) சமுதாயம் அனைத்திற்கும் நன்மை விளையும் முறையில் பொருளாதார சாதனங்களின் உடைமையும் கட்டுப்பாடும் வினியோகிக்கப்பட வேண்டும்.

(இ) பொது நன்மைக்குப் பாதகமான ரீதியில் செல்வமும், உற்பத்தி சாதனங்களும் ஒரு சிலர் கையில் குவிந்துவிடாதபடி உள்ள பொருளாதார முறையை அமைக்க வேண்டும்.

(ஈ) ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே வேலைக்கு ஒரே (சம) ஊதியம் கிடைக்கவேண்டும்.

(உ) தொழிலாளரின் (ஆண்களும், பெண்களும்) தேக சுகத்தையும் வலிமையையும் கெடுக்கும் ரீதியில் வேலை வாங்கக்கூடாது. இளங் குழந்தைகளையும் வேலை வாங்கிக் கஷ்டப்படுத்தக்கூடாது. தங்கள் வயதுக்கும், தேக வலிமைக்கும் ஒவ்வாத தொழில்களைச் செய்யும்படி பொருளாதார அவசியம்

(வறுமை) காரணமாகப் பிரஜைகளுக்கு நிர்ப்பந்தம் ஏற்படக்கூடாது.

(ஊ) சுரண்டல், ஒழுக்க பங்கம், வறுமை ஆகியவற்றுக்குக் குழந்தைகளும் இளைஞர்களும் இரையாகாதபடி பாதுகாக்கப்படவேண்டும்.

40. கிராமப் பஞ்சாயத்துகளை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சுயாட்சி உறுப்புகளாக இயங்குவதற்கு வசதியாக இந்த கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் போதிய அதிகாரங்களை அரசாங்கம் வழங்க வேண்டும்.

41. வேலை செய்யும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, வேலையில்லாத் திண்டாட்ட காலத்திலும், வயோதிககாலத்திலும், வியாதி காலத்திலும், வேலை செய்ய சக்தியற்ற காலத்திலும், வேறு வறுமைக்காலங்களிலும் அரசாங்க உதவியைப் பெறும் உரிமை ஆகிய உரிமைகளைப் பிரஜைகள் அனுபவிக்க அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வேண்டும். அரசாங்கப் பொருளாதார நிலைமை, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுக்கு உட்பட்டே இந்த வசதிகளை அரசாங்கம் அளிக்க முடியும்.

42. நியாயமான, கொடுமையற்ற வேலை நிலைமைகளையும் (சூழ்நிலையையும்), பிரசவகால உதவியையும் பிரஜைகள் பெறுவதற்கு அரசாங்கம் வழி செய்ய வேண்டும்.

43. விவசாயத் தொழிலாளர், ஆலைத் தொழிலாளர், இதர தொழிலாளர் முதலிய சகல தொழிலாளருக்கும் வேலை கிடைக்கவும்; ஜீவனோபாயத்திற்குப் போதிய ஊதியம் கிடைக்கவும்; கண்ணியமான வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்ற வேலைச் சூழ்நிலையும் ஓய்வும் சமூக வசதிகளும் கலாசார வசதிகளும் கிடைக்கவும் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். குறிப்பாக கிராமாந்தரப் பகுதிகளில் தனி நபர் அடிப்படையிலும், கூட்டுறவு அடிப்படையிலும் குடிசைத் தொழில்களை வளர்க்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். இக் காரியங்களுக்காகச் சட்டமியற்றுவதன் மூலமோ, பொருளாதார ஸ்தாபனங்களை அமைப்பதன் மூலமோ, வேறு வழிகளிலோ அரசாங்கம் முயற்சிக்கலாம்.

44. இந்தியா முழுவதிலும் பிரஜைகளுக்கு ஒரேவித சிவில் கோடை (சிவில் சட்டங்கள்) ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

45. பதினான்கு வயதுக்கு உட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அளிக்க, இந்த அரசியல் திட்டம் அமலுக்கு வந்து 10 வருஷங்களுக்குள் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

46. மக்களில் பின்தங்கிய வகுப்பினரின்—குறிப்பாக ஷெட்யூல்ட் வகுப்பினர், பூர்வகுடிகள் ஆகியோரின்—கல்வி வசதிகளையும் பொருளாதார வசதிகளையும் அரசாங்கம் விசேஷ கவனத்துடன் பேணி வளர்க்க வேண்டும். சமூக அநீதி, சுரண்டல்கள் ஆகியவற்றிலிருந்து இந்த வகுப்பாரை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்.

47. மக்களின் போஷாக்கு நிலைமையையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது, சுகாதார நிலைமையை அபிவிருத்தி செய்வது, ஆகிய காரியங்களை அரசாங்கம் தனது பிரதம கடமைகளாகக் கருதவேண்டும். குறிப்பாக மதுபானங்களையும் லாகிரி வஸ்துக்களையும் (வைத்தியத்திற்கு தவிர இதர வகைகளில் உபயோகிக்காமல்) ஒழிக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

48. விவசாயத்தையும், கால்நடைகளையும், நவீன, விஞ்ஞான முறைகளில் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். பசுக்கள் முதலிய பால் கறக்கும் கால்நடைகளையும், வேலைக்கு உதவும் கால்நடைகளையும், கன்றுகளையும் பேணி வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். பசுக்கள் முதலிய இந்தக் கால்நடைகளைக் கொல்லக்கூடாது என அரசாங்கம் தடுக்கவேண்டும்.

49. தேசிய முக்யத்வம் வாய்ந்தவை எனப் பார்லிமென்டின் சட்டத்தால் குறிப்பிடப்படும் கலைச் செல்வங்களையும், சரித்திரச் சின்னங்களையும், அரசாங்கம் பாதுகாக்கவேண்டும். அவை உருக்குலையாமலும், அழியாமலும், வெளியேற்றப் படாமலும் அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்.

50. அரசாங்க இலாகாக்களில், நிர்வாக இலாகாவிலிருந்து நீதி இலாகாவைத் தனியாகப் பிரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

51. (அ) சர்வதேச சமாதானத்துக்கும், பந்தோபஸ்துக்கும் பாடுபடுவது; (ஆ) தேசங்களிடையே நல்லுறவு நிலவச் செய்வது; (இ) சர்வதேசச் சட்டத்தையும், ஒப்பந்தங்களையும் தேசங்கள் மதித்து நடக்கச் செய்வது; (ஈ) சர்வதேசத் தகராறு

களை மத்யஸ்த முறையின் மூலம் பைசல் செய்ய ஊக்கமளிப்பது—ஆகிய காரியங்களைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

# 5. இந்தியப் பொது மொழி

## லட்சியமும் இடைக்கால ஏற்பாடும்

*343—(1)* தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட ஹிந்தி மொழியே, இந்திய யூனியனின் உத்தியோக மொழியாக இருக்கவேண்டும்.

உத்தியோக காரியங்களுக்காக யூனியன் சர்க்கார் உபயோகிக்கும் இலக்கங்களின் உருவம் இந்திய இலக்கங்களின் சர்வதேச உருவமாக இருக்கவேண்டும். (அதாவது *0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9* இவையாகவே இருத்தல்வேண்டும்.)

## 15 வருஷத்துக்கு ஆங்கிலமே

*343-(2)* மேலேயுள்ள *343-(1)* ஷரத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும், புது அரசியல் அமலுக்கு வந்து 15 வருஷ காலத்துக்கு ஆங்கில மொழியே யூனியனின் எல்லா உத்தியோக காரியங்களுக்கும் தொடர்ந்து உபயோகிக்கப்படவேண்டும் (அதாவது இப்போது எதற்கெல்லாம் ஆங்கிலம் உபயோகிக்கப்படுகிறதோ அதற்கெல்லாம் ஆங்கிலமே தொடர்ந்து உபயோகிக்கப்படும்.)

ஆனால் அந்த பதினைந்து வருஷ காலத்திற்கு இடையே ஆங்கிலம் மட்டுமல்லாமல், குறிப்பிட்ட உத்தியோக காரியங்களுக்கு ஹிந்தியையும் உபயோகிக்கலாமென்றும், சர்வதேச இலக்க முறையுடன், தேவநாகரி இலக்க முறையையும் ஏதேனும் குறிப்பிட்ட காரியத்துக்கு உபயோகிக்கலாம் என்றும் ஜனாதிபதி உத்தரவு போட்டு சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கலாம்.

## பிறகும் ஆங்கிலம் நீடிக்க இடமுண்டு

**343-(3) இந்த ஷரத்தில் வேறு என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும், மேலே குறிப்பிட்ட 15 வருஷ காலத்திற்குப் பிறகு சட்டமியற்றி அந்தச் சட்டத்தில் குறிப்பிடக்கூடிய எந்த விஷயத்துக்கும் (அ) ஆங்கிலத்தை உபயோகிக்கு**

மாறு யூனியன் பார்லிமென்ட் சட்டமியற்றலாம். (ஆ) தேவ நாகரி இலக்கங்களை உபயோகிக்குமாறு சட்டமியற்றலாம்.

**மாறுதல் சிபாரிசு செய்ய**
**ஒரு கமிஷனும் கமிட்டியும்**

344—(1) புது அரசியல் திட்டம் அமலுக்கு வந்து ஐந்து வருஷ காலம் முடிந்தவுடனும் பிறகு பத்தாவது வருஷத்திற்குப் பின்னும் ஜனாதிபதி உத்தரவுபோட்டு ஒரு கமிஷனை நியமிக்கவேண்டும். இக் கமிஷனுக்கு ஒரு தலைவரும 8-வது அட்டவணையில் குறிப்பிடப்படும் பாஷைகளுக்குப் பிரதிநிதித்வம் உள்ள மெம்பர்களும் நியமிக்கப்படவேண்டும். கமிஷன் பின்பற்றவேண்டிய நடைமுறை விதிகளையும் ஜனாதிபதி நிர்ணயிப்பார். (8-வது அட்டவணை இறுதியில் தரப்படுகிறது.)

344—(2) பின்வரும் விஷயங்களைப் பற்றி ஜனாதிபதிக்குச் சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பது இக்கமிஷனின் வேலையாக இருக்கும்:—

(எ) யூனியன் உத்தியோக காரியங்களுக்கு ஹிந்தி மொழியைப் படிப்படியாக உபயோகிப்பது.

(பி) யூனியன் காரியங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது ஏதேனும் சிலவற்றுக்கு ஆங்கிலத்தை உபயோகிப்பதை எவ்வளவு தூரம் குறைத்து வரலாம் என்பது

(ஸி) பின்னால் சொல்லப்போகின்ற 348—ல் குறிப்பிடும் காரியங்கள் யாவற்றுக்கும் அல்லது ஏதேனும் ஒன்றுக்கு எந்த மொழியை உபயோகிக்கலாம் என்பது.

(டி) யூனியனின் ஏதேனும் ஒரு அல்லது எல்லாக் காரியங்களுக்கும், இலக்கங்களை என்ன உருவத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பது.

(இ) யூனியனின் உத்தியோக பாஷை பற்றியும், மாகாணங்கள் தம்மிடையே உபயோகிக்கக் கூடிய மொழியைப் பற்றியும், அவற்றை உபயோகிக்கும் வகை பற்றியும் ஜனாதிபதி அபிப்பிராயம் கோரும் மற்ற விஷயங்கள் பற்றியும்.

**மாறுதலின்போது ஹிந்தி பேசாதோர்**
**உரிமையும் நாட்டின் தேவையும்**
**கவனிக்கப்பட வேண்டும்**

344—(3) 2—வது உட் பிரிவின்படி கமிஷன் சிபாரிசு செய்யும்பொழுது பண்பாடு, கைத்தொழில், விஞ்ஞானம்

ஆகிய துறைகளிலே இந்தியாவில் ஏற்பட வேண்டிய முன்னேற்றம் பற்றிய தேவையையும், சர்க்கார் உத்தியோகங்களிலே ஹிந்தி பேசாத பிரதேசத்தினரின் நல உரிமைகளையும் கருத்தில் கொண்டே சிபாரிசுகள் செய்ய வேண்டும்.

344—(4) யூனியன் பார்லிமெண்டின் கீழ் சபையினர் ஒற்றை மாற்று வீதாச்சார பிரதிநிதித்துவ முறைப்படி தேர்ந்தெடுத்த 20 மெம்பர்களும், யூனியன் பார்லிமெண்டின் மேல்சபையினர் அதேமாதிரி தேர்ந்தெடுத்த 10 மெம்பர்களும் ஆக 30 மெம்பர்கள் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்படும்.

344—(5) 1-வது உபபிரிவின்படி நியமிக்கப்பட்ட கமிஷன் செய்துள்ள சிபாரிசுகளை பரிசீலனை செய்து அவற்றின் மீது தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்து, ஜனாதிபதிக்கு யாதாஸ்து சமர்ப்பிப்பது இக் கமிட்டியின் வேலை.

344—(6) மேலேயுள்ள 343 பிரிவில் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், கமிட்டியின் யாதாஸ்தைக் கவனித்து அதை முழுவதையும் அனுசரித்தோ அல்லது எந்தப் பகுதியையும் அனுசரித்தோ ஜனாதிபதி உத்தரவு போடலாம்.

## மாகாணங்களின் ராஜாங்க மொழிகள்

345. பின்னால் சொல்லப் போகிற 346, 347 என்ற இரு பிரிவுகளுக்கும் உட்பட்டு எந்த மாகாணமும் சட்டமியற்றி அந்த மாகாணத்தில் உபயோகிக்கும் ஒரு மொழியை அல்லது ஹிந்தியை அந்த மாகாணத்தின் உத்தியோக விஷயங்களுக்கான மொழியாக நிர்ணயித்துக் கொள்ளலாம்.

ஆனால் மாகாண சட்டசபை சட்டமியற்றி வேறுவிதமாக முடிவு செய்யாத வரையில் இப்போது எதற்கெல்லாம் ஆங்கிலம் உபயோகிக்கப்படுகிறதோ, அதற்கெல்லாம் ஆங்கிலமே தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும்.

## மாகாணங்களிடையே தொடர்புக்கான மொழி

346. மாகாணங்கள் தம்மிடையேயுள்ள கடிதப் போக்குவரத்துக்கும் யூனியனுடன் நடத்தும் கடிதப் போக்கு

வரத்துகளுக்கும், அவ்வப்போது யூனியனின் உத்தியோக மொழி எதுவோ அதைத்தான் உபயோகிக்க வேண்டும்.

ஆனால் இரண்டு அல்லது மேற்பட்ட மாகாணங்கள், தம்மிடையே உள்ள உத்தியோகக் கடிதப் போக்குவரத்துக்கு, ஹிந்தியை உபயோகித்துக் கொள்வதென்று தம்மிடையே ஒப்புக்கொண்டால் அவ்விதமே உபயோகித்துக் கொள்ளலாம்.

## மாகாணத்தில் சிறுபான்மையோர் மொழி

347. ஒரு மாகாணத்தில் ஏதேனும் ஒரு மொழியைப் பேசுவோர் தமது மொழியையும் ஒரு மொழியாக ராஜ்யங்கம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கோரினால், அவ்வாறு கோருவோரின் தொகை, அந்த மாகாண ஜனத்தொகையில் கணிசமான அளவு இருப்பதாக ஜனாதிபதி உணர்ந்தால், அந்த மொழியையும், அந்த மாகாணத்தில் முழுவதிலுமோ அல்லது குறிப்பிட்ட பகுதியிலோ மக்களின் மொழியாக மாகாண சர்க்கார் அங்கீகரிக்கவேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிடலாம்.

("மாகாணங்கள்" என்ற வார்த்தையில் சமஸ்தானங்களும் அடங்கும்.)

## ஹைக்கோர்ட், ஸுப்ரீம் கோர்ட் மொழியும் சட்டத்தின் மொழியும்

348-(1) மேலேயுள்ள பிரிவுகளில் என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும், பார்லிமென்ட் வேறு விதமாக சட்டமியற்றுதவரையில் பின்வரும் விஷயங்களுக்கு ஆங்கிலமே உபயோகிக்கப்படும்—

(ஏ) ஸுப்ரீம் கோர்ட்டிலும், (இந்திய யூனியன் கோர்ட்) ஒவ்வொரு ஹைகோர்ட்டிலும் உள்ள நடவடிக்கைகள்.

(பி) (i) யூனியன் பார்லிமென்ட், மாகாண சட்ட சபைகள் இவற்றில் பிரேரிக்கும் மசோதாக்கள், திருத்தங்கள் (ii) பார்லிமென்டோ, மாகாண சட்டசபைகளோ இயற்றும் சட்டங்கள், ஜனாதிபதியோ சமஸ்தானாதிபதியோ கவர்னரோ

பிறப்பிக்கும் அவசரச் சட்டங்கள், (iii) இச் சட்டங்களின் கீழ் பிறப்பிக்கப்படும் விதிகள்.

**மாகாண ஹைகோர்ட்டுகளில்**
**பிரதேச மொழியும் விதிவிலக்கும்**

348-(2) எல்லா ஹைக்கோர்ட்டுகளின் நடவடிக்கையும் ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டுமென்று 348-1-(ஏ)ல் சொல்லப்பட்டிருந்த போதிலும்,

எந்த மாகாணமும் யூனியன் ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெற்று, ஹிந்தி மொழியையோ, அம் மாகாணத்தில் சர்க்கார் காரியங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வேறொரு மொழியையோ, அம் மாகாணத்து ஹைக்கோர்ட் நடவடிக்கைகளுக்கு உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் ஹைக்கோர்ட்டின் தீர்ப்பும் (ஜட்ஜ்மெண்டும் டிக்கிரியும்) உத்தரவுகளும் ஆங்கில மொழியிலேயே இருக்கவேண்டும்.

**மாகாண சட்டங்களுக்கு**
**ஆங்கில மொழிபெயர்ப்பு**

348—(3) பார்லிமென்டோ சட்டசபைகளோ, இயற்றும் சட்டங்களின் கீழ் போடப்படும் உத்தரவுகள், விதிகள், ஒழுங்குகள், உப விதிகள் ஆகியவை ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டுமென்று மேலேயுள்ள 348—(1) (பி)ல் சொல்லப்பட்டிருந்த போதிலும்,

எந்த மாகாணமேனும் அம் மாகாணத்து சட்டங்கள், மசோதாக்கள் அவசரச் சட்டங்கள், சட்டத்தின் அதிகாரமுள்ள உத்தரவுகள் இவற்றுக்கு ஆங்கிலம் தவிர வேறு மொழியை உபயோகிக்க சட்டமியற்றினால் அதைப் பின்பற்றி பின்னர் இயற்றப்படும் சட்டங்கள், மசோதாக்கள் முதலியவற்றுக்கு கவர்னரின் அத்தாட்சியுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு தயாரித்து பிரசுரிக்கப்பட வேண்டும். அதுவே சட்டத்தின் அதிகார பூர்வமான (கோர்ட்டில் ஏற்றுக் கொள்ளக் கூடிய) மொழி பெயர்ப்பாக இருக்கும்.

**மொழிபற்றிய சட்டங்களை இயற்றும் நடைமுறை**

349. புது அரசியல் திட்டம் அமலுக்கு வந்து 15 வருஷ காலத்துக்கிடையே 348—(1)ல் பிரிவில் குறிப்பிட்ட

எந்தக் காரியத்துக்கும் உபயோகிக்கும் மொழியைப்பற்றி பிரரிக்கப்படும் எந்த மசோதாவும் திருத்தமும் ஜனாதிபதியின் பூர்வாங்க அனுமதியின்றி பார்லிமெண்டில் பிரேரிக்கப்படலாகாது. ஜனாதிபதியும் 344—(1) பிரிவில் குறிப்பிட்ட கமிஷன் சிபாரிசையும், அதே பிரிவில் குறிப்பிட்ட பார்லிமெண்ட் கமிட்டியின் யாதாஸ்தையும் பரிசீலனை செய்யாமல் தமது அனுமதியைக் கொடுக்கக்கூடாது.

## மகஜர்கள் எந்த மொழியிலும் இருக்கலாம்

350 யூனியன் அரசாங்க அதிகாரிகளுக்கோ, அல்லது மாகாண அதிகாரிகளுக்கோ தனது குறைகளை அறிவித்து மகஜர் சமர்ப்பித்து பரிகாரம் தேட விரும்பும் எவனும், தனது மகஜரை யூனியன் பிரதேசத்துக்குள் அல்லது மாகாணப் பிரதேசத்துக்குள் உபயோகிக்கப்பட்டு வரும் எந்த மொழியிலும் சமர்ப்பிக்கலாம்.

## ஹிந்தி மொழிபற்றி யூனியனின் பொறுப்பு

351. ஹிந்தி மொழியைப் பரவும்படி செய்வதும் இந்தியாவில் உள்ள கலப்புப் பண்பாட்டில் எல்லா அம்சங்களின் கருத்துக்களையும் வெளியிடுவதற்கு ஏற்ற செம்மையுடைய கருவியாகத் தக்க முறையில் ஹிந்தி மொழியை உருவாக்குவதும், ஹிந்துஸ்தானியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் உள்ள மரபுக்கு முரணில்லாதவாறு முக்கியமாக சம்ஸ்கிருத சொற்களையும் அடுத்தபடியாக மற்ற மொழிகளில் உள்ள சொற்களையும் ஹிந்தியில் சேர்ப்பதன் மூலம் அதை வளம்பெறச் செய்வதும் இந்திய சர்க்காரின் கடமையாக இருக்க வேண்டும்.

## 8 வது அட்டவணை: "அங்கீகரிக்கப்பட்ட மொழிகள்"

344 (1), 351 பிரிவுகளில் பிரஸ்தாபிக்கபபட்ட மொழிகளாவன:—

(1) அஸ்ஸாமிய மொழி (2) வங்காளி, (3) குஜராத்தி, (4) ஹிந்தி, (5) கன்னடம், (6) காஷ்மீரி, (7) மலையாளம். (8) மராத்தி, (9) ஒரியா, (10) பஞ்சாபி (11) சம்ஸ்கிருதம். (12) தமிழ். (13) தெலுங்கு, (14) உருது.

## பிற நாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள்

'தினமணி' ஆசிரியர்

ஏ. என். சிவராமன்

ரூ. 2--8--0

## ரவீந்திரநாத டாகுர்

கி. சந்திரசேகரன்

ரூ. 2--0--0

## தமிழ்ச்சுடர் மணிகள்

எஸ். வையாபுரிப் பிள்ளை

ரூ. 5--0--0

## உலகம் சுற்றும் தமிழன்

ஏ. கே. செட்டியார்

ரூ. 3--0--0

---

குமரி மலர் காரியாலயம்

100 மௌபரீஸ் ரோட்

சென்னை - 18